
# 1988 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 21</u>

**06.01.1988** உள்ளத்தின் ஞானி மற்றும் சினேகி ஆகுங்கள் மற்றும் லீக்கேஜ்ஜை (கசிவை) நிறுத்துங்கள்!

**10.01.1988** சிந்தனை செய்வதற்கான விதி மற்றும் சிந்தனை அதிகரிப்பதற்கான யுக்திகள் (குறிப்புகள்)!

**14.01.1988** மகிழ்ச்சியற்ற நிலைக்குக் காரணம் சிறுசிறு அவமரியாதைகள் (கீழ்ப்படியாமை)!

**18.01.1988** அன்பு மற்றும் சக்தியின் சமநிலை!

**22.01.1988** தைரியத்தின் முதல் அடி -சமர்ப்பணம் (பிரம்மாபாபாவின் வாழ்க்கை சரிதம்)!

**26.01.1988** சங்கம யுகத்தில் நம்பர் ஒன் பூஜைக்குரியவர் ஆவதற்கான அலௌகீக விதி!

**30.01.1988** தைரியத்தின் இரண்டாவது அடி -சகிப்புத்தன்மை! (பிரம்மாபாபாவின் வாழ்க்கை வரலாறு)

**03.02.1988** பிரம்மா தாய்-தந்தைக்கு தனது பிராமணக் குழந்தைகளின் மீது இரண்டு சுப விருப்பங்கள்!

**16.02.1988** சதா உற்சாகத்தில் இருந்து உற்சவத்தைக் கொண்டாடுங்கள்! (சிவ ஜெயந்தி)

**20.02.1988** உடல் மற்றும் மனதின் களைப்பை நீக்குவதற்கான சாதனம் -சக்திசாலியான நினைவு!

**24.02.1988** வரதாதா மூலமாக கிடைத்துள்ள வரதானங்களை அதிகப்படுத்துவதற்கான விதி!

**28.02.1988** டபுள் விதேஷி பிராமண குழந்தைகளின் விசேஷங்கள்!

**03.03.1988** ஹோலி எப்படிக் கொண்டாடுவது மற்றும் சதா காலத்திற்கான மாற்றம் எப்படி நடைபெறும்?

**07.03.1988** பாக்கிசாலி குழந்தைகளின் சிறந்த பாக்கியங்களின் பட்டியல்!

**12.03.1988** மூன்று விதமான சிநேகம் மேலும், மனதின் சிநேகத்தினுடைய குழந்தைகளின் விசேஷங்கள்!

**15.03.1988** புது உலகின் ஓவியத்தின் ஆதாரம் இப்பொழுதுள்ள உயர்ந்த பிராமண வாழ்க்கை!

**19.03.1988** நினைவில் ரம்யமான தன்மையைக் கொண்டு வருவதற்கான வழிகள்!

**23.03.1988** இதயம் நிறைந்த தந்தையின் இதய சிம்மாசனத்தை வென்ற அன்பான குழந்தைகளின் அடையாளங்கள்!

**27.03.1988** சர்வ சிரேஷ்ட நட்சத்திரம் -வெற்றியின் நட்சத்திரம்!

**31.03.1988** சொல் மற்றும் செயல் இரண்டு சக்திகளையும். சேமிப்பதற்கான ஈஸ்வரிய திட்டம்!

**11.08.1988** வெற்றியின் காந்தம் -சந்திப்பது மற்றும் வளைந்து கொடுப்பது!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

## 06.01.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உள்ளத்தின் ஞானி மற்றும் சினேகி ஆகுங்கள் மற்றும் லீக்கேஜ் (கசிவை) நிறுத்துங்கள்!

இன்று அன்புக்கடல் பாப்தாதா தன்னுடைய அன்பான குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கின்றார்கள். இது ஆன்மிக அன்பு, பரமாத்ம அன்பு, சுயநலமற்ற உண்மையான அன்பாகும். உண்மையான உள்ளத்தின் அன்பு ஆத்மாக்களாகிய உங்கள் அனைவரையும் முழு கல்பத்தின் சினேகி ஆக்கி விடுகிறது. ஏனெனில், பரமாத்ம அன்பு, ஆன்மிக அன்பு, அழிவற்ற அன்பு ஆகும். இந்த ஆன்மிக அன்பு பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் ஆகும். ஆன்மிக அன்பின் அனுபவம் இல்லை என்றால் பிராமண வாழ்வின் உண்மையான ஆனந்தம் இல்லை. பரமாத்ம அன்பானது எப்பேற்பட்ட பதீத ஆத்மாவையும் மாற்றம் செய்யவல்ல காந்தம் ஆகும், மாறுவதற்கான எளிய சாதனம் ஆகும். அன்பானது அதிகாரி ஆக்குவதற்கான, ஆன்மிக போதையின் அனுபவம் செய்விப்பதற்கான ஆதாரமாகும். அன்பு உள்ளதென்றால் களிப்பான பிராமண வாழ்வு உள்ளது என்பதாகும். அன்பு இல்லையென்றால் பிராமண வாழ்க்கை என்பது வறண்டதும் (சுவையற்றதும்) உழைப்பு நிறைந்ததும் ஆகும். பரமாத்ம அன்பு உள்ளத்தின் அன்பு ஆகும். லௌகீக அன்பானது உள்ளத்தை துண்டு துண்டாக ஆக்கி விடுகிறது. ஏனெனில் பங்கிடப்பட்டு விடுகிறது. அனேகரிடம் அன்பு பாராட்ட வேண்டியதாக உள்ளது. அலௌகீக அன்பு உள்ளத்தின் அனேக துண்டுகளை இணைக்கக்கூடியதாகும். ஒரு தந்தையிடம் அன்பு செலுத்தினால், அனைவருக்கும் சகயோகியாக தானாகவே ஆகி விடுகின்றார்கள். ஏனெனில், தந்தை விதை ஆவார். எனவே, விதைக்கு தண்ணீர் ஊற்றுவதால் ஒவ்வொரு இலைக்கும் தானாகவே தண்ணீர் கிடைத்து விடுகிறது. இலை இலைக்கும் தண்ணீர் ஊற்றுவதற்கான அவசியம் இருக்காது. இதுபோன்று ஆன்மிக

தந்தையிடம் அன்பு செலுத்துவது என்றால் அனைவருடைய சினேகி ஆகுவதாகும். ஆகையினால், உள்ளம் துண்டு துண்டாக நொறுங்குவதில்லை, அன்பானது ஒவ்வொரு காரியத்தையும் எளிதாக்கி விடுகிறது அதாவது உழைப்பிலிருந்து விடுவித்து விடுகின்றது. எங்கு அன்பு உள்ளதோ, அங்கு நினைவு தானாக, சகஜமாக வருகிறது. அன்பிற்குரியவர்களை மறப்பது கடினமாக இருக்கும், நினைவு செய்வது கடினமாக இருக்காது. ஞானம் அதாவது அறிவு எவ்வளவு தான் புத்தியில் இருந்தாலும் சரி, ஆனால், யதார்த்தமான ஞானம் அதாவது அன்பு நிறைந்த ஞானம் இருக்க வேண்டும். ஒருவேளை, ஞானம் உள்ளது மற்றும் அன்பு இல்லை என்றால் அது வறட்சியான ஞானமாகும். அன்பானது சர்வ சம்பந்தங்களை உள்ளப்பூர்வமாக அனுபவம் செய்விக்கிறது. ஞானியாக மட்டும் இருப்பவர்கள் புத்தியால் நினைவு செய்கின்றார்கள். மற்றும் அன்பானவர்கள் உள்ளத்தால் நினைவு செய்கின்றார்கள். புத்தியால் நினைவு செய்பவர்களுக்கு நினைவில், சேவையில், தாரணையில் உழைப்பு செய்ய வேண்டியது இருக்கும். இவர்கள் உழைப்பின் பலனை (பழத்தை) சாப்பிடுவார்கள் மற்றும் அவர்கள் அன்பின் பலனை சாப்பிடுவார்கள். அன்பு இல்லாமல் வெறும் அறிவு சார்ந்த ஞானம் மட்டும் உள்ளது எனில், ஞானத்தின் விசயங்களில் கூட ஏன், என்ன, எப்படி. என்று புத்தி சண்டையிட்டுக் கொண்டேயிருக்கும் மற்றும் தனக்குள் சச்சரவு ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். அதிகமான வீண் எண்ணங்கள் வரும். எங்கு ஏன், ஏன் என்பது இருக்குமோ, அங்கு ஏன் என்பதன் வரிசை உருவாகி விடும். எங்கு அன்பு உள்ளதோ, அங்கு யுத்தம் ஏற்படாது, ஆனால், அன்பில் மூழ்கிய நிலை (லவ்லீன்), கலந்திருக்கும் நிலை இருக்கும். எவரிடமாவது உள்ளத்தின் அன்பு உள்ளது எனில், அன்பின் விசயத்தில் ஏன், என்ன என்பது எழாது. எவ்வாறு விட்டில் பூச்சி விளக்கின் மீதுள்ள அன்பினால் ஏன், என்ன என்று கேட்பதில்லையோ, பலியாகி விடுகிறதோ அவ்வாறு பரமாத்ம சிநேகி ஆத்மாக்கள் அன்பில் மூழ்கி இருப்பார்கள்.

சில குழந்தைகள், தந்தையுடன் உரையாடல் செய்யும்பொழுது, ஞானமோ புத்தியில் உள்ளது, பிராமணராகவும் ஆகி விட்டேன், ஆத்மாவைப் பற்றியும் அறிந்து கொண்டேன், தந்தையையும் முழுமையான அறிமுகத்துடன் தெரிந்து கொண்டேன், சம்பந்தங்களைப்

பற்றியும் தெரிந்து விட்டது, சக்கரத்தைப் பற்றிய ஞானம் உள்ளது, படைப்பாளர் மற்றும் படைப்பின் முழு ஞானம் உள்ளது, பிறகும் கூட நினைவு ஏன் சகஜமாக இருப்பதில்லை? ஆனந்தத்தினுடைய, சக்தியினுடைய, சாந்தியினுடைய அனுபவம் எப்பொழுதும் ஏன் ஏற்படுவதில்லை? ஏன் அதிகமாக முயற்சித்தால் மட்டும் நினைவு வருகிறது, ஏன் நினைவு நிரந்தரமாக இருப்பதில்லை? அடிக்கடி நினைவு ஏன் மறந்து போகிறது? என்று புகார் செய்கின்றார்கள். இதற்கான காரணம் என்னவென்றால் ஞானமானது புத்தி வரை மட்டும் உள்ளது, ஞானத்தின் கூடவே உள்ளத்தின் அன்பு குறைவாக உ.ள்ளது. அறிவுப்பூர்வமான அன்பு உள்ளது. நான் குழந்தை, அவர் தந்தை, வள்ளல், விதாதா என்ற அறிவுப் பூர்வமான ஞானம் உள்ளது ஆனால். இதே ஞானம் எப்பொழுது உள்ளத்தில் கலந்து விடுகிறதோ, அப்பொழுது அன்பின் அடையாளமாக என்ன காண்பிக்கின்றனர்? உள்ளம் (இதயம்). அதாவது ஞானம் மற்றும் அன்பு கலந்து விடுகிறது. ஞானம் என்பது விதையாகும், ஆனால், தண்ணீர் அன்பாகும். ஒருவேளை, விதைக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்றால் பலன் கொடுக்காது. அதுபோன்று, ஞானம் உள்ளது, ஆனால், உள்ளத்தின் அன்பு இல்லை என்றால் பிராப்தியின் பலன் கிடைக்காது, ஆதலால், உழைக்க வேண்டியுள்ளது. அன்பு என்றால் அனைத்து பிராப்திகளுடைய, அனைத்து அனுபவங்களுடைய கட-ல் கலந்திருப்பதாகும். லௌகீக உலகில் கூட பாருங்கள், சின்ன பரிசு அன்போடு கொடுக்கப்படும்போது, எவ்வளவு பிராப்தியின் அனுபவம் செய்விக்கிறது! ஆனால், சம்பந்தத்தில் சுயநலத்துடன் கொடுக்கல் வாங்கல் நடைபெறுகிறது எனில், கோடி பணம் கொடுங்கள், ஆனால், கோடி பணம் கிடைத்தபோதிலும் கூட திருப்தி ஏற்படாது, ஆனால் இது இருக்க வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று ஏதாவது குறை கூறிக் கொண்டே இருப்பார்கள். தற்காலத்தில் எவ்வளவு செலவு செய்கின்றார்கள், எவ்வளவு பகட்டு காண்பிக்கின்றார்கள்! ஆனாலும் கூட அன்பு நெருக்கத்தில் கொண்டு வருகிறதா அல்லது தூரமாக்குகிறதா? கோடி பணத்தின் கொடுக்கல் வாங்கல் அந்தளவு சுகத்தின் அனுபவம் செய்விப்பதில்லை, ஆனால், உள்ளத்தின் அன்பு நிறைந்த ஒரு சிறிய பொருள் கூட எவ்வளவு சுகத்தின் அனுபவம் செய்விக்கிறது! ஏனெனில், உள்ளத்தின் அன்பானது கணக்கு வழக்கை கூட முடிவடையச் செய்து விடுகிறது. எனவே, ஞானத்தின் கூடவே உள்ளத்தின் அன்பு உள்ளதா? உள்ளத்தில் லீக்கேஜ்

(கசிவு) இல்லை தானே? என்று தன்னைத்தானே கேளுங்கள். எங்கு கசிவு இருக்கிறதோ அங்கு என்னவாகும்? ஒருவேளை. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரிடமாவது எண்ணத்தளவில் அன்பு உள்ளது, அது மனிதரிடமோ, பொருளிடமோ, மனிதரிடம் கூட சரீரத்தின் மீது அன்பு இருக்கலாம், அவரது விசேஷத்தன்மை மீது இருக்கலாம், எல்லைக்குட்பட்ட பிராப்தியின் ஆதாரத்தில் இருக்கலாம், ஆனால், விசேஷத்தன்மையை கொடுத்திருப்பவர் யார்? பிராப்தி செய்விக்கக் கூடியவர் யார்?

எவ்விதமான அன்பு அதாவது பற்று, எண்ணத்தளவில், பேச்சளவில் அல்லது செயலில் உள்ளது என்றால், இதையே கசிவு என்று கூறப்படுகிறது. சில குழந்தைகள் மிகவும் வெகுளித்தனமாக, பற்று இல்லை ஆனால் பிடிக்கிறது, விரும்பவில்லை ஆனால் நினைவு வருகிறது, என்று கூறுகின்றனர். எனவே, எண்ணம், சொல் மற்றும் செய-ல் அடிபணிந்திருப்பது பற்றின் அடையாளம் ஆகும். ஆகையினால், லீக்கேஜ் இருக்கும் காரணத்தால் சக்தி அதிகரிப்பதில்லை. மேலும், சக்திசா-யாக இல்லாத காரணத்தால் தந்தையை நினைவு செய்வதற்கு உழைப்பு தேவைப்படுகிறது. மேலும், உழைக்க வேண்டியிருக்கும் காரணத்தால் திருப்தி இருப்பதில்லை. எங்கு திருப்தி இல்லையோ, அங்கு இந்த சமயம் நினைவின் அனுபவத்தினால் போதையில் சந்தோஷமாக இருப்பார்கள், பிறகு, அடுத்த கொஞ்ச நேரத்தில் மனம் உடைந்து வருத்தமுற்று இருப்பார்கள். ஏனெனில், லீக்கேஜ் இருக்கும் காரணத்தால் சக்தியானது கொஞ்ச நேரத்திற்கு நிறைகிறது. எப்பொழுதும் இருப்ப தில்லை, ஆகையினால், சகஜமான நிரந்தர யோகி ஆகமுடிவதில்லை. எந்த மனிதன் மற்றும் பொருள் மீது பற்று இல்லை தானே அதாவது லீக்கேஜ் இல்லை தானே? என்று சோதனை செய்யுங்கள். இந்த லீக்கேஜ் லவ்லீன் ஸ்திதியின் அனுபவம் செய்யவிடாது. பொருட்களை பயன்படுத்துங்கள், ஆனால், யோகியாகி பயன்படுத்துங்கள். எதை நீங்கள் ஓய்வுக்கான சாதனம் எனப் புரிந்து இருக்கின்றீர்களோ, அது மனோநிலையை ஒய்வற்ற நிலையை அடையச் செய்யும்படியாக ஆகி விடக்கூடாது. ஏனெனில், சில குழந்தைகள் பொருட்களுக்கு வசமாகியும் மனதின் பற்றை அறிந்து கொள்ள முடிவதில்லை. இராயல் மொழியில் ஹடயோகி அல்ல, சகஜயோகி நாங்கள் என்றே கூறுகின்றீர்கள். சகஜயோகி ஆகுவது

நல்லதே ஆனால், யோகியாக ஆகியிருக்கின்றீர்களா? யார் தந்தையினுடைய நினைவை கலைக்கின்றார்களோ அதாவது தன் பக்கம் கவர்ச்சி செய்கின்றார்களோ, அடிபணியச் செய்கின்றார்களோ, அவர்களை யோகியாகி பிரயோகம் செய்பவர்கள் (செய-ல் ஈடுபடுத்துபவர்கள்) என்று கூற முடியாது. ஏனெனில், தந்தையினுடையவர் ஆகியிருக்கும் காரணத்தால் அவ்வப்போது இயற்கை பணிப்பெண் அதாவது பொருட்களின் சாதனங்களின் பிராப்தி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இப்பொழுது 18, 19-வருடங்களுக்குள் எவ்வளவு பிராப்தி கிடைத்துக் கொண்டு இருக்கிறது! ஓய்வுக்கான சாதனங்கள் அனைத்தும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன ஆனால், இந்தப் பிராப்திகள் தந்தையுடையவர் ஆனதன் பலன் கிடைத்துக் கொண்டு இருக்கிறது. எனவே, பழத்தை சாப்பிட்டுக் கொண்டு விதையை மறந்து விட வேண்டாம். இந்த சாதனங்கள் சிறிது காலத்திற்கு அதிகரித்துக் கொண்டே செல்லும் ஆனால், ஓய்வில் வந்து இராமரை மறந்து விட வேண்டாம் உண்மையான சீதையாக இருக்க வேண்டும். மரியாதை (நியமம்) என்ற கோட்டிலிருந்து எண்ணம் என்ற விரலைக்கூட வெளியே கொண்டு வரக்கூடாது. ஏனெனில், இந்த சாதனங்களை, சாதனா (தவவ-மை, ஆன்மிக முயற்சி) இல்லாமல் பயன்படுத்தினீர்கள் என்றால் அது பொன் மானாக வேலை செய்யும். ஆகையினால், மனிதன் மற்றும் பொருட்களின் மீது பற்று மற்றும் அடிபணிந்து போவதிலிருந்து எப்பொழுதும் தன்னை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில், தந்தைக்கு சிநேகி ஆகுவதற்கு பதிலாக, சகஜயோகி ஆகுவதற்கு பதிலாக அவ்வப்போது சகயோகி, அவ்வப்போது சகஜயோகி; அவ்வப்போது பிரிவு ஆகிய இரண்டு அனுபவங்களையும் செய்து கொண்டே இருப்பார்கள். அவ்வப்போது நினைவு, அவ்வப்போது முறையீடு செய்தல் என்ற இந்த அனுபவத்தில் செல்வார்கள் மற்றும் முறையீடு கூட ஒருபோதும் முடிவடையாது.

மனிதன் மற்றும் பொருளிடம் அடிபணிந்திருப்பதன் அடையாளமாக அவ்வப்போது சகஜயோகி, அவ்வப்போது யோகி, அவ்வப்போது முறையிடுதல் என்ற ஒன்று சொல்லப்பட்டது. இரண்டாவது விசயம் என்னவென்றால் அத்தகைய ஆத்மாவிற்கு பிராப்திகள் அனைத்தும் இருக்கும், அது சாதனமோ, சகயோகமோ அல்லது அன்போ, ஆனால்,

லீக்கேஜ் உள்ள ஆத்மா பிராப்தி கிடைத்திருந்த போதிலும் ஒருபோதும் திருப்தி அடைய மாட்டார்கள். அவர்களுடைய வாயிலிருந்து எப்பொழுதும் ஏதாவது விதத்தில் அதிருப்தியான வார்த்தை அவர்கள் விரும்பாமலேயே வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இவருக்கு நிறைய கிடைக்கிறது, இவரைப் போன்று வேறு யாருக்கும் கிடைப்பதில்லை என்று பிறர் அனுபவம் செய்வார்கள் ஆனால், அந்த ஆத்மாவோ சதா தன்னுடைய அபிராப்தியின், துக்கத்தின் வர்ணனை செய்து கொண்டே இருப்பார்கள். இவர்களைப் போன்று சுகமானவர்கள் எவரும் இல்லை என்று மக்கள் கூறுவார்கள் ஆனால், அவர்களோ, என்னைப் போன்று துக்கமானவர் எவரும் இல்லை என்று கூறுவார்கள். ஏனெனில், காற்றடைத்த பலூன் போன்று இருப்பார்கள். எப்பொழுது காற்றடைக்கப்பட்டு பெரியதாகிறதோ அப்பொழுது மிக உயரம் பறக்கிறது. எப்பொழுது காற்று வெளியேறி விடுகிறதோ, அப்பொழுது எங்கேயாவது விழுந்து விடுகிறது! அது பறக்கும்போது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக உள்ளது, ஆனால், அல்ப காலத்திற்கு மட்டுமே அது உள்ளது. ஒருபோதும் தனது பாக்கியத்தினால் திருப்தி அடைய மாட்டார்கள். எப்பொழுதும் தன்னுடைய பாக்கியத்திற்கு, அபிராப்திக்கு எவரையேனும் நிமித்தமாக ஆக்கிக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் இப்படி செய்கின்றார்கள், இது இப்படி நடக்கிறது, அதனால் எனக்கு பாக்கியம் இல்லை என்று பிறரை நிமித்தம் ஆக்குவார்கள். பாக்கிய விதாதாவே பாக்கியத்தை உருவாக்கக்கூடியவர். எங்கு பாக்கியவிதாதா பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றாரோ, அந்த பரமாத்ம சக்திக்கு முன் ஆத்மாவின் சக்தி, பாக்கியத்தை அசைக்க முடியாது. அவை அனைத்தும் சாக்குப்போக்குகள் ஆகும். பறக்கும் கலையின் வாத்தியம் இசைக்கத் தெரியாததால் சாக்குப்போக்கு அதிகம் சொல்கின்றார்கள். இதில் அனைவரும் புத்திசாலிகளாக உள்ளார்கள். ஆகையினால், அன்பினால் அடிபணிந்து இருந்தாலும் சரி, அல்லது கணக்கு வழக்கு முடிவடையும் காரணத்தினால் அடிபணிந்து இருந்தாலும் சரி -இதை சோதனை செய்யுங்கள்.

யாரிடம் பொறாமை மற்றும் வெறுப்பு உள்ளது என்றால் அங்கும் கூட அடிபணிந்த நிலை இருக்கும். அடிக்கடி அவர்களே நினைவில் வந்து கொண்டே இருப்பார்கள். தந்தையை நினைவு செய்வதற்காக யோகத்தில் அமர்வார்கள் ஆனால். யார் மீது வெறுப்பு மற்றும்

பொறாமை உள்ளதோ அவர்கள் நினைவு வரும். நான் சுயதரிசன சக்கரதாரி என்று நினைப்பார்கள், ஆனால், சுற்றுவதோ பரதரிசன சக்கரமாக இருக்கும். எனவே, இவ்விரு அடிபணிந்த நிலையும் கீழே கொண்டு வந்து விடுகிறது. ஆகையினால், இரண்டையும் சோதனை செய்ய வேண்டும். பிறகு, தந்தைக்கு முன்னால், நான் மிகவும் நல்லவர் தான், இந்த ஒரு விசயம் மட்டும் இப்படி உள்ளது, இதை நீங்கள் அழித்து விடுங்கள் என்று மனு தாக்கல் செய்வார்கள். கணக்கு உருவாக்கியது நீங்கள் ஆனால், அதை தீர்க்க வேண்டியது தந்தையா! என்று தந்தை புன்னகை பூக்கின்றார். கணக்கை முடிக்க வைத்து விடுங்கள் என்று சொல்வது கூட சரியே, ஆனால் முடித்து விடுங்கள் என்று கூறுவது சரியல்ல. உருவாக்கும் சமயம் தந்தையை மறந்து விட்டீர்கள் மற்றும் தீர்க்க வேண்டிய சமயம் பாபா பாபா என்று கூறுகின்றீர்கள்! செய்பவர் செய்விப்பவர் செய்விப்பதற்கு கடமைப்பட்டுள்ளார், ஆனால், செய்ய வேண்டியவரோ நீங்கள் தான். குழந்தைகளுடைய என்னென்ன சமாச்சாரத்தை பாப்தாதா பார்க்கின்றார்கள் என்பதைக் கேட்டீர்களா? சாரம் என்ன? வறண்ட ஞானியாக மட்டும் ஆகாதீர்கள். வெறும் அறிவுப்பூர்வமான ஞானியாக ஆகாதீர்கள். உள்ளப்பூர் வமான ஞானி மற்றும் சினேகி ஆகுங்கள் மற்றும் லீக்கேஜ்ஜை சோதனை செய்யுங்கள். புரிந்ததா?

18-ஜனவரி வந்து கொண்டு இருக்கிறது அல்லவா! ஆகையால், 18-ஜனவரி தினத்தை சதா காலத்திற்கு சக்திசாலியான தினமாகக் கொண்டாடப்பட முதலிலேயே நினைவு ஏற்படுத்துகின்றார்கள். புரிந்ததா? வாழ்க்கைக் கதையை மட்டும் சொல்லிக் கொண்டாடக்கூடாது, ஆனால், சமமான வாழ்க்கை உருவாகக் கொண்டாட வேண்டும். நல்லது!

சதா மனிதன் மற்றும் பொருளின் அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்ட, தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும், சதா யதார்த்த ஞானம் மற்றும் உள்ளத்தின் அன்பு ஆகிய இரண்டிலும் இணைந்த நிலையின் அனுபவம் செய்யக்கூடிய, சதா யோகி ஆகி சாதனாவின் ஸ்திதியில் இருந்து சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய, சதா சினேகி உள்ளத்தில் நிறைந்து இருக்கும் குழந்தைகளுக்கு திலாராம் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** தன்னை டபுள் ஹீரோ (இரட்டை கதாநாயகன்) என்று புரிந்து இருக்கின்றீர்களா? வைரத்திற்கு சமமான வாழ்க்கை உருவாகி விட்டது. எனவே, வைரத்திற்கு (ஹீரா) சமமாக ஆகி விட்டீர்கள் மற்றும் சிருஷ்டி நாடகத்தில் ஆதியிலிருந்து இறுதி வரை ஹீரோ பாகம் ஏற்று நடிப்பவர்கள் ஆவீர்கள். எனவே, டபுள் ஹீரோ ஆகி விட்டீர்கள் அல்லவா. எல்லைக்குட்பட்ட நாடகத்தில் பாகம் ஏற்று நடிக்கும் ஹீரோ நடிகர் மகிமை பாடபப்டு கின்றார், ஆனால், டபுள் ஹீரோ எவரும் இல்லை ஆனால், நீங்கள் டபுள் ஹீரோ ஆவீர்கள். தந்தையுடன் நடிப்பு நடிப்பது என்பது எவ்வளவு பெரிய பாக்கியம்! எனவே, இந்த சிரேஷ்ட பாக்கியத்தை நினைவில் வைத்து முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்கள் அல்லவா. நிற்பவர்கள் இல்லை அல்லவா? யார் களைப்படைவது இல்லையோ, அவர்கள் நிற்பதும் இல்லை, முன்னேறிக் கொண்டே இருப்பார்கள். எனில், நீங்கள் நிற்பவர்களா அல்லது களைப்படைபவர்களா? தனிமையாக இருக்கும் போது தான் களைப்பு அடைகின்றீர்கள். போர் (சசிப்பு) ஆகி விடுவதால் களைப்பு அடைந்து விடுகின்றனர் ஆனால், எங்கு துணை இருக்குமோ, அங்கு எப்பொழுதுமே ஊக்க உற்சாகம் இருக்கும். எந்தவொரு யாத்திரைக்கு செல்லும் போதும் என்ன செய்கின்றார்கள்? குழுவை உருவாக்குகின்றார்கள் அல்லவா! ஏன் உருவாக்குகின்றார்கள்? குழுவினால், துணையினால் ஊக்க உற்சாகத்தோடு முன்னேறிச் செல்வதற்காக உருவாக்குகின்றார்கள். எனவே, நீங்கள் அனைவரும் கூட ஆன்மிக யாத்திரையில் சதா முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில், தந்தையின் துணை, பிராமண பரிவாரத்தின் துணை ஆகிய எவ்வளவு சிறந்த துணை உள்ளது! ஒருவேளை, ஒரு நல்ல துணைவன் உடன் இருந்தால் ஒருபோதும் சலிப்பு ஏற்படாது, களைப்பு அடைய மாட்டார்கள். எனவே, சதா முன்னேறிக் கொண்டே இருப்பார்கள். எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருப்பார்கள், சதா குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பார்கள். எனவே, விருத்தி (வளர்ச்சி) அடைந்து கொண்டு இருக்கின்றீர்கள் அல்லவா! விருத்தி அடைந்தே ஆகவேண்டும். ஏனெனில், எங்கே வேண்டுமானாலும், எந்த மூலையில் குழந்தைகள் பிரிந்து போயிருந்தாலும், அங்கு அந்த ஆத்மாக்கள் நெருக்கத்தில் வந்துதான் ஆகவேண்டும், ஆகையினால்,

சேவையிலும் கூட விருத்தி ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. அமைதியாக அமர வேண்டும் என்று எவ்வளவு தான் விரும்பினாலும் அமர முடியாது. சேவை அமர விடாது, முன்னேறச் செய்யும். ஏனெனில், எந்த ஆத்மாக்கள் தந்தையினுடையவர்களாக இருந்தார்களோ, அவர்கள் மீண்டும் தந்தையுடையவர்களாக ஆகத்தான் வேண்டும். நல்லது.

**முக்கிய சகோதரர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** சக்திகளுக்கு வாய்ப்பு நன்றாக கிடைக்கிறது, தாதிகள் ஆகுவது நன்றாக உள்ளது என்று பாண்டவர்கள் யோசிக்கின்றனர் ஆனால், பாண்டவர்களின் பிளானிங் புத்தி (திட்டமிடும் புத்தி) இல்லை எனில் சக்திகள் என்ன செய்வார்கள்! இறுதி பிறவியில் கூட பாண்டவர் ஆகுவது ஒன்றும் குறைந்த விசயமல்ல. பாண்டவர்கள் இல்லாமல் சக்திகள் இல்லை, சக்திகள் இல்லாமல் பாண்டவர்கள் இல்லை. சதுர்புஜத்தில் (நான்கு புஜங்களில்) இரண்டு புஜங்கள் (கரங்கள்) அவர் களுடையது, இரண்டு புஜங்கள் இவர்களுடையது, ஆகையினால், பாண்டவர்களுடைய விசேஷத்தன்மை தனிப்பட்டது. நிமித்தமாக சேவை இவர்களுக்கு (தாதிகளுக்கு) கிடைத்துள்ளது, ஆகையால், இவர்கள் செய்கின்றார்கள். மற்றபடி, சதா பாண்டவர்கள் மீது சக்திகளுக்கும் மற்றும் சக்திகள் மீது பாண்டவர்களுக்கும் அன்பு உள்ளது, மரியாதை உள்ளது மற்றும் எப்பொழுதும் இருக்கும்.

சக்திகள் பாண்டவர்களை முன்னால் வைக்கின்றார்கள், இதில் தான் வெற்றி உள்ளது மற்றும் பாண்டவர்கள் சக்திகளை முன்னால் வைக்கின்றார்கள், இதில் தான் வெற்றி உள்ளது. முதலில் நீங்கள் என்ற பாடம் இருவருக்குமே பக்காவாக (உறுதியாக) உள்ளது. முதலில் நீங்கள், முதலில் நீங்கள் என்று சொல்லி, சுயம் தானும் முதலில் நீங்கள் ஆகி விடுவீர்கள் (முதலில் வந்து விடுவீர்கள்). தந்தை நடுவில் இருக்கின்றார், அதனால், சச்சரவே இல்லை. பாண்டவர்களுக்கு புத்திக்கான நல்ல வரதானம் கிடைத்துள்ளது. எந்தக் காரியத்திற்கு நிமித்தம் ஆகியிருக்கின்றார்களோ, அவர்களுக்கு அதே விசேஷத்தன்மை கிடைத்துள்ளது. மேலும், ஒவ்வொருவருடைய விசேஷத்தன்மையும் ஒன்றை விட ஒன்று மேலானது, ஆகையால், நீங்கள் நிமித்த ஆத்மாக்களாக இருக்கின்றீர்கள். நல்லது!

வரதானம்: எண்ணம், விருத்தி (உள்ளுணர்வு) மற்றும் நினைவு மூலம் வீணானதை முடிக்கக்கூடிய உண்மையான பிராமணர் சம்பூரணத் தூய்மையானவர் ஆகுக!

தன்னுடைய எண்ணம், விருத்தி (உள்ளுணர்வு) மற்றும் ஸ்மிருதியை (நினைவு) சோதனை செய்யுங்கள், அதாவது, ஏதாவது தவறு நடந்து விட்டது, அதற்காக வருத்தம் ஏற்பட்டது, மன்னிப்பும் கேட்டாச்சு, விடுதலை கிடைத்து விட்டது என்பது இல்லைதானே என்று சோதனை செய்யுங்கள். எவ்வளவு தான் மன்னிப்பு கேட்டாலும் சரி, ஆனால், என்ன பாவம் அல்லது வீணான செயல் செய்யப்பட்டதோ, அதன் அடையாளம் அழிந்து போகாது. பதிவேடு (ரிஜிஸ்டர்) தெளிவாக, சுத்தமாக இருக்காது. இந்த வழக்கை மட்டும் தனதாக்கிக் கொள்ளாதீர்கள், ஆனால், நான் சம்பூரணத் தூய்மையான பிராமணன், அபவித்திரதாவானது எண்ணம், விருத்தி மற்றும் நினைவைக் கூட தொட முடியாது என்பது நினைவில் இருக்கட்டும். இதற்காக ஒவ்வொரு அடியிலும் எச்சரிக்கை யாக இருங்கள்.

சுலோகன்: தந்தையின் துணையை பயன்படுத்துங்கள், அப்பொழுது ஒருபோதும் மனமுடைந்து போகமாட்டீர்கள்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 10.01.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிந்தனை செய்வதற்கான விதி மற்றும் சிந்தனை அதிகரிப்பதற்கான யுக்திகள் (குறிப்புகள்)!

இன்று இரத்தினங்களை வியாபாரம் செய்யும் தந்தை தனது ஒவ்வொரு உயர்ந்த ஆத்மா எந்தளவு ஞானம் -இரத்தினங்களை சேமிப்பு செய்திருக்கிறார்கள் அதாவது வாழ்க்கையில் தாரணை செய்திருக்கிறார்கள்? என்பதை பார்க்க வந்திருக்கிறார். முதலாவது -ஒரே ஒரு ஞான இரத்தினம் பல கோடி மடங்கை விட மதிப்பு வாய்ந்தது.! எனவே சிந்தியுங்கள், ஆரம்பத்திலிருந்து இதுவரை எவ்வளவு ஞான இரத்தினங்கள் கிடைத்திருக்கின்றன. இரத்தினங்களை வியாபாரம் செய்யக்கூடிய பாபாவின் ஒவ்வொரு குழந்தைகளின் புத்தி என்ற பையில் பற்பல இரத்தினங்கள் நிறைந்திருக்கிறது. அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே நேரத்தில் ஒரே அளவில் தான் ஞான இரத்தினங்களை தருகிறார் ஆனால் இந்த ஞான இரத்தினங்கள் எந்தளவு சுயத்திற்காக மற்றும் மற்ற ஆத்மாக்களுக்காக காரியத்தில் ஈடுபடுத்துகிறார்களோ, அந்தளவு இந்த இரத்தினங்கள் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். பாப்தாதா பார்த்துக் கொண்டேயிருக்கிறார் -பாபா அனைவருக்குமே சமமாக தான் கொடுக்கிறார், ஆனால் சில குழந்தைகள் இரத்தினங்களை அதிகரிக்கிறார்கள், மேலும் சில குழந்தைகள் இரத்தினங்களை அதிகரிப்பதில்லை. சிலர் நிறைந்திருக்கிறார்கள், சிலர் துண்டிக்கப்படாத செல்வந்தர்களாக இருக்கிறார்கள். சிலர் நேரத்திற்கு தகுந்தாற்போல் காரியத்தில் பயன்படுத்துகிறார்கள். சிலர் எப்பொழுதும் காரியத்தில் பயன்படுத்தி ஒன்றுக்கு பல மடங்கு அதிகரித்துக் கொண்டேயிருக்கிறார்கள். சிலர் எந்தளவு காரியத்தில் பயன்படுத்த வேண்டுமோ அந்தளவு கூட பயன்படுத்த முடியவதில்லை. ஆகையால் இரத்தினங்களின் மதிப்பை எந்தளவு புரிந்து கொள்ள வேண்டுமோ, அந்தளவு புரிந்து

கொள்ளவில்லை. எந்தளவு கிடைத்திருக்கிறதோ அதை புத்தியில் தாரணை செய்கிறீர்கள், ஆனால் செயலில் கொண்டு வருவதனால் தான் சுகம், குஷி, சக்தி, சாந்தி மற்றும் நிர்விக்ன (தடையற்ற) மனநிலையை அடைவதற்கான அனுபவம் ஏற்பட வேண்டும், அது ஏற்படுவதில்லை. இதற்கான காரணம் சிந்தைனை செய்யும் சக்தியின் குறைபாடு ஆகும். ஏனெனில் சிந்தனை செய்வது என்றாலே வாழ்க்கையில் கொண்டுவருவது, நடைமுறைப்படுத்துவதாகும். சிந்தனை செய்யவில்லை அதாவது புத்தியில் மட்டும் தான் இருக்கிறது. அதை வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்திலும் கொண்டு வருவது -தனக்காகவும், மற்ற ஆத்மாக்களுக்காக மேலும் மற்றவர்களுக்கு கூட புத்தியில் மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்கிறார்கள் அதாவது புத்தியில் கொண்டு வருகிறார்கள்.

எப்படி யாராவது ஸ்தூலமான பொக்கிஷத்தை (செல்வத்தை) பெட்டகத்தில் அல்லது லாக்கரில் மட்டும் வைத்துக் கொண்டு, நேரத்திற்கு தகுந்தவாறு அல்லது சதா செயலில் பயன்படுத்த வில்லையென்றால் குஷியின் அனுபவம் ஏற்படாது, நம்மிடம் இருக்கிறது என்று மனதிற்கு மட்டும் ஆறுதலாக இருக்கும். அதிகரிக்கவும் செய்யாது, அனுபவமும் ஏற்படாது. அதுபோல, ஞான இரத்தினங்களையும் கூட ஒருவேளை புத்தி வரை மட்டும் தாரணை செய்கிறீர்கள், ஞாபகத்தில் இருக்கிறது, வார்த்தைகளின் மூலம் வர்ணணை செய்கிறீர்கள் -பாயிண்ட் மிக நன்றாக இருக்கிறது, இதனால் சிறிது நேரத்திற்காக மட்டும் நன்றாக குஷி ஏற்படுகிறது, ஆனால் வாழ்க்கை யில், ஒவ்வொரு செயலிலும் அந்த ஞான இரத்தினங்களை கொண்டு வர வேண்டும். ஏனெனில் ஞானம் என்பது இரத்தினங்களாகவும் இருக்கிறது, ஞானம் வெளிச்சம் (தெளிவு) கொடுக்கிறது, ஞானம் சக்தியாகவும் கூட இருக்கிறது, ஆகையால் ஒருவேளை செயலில் கொண்டு வரவில்லையென்றால் அதிகரிக்கவும் செய்யாது, அனுபவமும் ஏற்படாது. ஞானம் என்பது படிப்பாகவும் இருக்கிறது, ஞானம் என்பது போர்களத்தின் உயர்ந்த ஆயுதமாகவும் கூட இருக்கும். இது தான் ஞானத்தின் மதிப்பாக இருக்கிறது. மதிப்பை தெரிந்து கொள்வது என்றாலே செயலில் கொண்டு வருவது மற்றும் எந்தளவு செயலில் கொண்டு வருகிறார்களோ, அந்தளவு சக்தியின் அனுபவம் செய்ய முடியும். எவ்வாறு ஆயுதத்தை நேரத்திற்கு

தகுந்தவாறு பயன்படுத்தவில்லையென்றால் அந்த ஆயுதம் பயனற்றதாகி விடுகிறது, அதாவது அதற்கு (ஞானத்திற்கு) என்ன மதிப்பு இருக்கிறதோ, அது அந்தளவு இருக்காது. ஞானம் என்பது ஆயுதமாக தான் இருக்கிறது, ஒருவேளை மாயாவின் மீது வெற்றி அடையும் நேரத்தில் ஆயுதத்தை பயன்படுத்தவில்லையென்றால், என்ன மதிப்பு இருக்க வேண்டுமோ, அதை குறைத்து விடுவதால் லாபத்தை பெறமுடிவதில்லை. லாபத்தை பெறுவது என்றாலே மதிப்பு வைப்பது. ஞான இரத்தினங்கள் அனைவரிடமும் இருக்கிறது, ஏனெனில் உரிமையாளராக இருக்கிறீர்கள் ஆனால் நிறைந்தவர் ஆவதில் நம்பர் வாராக (வரிசைப்படி) இருக்கிறீர்கள். முக்கிய காரணத்தை கேட்டீர்கள் -சிந்தனை சக்தியின் குறைபாடு தான்.

சிந்தனை சக்தி பாபாவின் பொக்கிஷத்தை தனது பொக்கிஷமாக அனுபவம் செய்ய வைக்க ஆதாரமாக இருக்கிறது. ஸ்துலமான உணவை ஜீரணம் ஆவதின் மூலம் தான் இரத்தம் உருவாகிறது. ஏனெனில் உணவு என்பது தனிப்பட்டது, அதை ஜீரணம் செய்யும் பொழுது தான் அது இரத்தமாக மாறி தனதாக மாறி விடுகிறது. அதுபோல சிந்தனை சக்தியின் மூலம் பாபாவின் பொக்கிஷங்கள் அனைத்தும் என்னுடைய பொக்கிஷம் -இது தனது உரிமையாக, தனது பொக்கிஷமாக அனுபவமாகிறது. பாப்தாதா முன்பு கூட சொல்லி இருந்தார் -தனது குஷியின் போதை ஏற்பட வேண்டும், அதாவது பாபாவின் பொக்கிஷத்தை சிந்தனை சக்தியின் மூலம் செயலில் பயன்படுத்தி பிராப்திகளை அனுபவம் செய்தீர்கள் என்றால் நஷா ஏறும். கேட்கும் சமயத்தில் நஷா இருக்கிறது, ஆனால் எப்பொழுதும் ஏன் இருப்பதில்லை? இதற்கான காரணம் எப்பொழுதும் சிந்தனை சக்தியினால் தனதாக மாற்றிக் கொள்ளவில்லை. சிந்தனை சக்தி என்றால் கடலுக்கு அடியில் சென்று அந்தர்முகி ஆகி ஒவ்வொரு ஞானம் இரத்தினத்தின் ஆழத்தில் செல்வது. திரும்ப திரும்ப மட்டும் சொல்ல வேண்டாம், ஆனால் ஒவ்வொரு ஞான கருத்துக்களின் இரகசியம் என்ன மேலும் ஒவ்வொரு பாயிண்டையும் 1. எந்த சமயம், 2. எந்த முறையில் செயலில் பயன்படுத்த வேண்டும் மேலும் 3. ஒவ்வொரு பாயிண்டையும் மற்ற ஆத்மாக்களுக்காக சேவையில் 4. எந்த முறையோடு காரியத் தில் பயன்படுத்த வேண்டும் -இந்த நான்கு விதமான விஷயங்களில் ஒவ்வொரு ஞான கருத்துக்களையும் கேட்டு

சிந்தனை செய்யுங்கள். சிந்தனை செய்வதன் கூடவே நடைமுறையில் அந்த இரகசியத்தின் சாராம்சத்தில் செல்லுங்கள், குஷியின் அனுபவத்தில் செல்லுங்கள். மாயாவின் விதவிதமான தடைகளை நேரம் மற்றும் இயற்கையின் பல விதமான சூழ்நிலைகளை நேரத்திற்கு தகுந்தவாறு செயலில் பயன்படுத்தி பாருங்கள் -சூழ்நிலைகளுக்கு தகுந்தப்படி மற்றும் தடைக்களுக்கு தகுந்தாற்போல் இந்த ஞான இரத்தினங்கள் மூலம் மாயாஜீத் ஆக்க முடிகிறதா அல்லது மாற்றக்கூடியதாக இருக்க முடியும் என்று நான் சிந்தனை செய்தேனா? நான் நடைமுறையில் கொண்டு வந்தேனா அதாவது மாயாஜீத் ஆனேனா? அல்லது மாயாஜீத் ஆக வேண்டுமென்று நான் சிந்தனை செய்தேன் (நினைத்தேன்), ஆனால் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது அல்லது நேரம் வீணாகி விட்டது? இதன் மூலம் விதி (முறைப்படி) சரியாக இல்லாமல் இருக்கும் பொழுது வெற்றி கிடைக்காது என்பது நிரூபணமாகிறது. பயன்படுத்துவதற்கான வழிக் கூட வேண்டும், பயிற்சியும் வேண்டும். விஞ்ஞானிகளும் கூட மிகவும் சக்திசாலியான குண்டுகளை (பாம்ஸ்) கொண்டு வருகின்றனர். புரிந்து கொள்கிறார்கள் -இது போதும் இதன் மூலம் இப்பொழுதும் வெற்றியடைந்து விடலாம் ஆனால் பயன்படுத்தக் கூடிய உரிமையுள்ளவர்களுக்கு பயன்படுத்த தெரியாததால், சக்திசாலியான குண்டு (பாம்ஸ்) இங்கு இருக்கிறது, ஆனால் அந்த மாதிரி இடங்களுக்கு சென்று பயன்படுத்தி விடுகிறார்கள், அது வீணாகி விடுகிறது. காரணம் என்னவாக இருக்கும்? பயன்படுத்தும் வழிமுறை சரியில்லை. அதுபோல ஒவ்வொரு ஞான இரத்தினங்களும் மிகவும் மதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது. ஞான இரத்தினங்கள் மற்றும் ஞானத்தின் சக்தியான நிலைக்கு முன்னால் சூழ்நிலைகளோ அல்லது தடைகளோ நிலைத்திருக்க முடியாது ஆனால் ஒருவேளை வெற்றி கிடைக்கவில்லை என்றால் பயன்படுத்தும் வழி தெரியவில்லை என்று புரிந்து கொள்ள வேண்டும். மற்றொரு விஷயம் -சிந்தனை செய்வதற்கான பயிற்சி சதா செய்யாமல் இருக்கும் காரணத்தினால் சமயத்தில் பயிற்சியில்லாமல் திடீரென்று செயலில் ஈடுபடுவதற்கான முயற்சி செய்கிறார்கள், அதனால் ஏமாற்றம் அடைந்து விடுகிறார்கள். ஞானம் புத்தியில் இருக்கிறது, அது சமயத்தில் செயலில் பயன்படுத்தி விடலாம் என்று அலட்சியமும் வந்து விடுகிறது. எனவே நெடுங்காலத்திற்கான பயிற்சி வேண்டும். இல்லையென்றால் அந்த நேரத்தில் சிந்தனை செய்யக் கூடியவர்களுக்கு என்ன பட்டப்பெயர்

கொடுக்கலாம்? கும்பகர்ணன். அவருக்கு (கும்பகர்ணனுக்கு) என்ன அலட்சியம் இருந்தது? வரட்டும், வந்தால் வெற்றி அடைந்து விடலாம் என்று யோசித்தார். நேரத்தில் நடந்து விடும் என்று யோசிப்பது, இந்த அலட்சிய போக்கு தான் ஏமாற்றத்தை தருகிறது. ஆகையால் ஒவ்வொரு நாளும் சிந்தனை சக்தியை அதிகரித்துக் கொண்டே இருங்கள்.

ரிவைஸ் கோர்ஸ் (மீண்டும் எடுக்கப்படும் பாடத்தில்), அல்லது அவ்யக்த முரளியில், எதை தினந்தோறும் கேட்கிறோமோ, எனவே சிந்தனை சக்தியை அதிகரிப்பதற்காக தினந்தோறும் ஏதாவதொரு விசேஷமான பாயிண்டை (ஞான கருத்துகள்) புத்தியில் தாரணை செய்யுங்கள், மேலும் நான்கு விஷயங்களை கேட்டீர்கள், அதை முறைபடி பயிற்சி செய்யுங்கள். நடந்தாலும், சுற்றினாலும், எந்த காரியம் செய்தாலும் -சேவை செய்து கொண்டிருந்தாலும் முழு நாளும் சிந்தனை செய்து கொண்டேயிருங்கள். வியாபாரம் செய்து கொண்டிருந்தாலும், அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தாலும், சேவை நிலையத்தில் சேவை செய்து கொண்டிருந்தாலும், எப்பொழுது புத்திக்கு நேரம் கிடைக்கிறதோ, தனது சிந்தனை சக்தியை அடிக்கடி பயிற்சி செய்ய வையுங்கள். ஒரு சில வேலைகள் செய்து கொண்டிருந்தாலும் கூட, அதனுடன் சேர்ந்து சிந்தனையும் செய்ய முடியும். ஒரு சில காரியத்தில் புத்தியின் முழு கவனம் செலுத்தி செய்ய வேண்டிய செயலுக்கு சிறிது நேரம் தான் தேவைப்படுகிறது, இல்லையென்றால் புத்தி இரு தரப்பில் (வேலை மற்றும் பிற சிந்தனை) இருந்துக் கொண்டிருக்கிறது. ஒருவேளை அப்படிப்பட்ட நேரத்தில் தனது தினசரி செயலில் குறித்து வைத்துக் கொண்டால் இடை இடையில் அதிகமான நேரம் கிடைக்கும். சிந்தனை சக்தியை வளர்த்துக் கொள்வதற்காக சிறப்பான முறையில் நேரம் ஒதுக்கி பயிற்சி செய்யவேண்டும் என்பதல்ல. நடந்தாலும், சுற்றினாலும் (எந்த காரியம் செய்து கொண்டிருந்தாலும்) கூட செய்ய முடியும். ஒருவேளை தனிமையாக நேரம் கிடைக்கிறதென்றால் மிகவும் நல்லது. மேலும் நுட்பமாக சென்று ஒவ்வொரு ஞான கருத்துகளிலும் தெளிவாக செல்லுங்கள், பிறகு விரிவாக புரிந்து கொண்டால் மிகவும் மகிழ்ச்சி வரும் ஆனால் முதலாவதாக ஞான கருத்துகளின் மகிழ்ச்சியான மனநிலையில் நிலைத்திருங்கள், பிறகு

சலிப்பு ஏற்படாது. இல்லையென்றால் ரிபிட் (மீண்டும் மீண்டும் ஞான கருத்துகளை மட்டும் சொல்லுவார்கள்) செய்வார்கள், பிறகு சொல்வார்கள், இது நடந்து விட்டது, என்ன செய்வது?

பலர் சுயதரிசன சக்கரத்தை சுற்றுவதில் சிரிக்கிறீர்கள் (நகைக்கிறார்கள்) அல்லவா -என்ன சக்கரத்தை சுற்றுவது, 5-நிமிடத்தில் சக்கரம் முடிந்து விடுகிறது! ஸ்திதியின் அனுபவம் செய்ய முடிவதில்லை, ரிபீட் (திரும்ப திரும்ப) மட்டும் தான் செய்கிறோம் -சத்யுகம், திரேதா யுகம், துவாபர், கலியுகம், இத்தனை பிறவிகள், இவ்வளவு ஆயுள் காலம், இவ்வளவு காலளவு -அவ்வளவு தான், முடிந்து விட்டது ஆனால் சுயதர்சன சக்ரதாரி ஆவது என்றால் ஞானம் நிறைந்தவர், சக்திசாலியான மனநிலையின் அனுபவம் செய்வது. பாயிண்டின் (ஞான கருத்து) மகிழ்ச்சியில் நிலைத்திருப்பது, ஞானத்தின் ரகசியத்தில் மறைந்திருப்பதை தெரிந்து கொள்வது, அப்படிப்பட்ட பயிற்சியை ஒவ்வொரு பாயிண்டிலும் செய்யுங்கள். இதை ஒரே ஒரு சுயதர்சன சக்கரத்தின் விஷயத்தை மட்டும் சொன்னேன். அப்படிப்பட்ட ஒவ்வொரு ஞானத்தின் பாயிண்ட்டை சிந்தனை செய்யுங்கள், மேலும் இடை இடையில் பயிற்சி செய்யுங்கள். அரை மணி நேரம் மட்டும் சிந்தனை செய்தேன் என்பது அல்ல. நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் புத்தியை சிந்தனை செய்வதற்கான பயிற்சியில் செல்வது. சிந்தனை சக்தி மூலம் புத்தி பிஸியாக (சுறுசுறுப்பாக) இருப்பதால் இயல்பாகவே எளிதாக மாயாஜீத் ஆகி விடலாம். பிஸியாக இருப்பதை பார்த்து மாயா அதுவாகவே ஒதுங்கி சென்றுவிடும். மாயா வருகிறது யுத்தம் செய்கிறீர்கள், துரத்துகிறீர்கள், பிறகு சில நேரங்களில் தோல்வி, சில நேரங்களில் வெற்றி -இது போன்ற எறும்புகளின் பாதையில் செல்வதற்கான முயற்சியாக இருக்கிறது. இப்பொழுது தீவிர முயற்சி செய்வதற்கான நேரமாக இருக்கிறது, பறந்து செல்வதற்கான சமயமாக இருக்கிறது. ஆகையால் சிந்தனை சக்தி மூலம் புத்தியை பிஸியாக வையுங்கள். இந்த சிந்தனை சக்தி மூலம் நினைவின் சக்தியில் மூழ்கி இருப்பது -இந்த அனுபவம் எளிதாகி விடும். சிந்தனை -மாயாஜீத் மற்றும் வீணான எண்ணங் களிலிருந்து கூட விடுவித்து விடுகிறது. எங்கு வீணானது இல்லாமல், தடைகள் இல்லாமல் இருந்தால் சக்திசாலியான மனநிலை மற்றும் அன்பில் மூழ்கியிருப்பதற்கான மனநிலை தானாகவே இருந்து விடுகிறது.

பலர் யோசிக்கிறார்கள் -பீஜ் ரூபம் (விதை சொரூபத்தின்) மற்றும் சக்திசாலியான நினைவின் மனநிலை குறைவாக இருக்கிறது, மற்றும் மிகவும் கவனம் கொடுத்த பிறகு தான் அனுபவம் ஏற்படுகிறது. இதற்கான காரணம் லீகேஜ் (கசிவு) தான் என்று ஏற்கனவே சொல்லியிருந்தேன். புத்தியின் சக்தி வீணாக போய்விடுகிறது. சில சமயம் வீணான எண்ணங்கள், சில நேரங்கள் சாதாரண எண்ணங்கள் வருகிறது. எந்த செயலை செய்து கொண்டிருக்கிறோமோ, அதைப் பற்றிய எண்ணங்களில் புத்தி பிஸியாக இருப்பது -இதை சாதாரண எண்ணங்கள் என்று தான் சொல்லப்படுகிறது. நினைவின் சக்தி மற்றும் சிந்தனை சக்தி எப்படி இருக்க வேண்டுமோ, அவ்வாறு இருப்ப தில்லை, மேலும் இன்று எந்த பாவ காரியமும் செய்யவில்லை, வீணாக்கவில்லை, யாருக்கும் துக்கம் கொடுக்கவில்லை என்று தன்னை தானே குஷிப்படுத்திக் கொள்கிறோம் ஆனால் சக்திசாலியான எண்ணம், சக்திசாலியான மனநிலை, சக்திசாலியான நினைவு இருக்கிறதா? ஒருவேளை அவ்வாறு இல்லையென்றால் இதை சாதாரன எண்ணங்கள் என்று தான் சொல்லப்படுகிறது. செயல் செய்தோம், ஆனால் காரியத்துடன் சேர்ந்து யோகம் (நினைவு) இருப்பதில்லை. காரியம் செய்பவராக இருக்கிறீர்கள், ஆனால் கர்மயோகியாக இல்லை. ஆகையால் காரியம் செய்து கொண்டிருந்தாலும் கூட, சிந்தனை சக்தி மற்றும் முழ்கியிருக்கும் நிலை, இரண்டில் ஏதாவதொரு அனுபவம் சதா இருக்க வேண்டும். இந்த இரண்டு விதமான மனநிலை சக்திசாலியான சேவை செய்ய வைப்பதற்கு ஆதாரமாகும். சிந்தனை செய்யக் கூடியவர்களுக்கு, பயிற்சி செய்யும் காரணத்தினால் எந்த நேரம் எந்தவித மனநிலையை உருவாக்க விரும்புகிறார்களோ, அதை உருவாக்க முடியும். இணைப்பு (பாபாவோடு தொடர்பு) இருக்கும் காரணத்தினால் கசிவு நின்று விடுகிறது, மேலும் எந்த சமயம் என்ன அனுபவம் தேவையோ, விதை சொரூபம் நிலை, ஃபரிஸ்தா ரூபத்தின் நிலை, என்ன செய்ய விரும்புகிறார்களோ, அதை எளிதாக செய்ய முடியும். ஏனெனில் ஞானத்தின் நினைவு இருப்பதால், ஞானத்தை அளிக்கும் வள்ளலின் நினைவு தானாகவே நினைவில் இருக்கும். எனவே எப்படி சிந்தனை செய்ய வேண்டும்? என்று புரிந்து கொண்டீர்களா. எனவே இன்று எப்படி சிந்தனை செய்வதற்கான விதியை சொன்னேன். மாயாவின் தடைகளிடமிருந்து வெற்றியடைவது அல்லது சதா சேவையில்

வெற்றியின் அனுபவம் செய்வது, இதற்கான ஆதாரம் சிந்தனை சக்தி ஆகும். புரிந்ததா? நல்லது.

ஞான கடலின் ஞானம் நிறைந்த ஆத்மாவாகிய குழந்தைகள் அனைவருக்கும், சதா சிந்தனை சக்தி மூலம் சகஜ மாயாஜீத் ஆகக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கும், சதா சிந்தனை சக்தியின் பயிற்சியை அதிகரிக்கக் கூடியவர்களுக்கு, சிந்தனை சக்தி மூலம் அன்பில் மூழ்கிய மனநிலையை அனுபவம் செய்யக் கூடியவர்களுக்கு, சதா ஞான இரத்தினங்களின் மதிப்பை தெரிந்திருக்கக்கூடிய, சதா ஒவ்வொரு கர்மத்தின் ஞானத்தின் சக்தியை காரியத்தில் கொண்டு வரக்கூடிய, அப்படிப்பட்ட சதா சிரேஷ்ட மனநிலையில் இருக்கக் கூடிய விசேஷமான மற்றும் விலைமதிப்பிட முடியாத இரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

பார்ட்டிகளுடன்: தன்னை தீவிர முயற்சி செய்யும் ஆத்மாவாக உணர்கிறீர்களா? ஏனெனில் நேரம் மிக வேகமாக நகர்ந்துக் (சென்று) கொண்டேயிருக்கிறது? எப்படி நேரம் நகர்ந்துக் கொண்டேயிருக்கிறதோ, அதனால் நேரத்தில் குறிக்கோளை அடையக் கூடியவர்கள் எந்த வேகத்தில் நகர வேண்டியிருக்கிறது? நேரம் குறைவாக இருக்கிறது, மேலும் பிராப்தி அதிகமாக பெற வேண்டும். எனவே ஒருவேளை குறைந்த நேரத்தில் அதிகப் படியான பிராப்தியை அடைய வேண்டுமென்றால், வேகப்படுத்த வேண்டுமல்லவா! நேரத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், மேலும் தனது முயற்சியின் வேகத்தையும் கூட தெரிந்திருக்கிறீர்கள். எனவே நேரம் வேகமாக செல்கிறது, மேலும் தனது வேகம் குறைவாக இருக்கிறது என்றால் நேரம் அதாவது படைப்பவராகிய உங்களை விட படைப்பு வேகமாக இருக்கிறது. படைப்பவரை விட படைப்பு வேகமாக செல்கிறது என்றால் அதை நல்ல விஷயம் என்று சொல்ல முடியுமா? படைப்பை விட படைப்பவராகிய நீங்கள் முன்னால் இருக்க வேண்டும். சதா தீவிர முயற்சி செய்யும் ஆத்மாவாகி முன்னேறும் நேரமாக இருக்கிறது. முன்னேறிக் கொண்டே இருக்கும் பொழுது ஏதாவது சைட் சீனை (side scene வேடிக்கை) பார்த்து நின்று விடுகிறீர்கள், வேடிக்கை பார்ப்பவர்களால் குறித்த (சரியான) நேரத்தில் (இலக்கை) சென்றடைய முடியாது. எந்தவொரு மாயாவின் ஈர்ப்பும் சைட் சீன்னாகும். வேடிக்கை

பார்த்துக் கொண்டு நின்றிருக்கூடியவர்களால் குறிக்கோளை எப்படி சென்றடைய முடியும்? ஆகையால் சதா தீவிர முயற்சியாளராகி முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நேரத்தில் சென்றடைந்து விடுவோம், இப்பொழுது நேரம் இருக்கிறது என்பல்ல. அவ்வாறு யோசித்துக் கொண்டே ஒருவேளை மெதுவாக (குறைந்த) வேகத்தில் சென்றால் நேரத்தில் ஏமாந்து விடுவோம். நெடுங்கால தீவிர முயற்சியின் சம்ஸ்காரம் கடைசி யில் கூட தீவிர முயற்சியின் அனுபவம் செய்ய வைக்கும். எனவே எப்பொழுதும் தீவிர முயற்சி யாளர்களாக இருங்கள். சில சமயங்களில் தீவிரமாகவும், சில சமயம் பலவீனமாக முயற்சி செய்வது என்பது அல்ல. ஏதாவது நடந்து விட்டால் பலவீனமாகி விடுவது என்பது கிடையாது. இவர்களை தீவிர முயற்சியாளர் என்று சொல்ல முடியாது. தீவிர முயற்சியாளராக இருப்பவர்கள் நிற்பது கிடையாது, பறந்துக் கொண்டேயிருப்பார்கள். எனவே பறக்கும் பறவை ஆகி பறக்கும் கலையின் அனுபவம் செய்து கொண்டே செல்லுங்கள். தங்களுக்குள் கூட உதவி அளித்து தீவிர முயற்சியாளராக மாற்றிக் கொண்டே செல்லுங்கள். எந்தளவு மற்றவர்களுக்கு சேவை செய்கிறீர்களோ, அந்தளவு தன்னுடைய ஊக்கம் -உற்சாகமும் அதிகரிக்கும்.

விடைபெறும் நேரத்தில்: (தாதி ஜானகி அவர்களின் வெளிநாடு செல்வதற்கான பயணத்திற்கு பாப்தாதாவிடமிருந்து அனுமதி பெற்றுக் கொண்டிருக்கிறார்). உள்நாடு-வெளிநாடுகளில் சேவையின் ஊக்கம் உற்சாகம் நன்றாக இருக்கிறது. முதலில் தனக்குள் ஊக்க-உற்சாகம் இருக்க வேண்டும், இயக்கத்தின் சக்தியும் இருக்கிறது, இதில் சதா கவனம் வையுங்கள். அன்பின் சக்தி, உதவியின் சக்தி இருந்தால் அதன் அடிப்படையில் வெற்றி கிடைக்கும். இது தான் நிலம் (அன்பு, உதவி). நிலம் நன்றாக இருந்தால் பழமும் கூட அதற்கு தகுந்தவாறு கிடைக்கும். ஒருவேளை தற்காலிகமாக நிலத்தை சரி செய்து (உழுதால்) விதை விதைத்தால் தற்சமயத்திற்கு தான் பழமும் கிடைக்கும். சதா காலத்திற்காக பழம் (பலன்) கிடைக்காது. எனவே வெற்றி என்ற பழத்தை பெறுவதற்கு முன்னால் எப்பொழுதும் நிலத்தை சோதனை செய்யுங்கள். மற்றபடி யார் செய் கிறார்களோ, அதனுடைய சேமிப்பு ஆகிக் கொண்டேயிருக்கும். இப்பொழுதும் குஷி கிடைக்கிறது, எதிர்காலத்திலும் குஷி கிடைக்கிறது. நல்லது.

வரதானம்: உடைப்பது, வளைப்பது மற்றும் இணைப்பது -இந்த மூன்று வார்த்தைகளின் நினைவு மூலம் சதா வெற்றியாளர் ஆகுக!

முழு படிப்பு மற்றும் அறிவுரைகளின் சாரம்சமே இந்த மூன்று வார்த்தைகள் தான் -1. கர்ம பந்தனத்தை உடைப்பது, 2. தனது சம்ஸ்கார -சுபாவத்தை வளைப்பது, மேலும் 3. ஒரு பாபாவோடு அனைத்து சம்மந்தங்களையும் இணைப்பது -இந்த மூன்று வார்த்தைகள் தான் சம்பூரண வெற்றி யாளர்களாக மாற்றுகிறது. இதற்காக என்னவெல்லாம் இந்த கண்களின் மூலம் பார்க்கிறோமோ, அவை அனைத்தும் அழிந்து விட்டது என்ற நினைவில் இருங்கள். அதை பார்த்தாலும் தனது புது சம்மந்தம், புது உலகத்தை பார்த்தால், ஒருபொழுதும் தோல்வி ஏற்படாது.

சுலோகன்: யோகியின் அடையாளம் -சதா சுத்தம் மற்றும் தெளிவாக இருப்பதாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 14.01.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மகிழ்ச்சியற்ற நிலைக்குக் காரணம் சிறுசிறு அவமரியாதைகள் (கீழ்ப்படியாமை)!

இன்று எல்லைக்கப்பாற்பட்ட பெரியவரிலும் பெரியவராகிய தந்தை, உயர்ந்தவரிலும் உயர்ந்தவராகிய தந்தை தம்முடைய நாலாபுறம் உள்ள குழந்தைகளுக்குள் விசேஷமாகக் கீழ்ப்படிதலான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். கீழ்ப்படிதலான குழந்தைகள் என்று அனைவருமே தங்களை நினைக்கின்றனர் ஆனால் வரிசைக்கிரமமாக உள்ளனர். சிலர் சதா கீழ்ப்படிதலானவராக உள்ளனர், சிலர் கீழ்ப்படிதலானவராக உள்ளனர், சதா இல்லை, கீழ்ப்படிதலானவர்களின் பட்டியலில் குழந்தைகள் அனைவரும் வந்து விடு கின்றனர் ஆனால் வேறுபாடு நிச்சயமாக உள்ளது. கட்டளையிடுபவராகிய பாபா குழந்தைகள் அனைவருக்கும் ஒரே சமயத்தில் ஒரே கட்டளை தான் தருகிறார். தனித்தனியாக, வெவ்வேறு கட்டளைகள் கொடுப்பதில்லை. பிறகும் நம்பர்வார் ஏன் உள்ளனர்? ஏனென்றால் யார் சதா ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு கர்மம் செய்யும் போதும் பாபாவின் கட்டளையின் ஸ்மிருதி சொரூபமாக சகஜமாகவே ஆகி விடுகிறார்களோ, அவர்கள் தாமாகவே ஒவ்வொரு சங்கல்பம், வார்த்தை மற்றும் கர்மத்தில் கட்டளைப்படி நடக்கின்றனர் மற்றும் சில நேரம் நடந்ததற்குப் பிறகு கட்டளையை நினைக்கின்றனர். ஏனென்றால் கட்டளையின் ஸ்மிருதி சொரூபமாக அவர்கள் இல்லை. சிரேஷ்ட கர்மத்தின் பிரத்தியட்ச பலன் என்ன கிடைக்கிறதோ, அந்தப் பிரத்தியட்ச பலனின் அனுபவம் இல்லாத காரணத்தால் கர்மத்திற்குப் பிறகு இந்த முடிவு ஏன் ஏற்பட்டது என்று நினைவு வருகிறது. கர்மத்திற்குப் பிறகு சோதித்துப் பார்ப்பார்களானால் புரிந்து கொள்கின்றனர் -பாபாவின் கட்டளை எப்படி உள்ளதோ, அதன்படி நடக்காத காரணத்தால் எந்த ஒரு பிரத்தியட்ச பலன் அனுபவமாக வேண்டுமோ, அது ஆகவில்லை.

இதைத் தான் கட்டளையின் ஸ்மிருதி சொரூபமாக ஆகவில்லை எனச் சொல்வது ஆனால் கர்மத்தின் பலனைப் பார்த்து ஸ்மிருதி வந்தது. ஆக, நம்பர் ஒன் -சகஜமாக, தானாக ஸ்மிருதி சொரூபமாக, கீழ்ப்படிதலாக இருப்பவர். மற்றும் இரண்டாவது நம்பர் -சில நேரம் ஸ்மிருதியுடன் கர்மம் செய்பவர் மற்றும் சில நேரம் கர்மத்திற்குப் பிறகு ஸ்மிருதியில் வருபவர்கள். மூன்றாவது நம்பரோ, அந்தப் பேச்சையே விட்டு விடுங்கள். இரண்டு மாலைகள் உள்ளன. முதலில் சிறிய மாலை, இரண்டாவது பெரிய மாலை. மூன்றா மவருக்கோ மாலையே இல்லை. அதனால் இரண்டு பேரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

நம்பர் ஒன் கீழ்ப்படிதலானவர்கள் சதா அமிர்தவேளையில் இருந்து இரவு வரை நாள் முழுவதிலும் செய்யும் ஒவ்வொரு கர்மத்திலும் கட்டளைப்படி நடக்கிற காரணத்தால் ஒவ்வொரு கர்மத்திலும் உழைப்பை அனுபவம் செய்வதில்லை ஆனால் கீழ்ப்படிதலானவராக ஆவதற்கான விசேஷ பலனாக பாபாவின் ஆசிர்வாதங்களை அனுபவம் செய்கின்றனர். ஏனென்றால் கீழ்ப்படிதலான குழந்தை மீது ஒவ்வோரடியிலும் பாப்தாதாவின் மனப்பூர்வ ஆசிர்வாதங்கள் கூடவே உள்ளன. அதனால் மனப்பூர்வ ஆசிர்வாதங்களின் காரணத்தால் ஒவ்வொரு கர்மமும் பலனளிப்பதாக உள்ளது. ஏனென்றால் கர்மம் என்பது விதை மற்றும் விதையிலிருந்து கிடைக்கும் பிராப்தியானது பழமாகும். ஆக, நம்பர் ஒன் கீழ்ப்படிதலான ஆத்மாவின் ஒவ்வொரு கர்மம் என்ற விதை சக்திசாலியாக இருக்கும் காரணத்தால் ஒவ்வொரு கர்மத்தின் பலன், அதாவது திருப்தி, வெற்றி கிடைக்கிறது. திருப்தி தனக்குத் தானாகவும் ஏற்படுகிறது மற்றும் கர்மத்தின் விளைவினாலும் ஏற்படுகிறது. மேலும் மற்ற ஆத்மாக்களின் சம்பந்தம்-தொடர்பு மூலமாகவும் ஏற்படுகிறது. நம்பர் ஒன் கீழ்ப்படிதலான ஆத்மாக்களுக்கு மூன்று விதமான திருப்தியும் தானாக மற்றும் சதா அனுபவம் ஆகிறது. அநேக முறை அநேக குழந்தைகள் தங்களின் கர்மங்களால் தாங்களே திருப்தியடைகின்றனர் -நான் மிக நன்றாக விதிப்பூர்வமாகக் கர்மம் செய்தேன், ஆனால் எங்கேயும் வெற்றி என்ற பலன், எவ்வளவு சுயம் புரிந்து கொண்டிருக்கிறேனோ, அவ்வளவு தென்பட வில்லை. மேலும் சில நேரம் பிறகு தானும் திருப்தி, பலனிலும் திருப்தி, ஆனால் சம்பந்தம்-தொடர்பில் திருப்தி ஏற்படுவதில்லை. ஆக, இதை நம்பர் ஒன் கீழ்ப்படிதலானவர் எனச் சொல்ல மாட்டார்கள். நம்பர் ஒன்

கீழ்ப்படிதலானவர் மூன்று விஷயங்களிலுமே திருப்தியை அனுபவம் செய்வார்கள்.

இப்போதைய சமயத்திற்கு தகுந்தப்படி அநேக சிரேஷ்டமான கீழ்ப்படிதலான குழந்தைகள் மூலமாக அவ்வப்போது யாராவது ஆத்மாக்கள் தங்களைத் திருப்தியற்றவர்களாகவும் அனுபவம் செய்கின்றனர். நீங்கள் யோசிப்பீர்கள் -இவரிடம் அனைவரும் திருப்தியடைவார்கள் என்று அந்த மாதிரி யாரும் இருக்க மாட்டார்கள் என்று. யாராவது திருப்தியற்றவராகவும் ஆகி விடுகின்றனர் ஆனால் அதற்குப் பல காரணங்கள் உள்ளன. தங்களின் காரணத்தை அறியாத காரணத்தால் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். இரண்டாவது விஷயம் -தங்களின் புத்திக்கு தகுந்தப்படி பெரியவர்களிடம் விருப்பம், ஆசை அதிகம் வைக்கின்றனர் மற்றும் அந்த ஆசை நிறைவேறவில்லை என்றால் அதிருப்தியடைகின்றனர். மூன்றாவது விஷயம் -அநேக ஆத்மாக்களின் பழைய சம்ஸ்கார-சுபாவங்கள் மற்றும் கணக்கு-வழக்கின் காரணத்தினாலும் கூட எந்த மாதிரி திருப்தி இருக்க வேண்டுமோ, அது இருப்பதில்லை. இதனால், நம்பர் ஒன் கீழ்ப்படிதலான ஆத்மா அல்லது சிரேஷ்ட ஆத்மாக்களிடம் மற்றவர்கள் அதிருப்தி அடைவதற்குக் காரணமில்லை ஆனால் தங்களின் சொந்தக் காரணங்களால் அதிருப்தியாக இருந்து விடுகின்றனர். ஆகவே ஒவ்வொருவராலும் யாரோ அதிருப்தியடைவதாகக் காணப்படுகிறது ஆனால் அதிலும் கூட பெரும்பான்மையாக ஏறத்தாழ 95-சதவிகிதம் திருப்தியாக இருப்பார்கள். 5-சதவிகிதம் அதிருப்தியாகக் காணப்படுவார்கள். ஆக, நம்பர் ஒன் கீழ்ப்படிதலான குழந்தைகள் பெரும்பாலும் மூன்று ரூபங்களிலும் திருப்தியை அனுபவம் செய்வார்கள் மற்றும் சதா கட்டளைப்படி சிரேஷ்ட கர்மம் இருக்கிற காரணத்தால் கர்மம் அடிக்கடி புத்தியை, சரியாகச் செய்தோமா அல்லது செய்யவில்லையா என்று மனதைச் சஞ்சலப்படுத்தாது -இரண்டாவது நம்பரில் உள்ளவர்களுக்கு கர்மம் செய்த பிறகு அநேக தடவை மனதில் சங்கல்பம் ஓடுகிறது -சரியாகச் செய்தோமா, செய்யவில்லையா? இதைத் தான் நீங்கள் உங்கள் பாஷையில் சொல்கிறீர்கள் -சரியாகச் செய்யவில்லை என்று மனம் அரிக்கிறது என்று. நம்பர் ஒன் கீழ்ப்படிதலான ஆத்மாவுக்கு ஒருபோதும் மனம் அரிப்பதில்லை. கட்டளைப்படி நடக்கிற காரணத்தால் சதா லேசாக இருப்பார்கள்.

ஏனென்றால் கர்ம பந்தனத்தின் சுமை இல்லை. இதற்கு முன்பும் கூட சொல்லியிருக்கிறோம் -ஒன்று, கர்மத்தின் சம்பந்தத்தில் வருவது, இரண்டாவது, கர்ம பந்தனத்தின் வசமாகிக் கர்மம் செய்வது. ஆக, நம்பர் ஒன் ஆத்மா கர்மத்தின் சம்பந்தத்தில் வருபவர். அதனால் சதா லேசாக இருப்பார்கள். நம்பர் ஒன் ஆத்மா ஒவ்வொரு கர்மத்திலும் பாப்தாதா மூலம் விசேஷ ஆசிர்வாதங்களின் பிராப்தியின் காரணத்தால் ஒவ்வொரு கர்மம் செய்யும் போதும் ஆசிர்வாதத்தின் பலன் சொரூபமாக சதா உள்ளார்ந்த மனோபலத்தை (willpower வில்பவர்) அனுபவம் செய்வார்கள். சதா அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்வார்கள். சதா தங்களை நிறைந்தவர்களாக, அதாவது சம்பன்னமாக அனுபவம் செய்வார்கள்.

அவ்வப்போது அநேகக் குழந்தைகள் பாபாவின் முன்னால் தங்களின் மனதின் நிலைகளைச் சொல்லும் போது என்ன சொல்கின்றனர் -ஏனென்று தெரியவில்லை, இன்று தன்னை முற்றிலும் காலியாக இருப்பதாகப் புரிந்து கொண்டிருக்கிறேன், எந்த ஒரு பிரச்சினையும் ஏற்படவில்லை, ஆனால் போகும் போதே அறியாமை அல்லது கவனக் குறைவில் ஒவ்வொரு சமயம் கட்டளைப்படி காரியம் செய்வதில்லை. முதலில் சமயத்தின் அவமரியாதையின் சுமை எப்போதாவது தன் பக்க மாகக் கவர்ந்திழுக்கிறது. எப்படி பழைய பிறவிகளின் கடுமையான சம்ஸ்கார சுபாவங்கள் அவ்வப்போது விரும்பாமலேகூட, தன் பக்கமாகக் கவர்ந்திழுக்கிறது. அது பழைய கணக்கு-வழக்கு. இது இப்போதைய வாழ்க்கையின் கணக்கு. ஏனென்றால் எந்த ஒரு கணக்கும், அது இந்தப் பிறவி அல்லது முந்தைய பிறவியின் உடையதாகவோ இருக்கலாம், அது ஈடுபாட்டின் அக்னி சொரூப ஸ்திதி இல்லாமல் சாம்பல் ஆகாது, சதா அக்னி சொரூப ஸ்திதி, அதாவது சக்திசாலி நினைவின் ஸ்திதி, விதை ரூபம், லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஸ்திதி சதா இல்லாமல் போவதற்கான காரணம் கணக்கு-வழக்கை பஸ்பம் செய்ய முடிவதில்லை. எனவே மீதமிருக்கும் கணக்கு தன் பக்கம் கவர்ந்திழுக்கிறது. அந்தச் சமயம் என்னவாயிற்று எனத் தெரியவில்லையே எனச் சொல்லும் அளவுக்கு எந்தத் தவறும் நீங்கள் செய்வதில்லை. சில நேரம் மனம் ஈடுபடுவதில்லை -நினைவில், சேவையில் அல்லது சில நேரம் வருத்தத்தின் அலை இருக்கும். ஒன்று, ஞானத்தின் மூலம் சாந்தியின் அனுபவம், இரண்டாவது, குஷியோ

ஆனந்தமோ இல்லாத அமைதி நிறைந்த வெறுமையின் சாந்தி. அது ரசனையற்ற சாந்தியாக இருக்கும். மனம் மட்டும் சொல்லும் -நான் எங்காவது தனியாகப் போய் அமர்ந்து விட வேண்டும். இவையனைத்தும் ஏதேனும் அவ மரியாதையின் (கீழ்ப்படியாமை) அடையாளங்களாகும். கர்மத்தின் சுமை கவர்ந்திழுக்கிறது.

கீழ்ப்படியாமை என்பது பாவ கர்மத்தின் வடிவமாக இருக்கலாம் அல்லது ஏதேனும் பெரிய தவறு செய்வதாக இருக்கலாம். மேலும் மற்ற சிறு-சிறு கீழ்ப்படியாமைகளும் உள்ளன. எப்படி பாபாவின் கட்டளை உள்ளது -அமிர்தவேளை விதிபூர்வமாக சக்திசாலி நினைவில் இருங்கள். அமிர்தவேளை இந்தக் கட்டளைப்படி நடக்கவில்லை என்றால் அவர்களை என்னவென்று சொல்வார்கள்? கீழ்ப்படிதலானவரா அல்லது கீழ்ப்படியாதவரா? ஒவ்வொரு கர்மமும் கர்மயோகி ஆகிச் செய்யுங்கள், நிமித்த உணர்வுடன் செய்யுங்கள். பணிவுள்ளவராகி செய்யுங்கள் -இவை கட்டளைகள். இது போலவே மிகப் பெரிய பட்டியல் உள்ளது ஆனால் உதாரண ரூபத்தில் சொல்கிறோம். திருஷ்டி, விருத்தி அனைத்திற்கும் கட்டளைகள் உள்ளன. இந்த அனைத்துக் கட்டளைகளிலும் எந்த ஒரு கட்டளையையாவது விதிப் பூர்வமாகப் பின்பற்றி நடக்கவில்லை என்றால் இது சின்னச்சின்ன அவமரியாதைகள் எனப்படும். இந்தக் கணக்கு சேமிப்பாகிக் கொண்டே இருந்தால் அது தன் பக்கமாகக் கவர்ந்திழுக்கவே செய்யும் இல்லையா? எனவே சொல்கின்றனர் --எவ்வளவு ஆக வேண்டுமோ, அவ்வளவு ஆவதில்லை. சரியாகச் சென்று கொண்டிருக்கிறீர்களா என்று கேட்கும் போது ஆம் எனச் சொல்வார்கள். மேலும் எவ்வளவு ஆக வேண்டுமோ அவ்வளவு ஆகியிருக்கிறதா என்று கேட்டால் யோசிக்கிறார்கள். இவ்வளவு சமிக்ஞை கிடைத்தும், ஞானம் நிறைந்தவராக இருந்தும், பிறகும் கூட எவ்வளவு ஆக வேண்டுமோ, அவ்வளவு ஆகவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன? பழைய அல்லது தற்சமயத்தின் சுமை, டபுள் லைட் ஆகவிடுவதில்லை. சில நேரம் டபுள் லைட் ஆகி விடுகின்றனர். சில நேரம் சுமை கீழே இழுத்து வந்து விடுகிறது. சதா அதீந்திரிய சுகம் மற்றும் குஷி நிறைந்த சாந்த ஸ்திதியை அனுபவம் செய்வதில்லை. பாப்தாதாவின் கீழ்ப்படிதலானவராக ஆவதற்கான விசேஷ ஆசீர்வாதத்தின் 'லி்ஃப்ட்'ன் உடைய பிராப்தி அனுபவமாவதில்லை. அதனால் சில நேரம் சகஜமாக உள்ளது, சில

நேரம் உழைக்க வேண்டி உள்ளது. நம்பர் ஒன் கீழ்ப்படிதலானவரின் விசேஷத்தன்மைகளை தெளிவாகக் கேட்டீர்கள். மற்றப்படி நம்பர் இரண்டு யார்? யாரிடம் இந்த விசேஷ தன்மைகள் குறைவாக உள்ளனவோ, அவர் நம்பர் இரண்டு மற்றும் இரண்டாவது நம்பர் மாலையினுடையவராக ஆகிறார். ஆக, முதல் மாலையில் வர வேண்டும் இல்லையா? சிறிதும் கஷ்டமில்லை. ஒவ்வோரடிக்கான கட்டளையும் தெளிவாக உள்ளது. அதன்படி நடப்பது சுலபமாக உள்ளதா அல்லது கஷ்டமா? கட்டளை தான் பாபாவின் அடி. ஆக, அடி மீது அடி எடுத்து வைப்பதோ சுலபம் தான் இல்லையா? மேலும் அனைவரும் உண்மையான சீதைகள், மணமகள்கள் நீங்கள். ஆக, மணமகள்கள் அடி மீது அடி வைக்கின்றனர் இல்லையா? இது விதி இல்லையா? அப்போது கஷ்டம் என்ன இருக்கிறது? குழந்தை என்ற உறவிலும் பாருங்கள் -குழந்தைகள் என்றால் தந்தையின் அடி மீது அடி (பாதச்சுவடு) வைத்துச் செல்பவர்கள். எப்படி பாபா சொன்னாரோ, அப்படி நடப்பது. பாபா சொல்கிறார் மற்றும் குழந்தைகள் செய்கின்றனர். இதைத் தான் நம்பர் ஒன் கீழ்ப்படிதலானவர் எனச் சொல்வது. ஆகவே சோதனை செய்யுங்கள், மற்றும் மாற்றிக் கொள்ளுங்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள அனைத்து கீழ்ப்படிதலான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பாபா மூலம் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களை அனுபவம் செய்யக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு கர்மத்திலும் திருப்தி, வெற்றியை அனுபவம் செய்யக்கூடிய மகான் ஆத்மாக்களுக்கு, சதா அடி மீது அடி வைக்கக்கூடிய கீழ்ப்படிதலான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

பார்ட்டிகளுடன்: சதா தன்னை ஆன்மீக யாத்திரிகன் என உணர்ந்திருக்கிறீர்களா? யாத்திரை செய்யும் போது எது நினைவிருக்கும்? எங்கே செல்ல வேண்டுமோ, அந்த இடம் தான் நினைவிருக்கும் இல்லையா? வேறு ஏதேனும் நினைவு வருமானால் அதை மறக்க முயற்சி செய்வீர்கள். யாராவது தேவியின் யாத்திரையில் செல்கிறார்கள் என்றால் ஜெய் மாதா -ஜெய் மாதா என்று முழங்கிக் கொண்டே செல்வார்கள். அப்போது வேறு ஏதாவது நினைவு வருமானால் அது நல்லதில்லை என நினைப்பார்கள். ஒருவர் மற்றவர்க்கு நினைவுப்படுத்தவும் செய்வார்கள் -ஜெய் மாதாவை

நினைவு செய்யுங்கள், வீட்டை அல்லது குழந்தைகளை நினைவு செய்யாதீர்கள், மாதாவை நினைவு செய்யுங்கள் என்று. ஆக, ஆன்மீக யாத்திரிகர்களுக்கு சதா என்ன நினைவிருக்கிறது? தங்களின் வீடு, பரந்தாமம் நினைவிருக்கிறது இல்லையா? அங்கே தான் செல்ல வேண்டும். ஆக, தனது வீடு மற்றும் தனது ராஜ்யம் சொர்க்கம் -இரண்டும் நினைவிருக்கிறதா அல்லது மற்ற விஷயங்கள் நினைவிருக்கிறதா? பழைய உலகத்தின் நினைவு வருவதில்லை தானே? இங்கே இருக்கிறீர்கள் என்றால் நினைவு வருகிறது என்று அப்படி இல்லை. இங்கே இருந்தாலும் விலகிய நிலையில் இருக்க வேண்டும். ஏனென்றால் எவ்வளவு விலகி இருக்கிறீர்களோ, அவ்வளவு அன்போடு நினைவு செய்ய முடியும். ஆகவே சோதித்துப் பாருங்கள், பழைய உலகத்தில் இருந்தாலும் பழைய உலகத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கிறோமா? தாமரை மலர் சேற்றில் இருந்தாலும் அதிலிருந்து விலகி இருக்கிறது. ஆக, சேவைக்காக இருக்க வேண்டி உள்ளது. மோகத்தின் காரணத்தால் இல்லை. ஆக, மாதாக்களுக்கு மோகமோ இல்லை தானே? கொஞ்சம் பேரக் குழந்தைகளுக்கு ஏதாவது ஆகி விட்டால், பிறகு மோகம் இருக்குமா? அவர்கள் கொஞ்சம் அழுதால் உங்கள் மனமும் கொஞ்சம் அழுமா? ஏனென்றால் எங்கே மோகம் உள்ளதோ, அப்போது மற்றவரின் துக்கமும் கூட தனது துக்கமாகத் தோன்றும். அவர்களுக்குக் காய்ச்சல் வந்தால் உங்களுக்கும் கூட மனதின் காய்ச்சல் வந்து விட்டது என்று அந்த மாதிரி இருக்கக் கூடாது. மோகம் இழுக்கிறது இல்லையா? பேப்பரோ (சோதனை) வருகிறது இல்லையா? சில நேரம் ஒரு பேரனுக்கு நோய் வரலாம், இன்னொரு சமயம் வேறொரு பேரக்குழந்தைக்கு வரலாம். சில நேரம் செல்வத்தின் பிரச்சினை வரலாம். சில நேரம் தனது நோயின் பிரச்சினை வரலாம். இதுவோ நடக்கத் தான் செய்யும் ஆனால் சதா விலகி இருந்து, மோகத்தில் வராமல் இருக்க வேண்டும் -அந்த மாதிரி மோகமற்றவராக இருக்கிறீர்களா? மாதாக்களுக்கு சம்பந்தத்தின் மீது மோகம் வருகிறது, பாண்டவர்களுக்குப் பணத்தின் மீது மோகம். பணம் சம்பாதிப்பதில் நினைவு கூட மறந்து போகும். சரீர நிர்வாகத்திற்காக நிமித்த காரியம் செய்வது வேறு விஷயம் ஆனால் படிப்பு மற்றும் நினைவின் அப்பியாசத்தையும் கூட மறந்து போகிற அளவுக்கு அதில் மூழ்கி இருப்பது தான் பற்றுதலாகும். மோகமோ இல்லை தானே?

எவ்வளவு பற்றற்றவராக ஆகிறீர்களோ, அவ்வளவு நினைவு சொரூபம் ஆவீர்கள்.

குமார்களுடன்: நீங்கள் அற்புதம் செய்யக்கூடிய குமார்கள் இல்லையா? என்ன அற்புதம் செய்து காட்டுவீர்கள்? சதா பாபாவைப் பிரத்தியட்சம் செய்வதற்கான ஊக்கமோ இருக்கவே செய்கிறது ஆனால் அதற்கான விதி என்ன? தற்சமயமோ இளைஞர்கள் பக்கம் அனைவரின் பார்வையும் உள்ளது. ஆன்மீக இளைஞர்கள் தங்களின் மனோசக்தி மூலம், பேச்சு மூலம், நடத்தை மூலம் அந்த மாதிரி சாந்தியின் சக்தியை அனுபவம் செய்விக்க வேண்டும் -அதனால் இவர்கள் சாந்தியின் சக்தி மூலம் புரட்சி செய்பவர்கள் எனப் புரிந்து கொள்ள வேண்டும். எப்படி உலகாயத இளைஞர்களின் நடத்தை மற்றும் முகத்தின் மூலம் ஆவேசம் தென்படுகிறது இல்லையா? பார்த்ததுமே இவர்கள் இளைஞர்கள் என்பது தெரிந்து விடுகிறது. அது போல் உங்கள் முகம் மற்றும் நடத்தை மூலம் சாந்தியின் அனுபவம் ஆக வேண்டும். இதைத் தான் அற்புதம் செய்வது எனச் சொல்வது. ஒவ்வொருவரின் உள்ளுணர்வு மூலம் வைப்ரேஷன் வர வேண்டும். எப்படி அவர்களின் நடத்தை மூலம், முகத்தின் மூலம் வைப்ரேஷன் வருகிறது -இவர்கள் இம்சை உள்ளுணர்வு கொண்டவர்கள் என்று. அது போல் உங்கள் வைப்ரேஷன் மூலம் சாந்தியின் கிரணங்கள் அனுபவமாக வேண்டும். அந்த மாதிரி அற்புதம் செய்து காட்டுங்கள். யாராவது புரட்சியின் காரியம் செய்கிறார்கள் என்றால் அனைவரின் கவனம் செல்கிறது இல்லையா? அது போல் உங்கள் மீது அனைவரின் கவனம் செல்ல வேண்டும். அந்த மாதிரி பரந்த சேவை செய்யுங்கள். ஏனென்றால் ஞானம் கேட்பதால் நன்றாக இருக்கத் தான் செய்கிறது ஆனால் மாற்றம் அனுபவத்தைப் பார்த்து அனுபவி ஆக்குகிறது. அந்த மாதிரி ஏதாவது அசாதாரணமான காரியம் செய்து காட்டுங்கள். வாய்மொழியாலோ மாதாக்கள் கூட சேவைகள் செய்கின்றனர். நிமித்த சகோதரிகள் கூட சேவை செய்கின்றனர் ஆனால் நீங்கள் புதுமை செய்து காட்டுங்கள் அதில் அரசாங்கத்தின் கவனமும் செல்ல வேண்டும். எப்படி சூரியன் உதயமாகிறது என்றால் தானாகவே கவனம் செல்கிறது இல்லையா? -வெளிச்சம் வந்து கொண்டிருக்கிறது. அந்த மாதிரி உங்கள் பக்கம் கவனம் செல்ல வேண்டும். புரிந்ததா?

வரதானம்: களைப்படைந்த அல்லது தவித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு வெற்றி அளிக்கக் கூடிய இறைவனின் உதவியாளர் ஆகுக!

ஆத்மாக்களுக்கு நீண்ட கால இச்சை அல்லது ஆசை -நிர்வாணதாமம் அல்லது முக்திதாமம் செல்ல வேண்டும் என்பது. இதற்காக அநேக பிறவிகளாக அநேக வித சாதனைகள் செய்து-செய்தே களைத்து விட்டுள்ளனர். இப்போது ஒவ்வொருவரும் ஸித்தியை (வெற்றி) விரும்புகின்றனரேயன்றி சாதனையை அல்ல. ஸித்தி என்றால் சத்கதி -ஆக, அது போல் தவித்துக் கொண்டிருக்கும், களைத்துப்போன, தாகமான ஆத்மாக்களின் தாகத்தைத் தணிப்பதற்காக சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் தங்களின் அமைதி சக்தி மற்றும் சர்வ சக்திகள் மூலம் ஒரு விநாடியில் ஸித்தி கொடுங்கள். அப்போது உங்களை இறைவனின் உதவியாளர் எனச் சொல்வார்கள்.

சுலோகன்: பலவீனமான சம்ஸ்காரம் தான் மாயா வருவதற்கான திருட்டுக் கதவாகும். இப்போது அந்தக் கதவை மூடி விடுங்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

# 18.01.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பு மற்றும் சக்தியின் சமநிலை!

இன்று ஸ்மிருதி சொரூபம் ஆக்கக்கூடிய சமர்த் (சக்தி) தந்தை நாலாபுறமும் உள்ள ஸ்மிருதி சொரூப, சமர்த் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்றைய நாள் பாப்தாதாவின் அன்பில் மூழ்குவதோடு கூடவே அன்பு மற்றும் சக்தி -இரண்டினுடைய சமமான ஸ்திதியை அனுபவம் செய்வதற்கான நாள் -ஸ்மிருதி தினம், அதாவது அன்பு மற்றும் சக்தி -இரண்டின் சமநிலையினுடைய வரதானத்தின் நாள். ஏனென்றால் எந்தத் தந்தையின் ஸ்மிருதியில், அன்பில் மூழ்கியிருக்கிறீர்களோ, அந்த பிரம்மாபாபா, அன்பு மற்றும் சக்தி யினுடைய உயர்ந்த அடையாளமாவார். அவ்வப்போது அதிக அன்பு, அவ்வப்போது உயர்ந்த சக்திசாலி. அன்பின் மூலம் ஒவ்வொரு குழந்தையையும் சதா சக்திசாலி ஆக்கினார். அன்பில் மட்டும் தன் பக்கமாகக் கவர்ந்திழுக்கவில்லை ஆனால் அன்பின் மூலம் சக்தி சேனையை உருவாக்கி, உலகத்திற்கு முன்னால் சேவைக்கு நிமித்தமாக ஆக்கினார். சதா சிநேகி பவ என்பதோடு நஷ்டோமோகா -கர்மாதீத் பவ என்ற பாடத்தை யும் கற்பித்தார். கடைசி வரை குழந்தைகளுக்கு சதா விலகிய மற்றும் சதா அன்பானவர் -இதையே கண்களின் திருஷ்டி மூலம் வரதானமாகக் கொடுத்தார்கள்.

இன்றைய நாள் நாலாபுறமும் உள்ள குழந்தைகள் பலவித சொரூபத்தின் மூலம் பலவித சம்மந்தங்களின் மூலம் அன்பின் மூலம் மற்றும் பாப்-சமான் ஆவதற்கான ஸ்திதியின் அனுபூதி மூலம் சந்திப்பதற்காக பாப்தாதாவின் வதனத்தில் வந்து சேர்ந்துள்ளனர் -சிலர் புத்தி மூலமாக, இன்னும் சிலர் திவ்ய திருஷ்டி மூலம். பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் அன்பினுடைய மற்றும் சமான் ஸ்திதியினுடைய நினைவு மற்றும் அன்பை மனதார ஸ்வீகாரம் செய்தார். மேலும் பதிலுக்கு அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதா சமான் பவ என்ற வரதானத்தைக் கொடுத்தார் மற்றும் கொடுத்துக்

கொண்டிருக்கிறார். பாப்தாதாவுக்குத் தெரியும் -குழந்தைகளுக்கு பிரம்மாபாபா மீது மிகுந்த அன்பு உள்ளது. சாகாரத்தில் பாலனை பெற்றிருந்தாலும் சரி, இப்போது அவ்யக்த ரூபத்தில் பாலனை பெற்றுக் கொண்டிருந்தாலும் சரி, ஆனால் பெரிய அம்மாவாக இருப்பதால் அம்மாவிடம் குழந்தைகளுக்கு அன்பு இயல்பாகவே உள்ளது. இக்காரணத்தால் பாபாவுக்குத் தெரியும் -பிரம்மா என்ற அம்மாவை அதிகமாக நினைவு செய்கின்றனர் ஆனால் அன்பின் பிரத்தியட்ச சொரூபம் -சமமாக ஆவதாகும். எவ்வளவுக்கெவ்வளவு மனதின் உண்மையான அன்பு உள்ளதோ, குழந்தையின் மனதில் அந்த அளவுக்குத் தான் தந்தையைப் பின்பற்றுவதற்கான ஊக்கம்-உற்சாகம் காணப்படுகிறது. இந்த அலௌகிக அம்மாவின் அலௌகிக அன்பு வியோகி (மறந்தவராக) ஆக்குவதல்ல. சகஜயோகி, இராஜ யோகி, அதாவது இராஜாவாக ஆக்குவதாகும். அலௌகிக அம்மாவுக்கு, குழந்தைகள் மீது அலௌகிகப் பாசம் உள்ளது -ஒவ்வொரு குழந்தையும் இராஜா ஆக வேண்டும். அனைவரும் இராஜாக் குழந்தையாக ஆக வேண்டும். பிரஜையாக அல்ல. பிரஜைகளை உருவாக்குபவரே தவிர பிரஜையாக ஆகுபவர் அல்ல.

இன்று வதனத்தில் தாய்-தந்தையரின் ஆன்மிக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. பாபா, பிரம்மாவாகிய அம்மாவிடம் கேட்டார் -குழந்தைகளுக்கு விசேஷமாக அன்பின் தினமாக எது நினைவுக்கு வருகிறது? உங்களுக்கும் கூட விசேஷமாக நினைவு வருகிறது இல்லையா? ஒவ்வொருவருக்கும் தனது நினைவு வருகிறது மற்றும் அந்த நினைவுகளில் மூழ்கி விடுகிறீர்கள். இன்றைய தினம் விசேஷ அலௌகிக நினைவுகளின் உலகம் என்று ஒன்று உள்ளது. ஒவ்வோரடியிலும் விசேஷமாக சாகார சொரூபத்தின் சரித்திரங்களின் நினைவு தானாகவே வருகிறது. ஆகவே பாபாவும் கூட பிரம்மா என்ற அம்மாவிடம் இதையே கேட்டார். பிரம்மா என்ன சொல்லியிருப்பார் என்று உங்களுக்குத் தெரியுமா? உலகமோ குழந்தைகளுடையது தான். பிரம்மா சொன்னார் -அமிர்தவேளையில் முதலில் சமமாக உள்ள குழந்தைகள் நினைவில் வருவார்கள். சிநேகி குழந்தைகள் மற்றும் சமமான குழந்தைகள். சிநேகி குழந்தைகளுக்கு சமமாக ஆவதற்கான இச்சை மற்றும் சங்கல்பம் உள்ளது ஆனால் இச்சை, சங்கல்பத்தோடு கூடவே சதா சக்திசாலியாக இருப்பதில்லை. அதனால் சமமாக

ஆவதில் நம்பர் முன்னால் வருவதற்கு பதிலாகப் பின்னால் சென்று விடுகிறது. அன்பு, ஊக்கம்-உற்சாகத்தில் கொண்டு வருகிறது ஆனால் பிரச்சனைகள் அன்பு மற்றும் சக்தி ரூபத்தின் சமான் ஸ்திதி ஆவதில் அங்கங்கே பலவீனமாக்கி விடுகிறது. பிரச்சனைகள் சதா சமமாக ஆவதற்கான ஸ்திதியிலிருந்து தூரமாக்கி விடுகிறது. அன்பின் காரணமாக பாபாவை மறக்கவும் முடிவதில்லை. பக்கா பிராமணர்களாகவே இருக்கிறார்கள். பின்தங்கி விடுபவர்களும் இல்லை. அமரர்களாகவும் உள்ளனர். பிரச்சனைகளைப் பார்த்துத் தான் சிறிது சமயத்திற்கு மனக்கலக்கம் அடைந்து விடுகிறார்கள். ஆகவே நிரந்தர அன்பு மற்றும் சக்தியின் சமான் ஸ்திதியின் அனுபவம் செய்ய முடிவதில்லை.

இச்சமயத்தின் பிரமாணம் ஞானம் நிறைந்தவர், சக்தி நிறைந்தவர், வெற்றி நிறைந்தவரின் ஸ்திதியில் நீண்ட கால அனுபவி ஆகி விட்டிருக்கிறீர்கள். மாயாவின், இயற்கையின் மற்றும் ஆத்மாக்களின் மூலமாக உருவாகியுள்ள பிரச்சினைகளின் அநேக தடவை அனுபவி ஆகியிருக்கும் ஆத்மாக்கள் நீங்கள். புது விஷயம் இல்லை. திரிகாலதரிசி நீங்கள். பிரச்சினைகளில் முதல்-இடை-கடை மூன்றைப் பற்றியும் அறிவீர்கள். அநேக கல்பங்களின் விஷயத்தையோ விடுங்கள் ஆனால் இந்தக் கல்பத்தின் பிராமண வாழ்க்கையில் கூட புத்தி மூலம் அறிந்து வெற்றியாளர் ஆவதில் அல்லது பிரச்சினைகளைக் கடந்து சென்று அனுபவி ஆவதில் புதியவர் இல்லை நீங்கள். பழையவர் ஆகி விட்டீர்கள். ஒரு வருடத்தினராகவும் இருக்கலாம். ஆனல் இந்த அனுபவத்தால் பழையவர்கள். எதுவும் புதிதல்ல என்ற பாடமும் கூட படித்திருக்கிறீர்கள். எனவே நிகழ்காலத்தின் பிரமாணம் இப்போது பிரச்சினைகளைப் பார்த்து பயப்படுவதில் சமயத்தை வீணாக்கி விடக் கூடாது. சமயத்தை இழப்பதால் நம்பர் பின்னால் போய் விடும்.

ஆக, பிரம்மாவாகிய அம்மா சொன்னார் -ஒன்று, விசேஷ சிநேகி குழந்தை மற்றும் இன்னொன்று சமான் ஆகக் கூடியவர். இரண்டு விதமான குழந்தைகளைப் பார்த்து, இந்த சங்கல்பம் வந்தது -நிகழ்காலத்தின் பிரமாணம் பெரும்பான்மையான குழந்தைகளை இப்போது சமான் ஸ்திதியின் சமீபத்தில் பார்க்க விரும்புகிறோம். சமமான ஸ்திதி உள்ளவர்களும் இருக்கிறார்கள் ஆனால்

பெரும்பாலானவர்கள் சமநிலையின் அருகில் சென்று சேர்ந்து விட வேண்டும் -இது தான் அமிர்தவேளையில் குழந்தை களைப் பார்த்துப் பார்த்து சமமாக ஆவதற்கான நாள் நினைவு வந்து கொண்டிருந்தது. நீங்கள் ஸ்மிருதி தினத்தை நினைவு செய்து கொண்டிருக்கிறீர்கள் மற்றும் பிரம்மா என்ற அம்மா, சமமாக ஆவதற்கான நாளை நினைவு செய்து கொண்டிருந்தார். இந்த சிரேஷ்ட சங்கல்பத்தை நிறைவேற்ற வேண்டும். அதாவது ஸ்மிருதி தினத்தை சமர்த் (சக்திசாலி) தினமாக ஆக்க வேண்டும். இந்த அன்பின் பிரத்தியட்ச பலனைத் தான் தாய்-தந்தையர் பார்க்க விரும்புகின்றனர். பாலனையின் அல்லது பாபாவின் வரதானங்களின் சிரேஷ்ட பலன் இது தான். தாய்-தந்தையர்க்கும் கூட பிரத்தியட்ச பலனைக் காட்டக்கூடிய சிரேஷ்ட குழந்தைகள் நீங்கள். இதற்கு முன்பும் கூட சொல்லியிருக்கிறோம் -அதிகபட்ச அன்பின் அடையாளம் இது -அதாவது சிநேகி, சிநேகியின் குறைகளைப் பார்க்க முடிவ தில்லை. எனவே இப்போது தீவிர வேகத்தில் சமமான ஸ்திதிக்கு சமீபமாக வாருங்கள். இது தான் தந்தையின் அன்பு. ஒவ்வொரடியிலும் தந்தையைப் பின்பற்றிக் கொண்டே செல்லுங்கள். பிரம்மா ஒரே ஒரு விசேஷ ஆத்மா -அவருடைய தாய்-தந்தை என்ற இரண்டு பார்ட்டுகளும் சாகார ரூபத்தில் விதிக்கப்பட்டுள்ளது. எனவே பார்ட்தாரி மகான் ஆத்மாவின் இரட்டை சொரூபம் குழந்தை களுக்கு அவசியம் நினைவுக்கு வருகிறது ஆனால் பிரம்மா என்ற தாய்-தந்தையின் சிரேஷ்ட ஆசை -அனைவரும் சமமாக ஆக வேண்டும் -இதையும் நினைவு செய்ய வேண்டும். புரிந்ததா? இன்றைய ஸ்மிருதி தினத்தின் சிரேஷ்ட சங்கல்பம் -சமமாக ஆகியே தீர வேண்டும். சங்கல்பத்திலாயினும், பேச்சிலாயினும், சம்மந்தம்-தொடர்பிலாயினும் சமம் என்றால் சமர்த் ஆக வேண்டும். எவ்வளவு தான் பெரிய பிரச்சினையாக இருந்தாலும் எதுவும் புதிதல்ல என்ற இந்த ஸ்மிருதி மூலம் சமர்த் ஆகி விடுவீர்கள். இதில் கவனக்குறை வாக இருந்து விடக் கூடாது. கவனக்குறைவிலும் கூட எதுவும் புதிதல்ல என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர் ஆனால் அநேக தடவை வெற்றியாளர் ஆவதில் நத்திங் நியூ என்ற விதி மூலம் சதா ஸித்தியை அடைந்து கொண்டே செல்லுங்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள அனைத்து அன்பு மற்றும் சக்தியின் சமமான ஸ்ததியில் நிலைத்திருக்கக்கூடிய, சதா தாய்-தந்தையரின் சிரேஷ்ட ஆசையைப் பூர்த்தி செய்யக்கூடிய, ஆசைகளின் தீபங்களுக்கு, சதா ஒவ்வொரு விதி மூலம் சேவையின் மகத்துவத்தை அறிந்திருக்கக்கூடிய, சதா ஒவ்வோரடியிலும் தந்தையைப் பின்பற்றக்கூடிய, தாய்-தந்தையருக்கு சதா அன்பு மற்றும் சக்தி மூலம் சமமாக ஆவதற்கான பலனைக் காட்டக்கூடிய, அத்தகைய ஸ்மிருதி சொரூபக் குழந்தைகளுக்கு, சக்திசாலி தினத்தில், சக்திசாலி தந்தையின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**சேவாகேந்திரங்களுக்காக மூன்றடி நிலம் கொடுக்கக் கூடிய நிமித்த சகோதர-சகோதரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் உரையாடல்:**
விசேஷ சேவையின் பிரத்தியட்ச பலனாகிய பிராப்தியைப் பார்த்துக் குஷியடைந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? வருங்காலமோ சேமிப்பாகியுள்ளது ஆனால் நிகழ்காலமும் கூட சிரேஷ்டமானதாக ஆகி விட்டது. நிகழ்காலத்தின் பிராப்தி என்பது வருங்காலத்தை விடவும் சிரேஷ்டமானது. ஏனென்றால் அப்ராப்தி (பிராப்தி யற்ற நிலை) மற்றும் பிராப்தியின் அனுபவத்தினுடைய ஞானம் இச்சமயம் தான் உள்ளது. அங்கே (சத்யுகத்தில்) அப்ராப்தி என்றால் என்னவென்றே தெரியாது. ஆக, இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் பற்றித் தெரியாது ஆனால் இங்கே வித்தியாசத்தின் அனுபவம் உள்ளது. ஆகவே இச்சமயத்தின் பிராப்தியினுடைய அனுபவத்திற்கு மகத்துவம் உள்ளது. யாரெல்லாம் சேவைக்கு நிமித்தமாகிறார்களோ, அப்போது உடனடி தானம் மகா புண்ணியம் எனப் பாடப்பட்டுள்ளது. எந்த ஒரு விஷயத்திற்கும் யாராவது நிமித்தமாகிறார் என்றால் உடனடியாக தானம் செய்கிறார் என்பதால் அதற்குப் பிரதிபலனாக மகா புண்ணியத்தின் அனுபூதி ஏற்படுகிறது. அது என்ன? எப்போதெல்லாம் யாராவது வெற்றி சொரூபமாகி சேவை செய்கிறாரோ, அச்சமயம் விசேஷமாகக் குஷியின் அனுபவம் அடைகிறார்கள் இல்லையா? வர்ணனை செய்கிறீர்கள் -இன்று மிக நன்றாக அனுபவம் ஆனது. ஏன் ஆயிற்று? பாபாவின் அறிமுகம் கொடுத்து வெற்றியின் அனுபவம் செய்தீர்கள். யாராவது அறிமுகம் கேட்டு விழித்துக் கொள்கிறார் அல்லது அறிமுகம் கேட்டதும் மாற்றமடைந்து விட்டார் என்றால் அவருடைய பிராப்தியின் பிரபாவம் உங்கள் மீதும் படுகிறது. மனதில் குஷியின் பாடல் ஒலிக்கத்

தொடங்குகிறது -இது தான் பிரத்தியட்ச பலன் என்ற பிராப்தி. ஆக, சேவை செய்பவர் என்றால் சதா பிராப்தியின் பலனை அனுபவம் செய்பவர். பழம் (பலன்) சாப்பிடுபவர் என்னவாகிறார்? ஆரோக்கியம் நிறைந்தவராகிறார் இல்லையா? டாக்டர்களும் கூட பலவீனமானவராக யாரையாவது பார்த்தால் என்ன சொல்கிறார்கள்? பழம் சாப்பிடுங்கள். ஏனென்றால் தற்போது மற்ற சக்திக்கான பொருள்கள் -வெண்ணெய் சாப்பிடுங்கள், நெய் சாப்பிடுங்கள் என்றால் அதையோ ஜீரணிக்க முடிவதில்லை. தற்போது சக்திக்காகப் பழங்களைக் கொடுக்கிறார்கள். ஆக, சேவைக்கும் கூட பிரத்தியட்ச பலன் என்ற பழம் கிடைக்கிறது. உடலினால் சேவையும் செய்யுங்கள். குஷி ஏற்படுகிறது. சுத்தம் செய்கிறீர்கள் என்றாலும் அந்த இடம் தூய்மையாக ஜொலிக்கிறது என்றால், உண்மையான மனதோடு செய்கிற காரணத்தால் அப்படி ஜொலிக்கும் இருப்பிடத்தைப் பார்க்கும்போது குஷி ஏற்படுகிறது இல்லையா?

எந்த ஒரு சேவைக்கும் புண்ணியத்தின் பலன் தானாகவே கிடைத்து விடுகிறது. புண்ணியத்தின் பலன் சேமிப்பாகவும் செய்கிறது. பிறகு இப்போதும் கூடக் கிடைக்கிறது. நீங்கள் ஏதாவதொரு காரியம் செய்கிறீர்கள், சேவை செய்கிறீர்கள் என்றாலும் யாராவது உங்களுக்குச் சொல்வார்கள் -மிக நல்ல சேவை செய்கிறீர்கள், களைப்பற்றவராக, எலும்பு தேய சேவை செய்கிறீர்கள். ஆக, இதைக் கேட்டுக் குஷி ஏற்படுகிறது இல்லையா? அப்போது பலன் கிடைத்து விட்டது இல்லையா? வாயினால் சேவை செய்தாலும் சரி, கைகளால் செய்தாலும் சரி, ஆனால் சேவை என்றால் சேவை தான். இதுவும் சேவைக்கு நிமித்தமாகி விட்டீர்கள் என்றாகிறது இல்லையா? மகத்துவம் வைப்பதன் மூலம் மகான் தன்மை அடைந்து விடுகிறீர்கள். ஆக, இது போல் இனி மேலும் கூட சேவையின் மகத்துவத்தை அறிந்து, சதா ஏதேனுமொரு சேவையில் பிஸியாக இருங்கள். மாணவர்கள் யாருமே கிடைக்கவில்லை என்றால் என்ன சேவை செய்வேன், கண்காட்சி எதுவும் நடைபெறவில்லை, சொற்பொழிவு எதுவும் நடக்கவில்லை என்றால் என்ன சேவை செய்வேன் -என்று நினைக்கிறீர்கள். சேவைக்கான களம் என்பது மிகப் பெரியது. எனக்கு சேவையே கிடைக்கவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. வாயுமண்டலத்தை உருவாக்குவதற்கான சேவை இன்னும் எவ்வளவு

உள்ளது! இயற்கையையும் மாற்றியமைப்பவர்கள் நீங்கள். ஆக, இயற்கையின் மாற்றம் எப்படி நிகழும்? சொற்பொழிவு செய்வோமா என்ன? உள்ளுணர்வு மூலம் வாயுமண்டலம் உருவாகும். வாயுமண்டலத்தை உருவாக்குவது என்றால் இயற்கையின் மாற்றம் ஏற்படுவதாகும். இது எவ்வளவு பெரிய சேவை! இப்போது நடந்திருக்கிறதா? இப்போதோ இயற்கை பரீட்சை வைத்து நம்மை சோதித்துக் கொண்டிருக்கிறது. ஆக, ஒவ்வொரு நொடியும் சேவைக்கான மிகப் பெரிய களம் இருக்கிறது. எனக்கு சேவைக்கான வாய்ப்பு கிடைக்கவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. நீங்கள் நோய் வாய்ப்பட்டிருந்தாலும் கூட அப்போதும் சேவை செய்ய முடியும். யாராயிருந்தாலும் சரி, படிக்காதவராக இருந்தாலும், படித்தவராக இருந்தாலும், எந்த விதமான ஆத்மாவாக இருந்தாலும், அனைவருக்குமே சேவைக்கான சாதனம் மிகப் பெரிதாக உள்ளது. சேவைக்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பது கிடையாது, கிடைத்திருக்கிறது.

ஆல்ரவுண்ட் சேவாதாரி ஆக வேண்டும். கர்மனா சேவைக்கும் கூட 100-மார்க் உள்ளது. பேச்சும் எண்ணமும் சரியாக உள்ளது, ஆனால் கர்மனாவின் பக்கம் ஈடுபாடு அல்லது ஆர்வம் இல்லையென்றால் 100-மார்க் போய் விட்டது. ஆல்ரவுண்ட் சேவாதாரி என்றால் அனைத்து விதமான சேவைகளின் மூலம் முழு மதிப்பெண் பெறுபவர். அவர் தாம் ஆல்ரவுண்ட் சேவாதாரி எனப்படுவார். ஆக, அந்த மாதிரி இருக்கிறீர்களா? பாருங்கள், ஆரம்பத்தில் குழந்தைகளின் பட்டி நடைபெற்ற போது கர்மனாவின் பாடம் எவ்வளவு பக்காவாக ஆக்கப்பட்டது! தோட்டக்காரராகவும் ஆக்கினார் என்றால் செருப்புத் தைப்பவராகவும் ஆக்கினார். பாத்திரம் தேய்ப்பவராகவும் ஆக்கினார் என்றால் சொற்பொழிவாற்று பவராகவும் ஆக்கினார். ஏனென்றால் இதற்கான மதிப்பெண்களும் இல்லாமல் போய்விடக் கூடாது. அங்கேயும் லௌகிகப் படிப்பில் நீங்கள் ஏதாவது லேசான பாடத்தில் ஃபெயிலானால் -விசேஷமான பாடம் இல்லை, நம்பர் மூன்று-நான்கு பாடங்கள் உள்ளன ஆனால் அதிலும் கூட ஃபெயிலாகி விட்டால் பாஸ் வித் ஆனர் ஆக மாட்டீர்கள். மொத்தத்தில் மதிப்பெண்களோ குறைந்து விட்டன இல்லையா? அது போல் அனைத்துப் பாடங்களையும் சோதித்துப் பாருங்கள். எல்லாப் பாடங்களிலும் மதிப்பெண்

பெற்றிருக்கிறேனா? எப்படி இவர்கள் (யக்ஞத்திற்காக வீடு-இடம் தருவதற்கு) நிமித்தமாகியிருக்கிறார்கள். இந்த சேவை செய்தார்கள், இதற்கான புண்ணியம் கிடைத்தது என்றால் மார்க் கிடைக்கும் ஆனால் முழு மதிப்பெண் பெற்றோமா? இல்லையா? என்பதை சோதித்துப் பாருங்கள். ஏதாவதொரு கர்மனா சேவை செய்ய வேண்டியதும் கூட அவசியமாகும். ஏனென்றால் கர்மனாவுக்கும் கூட 100-மதிப்பெண்கள் உண்டு. குறைவாக இல்லை. இங்கே அனைத்துப் பாடங்களுக்கும் 100-மதிப்பெண்கள் உண்டு. அங்கோ ஓவியத்தில் கொஞ்சம் மதிப்பெண் இருக்கும். கணிதப் பாடத்தில் அதிக மதிப்பெண் இருக்கும். இங்கே அனைத்துப் பாடங்களுமே மகத்துவம் வாய்ந்தவை. ஆகவே மனம்,, வார்த்தையில், (வாய்மொழி சேவை) மார்க் எடுத்தோம், உடல் மூலம் சேவையிலும் மதிப்பெண் எடுக்காமல் இருந்து விட்டு, நான் பெரிய மகாவீர் என்று நீங்கள் புரிந்து கொள்ள முடியாது. அனைத்துப் பாடங்களிலும் மார்க் பெற வேண்டும். அத்தகையவர் தாம் சேவாதாரி எனப்படுவார். ஆக, இது எந்த மாதிரி குரூப்? ஆல்ரவுண்ட் சேவாதாரியா அல்லது இருப்பிடம் தருவதில் மட்டும் சேவா தாரியா? பயனுள்ளதாக ஆக்குவதில் நீங்கள் நன்றாகவே செய்திருக்கிறீர்கள். எவ்வளவு பயனுள்ளதாக ஆக்குகிறீர்களோ, அந்த அளவுக்கு மாலிக் ஆகிறீர்கள். சமயத்திற்கு முன்பாகவே பயனுள்ளதாக ஆக்க வேண்டும் -இது புத்திசாலி ஆவதற்கான அடையாளம். ஆக, புத்திசாலித்தனமான காரியம் செய்திருக்கிறீர்கள். பாப்தாதாவும் தைரியம் வைக்கக்கூடிய குழந்தைகளைப் பார்த்துக் குஷியடைகிறார். நல்லது.

வரதானம்: அன்பானவர்களாக ஆவதன் ஆழமான இரகசியத்தைப் புரிந்து கொண்டு அனைவரையும் திருப்திப்படுத்தக் கூடிய இராஜ்யுக்த், யோகயுக்த் ஆகுக!

எந்தக் குழந்தைகள் ஒரு சர்வ சக்திவான் தந்தைக்கு அன்பானவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் அனைத்து ஆத்மாக்களுக்கும் தானாகவே அன்பானவர்களாகி விடுவார்கள். இந்த ஆழமான இரகசியத்தை யார் புரிந்து கொள்கிறார்களோ அவர்கள் இராஜ்யுக்த், யோகயுக்த் அல்லது தெய்வீக குணங்களினால் யுக்தியுக்த் ஆகி விடுகிறார்கள். இவ்வாறு இரகசியங்களை புரிந்து கொண்ட ஆத்மா அனைத்து ஆத்மாக்களையும் எளிதாகவே திருப்திப்படுத்தி விடுவார்கள். யார் இந்த இரகசியத்தை

அறிந்து கொள்ளவில்லையோ அவர்கள் சில நேரம் பிற ஆத்மாக்களை கோபப்படுத்துவார்கள் மற்றும் சில நேரம் சுயம் கோபத்துடன் இருப்பார்கள். ஆகையால் சதா அன்பின் இரகசியத்தை அறிந்து கொண்டு இராஜ்யுக்த் ஆகுங்கள்.

சுலோகன்: யார் நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்கள் பொறுப்புகளை கவனித்தாலும் சதா இலேசாக இருப்பார்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 22.01.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தைரியத்தின் முதல் அடி -சமர்ப்பணம் (பிரம்மாபாபாவின் வாழ்க்கை சரிதம்)!

இன்று அன்புக்கடல் பாப்தாதா தங்களுடைய சினேகி (அன்பான) குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். நாம் அனைவரும் தந்தைக்கு சமமாக ஆக வேண்டும், அன்பில் மூழ்க வேண்டும் என்ற இந்த ஒரே ஈடுபாடு, சிரேஷ்ட சங்கல்பம் ஒவ்வொரு சினேகி ஆத்மாவிற்கும் உள்ளது. அன்பில் மூழ்குவது என்றால் தந்தைக்கு சமமாக ஆவது என்பதாகும். நாம் பாப்தாதா மூலமாக அடைந்துள்ள அன்பு, சக்திசாலி பாலனை மற்றும் அளவிட முடியாத, அழிவற்ற பொக்கிஷங்களுக்கான கைமாறு (ரிட்டர்ன்) அவசியம் செய்ய வேண்டும் என்ற இந்த உறுதியான எண்ணம் அனைவரது உள்ளத்தில் உள்ளது. கைமாறாக என்ன கொடுப்பீர்கள்? உள்ளத்தின் அன்பைத் தவிர உங்களிடம் வேறு என்ன உள்ளது? என்னவெல்லாம் உள்ளனவோ, அவை தந்தையால் கொடுக்கப்பட்டவை ஆகும். அவற்றை என்ன கொடுப்பீர்கள்! தந்தைக்கு சமமாக ஆக வேண்டும் -இதுவே கைமாறு ஆகும். மேலும், இதை அனைவரும் செய்ய முடியும்.

தற்சமயம் அனைவரது உள்ளத்திலும் விசேஷமாக தந்தை பிரம்மாவின் நினைவு அதிகமாக வருகிறது என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருந்தார்கள். சரீரத்தினுடைய நினைவு இல்லை, ஆனால், சரித்திரங்களுடைய (செயல்கள்) விசேஷத்தன்மைகளுடைய நினைவு உள்ளது. ஏனெனில், அலௌகீக பிராமண வாழ்க்கையானது ஞான சொரூப வாழ்க்கை ஆகும். ஞான சொரூபமாக இருக்கும் காரணத்தினால் தேகத்தினுடைய நினைவு கூட துக்கத்தின் அலையைக் கொண்டு வராது. அஞ்ஞானி வாழ்க்கையில் எவரையாவது நினைவு செய்தால் தேகம் முன்னால் வரும், தேகத்தின் சம்பந்தமாக இருக்கும் காரணத்தினால் துக்கத்தின் உணர்வு ஏற்படும் ஆனால், பிராமண

குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தையின் நினைவு வந்ததும், நாமும் தந்தைக்கு சமமாக ஆகியே தீர வேண்டும் என்று சக்தி வந்து விடுகிறது. அலௌகீக தந்தையின் நினைவு சமர்த்தி அதாவது சக்தியைக் கொடுக்கிறது. சில சில குழந்தைகள் உள்ளத்தின் அன்பை கண்களின் முத்துக்கள் மூலமாகவும் வெளிப்படுத்துகின்றார்கள், ஆனால், அது துக்கத்தின் கண்ணீர் அல்ல, பிரிவின் கண்ணீர் அல்ல, அது அன்பின் முத்து ஆகும். உள்ளத்தினுடைய சந்திப்பே அன்பு ஆகும். பிரிந்திருப்பவர்கள் அல்ல, ஆனால், இராஜயோகிகள் ஆவீர்கள். ஏனெனில், உள்ளத்தின் உண்மை யான அன்பானது சீக்கிரத்திலும் சீக்கிரமாக முதலில் நான் தந்தைக்கு ரிட்டர்ன் கொடுக்க வேண்டும் என்ற சக்தி கொடுக்கிறது. ரிட்டர்ன் கொடுப்பது என்றால் சமமாக ஆகுவதாகும். இந்த விதி மூலமே தன்னுடைய அன்பான பாப்தாதாவுடன் இனிமையான வீட்டிற்கு ரிட்டர்ன் செல்வோம் அதாவது தந்தையுடன் திரும்பிச் செல்வோம். ரிட்டர்ன் கொடுக்கவும் வேண்டும் மற்றும் தந்தையுடன் ரிட்டர்ன் செல்லவும் வேண்டும். ஆகையினால், உங்களுடைய அன்பு மற்றும் நினைவானது உலகத்தில் இருந்து விடுபட்டவராக மற்றும் தந்தைக்கு அன்பானவராக ஆகுவதற்கான அன்பாகும்.

குழந்தைகளுடைய சக்திசாலி ஆகுவதற்கான எண்ணத்தை, சமமாக ஆகுவதற்கான ஊக்கத்தை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருந்தார்கள். தந்தை பிரம்மாவினுடைய விசேஷத்தன்மையைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். ஒருவேளை, தந்தை பிரம்மாவின் விசேஷத்தன்மைகளை வர்ணனை செய்தால் எவ்வளவு இருக்கும்? ஒவ்வொரு அடியிலும் விசேஷத்தன்மைகள் இருந்தன. சங்கல்பத்திலும் கூட அனைவரையும் விசேஷமாக ஆக்குவதற்கான ஊக்கம் உற்சாகம் ஒவ்வொரு நேரமும் இருந்தது. தனது விருத்தி மூலம் ஒவ்வொரு ஆத்மாவையும் ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வரும் விசேஷத்தன்மை எப்பொழுதுமே வெளிப்படையான ரூபத்தில் தென்பட்டது. பேச்சு மூலம் தைரியம் கொடுக்கக் கூடியவராக, நம்பிக்கையற்றவரை நம்பிக்கை உடையவராக ஆக்கக் கூடியவராக, பலமற்ற ஆத்மாவை பறக்கும் கலையின் விதி மூலம் பறக்க வைக்கக்கூடியவராக, சேவைக்குத் தகுதியானவராக ஆக்கக்கூடியவராக இருந்தார். அவரது ஒவ்வொரு வார்த்தையும்

விலைமதிப்பற்றதாக, இனிமையானதாக, யுக்தி நிறைந்ததாக இருந்தது. அதுபோன்றே கர்மத்தில் குழந்தைகளுடன் இணைந்து ஒவ்வொரு கர்மத்திலும் துணைவனாக ஆகி, கர்மயோகி ஆக்கினார். சாட்சியாகிப் பார்ப்பவராக மட்டும் அல்ல, ஆனால், ஸ்தூல கர்மத்தின் மகத்துவத்தை அனுபவம் செய்விப்பதற்காக கர்மத்திலும் கூட துணைவனாக ஆனார். நான் என்ன கர்மம் செய்வேனோ, என்னைப் பார்த்து குழந்தைகள் தானாகவே செய்வார்கள் என்ற இந்த பாடத்தை சதா கர்மம் செய்து கற்பித்தார். சம்பந்தம், தொடர்பில் -சிறிய குழந்தைகளின் சம்பந்தத்தில் வரும்பொழுது குழந்தைகளுக்கு சமமாகி மகிழ்வித்தார். வானபிரஸ்த நிலையில் (வயோதிக நிலை) இருப்பவர்களிடமும் வானப்பிரஸ்த ரூபத்தில் அனுபவியாகி தனது சம்பந்தம், தொடர்பால் சதா ஊக்கம் உற்சாகத்தில் கொண்டு வந்தார். குழந்தைகளிடம் குழந்தையாக, இளைஞர்களிடம் இளைஞராக மற்றும் முதியவர்களிடம் முதியவராக ஆகி சதா முன்னேற்றினார். தன்னுடைய சம்பந்தம், தொடர்பினால் ஒவ்வொருவருக்கும் தன்னுடையவர் என்ற அனுபவத்தை சதா செய்வித்தார். பாபா என் மீது எவ்வளவு அன்பு செலுத்துகின்றாரோ, அவ்வளவு வேறு யார் மீதும் செலுத்துவதில்லை என்று சிறிய குழந்தை கூட சொல்லும். பாபா என்னுடையவர் என்று ஒவ்வொருவரும் நினைக்கும் அளவிற்கு ஒவ்வொருவருக்கும் அவ்வளவு அன்பு கொடுத்தார். இது தான் சம்பந்தம், தொடர்பின் விசேஷத்தன்மை ஆகும். பார்ப்பதில் -ஒவ்வொரு ஆத்மாவின் விசேஷத்தன்மை மற்றும் குணத்தைப் பார்த்தார். சிந்திப்பதில் பாருங்கள், இவர் கடைசி நம்பர் மணி ஆவார் என்பதை அறிந்திருந்தார், ஆனாலும் அப்பேற்பட்ட ஆத்மாவிற்காகவும் சதா இவர்கள் முன்னேற வேண்டும் என்று சதா சிந்தித்தார். இவ்வாறு ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சுபசிந்தனையாளராக இருந்தார். இத்தகைய விசேஷத்தன்மைகளை அனைத்து குழந்தைகளும் அனுபவம் செய்தார்கள். இந்த அனைத்து விசயங்களிலும் சமமாக ஆகுவது தான் தந்தையைப் பின்பற்றுவது ஆகும். இவற்றைப் பின்பற்றுவது கடினமா என்ன? இதையே அன்பு என்றும், இதையே அன்பிற்கான கைமாறு என்றும் கூறப்படுகிறது. ஒவ்வொரு குழந்தையும் இப்பொழுது வரை எந்தளவு கைமாறு செய்திருக்கிறது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இலட்சியமோ அனைவருக்கும் உள்ளது, ஆனால், பிரத்யட்ச வாழ்க்கையில் தான் நம்பர் வந்து விடுகிறது. அனைவரும் நம்பர் ஒன்

ஆக வேண்டும் என்று விரும்புகின்றார்கள். இரண்டாம், மூன்றாம் எண்ணில் வருவதை எவரும் விரும்ப மாட்டார்கள். இந்த இலட்சியம் சக்திசாலியானது, நல்லது ஆனால், இலட்சியம் மற்றும் இலட்சணம் சமமாக இருக்க வேண்டும், இதுவே சமமாக ஆகுவதாகும். இதற்காக தந்தை பிரம்மா எடுத்து வைத்த தைரியமான முதல் அடி எது? அந்த அடி மூலமே பத்மாபதம் பாக்கியவானாக அனுபவம் செய்தார், அது எது? அனைத்து விசயங்களிலும் சமர்ப்பண நிலை என்பதே தைரியத்தின் முதல் அடியாகும். அனைத்தையும் சமர்ப்பணம் செய்தார். என்னவாகும், எவ்வாறு நடக்கும் என்று எதையும் யோசிக்கவில்லை. ஒரு நொடியில் தந்தையினுடைய சிரேஷ்ட வழிப்படி நடந்தார். தந்தை சமிக்ஞை கொடுத்தார், தந்தையினுடைய சமிக்ஞை மற்றும் பிரம்மாவினுடைய கர்மம் மற்றும் அடி என்பதாக இருந்தது. இதை தைரியத்தின் முதல் அடி என்று சொல்லப்படுகின்றது. உடலையும் சமர்ப்பணம் செய்தார். மனதையும் சதா மன்மனாபவ என்ற விதி மூலம் வெற்றி சொரூபம் ஆக்கினார். ஆகையினால், மனம் அதாவது ஒவ்வொரு எண்ணமும் ஸித்தி அதாவது வெற்றி சொரூபமாக ஆனது. எதிர்காலத்தைப் பற்றிய கவலை எதுவும் இல்லாமல் கவலையற்றவராகி செல்வத்தை சமர்ப்பணம் செய்தார். ஏனெனில், கொடுப்பது என்பது கொடுப்பதல்ல, ஆனால், பல கோடி மடங்கு பெறுவதாகும் என்ற நம்பிக்கை இருந்தது. இவ்வாறு சம்பந்தத்தையும் சமர்ப்பணம் செய்தார், அதாவது லௌகீகத்தை அலௌகீக சம்பந்தமாக மாற்றினார். அவர்களை விட்டு விடவில்லை, அவர்களுக்கு நன்மை செய்தார், அவர்களை மாற்றினார். நான் என்ற புத்தியை, அபிமானத்தின் புத்தியை சமர்ப்பணம் செய்தார். ஆகையினால், உடல், மனம், புத்தியால் நிர்மலமானவராக (களங்கமற்றவராக, புனிதமானவராக) சீத்தளமாக (குளிர்ந்த தன்மை), சுகம் நிறைந்த வராக ஆனார். லௌகீக குடும்பத்திலிருந்து மற்றும் உலகத்தினுடைய அறியாத ஆத்மாக்களிடமிருந்து அப்பேற்பட்ட பிரச்சனை வந்தபோதிலும் எண்ணத்தில் கூட, கனவில் கூட சந்தேகத்தின் சூட்சும சொரூபமானது ஒருபொழுதும் சங்கல்பத்திலும் கூட கலக்கத்தை ஏற்படுத்தவில்லை.

உங்கள் அனைவரின் முன்னால் சாகார ரூபத்தில் தந்தை பிரம்மா உதாரணமாக இருந்தார், ஆனால், பிரம்மாவிற்கு முன் சாகாரத்தில் எவரும் உதாரணமாக இல்லை. விசேஷமாக பிரம்மாவின் இந்த

விசயம் அதிசயமானதாக இருந்தது. உறுதியான நம்பிக்கை மற்றும் தந்தையினுடைய ஸ்ரீமத் மட்டும் ஆதாரமாக இருந்தது. உங்களுக்கோ இது மிக சகஜமானதாகும். மேலும், யார் எந்தளவிற்கு பின்னால் வந்திருக்கின்றார்களோ, அவர்களுக்கு இன்னும் சகஜமாகும். ஏனெனில், அனேக ஆத்மாக்களுடைய மாற்றமடைந்த சிரேஷ்டமான வாழ்க்கை உங்களுக்கு முன்னால் உதாரணமாக உள்ளது. இதைச் செய்ய வேண்டும், இவ்வாறு ஆக வேண்டும் என்பது தெளிவாக உள்ளது. ஆகையினால், உங்களுக்கு ஏன், என்ன என்ற கேள்வி எழுவதற்கான வாய்ப்பே இல்லை. அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள் ஆனால், பிரம்மாவிற்கு முன்னால் கேள்வி எழுவதற்கான வாய்ப்பு இருந்தது. என்ன செய்ய வேண்டும், அடுத்து என்னவாக ஆக வேண்டும், சரியானதை செய்து கொண்டிருக்கின்றேனா அல்லது தவறானதை செய்து கொண்டிருக்கின்றேனா என்ற இந்த சங்கல்பம் எழுவதற்கான வாய்ப்பு (சம்பவம்) இருந்தது, ஆனால், சம்பவத்தை அசம்பவமாக ஆக்கினார். ஒரே பலம், ஒரே நம்பிக்கை என்ற இந்த ஆதாரத்தில் நிச்சயபுத்தி உடையவராக நம்பர் ஒன் வெற்றியாளராக ஆனார். இந்த சமர்ப்பண தன்மையின் காரணத்தினால் புத்தி சதா இலகுவாக இருந்தது, புத்தி சுமை இல்லாமல் இருந்தது. மனம் கவலையற்று இருந்தது. முகத்தில் எப்பொழுதுமே கவலையற்ற மகாராஜா என்பதன் அடையாளம் தெளிவாகத் தென்பட்டது. 350-குழந்தைகள் இருந்தார்கள் மற்றும் உணவு சமைப்பதற்கு மாவு இல்லை, ஆனால், சரியான நேரத்தில் குழந்தைகளுக்கு உணவு கொடுக்க வேண்டும். யோசித்துப் பாருங்கள், இப்பேற்பட்ட நிலைமையில் எவராவது கவலையற்றவராக இருக்க முடியுமா? ஒரு மணிக்கு மணி அடிக்க வேண்டும் ஆனால், 11.00 மணி வரை மாவு இல்லை, எவராவது கவலையற்றவராக இருக்க முடியுமா? அப்பேற்பட்ட நிலையில் கூட மகிழ்ச்சியாக, அசையாத மனோநிலையுடன் இருந்தார். இது தந்தையின் பொறுப்பாகும், என்னுடையது அல்ல, நான் தந்தையினுடையவன் மற்றும் குழந்தைகளும் தந்தையினுடையவர்கள், நான் நிமித்தமாக இருக்கின்றேன் -இவ்வாறு உறுதியுடன், கவலையற்றவராக யாரால் இருக்க முடியும்? மனம் மற்றும் புத்தியால் சமர்ப்பணமான ஆத்மாவால் முடியும். ஒருவேளை, என்ன ஆகுமோ தெரியவில்லை! அனைவரும் பசியுடன் இருந்து விடுவார்களே, இது நடக்காது, அது

நடக்காது! என்று தன்னுடைய புத்தியை பயன்படுத்தவில்லை. இது போன்ற வீண் எண்ணம் மற்றும் சந்தேகம் வருவதற்கான வாய்ப்பு இருந்த போதிலும் கூட, சதா பாதுகாவலர் தந்தை இருக்கின்றார், நன்மை செய்பவர் இருக்கின்றார் என்ற சக்திசாலியான எண்ணம் வந்தது. இதுவே சமர்ப்பண நிலையின் விசேஷ நிலையாகும். எவ்வாறு தந்தை பிரம்மா சமர்ப்பணம் ஆனதால் தைரியம் என்ற முதல் அடி எடுத்து வைத்தாரோ, அவ்வாறு தந்தையைப் பின்பற்றுங்கள். நம்பிக்கை உள்ளது என்றால் அவசியம் வெற்றி கிடைக்கும். எனவே, தக்க சமயத்தில் மாவும் வந்து விட்டது மணியும் அடிக்கப்பட்டது மற்றும் தேர்ச்சி பெற்று விட்டார். இதைத் தான் கேள்விக்குறி அதாவது வளைந்த பாதையில் செல்லாமல் சதா நன்மை என்ற புள்ளி வைப்பது என்று கூறுகின்றார்கள். முற்றுப்புள்ளி. இந்த விதி மூலமே சுலபமாகவும் இருக்கும் மற்றும் வெற்றியும் கிடைக்கும். எனவே, இது தான் பிரம்மாவின் அற்புதம் ஆகும். இன்று முதலாவது அடியைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது, கவலையினுடைய சுமையிலிருந்து கூட கவலையற்றவர் ஆகி விடுங்கள். இதையே அன்பிற்கான ரிட்டர்ன் செய்வது என்று கூறப்படுகிறது. நல்லது.

சதா ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின்பற்றக்கூடிய, ஒவ்வொரு அடியிலும் அன்பிற்கான ரிட்டர்ன் கொடுக்கக்கூடிய, சதா நிச்சயபுத்தி உடையவராகி கவலையற்ற மகாராஜாவாக இருக்கக் கூடிய, எண்ணம், சொல், செயல், சம்பந்தத்தில் தந்தைக்கு சமமாக ஆகக்கூடிய, சதா சுபசிந்தனையாளர், சதா ஒவ்வொருவருடைய விசேஷத்தன்மையைப் பார்க்கக்கூடிய, ஒவ்வொரு ஆத்மாவையும் சதா முன்னேற்றக்கூடிய, அப்பேற்பட்ட தந்தைக்கு சமமான குழந்தைகளுக்கு சினேகி தந்தையின் சினேகம் நிறைந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1. தங்களை உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையினுடைய உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமண ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? பிராமணர்கள் அனைவரையும் விட உயர்ந்தவர்கள் என்று மகிமை பாடப்படுகின்றார்கள். உயர்ந்தவர்கள் என்பதன் அடையாளமாக சதா பிராமணர் களுக்கு குடுமி காண்பிக்கின்றார்கள். உலகத்தினர் பெயரளவில் பிராமணர்களாக இருப்பவர் களின் அடையாளமாக குடுமி காண்பித்துள்ளார்கள். எனவே, நீங்கள் குடுமி

வைப்பவர்கள் அல்ல, ஆனால், உயர்ந்த ஸ்திதியில் இருப்பவர்கள் ஆவீர்கள். அவர்கள் ஸ்தூல அடையாளத்தைக் காண்பித்திருக்கின்றார்கள், உண்மையில் பிராமணர்கள் உயர்ந்த ஸ்திதியில் இருப்பவர்கள் ஆவார்கள். பிராமணர்களைத் தான் புருஷோத்தமர்கள் என்று சொல்லப்படுகின்றது. புருஷோத்தமர்கள் என்றால் புருஷர்களில் உத்தமமானவர்கள், சாதாரண மனித ஆத்மாக்களை விட உத்தமமானவர்கள் என்று அர்த்தம். அத்தகைய புருஷோத்தமர்கள் ஆவீர்கள் அல்லவா. புருஷ் என்று ஆத்மாவையும் சொல்கின்றார்கள். சிரேஷ்ட ஆத்மா ஆகுபவர்கள் என்றால் புருஷர்களில் உத்தம புருஷர் ஆகுவது என்று அர்த்தம். தேவதைகளையும் கூட புருஷோத்தமர்கள் என்று கூறுகின்றார்கள். ஏனெனில், தேவ ஆத்மாக்களாக இருக்கின்றார்கள். நீங்கள் தேவ ஆத்மாக்களையும் விட உயர்ந்த பிராமணர்கள் ஆவீர்கள். இந்த போதை சதா இருக்க வேண்டும். மற்ற போதைகளை குறைக்க வேண்டும் என்று கூறுவார்கள், ஆன்மீக போதையை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள் என்று தந்தை கூறுகின்றார். ஏனெனில், இந்த போதை நஷ்டம் ஏற்படுத்தக் கூடியது அல்ல, மற்ற அனைத்து போதை களும் நஷ்டம் தரக்கூடியவை ஆகும். இது மேலே ஏற்றக் கூடியது, அது விழவைக்கக் கூடியது. ஒருவேளை, ஆன்மீக போதை இறங்கி விட்டால், பழைய உலகத்தின் நினைவு வந்து விடும். போதை ஏறியிருக்கிறது என்றால், புது உலகத்தின் நினைவு இருக்கும். இந்த பிராமண உலகம் கூட புதிய உலகம் ஆகும். சத்யுகத்தை விடவும் இந்த உலகம் மிகவும் சிரேஷ்டமானது ஆகும். ஆகையினால், சதா இந்த நினைவின் மூலம் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள்.

2. சதா தன்னை விஷ்வத்தின் படைப்பாளரான தந்தையினுடைய சிரேஷ்டமான படைப்பாக அனுபவம் செய்கின்றீர்களா? பிராமண வாழ்க்கை என்றால் விஷ்வ படைப்பாளரின் சிரேஷ்டமான படைப்பு என்று அர்த்தம். ஒவ்வொருவரும் தந்தையினுடைய நேரடியான படைப்பு ஆவீர்கள் -இந்த போதை உள்ளதா? உலகத்தினரோ நம்மை பகவான் படைத்தார் என்று அறியாமையில் சொல்கின்றார்கள். நீங்கள் அனைவரும் கூட முன்னர் அறியாமையில் கூறினீர்கள், ஆனால், இப்பொழுது நாம் சிவவம்ச பிரம்மாகுமார்/குமாரி ஆவோம் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். எனவே, இப்பொழுது ஞானத்தின் ஆதாரத்தில்,

புரிதலுடன் நம்மை பகவான் படைத்திருக்கின்றார், நாம் வாய்வழி வம்சத்தினர் என்று கூறுகின்றீர்கள். தந்தை நேரடியாக பிரம்மா மூலம் படைத்திருக்கின்றார். எனவே, பாப்தாதா அல்லது தாய் தந்தையின் படைப்பு ஆவீர்கள். பகவானின் நேரடி படைப்பு -இதை இப்பொழுது அனுபவப்பூர்வமாக உங்களால் சொல்லமுடிகிறது. பகவானுடைய படைப்பு எவ்வளவு சிரேஷ்டமானதாக இருக்கும்! படைப்பாளர் எப்படியோ, படைப்பு அப்படி இருக்கும் அல்லவா. இந்த போதை மற்றும் குஷி சதா இருக்கிறதா? தன்னை சாதாரணமானவர் என்று புரிந்து கொள்ளவில்லை தானே? இந்த இரகசியம் எப்பொழுது புத்தியில் வந்து விடுகிறதோ, அப்பொழுது சதா ஆன்மீக போதை மற்றும் குஷி முகத்தில் மற்றும் நடத்தையில் தானாகவே வந்து விடுகிறது. உங்களுடைய முகத்தைப் பார்த்து உண்மையிலேயே இவர்கள் சிரேஷ்டமான படைப்பாளரின் படைப்பு என்று பிறருக்கு அனுபவம் ஆகவேண்டும். எவ்வாறு ஒரு இராஜாவின் இராஜகுமாரி இருக்கிறார் என்றால், இவர் இராயலான வீட்டைச் சேர்ந்தவர் என்று அவருடைய நடத்தையின் மூலம் தெரிந்து விடும். இவர்கள் பணக்கார வீட்டைச் சேர்ந்தவர்கள் அல்லது இவர்கள் சாதாரண வீட்டைச் சேர்ந்தவர்கள் என்பது நடத்தையின் மூலம் தெரிந்து விடும். இவ்வாறு உங்களுடைய நடத்தையின் மூலம், முகத்தின் மூலம் இவர்கள் உயர்ந்த படைப்பு ஆவார்கள், உயர்ந்த தந்தையின் குழந்தைகள் ஆவார்கள் என்ற அனுபவம் பிறருக்கு எற்பட வேண்டும்.

<u>குமாரிகளுடன்</u>: கன்னிகைகள் 100-பிராமணர்களை விட உத்தமமானவர்கள் என்ற மகிமை பாடப்பட்டுள்ளது. இந்த மகிமை ஏன் பாடப்பட்டுள்ளது? ஏனெனில், எந்தளவு சுயம் சிரேஷ்டமாக இருப்பீர்களோ, அந்தளவே பிறரையும் சிரேஷ்டமாக ஆக்க முடியும். நான் சிரேஷ்ட ஆத்மா என்ற இந்த குஷி உள்ளதா? குமாரிகள் சேவாதாரி ஆகி சேவையில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். ஏனெனில், இந்த சங்கம யுகமே கொஞ்ச காலத்திற்கான யுகம் ஆகும். இதில் எதை, எந்தளவு செய்ய விரும்புகின்றீர்களோ, அந்தளவு செய்ய முடியும். எனவே, சிரேஷ்ட இலட்சியம் மற்றும் இலட்சணம் உடையவர்கள் ஆவீர்கள் அல்லவா? எங்கு இலட்சியம் மற்றும் இலட்சணம் சிரேஷ்டமாக உள்ளதோ, அங்கு பிராப்தியும் சதா சிரேஷ்டமாக அனுபவம் ஆகிறது. எனவே, சதா இந்த ஈஸ்வரிய

வாழ்க்கையின் பலனான குஷி மற்றும் சக்தி ஆகிய இரண்டையும் அனுபவம் செய்கின்றீர்களா? உலகத்தில் குஷிக்காக செலவு செய்கின்றார்கள், ஆனாலும் கிடைப்பதில்லை. ஒருவேளை, கிடைத்தாலும் அது அல்பகாலத்திற்கே உள்ளது மற்றும் குஷியின் கூடவே துக்கமும் இருக்கும் ஆனால், உங்களுடைய வாழ்க்கை சதா குஷி நிறைந்ததாக ஆகி விட்டது. உலகத்தினர் குஷிக்காக துடிக்கின்றார்கள் மற்றும் உங்களுக்கு குஷி பிரத்யட்ச பலனாக கிடைத்துக் கொண்டு இருக்கின்றது. குஷி தான் உங்களுடைய வாழ்க்கையின் விசேஷத்தன்மை ஆகும். ஒருவேளை, குஷி இல்லை எனில் வாழ்க்கை இல்லை. எனவே, சதா தன்னை முன்னேற்றிக் கொண்டே, முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றீர்கள் அல்லவா? குமாரிகள் தக்க சமயத்தில் தப்பித்து விட்டார்கள் என்று பாப்தாதா குஷி அடைகின்றார்கள். இல்லையெனில், தலை கீழான ஏணியில் ஏறி பிறகு இறங்க வேண்டியிருக்கும். ஏறுவது மற்றும் இறங்குவது -இதில் அதிக உழைப்பு உள்ளது அல்லவா. பாருங்கள், இல்லறத்தில் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களும் பிரம்மாகுமார்/பிரம்மாகுமாரி என்று அழைக்கப்படுகின்றார்கள், பிரம்மா அதர்குமாரர் என்று சொல்வதில்லை. பிறகும், குமாரர்/குமாரி ஆகியிருக்கிறார்கள் அல்லவா. அவர்கள் ஏணிப்படியில் இறங்கி விட்டார்கள் மற்றும் நீங்கள் இறங்க வேண்டியதில்லை, மிகவும் பாக்கியசாலிகள் ஆவீர்கள், தக்க சமயத்தில் தந்தை கிடைத்து விட்டார். குமாரிதான் பூஜிக்கப்படுகின்றார். எப்பொழுது குமாரி கிரஹஸ்தி ஆகி விடுகின்றாரோ, அப்பொழுது வெள்ளாடு போல் ஆகி அனைவரின் முன்பும் தலை வணங்கியே நிற்கின்றார். நீங்கள் தப்பித்து விட்டீர்கள் அல்லவா. எனவே, சதா தன்னை அப்பேற்பட்ட பாக்கியவான் எனப் புரிந்து முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

தாய்மார்களுடன்: அனைவரும் சக்திசாலியான தாய்மார்கள் ஆவீர்கள் அல்லவா. பலவீன மானவர்கள் இல்லையே? பாப்தாதா தாய்மார்களிடம் என்ன விரும்புகின்றார்கள்? ஒவ்வொரு மாதாவும் ஜெகத்மாதா ஆகி விஷ்வத்திற்கு நன்மை செய்ய வேண்டும் ஆனால், தாய்மார்கள் சாதுர்யத்துடன் வேலை செய்கின்றார்கள். எப்பொழுது லௌகீக வேலை வருகிறதோ, அப்பொழுது யாரையாவது நிமித்தமாக்கி வெளிவந்து விடுகின்றார்கள் மற்றும் எப்பொழுது

ஈஸ்வரிய காரியம் வருகிறதோ, அப்பொழுது குழந்தைகள் இருக்கின்றார்கள், அவர்களை யார் பராமரிப்பார்கள்? என்று கூறுவார்கள். பாண்டவர்களுக்கோ பாப்தாதா கூறுகின்றார்கள் -பரிபாலனை செய்ய வேண்டும், ஏனெனில், அவர்கள் படைப்பு ஆவார்கள், ஆனால், பாண்டவர்கள் சக்திகளுக்கு (விடுவித்தல்) ஒய்வு தர வேண்டும். நாடக அனுசாரமாக நிகழ்காலத்தில் தாய்மார்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆகையினால், தாய்மார்களை முன்னால் வைக்க வேண்டும். இப்பொழுது மிகுந்த சேவை செய்ய வேண்டும். முழு விஷ்வத்தையும் பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்றால் சேவையை எவ்வாறு பூர்த்தி செய்வீர்கள்? தீவிர வேகம் தேவை அல்லவா. எனவே, பாண்டவர்கள் சக்திகளுக்கு ஒய்வு கொடுத்தால் சேவைக் கேந்திரங்கள் திறக்க முடியும் மற்றும் உரக்க ஒலி எழுப்ப முடியும். நல்லது.

வரதானம்: அனைத்து ரூபங்களில், அனைத்து சம்பந்தங்களில் தன்னுடைய அனைத்தையும் தந்தைக்கு முன் அர்ப்பணம் செய்யக்கூடிய உண்மையான சினேகி ஆகுக!

யார் மீது அதிக அன்பு உள்ளதோ, அந்த அன்பிற்காக அனைவரையும் ஒதுக்கி விட்டு அனைத்தையும் அவர்களுக்கு முன்னால் அர்ப்பணம் செய்து விடுகின்றார்கள். தந்தைக்கு குழந்தைகள் மீது அன்பு உள்ளது, ஆகையினால், அன்பான குழந்தைகளுக்கு சதாகாலத்திற்கான சுகங்களின் பிராப்தியைக் கொடுக்கின்றார், மற்ற அனைவரையும் முக்தி தாமத்தில் இருக்க வைத்து விடுகின்றார், அதுபோன்று குழந்தைகள் அன்பினுடைய நிரூபணமாக அனைத்து ரூபங்கள் மற்றும் அனைத்து சம்பந்தங்களால், தன்னுடைய அனைத்தையும் தந்தைக்கு முன் அர்ப்பணம் செய்ய வேண்டும். எங்கு அன்பு உள்ளதோ, அங்கு யோகம் உள்ளது மற்றும் யோகம் உள்ளது என்றால் சகயோகம் உள்ளது. ஒரு பொக்கிஷத்தைக் கூட மன வழிப்படி வீணாக இழக்க முடியாது.

சுலோகன்: சாகார கர்மத்தில் தந்தை பிரம்மாவை மற்றும் அசரீரி ஆவதில் நிராகார தந்தையைப் பின்பற்றுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.01.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுகத்தில் நம்பர் ஒன் பூஜைக்குரியவர் ஆவதற்கான அலௌகீக விதி!

இன்று அநாதியான (என்றும் அழிவில்லாத) தந்தை மற்றும் ஆதி (முதன்மையான) தந்தை, அழியாத சாலிகிராம் (ஆத்மா) குழந்தைகளை மேலும் முதன்மையான பிராமண குழந்தைகளை இரட்டை ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். சாலிகிராம் (புள்ளி) ரூபத்திலும் கூட மிகவும் பூஜைக்குரியவர்களாக இருக்கிறீர்கள், மேலும் பிராமண நிலையிலிருந்து தேவதை சொரூபத்தில் கூட பாடப்படுகிறீர்கள், மேலும் பூஜைக்கு தகுதியுடைவர்களாக இருக்கிறீர்கள். இருவருமே -ஆதி (பிரம்மா) மற்றும் அநாதி (சிவ) தந்தை, இரண்டு விதமான ரூபத்தில் பூஜைக்குரிய ஆத்மாக்களை பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருக்கிறார்கள். அநாதியான பாபா ஆதி பிதா உட்பட அதாவது பிரம்மாபாபா மற்றும் பிராமண குழந்தைகள் தன்னை (சிவபாபா) விடவும் அதிகமாக இரட்டை ரூபத்தில் பூஜைக்குரியவர்களாக இருக்கிறீர்கள். அநாதியான தந்தையின் பூஜை ஒரே ஒரு நிராகார ரூபத்தில் மட்டும் நடைபெறுகிறது, ஆனால் பிரம்மா உட்பட பிராமண குழந்தைகளின் பூஜை நிராகார் -சாகார் இரண்டு ரூபத்திலும் நடைபெறுகிறது எனவே பாபா குழந்தைகளை தன்னை விடவும் அதிகமாக இரட்டை ரூபத்தில் மகானாக (உயர்ந்தவர்களாக) ஏற்றுக் கொள்கின்றார்.

பாப்தாதா குழந்தைகளாகிய உங்களின் விசேஷத்தன்மைகளை பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தைகளின் விசேஷத்தன்மை தனிப்பட்டது. ஒரு சிலர் பாபாவின் மற்றும் அனைத்து பிராமண ஆத்மாக்களின் விசேஷத்தன்மைகளை தெரிந்து கொண்டு தனக்குள் அனைத்து விசேஷத்தன்மைகளையும் தாரணை செய்து

சிரேஷ்ட அதாவது விசேஷ ஆத்மாவாகி விடுகிறார்கள், மேலும் ஒரு சிலர் விசேஷத்தன்மைகளை தெரிந்து கொண்டும், பார்த்துக் கொண்டும் குஷி அடைகிறார்கள், ஆனால் தனக்குள் அனைத்து விசேஷத்தன்மைகளை தாரணை செய்வதற்கான தைரியம் இல்லை. மேலும் ஒரு சிலர் ஒவ்வொரு ஆத்மாவிடத்திலும், பிராமண குடும்பத்தில் விசேஷத்தன்மைகள் இருந்தாலும் கூட விசேஷத்தன்மையின் முக்கியத்துவத்தோடு பார்க்காமல், ஒருவர் மற்றவரை சாதாரண (தேக) ரூபத்தில் பார்க்கிறார்கள். விசேஷத்தன்மைகளை பார்ப்பதற்கு மற்றும் தெரிந்து கொள்வதற்கு பயிற்சி செய்வதில்லை, மற்றும் குணத்தை கிரஹிக்கும் புத்தியை அதாவது குணத்தை தாரணை செய்வதற்கான புத்தி இல்லாத காரணத்தினால் விசேஷத்தன்மை மற்றும் குணத்தை தெரிந்து கொள்ள முடியாது. ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களிடமும் ஏதாவதொரு விசேஷத்தன்மை அவசியம் நிரம்பியிருக்கிறது. பதினாயிரத்தில் கடைசி மணியாக இருந்தாலும் கூட அவர்களிடத்திலும் ஏதாவதொரு விசேஷத்தன்மை இருக்கிறது, ஆகையால் தான் பாபாவின் பார்வை அந்த ஆத்மாவின் மீது விழுந்திருக்கிறது. பகவானின் பார்வை விழுந்திருக்கிறது, அல்லது இறைவனே தன்னுடையவராக மாற்றியிருக்கிறார் என்றால் அவசியம் விசேஷத்தன்மை நிரம்பியிருக்கிறது. ஆகையால் தான் அந்த ஆத்மா பிராமணர்களின் லிஸ்டில் (பட்டியலில்) வந்துள்ளனர், ஆனால் எப்பொழுதுமே ஒவ்வொரு வரின் விசேஷத்தன்மைகளை பார்ப்பது மற்றும் தெரிந்துகொள்வதில் நம்பர்வார் (வரிசைப்படி) ஆகி விடுகிறார்கள். ஞானத்தின் தாரணை அல்லது சேவையில், நினைவில் பலவீனமாக இருக்கிறார்கள், ஆனால் எப்படி இருந்தாலும், பாபாவை பற்றி தெரிந்திருக்கிறார்கள், பாபாவினுடையவராக விசாலமான புத்தியுடைவராக, பாபாவை பார்ப்பதற்கான தெய்வீக பார்வை என்ற விசேஷத்தன்மை இருக்கிறது என்பதை பாப்தாதா தெரிந்திருக்கிறார். இன்றைய காலத்தில் பிரபலமான அறிஞர்கள் கூட தெரிந்து கொள்ள முடியாது, அடையாளம் கண்டு கொள்ள முடியாது, ஆனால் அந்த ஆத்மாக்கள் தெரிந்திருக்கிறார்கள் அல்லவா. கோடியில் சிலர், சிலரிலும் கூட வெகு சிலர் தான் -இந்த பட்டியலில் வந்திருக்கிறார்கள் அல்லவா. எனவே கோடிக்கணக்கானவர்களில் விசேஷ ஆத்மாவாக இருக்கிறார்கள் அல்லவா. என்ன விசேஷத்தன்மை இருக்கிறது?

ஏனெனில் உயர்ந்ததிலும் உயர்ந்த பாபாவினுடையவராக ஆகி விட்டார்கள்.

அனைத்து ஆத்மாக்களிலும் பிராமண ஆத்மாக்கள் சிறப்பானவர்களாக இருக்கிறார்கள். ஒரு சிலர் தான் தனது விசேஷத்தன்மைகளை செயலில் பயன்படுத்துகிறார்கள், ஆகையால் அந்த விசேஷத்தன்மை வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கிறது, மேலும் மற்றவர்களுக்கும் கூட அது தென்படுகிறது. மேலும் சிலரிடத்தில் விசேஷத்தன்மை என்ற விதை இருக்கிறது, ஆனால் செயலில் கொண்டு வர வேண்டும் -இந்த விதையை பூமியில் விதைக்க வேண்டும். எதுவரை விதையை பூமியில் விதைக்கவில்லையோ, அதுவரை மரமும் வளர்வதில்லை, விரிவடைவதுமில்லை. மேலும் சில குழந்தைகள் விசேஷத்தன்மை என்ற விதையை கூட விரிவாகவும் எடுத்து செல்கிறார்கள், அதாவது மரம் என்ற ரூபத்தில் வளர்ச்சி கூட அடைகிறது, பழங்களும் கூட வளர்கிறது, ஆனால் பழம் வளர்கிறது என்றால் பழங்களுக்கு பின்னால் பறவைகளும், குருவிகளும் உண்பதற்கு வருகின்றன. எனவே பலன்களை அடையும், அதே நேரத்தில் நான் விசேஷமானவன், எனக்கு இந்த விசேஷத்தன்மை உள்ளது என்ற ரூபத்தில் மாயாவும் வருகிறது ஆனால் பாபாவின் மூலம் கிடைத்துள்ள விசேஷத்தன்மை என்பதை புரிந்து கொள்வதில்லை. விசேஷத்தன்மை களை நிரப்பக்கூடியவர் பாபாவாக இருக்கிறார். பிராமணன் ஆன பிறகு தான் விசேஷத்தன்மைகளும் வந்தன. பிராமண வாழ்க்கையின் வெகுமதி, பாபாவின் வெகுமதியாகும். ஆகையால் பலனிற்கு பதிலாக அதாவது சேவையில் வெற்றியடைந்த பிறகு அவசியம் இந்த கவனம் வைக்க வேண்டும். இல்லையென்றால், மாயா என்ற பறவைகளும், குருவிகளும் எச்சில் செய்து விடுகிறது, அல்லது கீழே தள்ளி விடுகிறது. சிதைந்த மூர்த்திகள் பூஜிக்கப்படுவதில்லை. இது ஒரு சிலை என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது, பூஜை செய்யப்படுவதில்லை. அதுபோல பிராமண ஆத்மாக்கள் சேவையின் பலன் அதாவது சேவையில் வெற்றி அடைந்து விடுகிறார்கள், ஆனால் நான் என்ற குருவி பழத்தை சிதைத்து விடுகிறது, ஆகையால் சேவை மிகவும் நன்றாக செய்கிறார்கள், மகாரதியாகவும் இருக்கிறார்கள், சேவாதாரியாகவும் இருக்கிறார்கள் என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது ஆனால் சங்கம யுகத்திலும் கூட

அனைத்து பிராமண குடும்பத்தை சேர்ந்தவர்களின் மனதில் அன்பிற்குரியவராக மற்றும் பூஜைக்குரியவராக இருக்க முடிவதில்லை.

சங்கம யுகத்தில் இதயபூர்வ அன்பு, இதயபூர்வ மரியாதை -இது தான் பூஜைக்குரியவராக மாற்றுகிறது. அடையும் பலனில் நான் என்ற எண்ணத்தை கொண்டு வரக்கூடியவர்கள் பூஜைக்குரியவர்கள் ஆவதில்லை. முதலாவது -மனதார உயர்ந்தவராக யாரையாவது ஏற்றுக் கொள்வது, எனவே உயர்ந்தவர்களை பூஜைக்குரியவர் என்று சொல்லப்படுகிறது. இன்றைய உலகத்திலும் கூட தந்தை உயர்ந்தவராக இருக்கக்கூடிய காரணத்தினால் குழந்தை வணக்குகிறேன் தந்தையே என்று சொல்லி அழைக்கிறார்கள் மற்றும் எழுதுகிறார்கள். அதுபோல இதய பூர்வமாக உயர்ந்தவர்களாக ஏற்றுக் கொள்வது அதாவது இதயபூர்வமாக மதிப்பளிப்பது. இரண்டாவது -வெளிப்புற மதிப்புக்கு தகுந்தப்படி மரியாதை தர வேண்டியிருக்கிறது. எனவே இதயபூர்வமாக தருவது, மற்றும் தர வேண்டியிருக்கிறது இதில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. பூஜைக்குரியவர் ஆவது என்றாலே மனதார அனைவரையும் ஏற்றுக் கொள்வது. 5-சதவீகிதம் இருந்து விடுகிறது என்ற முதலேயே சொல்லப்பட்டியிருக்கிறது, பெரும்பான்மையோர் இருக்க வேண்டும், ஆனால் பெரும்பான்மையோரை மனதார ஏற்றுக் கொள்ளுங்கள் -இது தான் சங்கம யுகத்தில் பூஜ்யகுரியவர் ஆவதாகும். பூஜைக்குரியவர் ஆவதற்கான சம்ஸ்காரத்தையும் கூட இப்பொழுதிலிருந்தே நிரப்பிக் கொள்ள வேண்டும் ஆனால் பக்தி மார்க்கத்தில் பூஜைக்குரியவர் ஆவதிலும் மற்றும் இப்பொழுது (சங்கம யுகத்தில்) பூஜைக்குரியவர் ஆவதிலும் வித்தியாசம் இருக்கிறது. இப்பொழுது உங்களுடைய உடலுக்கு பூஜை செய்ய முடியாது, ஏனெனில் இறுதிகால கட்டத்தில் கிடைத்துள்ள பழைய உடலாக இருக்கிறது. தமோகுணம் நிறைந்த தத்துவங்களால் உருவாக்கப்பட்ட உடலாக இருக்கிறது. இப்பொழுது மலர்களின் மாலை அணிவிக்க முடியாது. பக்தி மார்க்கத்தில் தேவதைகளின் மீது பூ மாலை அணிவிக்கிறார்கள் அல்லவா. பூஜைக்குரியவரின் அடையாளம் -அகர்பத்தி ஏற்றுவது, பூ மாலை அணிவிப்பது, தீப ஆராதனை செய்வது, பஜனை செய்வது, திலகம் ஈடுவதாகும். சங்கம யுகத்தில் இந்த ஸ்தூலமான விதிமுறைகள் கிடையாது ஆனால் சங்கம யுகத்தில் எப்பொழுதும் இதயபூர்வமாக அந்த பூஜைக்குரிய ஆத்மாக்களுக்காக

உண்மையான அன்பினுடைய ஆரத்தி செய்வது. ஆத்மாக்கள் மூலம் சதா ஏதாவதொரு பிராப்தியின் புகழ் பாடிக் கொண்டேயிருப்பது. சதா ஆத்மாக்களுக்காக சுபபாவணை என்ற அகர்பத்தி ஏற்றுவது மற்றும் தீபம் ஏற்றுவது. சதா அப்படிப்பட்ட ஆத்மாக்களை பார்த்து நாமும் கூட அவர்களை போன்று பாபாவின் மீது அர்ப்பணம் ஆகிறோம், அதுபோன்று மற்ற ஆத்மாக்களும் கூட பாபாவின் மீது அர்ப்பணம் ஆக வேண்டும் என்று ஆர்வம் ஏற்படுகிறது. எனவே பாபாவின் மீது அர்ப்பணம் ஆவதற்கான பூ மாலை சதா அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு தானாகவே கிடைக்கிறது. அப்படிப்பட்ட ஆத்மாக்கள் சதா நினைவு சொரூபத்தின் திலகதாரி ஆகிறார்கள். இந்த அலௌகீக விதியின் மூலம் இந்த சமயத்தில் பூஜைக்குரிய ஆத்மாக்கள் ஆகிறார்கள்.

பக்தி மார்க்கத்தினுடைய பூஜைக்குரியவர் ஆவதை காட்டிலும் சிரேஷ்ட பூஜை இப்பொழுது நடைபெறுகிறது. எவ்வாறு பக்தி மார்க்கத்தில் பூஜைக்குரிய ஆத்மாக்களுடன் இரண்டு நிமிட தொடர்பின் மூலம் அதாவது தேவதைகளின் சிலைக்கு முன்னால் இரண்டு நிமிடத்திற்கு அமைதி, சக்தி, குஷியின் அனுபவம் ஏற்படுகிறது. அப்படி சங்கம யுகத்தை சேர்ந்த பூஜைக்குரிய ஆத்மாக்கள் மூலம் இப்பொழுதும் கூட இரண்டு நிமிடம், ஒரு நிமிடத்தின் திருஷ்டி கிடைப்பதினாலும் குஷி, அமைதி மற்றும் ஊக்கம் உற்சாகத்தின் சக்தி அனுபவம் ஆகிறது. அப்படிப்பட்ட பூஜைக்குரிய ஆத்மாக்கள் அதாவது நம்பர்-ஒன் விசேஷ ஆத்மாக்களாக இருக்கிறார்கள். இரண்டாவது நம்பர் மற்றும் மூன்றாவது நம்பரைப் பற்றி சொல்லப்பட்டு விட்டது. அதைப் பற்றி விவரிப்பது. அனைவருமே விசேஷ ஆத்மாக்களாக இருக்கிறீர்கள், ஆனால் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று நம்பர்வாராக இருக்கிறீர்கள். அனைவருக்குமே இலட்சியம் நம்பர் ஒன்னில் தான் இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட பூஜைக்குரியவர் ஆகுங்கள். பிரம்மாபாபாவின் குணங்களை புகழ் பாடுகிறீர்கள் அல்லவா. இந்த அனைத்து விசேஷத்தன்மைகள் பூஜைக்குரியவர் ஆவதின் மற்றும் நம்பர் ஒன் விசேஷ ஆத்மா ஆவதற்கான விஷயங்களை பிரம்மாபாபாவிடம் பார்த்தீர்கள், கேட்டீர்கள் அல்லவா. எனவே எப்படி சாகார பிரம்மாவின் ஆத்மா நம்பர் ஒன் சங்கம யுகத்தின் பூஜைக்குரிய நிலையிலிருந்து எதிர்காலத்தில் நம்பர் ஒன் பூஜைக்குரியவர் ஆகிறார்.

அதுபோல, நீங்கள் அனைவரும் கூட அவரை (பிரம்மாவை) போன்று ஆக முடியும்.

பாபாவின் கூடவே பிரம்மாபாபாவின் புகழையும் பாடப்படுகிறது. அதுபோல நீங்கள் அனைவரும் அவரை போன்று எப்பொழுதும் எண்ணம், வார்த்தை மற்றும் செயலை செய்யுங்கள், அது எப்பொழுதுமே அதிசயமானதாகும். அதிசயம் ஏற்படும் பொழுது குண்டு வெடிக்காது, அதிசயம் நடைபெறவில்லையென்றால் குண்டு வெடிக்கிறது -எண்ணங்களில் குண்டு வெடிதாலும் சரி, வார்த்தைகளில் குண்டு வெடித்தாலும் சரி. எண்ணங்களினால் கூட வீணான புயல் வருகிறது என்றால் வெடிக்கிறது (அழுத்தம்) இல்லையா. வெடிக்க கூடாது, ஆனால் அதிசயம் செய்ய வேண்டும். ஏனெனில் ஆதி பிதா பிரம்மாவின் பிராமண குழந்தைகள் எப்பொழுதுமே பூஜைக்குரியவர்களாக பாடப்படுகிறார்களா? இப்பொழுது இந்த கடைசி ஜென்மத்திலும் கூட பார்த்தீர்கள் என்றால் அனைத்தையும் விட உயர்ந்த வர்ணனை யாரை பாடப்படுகிறது? பிராமணர்களை தான் சொல்கிறார்கள் இல்லையா. உயர்ந்த பெயர் மற்றும் மிக உயர்ந்த காரியங்களுக்காகவும் கூட பிராமணர்களை தான் அழைக்கிறார்கள். எனவே கடைசி பிறவி வரை பிராமண ஆத்மாக்களுக்கு தான் உயர்ந்த பெயர், உயர்ந்த செயல் பிரபலமாகிறது. பரம்பரை பரம்பரையாக வந்துக் கொண்டு வருகிறது. பெயரின் மூலம் மட்டுமே செயல் நடைபெற்று வருகிறது. பெயர் உங்களுடையது, ஆனால் பெயர்களினால் (பிராமணர்களின்) செயல்கள் நடைபெற்று வருகிறது. உண்மையான பிராமண ஆத்மாக்களின் மகிமைகளும் பாராட்டுகள் எவ்வளவு இருக்கிறது, இதன் மூலம் பார்க்கலாம். பிராமணன் -என்ற பெயர் கூட அழிவற்றதாக ஆகி விட்டது. அழிவற்ற பிராப்திகள் நிறைந்த வாழ்க்கை ஆகி விட்டது.

பிராமண வாழ்க்கையின் விசேஷத்தன்மை -முயற்சி குறைவு, அதிகப்படியான இலாபம். ஏனெனில் அன்பிற்கு முன்னால் உழைப்பு தேவைப்படாது. இப்பொழுது கடைசி ஜென்மத்தில் கூட பிராமணர்கள் முயற்சி (கடின உழைப்பு) செய்யாமல், மன அமைதியோடு சாப்பிடுகிறார்கள் (வாழ்கிறார்கள்). ஒருவேளை (பிராமண என்ற) பெயரிலேயே செயல் நடைபெறுகிறது என்றால் பசியுடன் இருக்க

முடியாது. எனவே இந்த நேரத்தில் பிராமண வாழ்க்கையின் விசேஷத்தன்மைகள் இதுவரை அடையாள சின்னமாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், இந்தளவு உயர்ந்த விசேஷ ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். புரிந்ததா?

தற்சமயத்தில் பூஜைக்குரியவர்கள் தான் எதிர்கால பூஜைக்குரியவர்களாக ஆகிறார்கள். இவர்களை தான் விசேஷமான ஆத்மாக்கள் நம்பர் ஒன் என்று சொல்லப்படுகிறது. எனவே சோதனை செய்யுங்கள். பிரம்மாபாபாவின் கதைகளை கேட்டீர்கள் அல்லவா. இப்பொழுதும் மேலும் பலரும் (தாதிகள்) உள்ளனர். இந்த பிரம்மாபாபாவின் விசேஷத்தன்மைகளை எப்பொழுதும் முன்னால் வையுங்கள். மற்ற எந்த விஷயங்களிலும் செல்லாதீர்கள் ஆனால் விசேஷத்தன்மைகளை பார்த்து வர்ணனை செய்யுங்கள். ஒவ்வொருவரின் விசேஷத்தன்மைகள் முக்கியத்துவத்தை சொல்லுங்கள் விசேஷமானவர் ஆகுங்கள். ஆவது என்றாலே தன்னிடத்தில் விசேஷங்கள் உடையவர் ஆவது. புரிந்ததா. நல்லது.

நாலாபக்கமுள்ள அனைத்து நம்பர் ஒன் விசேஷ ஆத்மாக்களுக்கு, பிராமண வாழ்க்கை வாழக்கூடிய அனைத்து விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா பிரம்மாபாபாவை முன்னால் வைத்து சமமானவர் ஆகக்கூடிய குழந்தைகளை அநாதி (சிவ) பாபா, ஆதி (பிரம்மா) பாபாவின் இரட்டை ரூபத்தின் மூலம் அனைத்து சாலிகிராமம் (பரந்தாமவாசி), மற்றும் சாகார பிராமண ஆத்மாக்களுக்கு நேசம் நிறைந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரங்கள்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு: **1.** சதா பாபாவின் கை (ஸ்ரீமத்) மற்றும் துணையில் இருக்கும் பாக்கியசாலி எனப் புரிந்திருக்கிறீகளா? பாபாவின் கை மற்றும் துணை இருக்குமிடத்தில், எப்பொழுதுமே மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை வாழ்கிறோம். குழப்பமடைபவர்களாக அல்ல, மகிழ்ச்சியில் இருங்கள். எந்தவொரு பிரச்சனையும் தன்பக்கம் ஈர்க்காது. சதா பாபாவின் பக்கம் ஈர்க்கப்படுவீர்கள். அனைவரையும் விட பெரிய மற்றும் சிறந்த தந்தையாக இருக்கிறார். எனவே பாபாவை தவிர வேறு எந்த பொருளோ அல்லது மனிதர்களோ ஈர்க்க முடியாது. யார் பாபாவின் கை மற்றும் துணையில் வளர்கிறார்களோ, அவர்களின்

மனம் வேறு எங்கும் செல்ல முடியாது. எனவே அனைவரும் அதுபோன்று இருக்கிறீர்களா? அல்லது மாயாவின் வளர்ப்பில் சென்றுக் கொண்டிருக்கிறீர்களா? அந்த வழி தடைசெய்யப்பட்டு இருக்கிறது அல்லவா. எனவே சதா பாபாவின் துணையின் மகிழ்ச்சியில் இருங்கள். பாபா கிடைத்து விட்டார், அனைத்தும் கிடைத்து விட்டது. எதுவும் கிடைக்கவில்லை என்பதே இல்லை. எவ்வளவு தான் யாராவது கைகள், துணையை விடுவிக்க முயற்சி செய்யட்டும், ஆனால் விட்டு விடாதீர்கள். மேலும் விட்டு விட்டு எங்கு செல்வீர்கள்? இவரை விட பெரிய பாக்கியம் வேறு எதுவும் இல்லை. குமாரிகள் என்றுமே பாக்கியசாலிகள் தான். இரட்டை பாக்கியசாலிகளாக இருக்கிறார்கள். ஒன்று -குமாரி வாழ்க்கையின் பாக்கியம், இரண்டாவது பாபா வினுடையவர் ஆவதற்கான பாக்கியம். குமாரி வாழ்க்கை வணங்கப்படக்கூடியதாக இருக்கிறது. குமாரி வாழ்க்கை முடிவடைகிறது என்றால் அனைவருக்கும் முன்னால் தலைவணங்க வேண்டியிருக்கிறது. இல்லற வாழ்க்கை என்பதே வெள்ளாடு போன்ற வாழ்க்கையாகும், குமாரி வாழ்க்கை என்றாலே வணங்கப்படக்கூடிய வாழ்க்கையாகும். ஒருவேளை யாராவது ஒருமுறை கீழே விழுந்து விட்டாலும் கூட விழுந்து விடுவதினால் உடைந்து போய் விடுகிறது அல்லவா. பிறகு எவ்வளவு தான் கட்டு (பூசினாலும்) போட்டாலும், சரி செய்தாலும் கூட பலம் இழந்து விடுகிறது. எனவே புரிந்து கொள்பவர் ஆகுங்கள். சோதனை செய்து விட்டு பிறகு புத்திசாலி ஆகாதீர்கள். நல்லது.

2. சதா தன்னை கல்ப கல்பத்திற்கும் வெற்றி பெற்ற ஆத்மாவாக அனுபவம் செய்கிறீர்களா? பலமுறை வெற்றி பெற்றதற்கான நடிப்பை நடித்துள்ளீர்கள், மேலும் இப்பொழுதும் கூட நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். வெற்றி பெற்ற ஆத்மாக்கள் எப்பொழுதுமே மற்றவர்களையும் கூட வெற்றியாளர்களாக மாற்றுகிறார்கள். எதை பல முறை செய்திருக்கிறோமோ, அது சதா எளிதாகவே இருக்கும், கடின உழைப்பு தேவைப்படாது. பலமுறை வெற்றி பெற்ற ஆத்மா என்ற மனநிலையின் மூலம் எப்படிப்பட்ட சூழ்நிலைகளையும் கடந்துச் செல்வது விளையாட்டாக இருக்கும். குஷி அனுபவம் ஆகிறதா? வெற்றி பெற்ற ஆத்மாக்களுக்கு வெற்றியின் உரிமை அனுபவம் ஆகிறது. உரிமை என்பது உழைப்பினால் கிடைக்காது, தானாகவே

கிடைக்கும். எனவே சதா வெற்றியை குஷியோடு, அதிகாரத்தோடு முன்னேறிக் கொண்டே மற்றவர்களையும் கூட முன்னேற்றிக் கொண்டே செல்வார்கள். லௌகீக குடும்பத்தில் இருந்துக் கொண்டே லௌகீகத்தை அலௌகீகமாக மாற்றி விடுங்கள், ஏனெனில் அலௌகீக சம்மந்தம் சுகம் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. லௌகீக தொடர்பின் மூலம் அல்பகாலத்தின் சுகம் கிடைக்கிறது, சதா காலத்திற்கு கிடைப்பதில்லை. எனவே சதா சுகம் நிறைந்தவராக ஆகி விட்டார்கள். துக்கமான உலகத்திலிருந்து சுகமான உலகத்திற்கு வந்து விட்டோம் என்ற அனுபவம் ஆகிறதா? இதற்கு முன் இராவணனின் குழந்தையாக இருந்ததால் துக்கத்தில் இருந்தோம், இப்பொழுது சுகத்தை தரக்கூடிய வள்ளலின் குழந்தை சுக சொரூபமாக ஆகி விட்டோம். முதல் நம்பரில் இந்த அலௌகீக பிராமண குடும்பமாக இருக்கிறது. தேவதைகள் கூட இரண்டாம் நம்பரில் இருக்கிறார்கள். எனவே இந்த அலௌகீக வாழ்க்கை அன்பானதாக இருக்கிறது அல்லவா.

3. எப்பொழுதும் தன்னை பல மடங்கு பாக்கியசாலி என்ற அனுபவம் செய்கிறீர்களா? முழு கல்பத்திலும் இப்படிப்பட்ட உயர்ந்த பாக்கியத்தை அடைய முடியாது. ஏனெனில் எதிர்கால சொர்க்கத்தில் கூட இந்த சமயத்தின் முயற்சியின் பரிசு என்ற ரூபத்தில் இராஜ்ய பாக்கியம் கிடைக்கிறது. எதிர்காலத்திலும் கூட தற்சமயத்தின் பாக்கியத்தின் கணக்குப்படி தான் கிடைக்கிறது. இந்த சமயத்தின் பாக்கியத்திற்கு தான் முக்கியத்துவம் இருக்கிறது. இந்த சமயத்தில் தான் விதை விதைக்கிறீர்கள், மேலும் பலன் அநேக ஜென்மத்திற்கு கிடைக்கிறது. எனவே முக்கியத்துவம் என்பது விதைக்கு தான் கணக்கிடப்படுகிறது அல்லவா. இந்த சமயத்தில் பாக்கியத்தை உருவாக்குவது மற்றும் பாக்கியத்தை அடைவது -இந்த விதையை விதைக்க வேண்டும். எனவே இந்த கவனத்தோடு சதா முயற்சியில் தீவிரமாக முன்னேறிச் செல்லுங்கள், மேலும் சதா இந்த சமயத்தின் பல மடங்கு பாக்கியத்தின் நினைவை வெளிக் கொண்டு வந்து, காரியங்கள் செய்து கொண்டிருந்தாலும் கூட செயலில் தான் தனது உயர்ந்த பாக்கியம் என்பதை மறந்து விட வேண்டாம் இதனை நினைவில் வைக்க வேண்டும். நினைவு சொரூபமாக இருங்கள். இவர்களுக்குத் தான் பலமடங்கு பாக்கியசாலி என்று சொல்லப்படுகிறது. இந்த நினைவின் மூலம் ஆசீர்வாதத்தை எப்பொழுதும் கூடவே வைக்க வேண்டும்.

அதனால் எளிதாகவே முன்னேறிக் கொண்டேயிருங்கள், கடின உழைப்பிலிருந்து விடுப்பட்டு விடுவீர்கள். நல்லது.

**கேள்வி: லௌகீக சம்மந்தத்தில் புத்தி சரியாக நிர்ணயம் செய்வதற்கான விதி என்ன?**

பதில்: ஒருபொழுதும் லௌகீக விஷயங்களை நினைத்துக் கொண்டே நிர்ணயம் செய்ய வேண்டாம், அலௌகீக சக்திசாலியான நிலையில் நிலைத்திருந்து நிர்ணயம் செய்யுங்கள். முடிந்து போன எந்தவொரு விஷயங்களையும் நினைவில் வைப்பதினால் புத்தி அந்த பக்கம் சென்று விடுகிறது, பிறகு பழைய சம்ஸ்காரங்களும் வெளிப்படுகிறது, ஆகையால் கடினமாகி விடுகிறது. லௌகீக உணர்வுகளை முற்றிலும் மறந்து ஆத்மா என புரிந்து அதன் பிறகு நிர்ணயம் செய்தீர்கள் என்றால் சரியான நிர்ணயம் செய்ய முடியும். இதைத் தான் விகர்மாஜீத் (விகர்மங்களை வென்ற) சிம்மாசனம் என்று சொல்லப்படுகிறது. அலௌகீக ஆத்மீக நிலையில் தான் விகர்மாஜீத் மனநிலையின் சிம்மாசனமாகும், இந்த சிம்மாசனத்தில் அமர்ந்துக் கொண்டு நிர்ணயம் செய்தால் சரியாக இருக்கும்.

**வரதானம்: துணை மற்றும் சாட்சி நிலையின் நினைவு மூலம் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டு இருக்கக் கூடிய அனைத்து சக்திகளும் நிறைந்தவர் ஆகுக!**

அனைத்து சக்திகளினால் நிறைந்தவராகி அடிமைத் தனத்திலிருந்து விடுபடுவதற்காக இரண்டு வார்த்தைகளை நினைவில் வைக்க வேண்டும் -ஒன்று சாட்சி மற்றொன்று துணை. இதனால் பந்தனத்திலிருந்து விடுபட்ட நிலை விரைவில் ஏற்படும். சர்வசக்திகள் நிறைந்த பாபாவின் துணை இருந்தால் அனைத்து சக்திகளும் தானாகவே அடைந்து விடுவோம், மேலும் சாட்சியாக இருந்து நடந்துக் கொள்வதினால் எந்தவொரு பந்தனத்திலும் சிக்கிக் கொள்ள மாட்டோம். நிமித்தமாக இந்த உடலிலிருந்து கொண்டு காரியங்கள் செய்து விட்டு சாட்சி (விலகி) விடுங்கள் -இந்த விசேஷ மான பயிற்சியை அதிகரியுங்கள்.

சுலோகன்: தூய்மைக்கும் தூய்மையற்ற தன்மை இரண்டிற்கும் இடையே யுத்தம் செய்து கொண்டிருந்தால் பிராமணர்களுக்கு பதிலாக சத்திரியர் ஆகி விடுகிறோம்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 30.01.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தைரியத்தின் இரண்டாவது அடி -சகிப்புத்தன்மை! (பிரம்மாபாபாவின் வாழ்க்கை வரலாறு)

இன்று அல்மைட்டி அத்தாரிட்டி (சர்வசக்திவான்) பாபா தம்முடைய முதல் படைப்பைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். முதல் படைப்பு பிராமணர்களின் படைப்பு. அவருடைய முதல் படைப்பிலும் கூட முதல் நம்பர் என்று பிரம்மாவைத் தான் சொல்வார்கள். முதல் படைப்பின் முதல் நம்பராக இருக்கும் காரணத்தால் பிரம்மா ஆதி தேவர் எனச் சொல்லப்படுகிறார். இதே பெயரில் இந்த அபு மலையில் நினைவுச்சின்னமும் ஆதி தேவரின் பெயரால் தான் உள்ளது. ஆதி தேவர், அதாவது ஆதி (முதல்) படைப்பு என்றும் சொல்லப்படுகிறார். அதனுடன் கூடவே ஆதி தேவர் என்றால் புதிய படைப்பின் ஆரம்பத்தினுடைய முதல் நம்பர் தேவர். முதல் தேவாத்மாவாக ஸ்ரீகிருஷ்ணர் ரூபத்தில் பிரம்மா தான் ஆகிறார். அதனால் புதிய படைப்பினுடைய ஆரம்பத்தின் ஆதி தேவர் எனச் சொல்லப்படுகிறார். சங்கம யுகத்தில் கூட ஆதி படைப்பின் முதல் நம்பர், அதாவது ஆதி தேவர் என்றாலும் சரி, பிராமண ஆத்மாக்களைப் படைப்பவராகிய பிரம்மா என்றாலும் சரி. ஆக, சங்கம யுகத்தில் மற்றும் சிருஷ்டியின் ஆரம்பத்தில் --இரண்டு சமயத்திற்கும் ஆதி, அதனால் ஆதி தேவர் எனச் சொல்லப்படுகிறார். பிரம்மா தாம் ஆதி கர்மாதீத் ஃபரிஸ்தா ஆகிறார். பிரம்மா தாம் ஃபரிஸ்தா ஆகிறார் மற்றும் ஃபரிஸ்தா விலிருந்து அவரே தேவதை ஆகிறார் --அனைவரிலும் நம்பர் ஒன். அந்த மாதிரி நம்பர் ஒன்னாக ஏன் ஆனார்? எந்த விதியின் மூலம் நம்பர் ஒன் ஸித்தியை அடைந்தார்? பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் அனைவரும் பிரம்மாவைத் தான் பின்பற்ற வேண்டும். என்ன பின்பற்ற வேண்டும். இவருடைய முதல் அடி சமர்ப்பணத்தன்மை. இதையோ முன்பே சொல்லியிருக்கிறோம். முதல் அடியிலும் கூட அனைத்து

ரூபங்களிலும் சமர்ப்பணமாகிக் காட்டினார். இரண்டாவது அடி சகிப்புத்தன்மை. எப்போது சமர்ப்பணமாகி விட்டீர்களோ, அப்போது பாபாவிடம் இருந்து அனைத்து சிரேஷ்ட ஆஸ்திகளோ கிடைத்து விட்டன ஆனால் உலக மனிதர்களிடம் என்ன கிடைத்தது? அனைத்திலும் அதிகமாக நிந்தனைகளின் மழை யார் மீது பெய்தது? ஆத்மாக்களாகிய உங்களுக்கும் கூட நிந்தனைகள் கிடைத்திருக்கலாம் அல்லது கொடுமைகள் நடைபெற்றிருக்கலாம் ஆனால் அதிகமான கோபம் பிரம்மாவுக்குத் தான் கிடைத்துக் கொண்டே இருந்தது. லௌகிக வாழ்க்கையில் எந்த ஓர் அவச் சொல்லையும் கேட்டதில்லை ஆனால் பிரம்மா ஆனவுடன் அவச்சொல் கேட்பதிலும் கூட நம்பர் ஒன்னாக இருந்தார். அனைவரைக் காட்டிலும் அதிகமாக அனவைரின் சிநேகியாக வாழ்ந்தார் ஆனால் எந்த அளவு லௌகிக வாழ்க்கையில் அனைவரின் சிநேகியாக இருந்தாரோ, அந்த அளவு அலௌகிக வாழ்க்கையில் அனைவரின் விரோதி ரூபமாக ஆனார். குழந்தைகள் மீது கொடுமைகள் நடைபெற்றன என்றால் தானாகவே மறைமுகமாக தந்தை மீது கொடுமை நடத்தப்பட்டது ஆனால் சகிப்புத்தன்மையின் குணத்தால் அல்லது சகிப்புத்தன்மையின் தாரணையால் புன்சிரித்துக் கொண்டே இருந்தார். ஒரு போதும் வாடிப் போகவில்லை.

யாராவது புகழ்ந்து பேசியதும் புன்சிரிக்கிறார் என்றால் இதை சகிப்புத்தன்மை எனச் சொல்ல மாட்டார்கள் ஆனால் விரோதி ஆகி, கோபம் கொண்டு, அவச்சொற்களை மழையாகப் பொழிந்தாலும், அத்தகைய சமயத்திலும் புன்சிரித்துக் கொண்டிருப்பது, சங்கல்பத்தில் கூட வாட்டத்தின் அறிகுறி முகத்தில் இல்லாதிருப்பது --இது தான் சகிப்புத்தன்மை எனச் சொல்லப்படுவது. விரோதி ஆத்மாவை யும் கூட இரக்க மனதின் பாவனையுடன் பார்ப்பது, பேசுவது, தொடர்பில் வருவது -இதைத் தான் பொறுமை எனச் சொல்கின்றனர். ஸ்தாபனையின் காரியத்தில், சேவையின் காரியத்தில் சில நேரம் சிறியதாக, சில நேரம் பெரியதாகப் புயல்கள் வரலாம். எப்படி ஞாபகார்த்த சாஸ்திரங்களில் மகாவீர் அநுமானைக் காட்டுகின்றனர் -எத்தகைய பெரிய மலையையும் கூட உள்ளங்கையில் ஒரு பந்தைப் போல் எடுத்து வந்தார். எவ்வளவு பெரிய மலை போன்ற பிரச்சினையாக இருந்தாலும், புயலாக இருந்தாலும். விக்னமாக இருந்தாலும் மலை, அதாவது பெரிய பிரச்னையைச் சிறிய பொம்மையாக ஆக்கி ஒரு விளையாட்டாக சதா

கடந்து சென்றீர்கள் அல்லது மிகப் பெரிய வி ̂யத்தையும் சதா லேசாக ஆக்கித் தானும் லேசாக இருக்கிறீர்கள், மற்றும் மற்றவர்களையும் லேசாக ஆக்கினீர்கள் என்றால் இதைத் தான் பொறுமை எனச் சொல்கின்றனர். சிறிய கல்லை மலையாக அல்ல, ஆனால் மலையைப் பந்தாக ஆக்கி, விஸ்தாரத்தை சாரத்தில் கொண்டு வந்தீர்கள் என்றால் இது பொறுமை எனப் படும். விக்னங்களை, பிரச்சினைகளைத் தனது மனதில் அல்லது மற்றவர்களின் எதிரில் விஸ்தார மாக்குவது என்றால் மலையாக ஆக்குவதாகும் ஆனால் விஸ்தாரத்தில் போகாமல் நத்திங் நியு (எதுவும் புதிதல்ல) என்ற முற்றுப்புள்ளி மூலம் பிந்தி வைத்து, பிந்தி ஆகி முன்னேறிச் செல்ல வேண்டும். இதைத் தான் விஸ்தாரத்தை சாரத்தில் கொண்டு வருவது என்று சொல்வார்கள். பொறுமையான சிரேஷ்ட ஆத்மா சதா ஞான யோகத்தின் சாரத்தில் நிலைத்திருந்து இது போல விஸ்தாரத்தை, பிரச்சினையை, விக்னங்களையும் கூட சாரத்தில் கொண்டு வருவார்கள், எப்படி பிரம்மாபாபா செய்தாரோ, அதைப் போல. எப்படி நீண்ட சாலையைக் கடந்து செல்வதில் சமயம், சக்திகள் முடிந்து போகின்றன, அதாவது அதிகம் பயனுள்ளதாகின்றன, அது போல் விஸ்தாரம் என்பது நீண்ட பாதையைக் கடந்து செல்வது மற்றும் சாரம் என்பது குறுக்கு வழியைக் கடந்து செல்வது (ˆôட்கட்). இருவருமே கடந்து செல்கின்றனர், ஆனால் ˆôட்கட் செய்பவர்கள் சமயம் மற்றும் சக்திகளைச் சிக்கனப் படுத்துவதால் நிராசை (நம்பிக்கை இழந்தவராக) ஆவதில்லை. மனச்சோர்வடைவதில்லை, சதா மகிழ்ச்சியில் புன்சிரிப்புடன் கடந்து செல்கின்றனர். இதைத் தான் பொறுமை எனச் சொல்வது.

சகிப்புத்தன்மையின் சக்தி உள்ளவர்கள் ஒரு போதும் இப்படியும் நடக்குமா என்று அந்த மாதிரி பயப்பட மாட்டார்கள். சதா நிறைந்தவராக இருக்கும் காரணத்தால் ஞானத்தின், நினைவின் ஆழத்தில் செல்வார்கள். பயப்படுபவர்கள் ஒரு போதும் ஆழத்தில் செல்ல முடியாது. சாரத்தில் இருப்பவர்கள் சதா நிறைந்தவராக இருப்பார்கள். அதனால் நிறைந்த, சம்பன்னமான பொருள் ஆழமானதாக இருக்கும். விஸ்தாரத்தில் செல்பவர்கள் வெறுமையாக இருப்பார்கள். அதனால் காலியான பொருள் சதா தழும்பிக் கொண்டே இருக்கும். ஆகவே விஸ்தாரத்தில் செல்பவர்கள் சதா இது ஏன், இது என்ன, இப்படி இல்லை, அப்படித் தான் இருக்க வேண்டும், இப்படி நடக்கக் கூடாது

இந்த மாதிரி சங்கல்பங்களில் கூட தழும்பிக் கொண்டே இருப்பார்கள் மற்றும் பேச்சிலும் கூட அனைவரின் எதிரில் தடுமாறிக் கொண்டே இருப்பார்கள். மேலும் யார் எல்லைக்குட்பட்டதில் அதிகமாகத் தடுமாறுகிறார்களோ, அப்போது என்னவாகும்? தானே தடுமாறுவார்கள், தானே சத்தமாகக் கத்துவார்கள், பிறகு தானே களைத்துப் போவார்கள். பொறுமையானவர்கள் இந்த அனைத்துப் பிரச்சினைகளில் இருந்தும் தப்பித்து விடுவார்கள். அதனால் சதா மகிழ்ச்சியில் இருப்பார்கள், தடுமாறுவதில்லை, பறப்பார்கள்.

இரண்டாவது அடி சகிப்புத்தன்மை. இதை பிரம்மாபாபா நடந்து காட்டினார். சதா ஆடாத அசையாத சகஜ சொரூபத்தில் மகிழ்ச்சியில் இருந்தார். முயற்சி அல்லது கடின உழைப்பால் அல்ல. இதன் அனுபவத்தை 14 வருட தபஸ்யா செய்த குழந்தைகள் அடைந்தார்கள். 14 வருடங்களாகத் தோன்றியதா அல்லது சில மணி நேரமாக அனுபவமானதா? மகிழ்ச்சியாக இருந்தார்களா அல்லது கடின உழைப்பு அனுபவமானதா? அது போல் ஸ்தூல முயற்சியின் சோதனையும் கூட நன்றாகவே வந்தது. எங்கே பெருமிதத்துடன் வளர்பவர்கள் மற்றும் எங்கே சாண உருண்டையும் செய்ய வைத்தார், மெக்கானிக்காகவும் உருவாக்கினார்! செருப்புக் கூடத் தைக்க வைத்தார். துப்புரவு பணியாளரகவும் ஆக்கினார் இல்லையா? தோட்டக்காரனாகவும் ஆக்கினார் ஆனால் கடின உழைப்பாக இருந்ததா, மகிழ்ச்சியின் அனுபவம் இருந்ததா? அனைத்தையும் கடந்து சென்றார், ஆனால் சதா மகிழ்ச்சியான வாழ்க்கையின் அனுபவம் இருந்தது. யார் குழப்பமடைந்தார்களோ, அவர்கள் ஓடிப் போனார்கள். யார் மகிழ்ச்சியில் இருந்தார்களோ, அவர்கள் அநேகரை மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவம் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போதும் அதே 14 வருடங்களைத் திரும்பவும் கொண்டு வந்தால் அதில் உங்களுக்கு விருப்பம் தான் இல்லையா? இப்போதோ சென்டரில் கொஞ்சம் ஸ்தூல காரியம் செய்ய வேண்டி இருந்தாலும் யோசிக்கின்றனர் --இதற்காக சந்நியாசம் செய்தோமா, இந்த வேலை செய்வதற்குத் தான் நாம் இருக்கிறோமா? மகிழ்ச்சியில் வாழ்க்கையை வாழ்வது --இதைத் தான் பிராமண வாழ்க்கை எனச் சொல்வது. ஸ்தூலமான சாதாரண காரியமாக இருந்தாலும் சரி, ஆயிரம் பேர் உள்ள சபைக்கு நடுவில் ஸ்டேஜ் மீது பேச வேண்டி இருந்தாலும் சரி,

இரண்டையுமே மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும். இது தான் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வது எனச் சொல்லப்படும். குழம்பக் கூடாது --நாமோ புரிந்து கொள்ளாமல் இருந்தோம் --சமர்ப்பணமாவது என்றால் இவையனைத்தையும் செய்ய வேண்டியதிருக்கும், நானோ டீச்சர் ஆகி வந்திருக்கிறேன், ஸ்தூல காரியம் செய்வதற்காக சந்நியாசம் செய்யவில்லை, பிரம்மா குமாரி வாழ்க்கை என்றால் இப்படித் தான் இருக்குமா? -இதைத் தான் குழப்பத்தில் வருகிற வாழ்க்கை எனச் சொல்வது.

பிரம்மா குமாரி ஆவது என்றால் மன மகிழ்ச்சியில் இருப்பதாகும், ஸ்தூல மகிழ்ச்சியில் அல்ல. மனதின் மகிழ்ச்சி மூலம் எந்த ஒரு பிரச்சனைகளிலும், எந்த ஒரு காரியத்திலும் குழப்பத்தை மகிழ்ச்சியாக மாற்றி விடுவார்கள். மேலும் மனதால் குழம்புகிறவர்கள் சிரேஷ்ட சாதனங்கள் இருந்தாலும், தெளிவான விˆயம் இருந்தாலும் சதா சுயம் குழப்பத்தில் இருக்கும் காரணத்தால் தெளிவான விˆயத்தையும் கூடக் குழப்பி விடு வார்கள். நல்ல சாதனங்கள் இருந்த போதிலும் சாதனங்களில் இருந்து அவர்களால் மகிழ்ச்சி பெற முடியாது. இது எப்படி ஆகும், இப்படி இல்லை, அப்படி ஆகும் -இதில் தானும் குழம்புவார்கள், மற்றவர்களையும் குழப்பி விடுவார்கள். சொல்கிறார்கள் இல்லையா -நூல் சிக்கிக் கொண்டால் சிக்கலை விடுவிப்பது கஷ்டம். நல்ல விˆயத்திலும் குழம்புவார்கள் என்றால் பயமுறுத்தக் கூடிய விˆயத்திலும் குழம்புவார்கள். ஏனென்றால் உள்ளுணர்வு குழம்பிப் போய் இருக்கிறது. மனம் குழம்பிப் போய் இருக்கிறது என்றால் தானாகவே உள்ளுணர்வின் பிரபாவம் திருஷ்டி மீதும், திருஷ்டியின் காரணத்தால் சிருஷ்டியும் கூடக் குழம்பியதாகவே தெரியும். பிரம்மா குமாரி வாழ்க்கை என்றால் பிரம்மாபாபாவுக்கு சமமாக மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை ஆனால் இதற்கு ஆதாரம் -சகிப்புத்தன்மை. ஆக, சகிப்புத்தன்மைக்கு இவ்வளவு விசேˆதா உள்ளது. இந்த விசேˆதாவின் காரணத்தால் தான் பிரம்மாபாபா சதா ஆடாத, அசையாத நிலையில் இருந்தார்.

இரண்டு விதமான சகிப்புத்தன்மைக்கான சோதனை பற்றிச் சொல்லியிருக்கிறோம். முதல் பேப்பர் -மனிதர்கள் மூலமாக அவச்சொல் அல்லது கொடுமை. இரண்டாவது -யக்ஞத்தின்

ஸ்தாபனையில் வந்துள்ள பலவித விக்னங்கள். மூன்றாவது -அநேக பிராமணக் குழந்தைகள் மூலமாகவும் துரோகியாவது அல்லது சிறிய-பெரிய வி˜யங்களில் திருப்தியின்மையை எதிர்கொள்வது ஆனால் இதிலும் கூட சதா திருப்தியின்மையை திருப்திப்படுத்தும் பாவனை மூலம் அவர்கள் வேறு வசமாக உள்ளனர் என்பதைப் புரிந்து, சதா நன்மையின் பாவனை மூலம் சகிப்புத்தன்மையின் அமைதி சக்தி மூலம் ஒவ்வொருவரையும் முன்னேறச் செய்தார். யார் இன்று எதிர்க்கிறார்களோ, அவர்கள் நாளை மன்னிப்பு வேண்டுகிறார்கள் என்றால் அவர்களின் வாயிலிருந்தும் இதே வார்த்தை வெளிப்படும் --பாபா என்றால் பாபா தான்! இது தான் சகிப்புத்தன்மை மூலம் ஃபெயிலைப் பாஸ் ஆக்கி விக்னங்களைக் கடந்து செல்வதாகும். ஆக, இரண்டாவது அடி பற்றிக் கேட்டீர்கள். எதற்காக? அடி மீது அடி வையுங்கள். இதைத் தான் தந்தையைப் பின்பற்றுவது, அதாவது தந்தைக்கு சமமாக ஆவது எனச் சொல்வது. அது போல் ஆக வேண்டுமா அல்லது தூரத்திலிருந்தே பார்க்க வேண்டுமா? தைரியசாலிகள் இல்லையா? பஞ்சாப், மகாராஷ்ட்டிரா இருவருமே தைரியசாலிகள். அனைவரும் தைரியசாலிகள். இந்த தேசம் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த அனைவரும் தங்களை மகாவீர் எனச் சொல்லிக் கொள்கின்றனர். யாரையாவது காலாட்படை என்றால் ஏற்றுக் கொள்வார்களா? இதிலிருந்து தெளிவாகிறது --அனைவரும் தங்களை மகாவீர் எனப் புரிந்து கொண்டுள்ளனர். மகாவீர் என்றால் பாபாவுக்கு சமமாக ஆவது. புரிந்ததா? நல்லது.

இந்த தேசத்திலும் வெளிதேசங்களிலும் உள்ள பாபாவுக்கு சமமான, சதா புத்தி மூலம் சமர்ப்பணமாகியுள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும், சதா ஒவ்வொரு பரிஸ்திதியிலும் ஒவ்வொரு மனிதரிடமும் சகிப்புத்தன்மை உள்ளவராகி, ஒவ்வொரு பெரிய பிரச்சினையையும் சிறியதாக்கி சுலபமாகக் கடந்து செல்லக் கூடிய, சதா விஸ்தாரத்தை சார ரூபத்தில் கொண்டுவரக் கூடிய, சதா பிராமண வாழ்க்கையை மகிழ்ச்சியின் வாழ்க்கையாக வாழக்கூடிய, அத்தகைய பாபாவுக்கு சமமாக ஆகக்கூடிய மகாவீர் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் சமான் பவ (சமமாக ஆகுக) என்ற சிநேகம் நிறைந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு -குமார்களுடன்: குமார்களின் விசேஷதா என்ன?** குமார் வாழ்க்கை சிரேஷ்டமான வாழ்க்கை. ஏனென்றால் பவித்திர வாழ்க்கை மற்றும் எங்கே பவித்திரதா உள்ளதோ, அங்கே மகான் தன்மை உள்ளது. குமார் என்றால் சக்திசாலி. என்ன சங்கல்பம் செய்கிறார்களோ, அதைச் செய்ய முடியும். குமார் என்றால் சதா பந்தன்முக்த்தாக இருக்கக்கூடிய மற்றும் மற்றவர்களையும் ஆக்கக்கூடியவர்கள். அந்த மாதிரி விசேˆதாக்கள் உள்ளன இல்லையா? என்ன சங்கல்பம் செய்கிறீர்களோ, அதைக் கர்மத்திலும் கொண்டு வர முடியும். தானும் பவித்திரமாக இருந்து, மற்றவர்களுக்கும் பவித்திரமாக இருப்பதற்கான மகத்துவத்தைச் சொல்ல முடியும். அந்த மாதிரி சேவைக்கு நிமித்தமாக ஆக முடியும். உலகத்தினர் எதை முடியாதது எனப் புரிந்து கொண்டுள்ளனரோ, அதை பிரம்மா குமார்கள் சவால் விடுக்கின்றனர் -ஆக, எங்களைப் போல் யாரும் பாவனமாக இருக்க முடியாது. ஏன்? ஏனென்றால் அது போல் ஆக்குபவர் சர்வசக்திவான். உலகத்தினர் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் சரி, உங்களைப் போல் பாவனமாக முடியாது. நீங்கள் சுலபமாகவே பாவனமாகி விட்டீர்கள். சுலபமாக உள்ளது இல்லையா? அல்லது உலகத்தினர் எப்படிச் சொல்கிறார்கள் --இது இயற்கைக்குப் புறம்பானது (ன்ய்ய்ஹற்ன்ழ்ஹப்) --அந்த மாதிரி தோன்றுகிறதா? குமார் என்பதன் அர்த்தமே சவால் விடுபவர்கள், மாற்றம் செய்து காட்டுபவர்கள், முடியாததைச் செய்து காட்டுபவர்கள். உலகத்தினர் தங்கள் துணையிலிருப்பவர்களை சங்கதோˆத்தில் கொண்டு செல்கின்றனர். நீங்கள் பாபாவின் சங்கத்தில் கொண்டு வருகிறீர்கள். அவர்களை உங்களுடைய சகவாசத்தில் கொண்டு வருவதில்லை, பாபாவின் சங்கத்தினுடைய நிறத்தை அவர்கள் மீது படியச் செய்கிறீர்கள். பாபாவுக்கு சமமாக ஆக்குகிறீர்கள். அப்படித் தான் இல்லையா? நல்லது.

2. குமார் என்றால் சதா ஆடாத, அசையாத, எந்த ஒரு பரிஸ்திதி (பாதகமான சூழ்நிலை) வந்தாலும் மேலே-கீழே ஆகிறவர் இல்லை. ஏனென்றால் உங்கள் துணைவர் சுயம் தந்தை. எங்கே தந்தை இருக்கிறாரோ, அங்கே சதா ஆடாத, அசையாதவராக இருப்பார்கள். எங்கே சர்வசக்திவான் இருக்கிறாரோ, அங்கே சர்வ சக்தி களும் இருக்கும். சர்வ சக்திகளின் முன்னால் மாயா எதுவும் செய்ய முடியாது. அதனால் குமார் வாழ்க்கை என்றால் சதா ஏக்ரஸ் ஸ்திதி உள்ளவர்கள்,

குழப்பத்தில் வருபவர்கள் இல்லை. யார் குழப்பத்தில் வருகிறாரோ, அவர் அவிநாசி ராஜ்ய பாக்கியத்தையும் அடைய முடியாது. கொஞ்சம் சுகம் கிடைக்கும் ஆனால் சதா காலத்துக்கும் இருக்காது. ஆகவே குமார் வாழ்க்கை என்றால் சதா அசையாத, ஒரே சீரான நிலையில் நிலைத்திருப்பவர்கள். ஆக, ஏக்ரஸ் ஸ்திதி இருக்கிறதா அல்லது மற்ற ரசனைகளில் புத்தி செல்கிறதா? அனைத்து ரசனைகளையும் ஒரு பாபாவிடம் அனுபவம் செய்பவர்கள் தாம் ஏக்ரஸ் அதாவது ஆடாத, அசையாதவர் எனச் சொல்லப்படுவார்கள். அந்த மாதிரி ஏக்ரஸ் ஸ்திதி உள்ள குழந்தை தான் பாபாவுக்கு அன்பானவர் ஆகிறார். ஆகவே இதையே சதா நினைவு வைக்க வேண்டும் -நாம் ஆடாத, அசையாத ஆத்மாக்கள் ஏக்ரஸ் ஸ்திதியில் இருப்பவர்கள்.

**தாய்மார்களுடன்: 1)** மாதர்களுக்காக சகஜ மார்கம் என்ன சொல்லியிருக்கிறார், அதன் மூலம் சகஜமாகவே பாபாவின் நினைவை அனுபவம் செய்ய முடியும், கடின உழைப்பு தேவைப்படாது? நினைவையும் சகஜமாக்கக் கூடிய சாதனம் என்ன? மனதார சொல்லுங்கள் --என்னுடைய பாபா. எங்கே என்னுடையவர் எனச் சொல்கிறீர்களோ, அங்கே சகஜமாக நினைவு வரும். நாள் முழுவதும் எது என்னுடையதோ, அது சகஜமாக நினைவு வருகிறது இல்லையா? எதுவும் என்னுடையது என்றால், மனிதராக இருக்கலாம், பொருளாக இருக்கலாம் எங்கே என்னுடையது உள்ளதோ, அதே தான் நினைவு வரும். ஆக, பாபாவை நினைவு செய்வதற்கான சகஜமான வழி --மனதார என்னுடைய பாபா எனச் சொல்லுங்கள். சும்மா வாயினால் என்னுடைய-என்னுடைய என்று சொல்லக் கூடாது. உரிமையுடன் சொல்ல வேண்டும். இதே சகஜ புருஷார்த்தம் செய்து முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். சதா இந்த விதி மூலம் சகஜயோகி ஆகுங்கள். என்னுடையவர் எனச் சொல்லுங்கள் மற்றும் பாபாவின் கஜானாக்களுக்கு மாலிக் ஆகுங்கள்.

2) மாதர்கள் சதா தங்களைப் பத்மாபதம் பாக்கியவான் என உணர்ந்திருக்கிறீர்களா? வீட்டில் அமர்ந்தவாறு பாபா கிடைத்து விட்டார் என்றால் எவ்வளவு பெரிய பாக்கியம்! உலகத்தினர் பாபாவைத் தேடுவதற்காக வெளியில் செல்கின்றனர், ஆனால் உங்களுக்கு வீட்டில் அமர்ந்தவாறே கிடைத்து விட்டார். ஆக, இவ்வளவு பெரிய பாக்கியம்

கிடைக்கும் என்று எப்போதாவது சங்கல்பத்திலாவது நினைத்திருப்பீர்களா? வீட்டில் அமர்ந்தவாறே பகவான் கிடைத்து விட்டார் என்ற பாடல் யாருக்காகச் சொல்லப் பட்டது? உங்களுக்காகத் தான் இல்லையா? ஆக, இந்த சிரேஷ்ட பாக்கியத்தையே ஸ்மிருதியில் வைத்து முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். ஆஹா எனது சிரேஷ்ட பாக்கியம்! --இந்தக் குஷியின் பாடலைப் பாடிக் கொண்டே இருங்கள். குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். குஷியில் நடனமாடுங்கள், பாடுங்கள்.

3) சக்திகளுக்கு சதா எந்த ஒரு குஷி இருக்கிறது? சதா பாபாவுடன் இணைந்திருக்கிறேன். சிவசக்தி என்பதன் அர்த்தமே இணைந்திருப்பது தான். பாபா மற்றும் நீங்கள் -இருவரையும் சேர்த்து சிவசக்தி எனச் சொல்கின்றனர். ஆக, எது இணைந்திருக்கிறதோ, அதை யாராலும் தனியாகப் பிரிக்க முடியாது. அத்தகைய குஷி இருக்கிறதா? பலமற்ற ஆத்மாவை பாபா சக்தியாக ஆக்கியிருக்கிறார். ஆக, இதையே சதா நினைவு வையுங்கள் -நாம் இணைந்திருப்பதற்கு அதிகாரி ஆகி விட்டோம். முதலில் தேடுபவர்களாக இருந்தோம். இப்போது கூடவே இருப்பவர்களாகி விட்டோம் -இந்த நஷா சதா இருக்கட்டும். எவ்வளவு தான் மாயா முயற்சி செய்தாலும் சிவசக்திக்கு முன்னால் மாயாவினால் எதுவும் செய்ய முடியாது. தனியாக இருப்பீர்களானால் மாயா வருகிறது. இணைந்திருப்பீர்களானால் மாயா வர முடியாது. ஆகவே இதே வரதானத்தை சதா நினைவு வையுங்கள் -நாம் இணைந்திருக்கும் சிவசக்திகள், வெற்றியாளர்கள்.

**வரதானம்: குழப்பமடைவதற்கு பதிலாக தளர்வான (லூஸ்) இணைப்பைச் சரி செய்யக்கூடிய, பிரச்சினைகளில் இருந்து விடுபட்டவர் ஆகுக!**

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணம் இணைப்பில் தளர்வு (இறுக்கமற்ற தன்மை) இருப்பது தான். இணைப்பை மட்டும் சரி செய்து விட்டீர்களானால் சர்வசக்திகள் உங்களுக்கு முன்னால் சுற்றி வரும். தொடர்பை இணைப்பதில் ஓரிரு நிமிடங்கள் ஆகுமானால் தைரியத்தை இழந்து குழப்பமடைந்து விடாதீர்கள். நிச்சயத்தின் அஸ்திவாரத்தை அசைக்காதீர்கள். நான் பாபாவுடையவன், பாபா என்னுடையவர் -இந்த

ஆதாரத்தின் மூலம் அஸ்திவாரத்தைப் பக்கா ஆக்குவீர்களானால் பிரச்சினையிலிருந்து விடுபட்டவர் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: விதை வடிவ (பீஜ்ரூப) ஸ்திதியில் நிலைத்திருப்பது தான் பழைய சம்ஸ்காரங்களை மாற்றுவதற்கான விதியாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 03.02.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரம்மா தாய்-தந்தைக்கு தனது பிராமணக் குழந்தைகளின் மீது இரண்டு சுப விருப்பங்கள்!

இன்று உலகின் அனைத்து ஆத்மாக்களின் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றக் கூடிய பாப்தாதா தனது ஆன்மீக சுப ஆசைகளை தீபங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். எவ்வாறு தந்தை அனைவரின் சுப ஆசைகளையும் நிறைவேற்றக் கூடியவராக இருக்கின்றாரோ, குழந்தைகளும் தந்தையின் சுப ஆசைகளை நிறைவேற்றக் கூடியவர்கள். தந்தை குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றுகின்றார், குழந்தைகள் தந்தையின் ஆசைகளை நிறைவேற்றுகின்றனர். தந்தைக்கு குழந்தைகளின் மீது எந்த ஆசை இருக்கிறது என்பதை அறிவீர்கள் அல்லவா? ஒவ்வொரு பிராமண ஆத்மா தந்தையின் ஆசை தீபமாக இருக்கின்றனர். தீபம் என்றால் சதா சுடர் விடும் ஜோதி. சதா எரிந்து கொண்டிருக்கும் தீபம் பிரியமானதாக இருக்கும். அடிக்கடி மங்களாக எரியும் தீபமாக இருந்தால் எப்படி இருக்கும்? தந்தையின் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றக் கூடியவர்கள் அதாவது சதா எரிந்து கொண்டிருக்கும் தீபங்களைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார்.

இன்று பாப்தாதா தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். பாப்தாதாவின் எதிரில் சதா யார் இருக்கின்றனர்? குழந்தைகள் இருக்கின்றனர் அல்லவா! ஆக உரையாடலும் குழந்தைகளைப் பற்றித் தான் செய்வார்கள் அல்லவா! சிவதந்தை பிரம்மாவிடம் கேட்டுக் கொண்டிருந்தார் -குழந்தைகளிடம் இன்று வரை ஏதாவது சுப ஆசைகள் இருக்கின்றதா? பிரம்மாபாபா கூறினார் -குழந்தைகள் வரிசைக்கிரமமாக தங்களது சக்திக்கேற்ப, கவனத்திற்கேற்ப சதா தந்தையின் சுப ஆசைகளை நிறைவேற்றுவதில் அவசிம்

ஈடுபட்டிருக்கின்றனர். ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஊக்கம், உற்சாகம் அவசியம் இருக்கிறது. தந்தை நமது அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றி இருக்கின்றார் எனில் நாமும் தந்தையின் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றி காண்பிப்போம் ஆனால் செய்து காட்டுவதில் வரிசைக்கிரமம் ஆகி விடுகின்றனர். நினைப்பது மற்றும் செய்து காட்டுவது -இதில் வேறுபாடு ஏற்பட்டு விடுகிறது. சில குழந்தைகள் நினைப்பது மற்றும் செய்து காட்டுவது -இதில் சமமாக இருக்கின்றனர் ஆனால் அனைவரும் இவ்வாறு கிடையாது. எந்த நேரத்தில் தந்தையின் அன்பு மற்றும் தந்தை எப்படிப் பட்டவராக ஆக்கியிருக்கின்றார்! மேலும் என்ன கொடுத்திருக்கின்றார் என்று தந்தையின் மூலம் அடைந்த பிராப்திகளை நினைவில் கொண்டு வருகிறார்களோ, அப்போது அன்புச் சொரூபமாக இருக்கின்ற காரணத்தினால் அதிக ஊக்கம், உற்சாகத்தில் பறக்கின்றனர் -தந்தை என்ன கூறினாரோ அதை நான் செய்து காட்டுவேன் ஆனால் சேவை மற்றும் குழுவின் தொடர்பில் வரும் போது அதாவது நடைமுறையில் காரியத்தில் செய்யும் போது சில நேரம் சங்கல்பம் மற்றும் செயல் சமமாக ஆகி விடுகிறது அதாவது அதே ஊக்கம்-உற்சாகம் இருக்கிறது, சில நேரங்களில் காரியத்தில் வரும் போது குழுவின் சன்ஸ்காரம் அல்லது மாயை அல்லது இயற்கையின் மூலம் வரக் கூடிய சூழ்நிலைகள் என்ற பேப்பர் கஷ்டத்தின் அனுபவம் ஏற்படுத்துகிறது. ஆகையால் அன்பினால் ஏற்பட்ட ஊக்கம்-உற்சாகம் சூழ்நிலைகளின் காரணத்தினால், சன்ஸ்காரத்தின் காரணத்தினால் செய்யும் போது வித்தியாசத்தை ஏற்படுத்தி விடுகிறது. பிறகு இது இல்லாமல் இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நினைக்கின்றனர். ஒருவேளை மற்றும் ஆனால் என்ற சக்கரத்தில் வந்து விடு கின்றனர். இப்படித் தான் நடந்திருக்க வேண்டும், ஆனால் இவ்வாறு ஆகி விட்டது. அதனால் தான் இது நடந்தது -என்ற ஒருவேளை, ஆனால் என்ற சக்கரத்தில் வந்து விடுகின்றனர். ஆகையால் ஊக்கம், உற்சாகத்தின் சங்கல்பம் மற்றும் நடைமுறை செய-ல் வேறுபாடு ஏற்பட்டு விடுகிறது.

பிரம்மாபாபா குழந்தைகளின் மீது விசேஷமாக இரண்டு ஆசைகளைப் பற்றி கூறிக் கொண்டிருந்தார். ஏனெனில் பிரம்மா தன் கூடவே அழைத்து செல்ல வேண்டும் மற்றும் கூடவே இருக்கவும் வேண்டும். சிவ தந்தை கூடவே அழைத்துச் செல்லக் கூடியவர், இராஜ்யத்தில்

அல்லது முழு கல்பத்தில் கூடவே இருக்கமாட்டார். இவர் சதா கூடவே இருக்கக் கூடியவர், அவர் சாட்சியாக பார்க்கக் கூடியவர். வித்தியாசம் இருக்கிறது அல்லவா! பிரம்மாபாபாவிற்கு குழந்தைகளின் மீது சதா சமம் ஆக்கக் கூடிய சுப ஆசைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாப்தாதா இருவரும் பொறுப்பாளிகளாக இருந்தாலும், சாகாரத்தில் படைப்பவர் பிரம்மா ஆவார். ஆகையால் சாகார படைப்பிற்கு சாகார படைப்புகளின் மீது தானாகவே அன்பு இருக்கிறது. முன்பே கூறியிருந்தேன் அல்லவா -குழந்தைகள் தாய்-தந்தை இருவருக்கும் உடையவர்கள், ஆனாலும் தாயின் விசேஷ அன்பு குழந்தைகள் மீது இருக்கும். ஏனெனில் பாலனைக்கு நிமித்தமாக தாய் ஆகின்றார். தந்தைக்குச் சமமாக ஆக்குவதற்கு நிமித்தமாக தாய் இருக்கின்றார். ஆகையால் தாய்க்கு பற்று என்று கூறப்படுகிறது. இது சுத்தமான பற்றுதல் ஆகும், மோகத்தினுடையது அல்ல, விகாரத்திற்கானது அல்ல. எங்கு மோகம் இருக்கிறதோ -அதை ஆன்மீக பெருமை என்று கூறினாலும் சரி, அன்பு என்று கூறினாலும் சரி -அது இருந்தால் தாய்க்கு குழந்தைகளின் பெருமை ஏற்படுமே தவிர குழப்பம் ஏற்படாது. ஆக பிரம்மாவை தாய் என்றும் கூறலாம், தந்தை என்றும் கூறலாம் -இரண்டு ரூபத்திலும் குழந்தைகளுக்காக விசேஷமாக எந்த ஆசை வைத்திருக்கின்றார்? ஒன்று தந்தையின் மீது, மற்றொன்று பிராமண குடும்பத்தின் மீது சுப ஆசை இருக்கிறது. தந்தையின் மீது சுப ஆசை என்னவெனில் எவ்வாறு பாப்தாதா சாட்சியாகவும் இருக்கின்றார் மற்றும் துணையாகவும் இருக்கின்றார், அவ்வாறு பாப்தாதாவிற்குச் சமம் சாட்சி மற்றும் துணை -நேரத்திற்குத் தகுந்தாற் போன்று இரண்டு பாகமும் சதா நடிக்கக் கூடிய மகான் ஆத்மா ஆக வேண்டும். ஆக தந்தையின் மீது சுப ஆசை என்னவெனில் பாப்தாதாவிற்குச் சமமாக சாட்சி, துணை ஆக வேண்டும்.

ஒரு விசயத்தில் பாப்தாதா இருவரும் குழந்தைகளிடம் முழு திருப்தியாக இருக்கின்றனர். அது என்ன? ஒவ்வொரு குழந்தையும் பாப்தாதாவின் மீது நன்றாக அன்பு வைத்திருக்கின்றனர். பாப்தாதாவின் அன்பு ஒரு போதும் துண்டிக்கப்படுவது கிடையாது. மேலும் அன்பின் காரணத்தினால் தான் சக்திசாலியாக இயன்ற அளவு முன்னேறிக் கொண்டும் இருக்கிறீர்கள். பிராமண ஆத்மா என்ற முத்தாக ஆகி அன்பு என்ற நூலில் அவசியம் கட்டப்பட்டு இருக்கிறீர்கள். அன்பு என்ற நூல்

உறுதியாக இருக்கிறது, அதை துண்டிக்க முடியாது. அன்பு மாலை நீளமாக இருக்கிறது, வெற்றி மாலை சிறியதாக இருக்கிறது. பாப்தாதாவின் அன்பிற்கு சமர்ப்பணமும் ஆகின்றனர். ஒருவர் எவ்வளவு தான் தந்தையின் அன்பிலிருந்து பிரிக்க விரும்பினாலும், பிரிக்கவே முடியாது, அந்த அளவிற்கு அன்பில் கட்டப்பட்டு இருக்கிறீர்கள். அனைவரின் உள்ளத்திலும் அன்பான என்னுடைய பாபா என்ற சப்தம் வெளிப்படுகிறது. ஆக அன்பு என்ற மாலையில் திருப்தியாக இருக்கின்றார் ஆனால் பாப்சமான் சக்திசாலி, ஒருவேளை, ஆனால் என்ற சக்கரத்திலிருந்து விடுபடுவது -இதில் சதா சக்திசாலியாக ஆவதற்குப் பதிலாக இயன்ற அளவிற்கு இருக்கிறீர்கள். இதில் பாப்தாதா பாப்சமான் சதா சக்திசாலி ஆவதற்கான சுப ஆசை அனைத்து குழந்தைகளின் மீது வைக்கின்றார். எங்கு சாட்சியாக ஆக வேண்டுமோ, அங்கு சில நேரங்களில் துணையாக ஆகி விடுகிறீர்கள். மேலும் எங்கு துணையாக இருக்க வேண்டுமோ, அங்கு சாட்சியாகி விடுகிறீர்கள். நேரத்திற்கேற்ப இரண்டையும் கடைபிடிக்க வேண்டும் -இது தான் பாப்சமான் என்று கூறப்படுகிறது. அன்பு மாலை தயாராக இருக்கிறது ஆனால் வெற்றி மாலை அதே அளவிற்கு தயாராக வேண்டும் என்ற சுப ஆசை பாப்தாதா வைக்கின்றார். 108-மட்டுமா என்ன! பாப்தாதா திறந்த மனதுடன் கூறுகின்றார் -எவ்வளவு வெற்றி அடைய வேண்டுமோ அந்த அளவிற்கு வெற்றி மாலையை உருவாக்க முடியும். 108-என்று எல்லைக்கு உட்பட்டும் வராதீர்கள். எண்ணிக்கை 108-தான், நாம் அதில் வர முடியாது -இது போன்று விசயம் எதுவும் கிடையாது. ஆகுங்கள்!

வெற்றியாளர் ஆவதற்கு சமநிலையுடன் இருப்பது அவசியமாகும். நினைவு மற்றும் சேவையில் சமநிலை என்பது கேட்டுக் கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் நினைவு மற்றும் சேவையில் சமநிலை விரும்பினாலும் ஏன் இருப்பது கிடையாது? புரிந்திருந்தாலும் கூட காரியத்தில் ஏன் வருவது கிடையாது? அதற்கு மற்றொரு விசயத்தில் சமநிலையுடன் இருப்பது அவசியமாக இருக்கிறது. அந்த சமநிலை தான் பிரம்மாபாபாவின் இரண்டாவது ஆசையாகும். தந்தையின் முதல் ஆசை -சமம் ஆக வேண்டும் என்பதாகும். குடும்பத்திற்கான இரண்டாவது ஆசை -ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் மீதும் சுப பாவனை-சுப விருப்பம் என்பது செயலில் இருக்க வேண்டும்.

சங்கல்பத்தின் அளவில் அல்லது விருப்பத்தின் அளவில் இருக்கக் கூடாது. விருப்பம் இருக்கிறது, சுப பாவணை வைக்க வேண்டும் என்று தான் விரும்புகின்றேன், ஆனால் காரியத்தில் வரும் போது மாறி விடுகிறது என்று சிலர் கூறுகின்றனர். இதற்கான விரிவான விளக்கம் முன்பே கூறியிருக்கின்றேன். பரிவாரத்தின் மீது சதா சுப பாவனை, சுப விருப்பம் ஏன் இருப்பது கிடையாது, இதற்கான காரணம் என்ன? எவ்வாறு தந்தையின் மீது உள்ளப்பூர்வமான அன்பு இருக்கிறதோ, ஆத்மார்த்த அன்பு இருக்கிறதோ, ஆத்மார்த்த அன்பின் அடையாளம் உறுதியாக இருப்பதாகும். தந்தையைப் பற்றி யாராவது எவ்வளவு தான் முரண்பட்ட கருத்துக்களைக் கூறினாலும் அல்லது யாராவது உங்களிடம் ஏதாவது விசயங்களைக் கூறினாலும் அல்லது சாகாரத்தில் சுயம் தந்தை சில குழந்தைகள் முன்னேறுவதற்கு ஏதாவது கட்டளை அல்லது அறிவுரைகள் கொடுத்தாலும், எங்கு அன்பு இருக்கிறதோ, அங்கு அறிவுரை அல்லது மாற்றத்திற்கான கட்டளை ஒருபோதும் கருத்து வேறுபாடுகளை உருவாக்காது. பாபா என்ன கூறுகின்றாரோ அதில் நன்மை இருக்கிறது என்ற பாவணை சதா இருக்கும். அன்பில் ஒருபோதும் குறை ஏற்படாது. மேலும் தன்னை தந்தையின் உள்ளத்தின் நெருக்கத்தில் இருப்பதாக புரிந்து கொள்வர் -இது தன்னுடையவருக்கான அன்பாகும். இதைத் தான் உள்ளப்பூர்வமான, ஆத்மார்த்த அன்பு. இது தான் பாவணையை மாற்றி விடுகிறது. தந்தையின் மீதான அன்பின் அடையாளம் -சதா தந்தை கூறினார், நான் சரி என்று கூறினேன். அதே போன்று பிராமணப் பரிவாரத்திலும் சதா இப்படிப்பட்ட உள்ளப்பூர்வமான அன்பு இருக்க வேண்டும், பாவணையை மாற்றக் கூடிய விதி இருக்க வேண்டும், அப்போது தான் தந்தை மற்றும் பரிவாரத்தின் அன்பு சமநிலை, நினைவு மற்றும் சேவையில் சமநிலை தானாகவே நடை முறையில் தென்படும். ஆக தந்தையின் மீது அன்பு என்ற தராசுத் தட்டு எடை அதிகமாக இருக்கிறது ஆனால் அனைத்து பிராமணப் பரிவாரத்தின் அன்பு என்ற தராசுத் தட்டின் எடை மாறிக் கொண்டே இருக்கிறது. சில நேரங்களில் எடையுடன், சில நேரங்களில் இலேசாகி விடுகிறது. சிலர் மீது எடையுடன், சிலர் மீது இலேசாக இருக்கிறது. இந்த தந்தை மற்றும் குழந்தைகளின் அன்பில் சமநிலையுடன் இருக்க வேண்டும் -இது பிரம்மாபாபாவின் இரண்டாவது சுப ஆசையாகும். புரிந்ததா? இதில் பாப்சமான் ஆகுங்கள்.

அன்பு என்பது அப்படிப்பட்ட உயர்ந்த நிலையாகும், இதில் நீங்கள் செய்திருந்தாலும் அல்லது மற்றவர்கள் செய்திருந்தாலும் இருவருக்கும் சமமாக குஷியின் அனுபவம் ஏற்படும். பாப்தாதா ஸ்தாபனைக்கான காரியத்திற்கு நிமித்தம் ஆனார், ஆனால் குழந்தைகளை எப்போது சேவையின் பொருட்டு துணையாக ஆக்கிக் கொண்டாரோ, ஒருவேளை நடைமுறையில் குழந்தைகள் தந்தையை விட அதிகமாக சேவை செய்கின்றனர், செய்து கொண்டிருக்கின்றனர் எனில் குழந்தைகள் சேவையில் முன்னேறுவதை அன்பின் காரணத்தினால் பாப்தாதா குஷியடைகின்றார். குழந்தைகள் சேவையின் ஏன் முன்னால் செல்ல வேண்டும்? நான் தான் நிமித்தமாக இருக்கின்றேன், நான் தான் இவரை நிமித்தமாக ஆக்கியிருக்கின்றேன் என்ற சங்கல்பம் உள்ளப்பூர்வமான அன்புடையவர்களிடம் வர முடியாது. ஒருபோதும் கனவிலும் கூட இந்த பாவணை உருவாகவில்லை. இதைத் தான் உண்மையான அன்பு, சுயநலமற்ற அன்பு, ஆன்மீக அன்பு என்று கூறப்படுகிறது. சதா குழந்தைகளை முன்நிறுத்தி நிமித்த மாக்குவதில் மகிழ்ச்சியடைந்தார். குழந்தைகள் செய்தால் என்ன!, தந்தை செய்தால் என்ன! நான் என்பது இல்லை. எனது காரியம், எனது கடமை, எனது அதிகாரம், என்னுடைய புத்தி, என்னுடைய திட்டம் -கிடையாது. அன்பு என்பது இந்த எனது என்பதை அழித்து விடுகிறது. நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்றால் அது நான் செய்தது போன்று, நான் செய்திருக்கின்றேன் எனில் அது நீங்கள் செய்தது போன்று என்ற இந்த சுப பாவணை அல்லது சுப விருப்பம் தான் உள்ளப்பூர்வமான அன்பு என்று கூறப்படுகிறது. அன்பில் ஒருபோதும் தனது அல்லது மற்றவர்களுடையது என்று தோன்றாது. அன்பானவர்களின் வார்த்தை சாதாரணமாகவும் இருக்கலாம், விவாதத்திற்கான வார்த்தைகளாகவும் இருக்கலாம், ஆனால் மனஅழுத்தம் ஏற்படுத்தாது. இவர் இதை ஏன் கூறினார்? என்ற மன அழுத்தம் ஏற்படாது. அன்பானவர் அன்பான ஆத்மாவின் மீது அனுமானம் செய்ய மாட்டார் -இவ்வாறு இருக்கும், இது நடக்கும். அன்பானவர் மீது சதா நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால் அவரது சாதாரண வார்த்தையும் இவர் ஏதோ ஒரு காரணத்தினால் தான் கூறியிருக்கின்றார் என்று தோன்றும். காரணமற்றதாக, வீணானதாகத் தோன்றாது. எங்கு அன்பு இருக்குமோ, அங்கு அவசியம் நம்பிக்கை

இருக்கும். அன்பு இல்லையெனில் நம்பிக்கையும் இருக்காது. ஆக பிராமண பரிவாரத்தின் மீது அன்பு மற்றும் நம்பிக்கையுடன் இருப்பது -இது தான் பிரம்மாபாபாவின் இரண்டாவது ஆசையை நிறைவேற்றுவதாகும். தந்தையின் மீது அன்பு என்பதற்கு பாப்தாதா சான்றிதழ் கொடுத்திருக்கின்றார், அதே போன்று பிராமண பரிவாரத்தின் மீதும், அன்பிற்கான விதி கூறியது போன்று அந்த விதியை நடைமுறை காரியத்தில் கொண்டு வர வேண்டும் -இந்த சான்றிதழும் அடைய வேண்டும். இந்த சமநிலை தேவை. எந்த அளவிற்கு தந்தையின் மீது இருக்கிறதோ அந்த அளவிற்கு குழந்தைகளின் மீது இருக்க வேண்டும் -இந்த சமநிலை இல்லாத காரணத்தினால் சேவையில் முன்னேறும் போது சேவையில் மாயை வருகிறது என்று நீங்களே சுயம் கூறுகிறீர்கள். மேலும் சில நேரங்களில் சூழ்நிலைகளைப் பார்த்து சேவையை விட நினைவில் இருப்பதே நல்லது, அனைத்து சேவைகளிலிருந்தும் விடுவித்து பட்டியில் அமர்த்தி விடுங்கள் என்றும் கூறுகிறீர்கள். சில நேரங்களில் உங்களிடம் இந்த சங்கல்பம் வருகிறது.

உண்மையில் சேவை என்பது மாயாஜீத் ஆக்கக் கூடியது, மாயாவை அழைத்து வரக் கூடியது அல்ல ஆனால் சேவையில் மாயை ஏன் வருகிறது? இதற்கு மூல காரணம் உள்ளப்பூர்வமான அன்பு இல்லை. பரிவாரம் என்ற அன்பு இருக்கிறது, ஆனால் உள்ளப்பூர்வமான அன்பு தியாக பாவணையை உருவாக்குகிறது. அது இல்லாத காரணத்தினால் அவ்வப்போது சேவை மாயையின் ரூபமாக ஆகி விடுகிறது. மேலும் இப்படிப்பட்ட சேவையானது சேவையின் கணக்கில் சேமிப்பு செய்ய விடாது -50-60 சென்டர் திறந்தவர்களாகவும் இருக்கலாம் ஆனால் சேவையின் கணக்கில் அல்லது பாப்தாதாவின் உள்ளத்தில் சேமிப்பின் கணக்கு சேமிப்பாவதற்கு மாயையிடமிருந்து முக்தியாக வேண்டும், யோகயுக்த் ஆக செய்ய வேண்டும். சிலரிடம் 2-சென்டர் இருக்கிறது, பார்ப்பதற்கு இரண்டு சென்டருக்குப் பொறுப்பாளர் என்று தோன்றும். சிலர் 50-சென்டர்களுக்குப் பொறுப்பாளராகத் தென்படும் ஆனால் இரண்டு சேவை நிலையங்களும் தடைகளற்று இருக்கிறது, மாயையிடமிருந்து, குழப்பங்களிலிருந்து, சுபாவ, சன்ஸ்காரங்களின் மோதல்களிலிருந்து விடுபட்டு இருக்கிறது எனில் இரண்டு சென்டர் உடையவருக்கும் 50-சேவை நிலையங்கள் உடையவரை விட அதிகமாக சேவை கணக்கில் சேமிப்பாகி விடும். என்னிடம் 30-சென்டர்

இருக்கிறது, 40-சென்டர் இருக்கிறது என்பதில் குஷியடைந்து விடாதீர்கள் ஆனால் எத்தனை சென்டர் மாயையிடமிருந்து முக்தியாகி இருக்கிறது? சென்டரையும் அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள், மாயாவையும் அதிகப்படுத்திக் கொண்டே சென்றீர்கள் என்றால் -இப்படிப்பட்ட சேவை தந்தையின் ரிஜிஸ்டரில் சேமிப்பு ஆகாது. நான் அதிக சேவை செய்து கொண்டிருக்கின்றேன், இரவு-பகல் தூங்குவதும் கிடையாது, சாப்பாடும் ஒருமுறை தயாரித்து இரவில் சாப்பிடுகின்றேன் -அந்த அளவிற்கு பிசியாக இருக்கின்றேன் என்று நீங்கள் நினைக்கலாம் ஆனால் சேவையின் கூடவே மாயாவிடமும் பிசியாக இல்லை தானே? இது ஏன் நடந்தது? இது எப்படி நடந்தது? இவர் ஏன் செய்தார்? நான் ஏன் செய்யவில்லை? எனது உரிமை, உனது உரிமை -எனவே தந்தையின் உரிமை எங்கு சென்றது? புரிந்ததா? சேவை என்றால் அதில் சுயம் மற்றும் அனைவருக்கும் சகயோகம் அல்லது திருப்தியின் பலன் நடைமுறையில் தென்பட வேண்டும். ஒருவேளை அனைவரின் சுபபாவனை, சுப விருப்பத்தின் சகயோகம் அல்லது திருப்தி வெளிப்படையான பலன் ரூபத்தில் கிடைக்கவில்லையெனில் சுயசோதனை செய்யுங்கள் -என்ன காரணம்? பலன் ஏன் கிடைக்கவில்லை? மேலும் விதியை சோதனை செய்து மாற்றம் கொண்டு வாருங்கள்.

இவ்வாறு உண்மையான சேவையை அதிகப்படுத்துவது தான் சேவையை அதிகப்படுத்துவதாகும். நான் மிக நன்றாக சேவை செய்து கொண்டிருக்கின்றேன் என்று தன் மனதை குஷிப்படுத்திக் கொள்ளாதீர்கள் ஆனால் தந்தையின் மனதை குஷிப்படுத்துங்கள், மேலும் பிராமணப் பரிவாரத்தின் உள்ளப்பூர்வமான ஆசிர்வாதத்தை அடையுங்கள். இது தான் உண்மையான சேவை என்று கூறப்படுகிறது. வெளிப்பகட்டிற்கான சேவை மிக பெரிதாக இருக்கிறது, ஆனால் எங்கு உள்ளத்தின் சேவை இருக்குமோ, அங்கு உள்ளப்பூர்வ அன்பான சேவை அவசியம் நடைபெறும். இதைத் தான் பரிவாரத்தின் மீது பிரம்மாபாபாவின் ஆசையை நிறைவேற்றுவதாகும். இதுவும் இன்றைய ஆன்மீக உரையாடல் ஆகும். மற்ற விசயங்களை பிறகு கூறுகின்றேன். இன்று பாரதவாசிகளுக்கு இந்த சீசனின் கடைசி வாய்ப்பாகும். ஆகையால் பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்பதை கூறினேன். தேர்ச்சிக்கான ஒரு சான்றிதழை அடைந்திருக்கிறீர்கள்,

இப்போது இரண்டாவது சான்றிதழ் அடைய வேண்டும். நல்லது. இப்போது தந்தையின் ஆசை தீபங்கள் சதா ஜொலித்துக் கொண்டே இருக்க வேண்டும். நல்லது.

நாலாபுறமும் உள்ள அனைத்து பிராமண குல தீபங்களுக்கு, சதா பாப்தாதாவின் சுப ஆசைகளை நிறைவேற்றக் கூடியவர்களுக்கு, சதா தந்தை மற்றும் பரிவாரத்தின் உள்ளப்பூர்வமான அன்பில் சமநிலையுடன் இருக்கக் கூடியவர்களுக்கு, சதா உள்ளத்தின் சேவையின் மூலம் சேவையின் கணக்கில் சேமிப்பு அதிகமாக செய்யக் கூடியவர்களுக்கு, இவ்வாறு தந்தையின் சுப ஆசை தீபங்களுக்கு, உண்மையான உள்ளத்துடன் சேவை செய்யக் கூடிய சேவாதாரிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம்: நாடகம் என்ற கருத்தின் அனுபவத்தின் மூலம் சதா சாட்சி நிலையில் இருக்கக் கூடிய ஆடாது, அசையாதவர் ஆகுக!

நாடகம் என்ற கருத்தில் அனுபவிகளாக இருப்பவர்கள் சதா சாட்சி நிலையில் நிலைத்திருந்து ஏக்ரஸ், ஆடாத-அசையாத ஸ்திதியின் அனுபவம் செய்வர். நாடகம் என்ற கருத்தின் அனுபவி ஆத்மா ஒருபோதும் தீயவையிலும் தீயதைப் பார்க்காமல் நல்லதை மட்டுமே பார்ப்பார். அதாவது சுய நன்மைக்கான வழி தென்படும். நன்மையற்றவைகளின் கணக்கு அழிந்து விடும். கல்யாணகாரி தந்தையின் குழந்தை, கல்யாணகாரி யுகம் -இந்த ஞானம் மற்றும் அனுபவ அத்தாரிட்டியின் மூலம் ஆடாது, அசையாதவர்களாக ஆகுங்கள்.

சுலோகன்: யார் நேரத்தை விலை மதிப்பற்றதாகப் புரிந்து கொண்டு வெற்றி ஆக்குகிறார்களோ, அவர்கள் தகுந்த நேரத்தில் ஏமாற்றமடைய மாட்டார்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 16.02.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சதா உற்சாகத்தில் இருந்து உற்சவத்தைக் கொண்டாடுங்கள்! (சிவ ஜெயந்தி)

இன்று விஷ்வேஷ்வரன் தந்தை தன்னுடைய விஷ்வத்தின் சிரேஷ்டமான படைப்பு மற்றும் சிரேஷ்ட மான ஆதி இரத்தினங்களுடன், மிகவும் அன்பான மற்றும் நெருக்கமான குழந்தைகளுடன் சந்திப்பைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றார். விஷ்வத்தினுடைய அனைத்து ஆத்மாக்களும் விஷ்வேஷ்வரன் தந்தையினுடைய குழந்தைகளே ஆவார்கள் ஆனால் பிராமண ஆத்மாக்கள் மிகவும் அன்பான, நெருக்கமான ஆத்மாக்கள் ஆவார்கள். ஏனெனில், பிராமண ஆத்மாக்கள் ஆதி படைப்பு ஆவார்கள். தந்தையின் கூடவே பிராமண ஆத்மாக்களும் பிராமண வாழ்க்கையில் அவதரித்து தந்தையினுடைய காரியத்தில் சகயோகி ஆத்மாக்கள் ஆகியிருக்கின்றார்கள். ஆகையினால், பாப்தாதா இன்றைய தினம் குழந்தைகளுடைய பிராமண வாழ்க்கையின் அவதாரம் எடுத்த பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றார்கள். குழந்தைகள் தந்தையினுடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக ஊக்க உற்சாகத்தோடு குஷியில் நடனமாடிக் கொண்டிருக்கின்றார்கள் ஆனால், பாப்தாதா குழந்தைகளுடைய இந்த பிராமண வாழ்க்கையைப் பார்த்து, அன்பு மற்றும் சகயோகத்தில், தந்தையின் கூடவே ஒவ்வொரு காரியத்திலும் தைரியத்துடன் முன்னேறிக் கொண்டு இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். நீங்கள் பாப்தாதாவினுடைய பிறந்த நாளைக் கொண்டாடுகின்றீர்கள் மற்றும் தந்தை குழந்தைகளுடைய பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். பிராமணர்களாகிய உங்களுக்கும் பிறந்த நாள் அல்லவா. எனவே, அனைவருக்கும் பாப்தாதா, ஜெகதம்பா மற்றும் உங்களுக்குத் துணையாக இருக்கும் அனைத்து அட்வான்ஸ் பார்ட்டியில் சென்ற விசேஷமான சிரேஷ்டமான ஆத்மாக்களுடன் இணைந்து உங்களுடைய அலௌகீக பிராமண பிறப்பிற்காக, அன்போடு

பொன்னிறமான புஷ்பங்களின் மழை பொழிந்து வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள் என்று வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றார்கள். இது உள்ளத்தின் வாழ்த்துக்கள் ஆகும், வாயினால் மட்டும் சொல்லப்படும் வாழ்த்துக்கள் அல்ல; ஆனால் திலாராம் (உள்ளத்தைக் கொள்ளை கொண்ட) தந்தையினுடைய உள்ளத்தின் வாழ்த்துக்களை அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்களுக்கும் கொடுக்கின்றார்கள், அவர்கள் எதிரில் அமர்ந்திருந்தாலும் சரி, மனதால் தந்தைக்கு முன் இருந்தாலும் சரி, நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்.

இன்றைய தினம் பக்த ஆத்மாக்களிடம் தந்தையினுடைய புள்ளி ரூபத்தினுடைய விசேஷமான நினைவு உள்ளது. சிவஜெயந்தி அல்லது சிவராத்திரி என்பது சாகார ரூபத்தின் நினைவுச்சின்னம் கிடையாது; ஆனால் நிராகார ஜோதி புள்ளி வடிவமான தந்தை, யாரை சிவலிங்க வடிவத்தில் பூஜிக் கின்றார்களோ, அந்த புள்ளிக்கு மகத்துவம் உள்ளது. உங்கள் அனைவருடைய உள்ளத்திலும் தந்தையினுடைய புள்ளி ரூபத்தின் நினைவு சதா உள்ளது. நீங்களும் புள்ளி மற்றும் தந்தையும் புள்ளி, எனவே, இன்றைய தினம் பாரதத்தில் ஒவ்வொரு பக்த ஆத்மாவின் உள்ளத்தில் விசேஷமாக புள்ளி ரூபத்திற்கான மகத்துவம் உள்ளது. புள்ளியானது எந்தளவு சூட்சுமமாக இருக்கிறதோ, அந்தளவு சக்திசாலியாகவும் இருக்கிறது. ஆகையினால், புள்ளியான (பிந்து) தந்தையையே சக்திகளுடைய, குணங்களினுடைய, ஞானத்தினுடைய கடல் (சிந்து) என்று கூறப்படுகிறது. இன்று அனைத்து குழந்தைகளின் உள்ளத்தில் இருந்து பிறந்த தினத்தின் விசேஷமான உற்சாகத்தின் அலை பாப்தாதாவிடம் அமிர்த வேளையில் இருந்து வந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளாகிய நீங்கள் சேவைக்காக மற்றும் அன்பு சொரூபம் ஆகி தந்தையினுடைய கொடியை ஏற்றினீர்கள், தந்தை எந்தக் கொடியை ஏற்றி இருக்கின்றார்? நீங்கள் அனைவரும் சிவபாபாவின் கொடியை ஏற்றியிருக்கின்றீர்கள், தந்தை இந்தக் கொடியை ஏற்றுவாரா என்ன? இந்த சேவையினுடைய சாகார ரூபத்தின் பொறுப்பு குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. தந்தையும் கூட கொடி ஏற்றியிருக்கின்றார் ஆனால் என்ன கொடியை எங்கு ஏற்றியிருக்கின்றார்? பாப்தாதா தங்களுடைய உள்ளத்தில் அனைத்து குழந்தைகளுடைய விசேஷத்தன்மைகளுடைய அன்பின் கொடியை

ஏற்றியிருக்கின்றார்கள். எத்தனை கொடிகளை ஏற்றியிருப்பார்கள்? இந்த உலகத்தில் இத்தனை கொடிகளை யாராவது ஏற்ற முடியுமா! எவ்வளவு அழகான காட்சியாக இருக்கும்!

ஒவ்வொரு குழந்தையினுடைய விசேஷத்தன்மைகளுடைய கொடி பாப்தாதாவின் உள்ளத்தில் பறந்து கொண்டு இருக்கிறது. நீங்கள் மட்டும் கொடியை ஏற்றவில்லை, பாப்தாதாவும் ஏற்றி இருக்கின்றார்கள். இந்தக் கொடியை ஏற்றும் சமயத்தில் என்ன நடக்கிறது? மலர்களின் மழை பொழிகிறது. பாப்தாதாவும் எப்பொழுது குழந்தைகளுடைய விசேஷத்தன்மையின் அன்பின் கொடியை பறக்க விடுகின்றார்களோ, அப்பொழுது என்ன மழை பொழிகிறது? ஒவ்வொரு குழந்தையின் மீதும் அழிவற்றவர் ஆகுக, அமரர் ஆகுக, ஆடாத அசையாதவர் ஆகுக என்ற இந்த வரதானங்களின் மழை பொழிகிறது. இந்த வரதானங்கள் தான் பாப்தாதாவின் அழிவற்ற அலௌகீக மலர்கள் ஆகும். பாப்தாதாவிற்கு இந்த அவதார தினத்தின் அதாவது சிவஜெயந்தி தினத்தின் குஷியானது குழந்தைகளை விட அதிகமாக உள்ளது, மகிழ்ச்சியே மகிழ்ச்சியாக உள்ளது! ஏனெனில், இந்த அவதார தினத்தை ஒவ்வொரு வருடமும் ஞாபகார்த்தமாகக் கொண்டாடுகின்றார்கள்; ஆனால் எப்பொழுது சாகார பிரம்மாவின் உடலில் தந்தையின் அவதாரம் ஏற்படுகிறதோ, அப்பொழுது பாப்தாதாவிற்கு அதிலும் விசேஷமாக சிவ தந்தைக்கு, தன்னுடைய நெருக்கமான அன்பான குழந்தைகளை நீண்ட காலமாக பிரிந்து பரந்தாமத்தில் இருக்கும் சிவ தந்தைக்கு, பரந்தாமத்தில் மற்ற ஆத்மாக்களும் இருக்கின்றார்கள், ஆனால் யார் முதல் படைப்பாக இருக்கும் ஆத்மாக்களோ, யார் தந்தைக்கு சமமாக ஆகக்கூடிய மற்றும் சேவையில் துணையாக இருக்கும் ஆத்மாக்களோ, அவர்கள் எவ்வளவு காலத்திற்கு பிறகு அவதாரம் செய்ததினால் மீண்டும் சந்திக்கின்றார்கள் மற்றும் எவ்வளவு காலமாகப் பிரிந்திருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்கள் மீண்டும் வந்து சந்திக்கின்றார்கள் என்ற இந்த விசயத்தின் மகிழ்ச்சி விசேஷமாக சிவ தந்தைக்கு உள்ளது. ஒருவேளை, யாராவது மிகவும் அன்பானவரைப் பிரிந்து பிறகு சந்தித்தார்கள் என்றால் மகிழ்ச்சியிலும் விசேஷமான மகிழ்ச்சி ஏற்படுகிறது அல்லவா. அவதார தினம் என்றால் தன்னுடைய ஆதி படைப்பை மீண்டும் சந்திக்கும் தினம் என்று அர்த்தம். நமக்கு தந்தை கிடைத்து விட்டார் என்று நீங்கள் யோசிப்பீர்கள் மற்றும் எனக்கு குழந்தைகள் கிடைத்து விட்டார்கள் என்று தந்தை கூறுகின்றார்.

எனவே, தந்தைக்கு தன்னுடைய ஆதி படைப்பின் மீது பெருமை இருக்கிறது. நீங்கள் அனைவரும் ஆதி படைப்பு ஆவீர்கள் அல்லவா, சத்திரியர்களாக இல்லைதானே? அனைவரும் சூரிய வம்சத்தின் ஆதி படைப்பு ஆவீர்கள். பிராமணரிலிருந்து தேவதையாக ஆகின்றீர்கள் அல்லவா. எனவே, பிராமண ஆத்மாக்கள் ஆதி படைப்பு ஆவார்கள். அனைவருமே அனாதி படைப்பு ஆவார்கள், முழு விஷ்வத்தின் ஆத்மாக்களும் படைப்பே ஆவார்கள் ஆனால் நீங்கள் அனாதி மற்றும் ஆதி படைப்பு ஆவீர்கள். எனவே, இரட்டை போதை உள்ளது அல்லவா.

இன்றைய தினம் பாப்தாதா விசேஷமாக ஒரு சுலோகன் கொடுக்கின்றார்கள். இன்றைய தினத்தை உற்சவத்திற்கான தினம் என்று கூறப்படுகிறது. சிவராத்திரி அல்லது சிவஜெயந்தி தினத்தைக் கொண்டாடுகின்றார்கள். பிராமண வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் உற்சவத்திற்கான நொடியாகும் என்ற உற்சவ தினத்திற்கான இந்த சுலோகனை நினைவில் வைக்க வேண்டும். பிராமண வாழ்க்கை என்றால் சதா உற்சவத்தைக் கொண்டாடுவது, சதா உற்சாகத்தில் இருப்பது மற்றும் சதா ஒவ்வொரு கர்மத்தில் ஆத்மாவிற்கு உற்சாகத்தை ஏற்படுத்துவது என்பதாகும். எனவே, உற்சவத்தை (விழாவை) கொண்டாட வேண்டும், உற்சாகத்தில் இருக்க வேண்டும் மற்றும் உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டும். எங்கு உற்சாகம் உள்ளதோ, அங்கு ஒருபொழுதும் எவ்விதமான தடையும், உற்சாகத்தில் இருக்கும் ஆத்மாவை உற்சாகத்தில் இருந்து விலக்க முடியாது. எவ்வாறு அல்ப கால உற்சாகத்தில் இருக்கும்பொழுது அனைத்து விசயங்களும் மறந்து விடுகின்றன அல்லவா. ஏதாவது உற்சவத்தைக் கொண்டாடுகின்றீர்கள் எனில், அந்த சமயத்தில் குஷியைத் தவிர வேறு எந்த நினைவும் இருக்காது. எனவே, பிராமண வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் உற்சவம் (விழா) ஆகும் அதாவது ஒவ்வொரு நொடியும் உற்சாகத்தில் இருப்பதற்கான நொடியாகும். எனவே, வேறு ஏதாவது விசயங்கள் வருமா என்ன? எந்த ஒரு எல்லைக்குட்பட்ட உற்சவத்திற்கு சென்றீர்கள் என்றாலும் அங்கு என்ன நடக்கிறது? ஆடல், பாடல், விளையாட்டைப் பார்த்தல் மற்றும் உணவு உட்கொள்ளுதல் ஆகிய இவை தான் இருக்கின்றன அல்லவா. எனவே, பிராமண வாழ்க்கையின் உற்சவத்தில் முழு நாளும் என்ன செய்கின்றீர்கள்? சேவை செய்கின்றீர்கள் எனில் விளையாட்டு எனப் புரிந்து செய்கின்றீர்கள்

அல்லவா அல்லது சுமையாகத் தோன்றுகிறதா? தற்கால உலகத்தில் எந்த அஞ்ஞானி ஆத்மாவும் கொஞ்சம் புத்தியின் வேலை செய்தார்கள் என்றால் மிகவும் களைப்படைந்து விட்டேன், புத்தியில் வேலையின் அதிக சுமை உள்ளது என்று கூறுவார்கள். மேலும், நீங்கள் சேவை செய்து விட்டு வருகின்றீர்கள் என்றால் என்ன கூறுகின்றீர்கள்? சேவையின் பலனை சாப்பிட்டுவிட்டு வந்திருக்கின்றோம் ஏனெனில், எவ்வளவு பெரியதிலும் பெரிய சேவைக்கு நிமித்தமாகின்றீர்களோ, அவ்வளவு சேவையினுடைய பிரத்யட்சபலன் மிகச் சிறந்ததாக மற்றும் பெரியதாகக் கிடைக்கிறது. எனவே, பிரத்யட்ச பலனை (பழம்) உண்பதால் இன்னும் அதிக சக்தி வந்து விடுகிறது அல்லவா. குஷியினுடைய சக்தி அதிகரிக்கிறது. ஆகையினால், எவ்வளவு தான் சரீரத்திற்கான கடுமையான வேலையாக இருக்கலாம் அல்லது திட்டம் தீட்டுவதற்கான புத்திக்கான வேலையாக இருக்கலாம் ஆனால் உங்களுக்கு களைப்பு ஏற்படாது. இரவா அல்லது பகலா என்பது தெரிவதில்லை அல்லவா. ஒருவேளை, கடிகாரம் உங்களிடம் இல்லை எனில் எத்தனை மணி ஆகி விட்டது என்பது தெரிகிறதா என்ன? ஆனால் உற்சவம் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றீர்கள், ஆகையினால், சேவை உற்சாகத்தைக் கொடுக்கிறது மற்றும் உற்சாகத்தை அனுபவம் செய்விக்கிறது.

பிராமண வாழ்வில் ஒன்று சேவை, இரண்டாவது என்ன உள்ளது? மாயை வருகிறது. மாயையின் பெயரைக் கேட்டு சிரிக்கின்றீர்கள் ஏனெனில், மாயைக்கு நம் மீது அதிக அன்பு உள்ளது என்பதை புரிந்திருக்கின்றீர்கள். உங்களுக்கு அன்பு இல்லை, அதற்கு அன்பு உள்ளது. உற்சவத்தில் விளையாட்டும் பார்க்கப்படுகிறது. தற்சமயம் அனைவருக்கும் எந்த விளையாட்டு அதிகமாகப் பிடிக்கிறது? மிக்கி மௌஸ் விளையாட்டு அதிகம் காண்பிக்கின்றார்கள். விளம்பரங்களைக் கூட மிக்கி மௌஸ் விளையாட்டாகக் காண்பிக்கின்றார்கள். போட்டியை (மேட்ச்) விரும்புகின்றீர்கள் அல்லது மிக்கி மௌஸ் விளையாட்டை விரும்புகின்றீர்கள். இங்கு கூட மாயை வருகிறது எனில், போட்டி போடுங்கள், இலக்கை குறி வைத்திடுங்கள். விளையாட்டில் என்ன செய்கின்றீர்கள்? பந்து வருகிறது என்றால் அதைப் பிடித்து நீங்கள் இன்னொரு பக்கம் எறிகின்றீர்கள் அல்லது பிடித்து விடுகின்றீர்கள் என்றால் வெற்றியாளர் ஆகி விடுகின்றீர்கள்.

அது போன்று இந்த மாயையின் பந்து, சில நேரம் காமம் என்ற ரூபத்தில் வருகின்றது, சில நேரம் கோபம் என்ற ரூபத்தில் வருகின்றது. இது மாயையின் விளையாட்டு என்பதை கேட்ச் செய்யுங்கள் (புரிந்து கொள்ளுங்கள்). ஒருவேளை, மாயையின் விளையாட்டை விளையாட்டு என புரிந்து கொண்டீர்கள் என்றால் உற்சாகம் அதிகரிக்கும் மற்றும் ஒருவேளை, மாயையின் எந்தவொரு பிரச்சனையையும் எதிரி எனப் புரிந்து பார்க்கின்றீர்கள் என்றால் பயந்து விடுகின்றீர்கள். மிக்கி மௌஸ் விளையாட்டில் சில நேரம் குரங்கு வருகிறது, சில நேரம் பூனை, சில நேரம் நாய், சில நேரம் எலி வருகிறது ஆனால் நீங்கள் பயப்படுகின்றீர்களா என்ன? பார்க்கும் பொழுது மகிழ்ச்சி ஏற்படுகிறது அல்லவா. அதுபோன்று மாயையின் வெவ்வேறு பிரச்சனைகளின் விளையாட்டை உற்சவம் என்ற ரூபத்தில் பாருங்கள். விளையாட்டைப் பார்க்கும் பொழுது யாராவது பயப்படுகின்றார்கள் என்றால் அவர்களை என்ன சொல்லலாம்? விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது பந்து என்னிடமே வந்து கொண்டிருக்கிறது, என்மீது பட்டுவிடக் கூடாது என்று யோசித்தார்கள் என்றால் விளையாட்டைப் பார்க்க முடியுமா? ஆகையினால், குஷி மற்றும் மகிழ்ச்சியோடு விளையாட்டைப் பாருங்கள், மாயையைக் கண்டு பயப்படாதீர்கள். ஒரு மனக் கேளிக்கை எனப் புரிந்து கொள்ளுங்கள். அது சிங்க ரூபத்தில் வந்தாலும் பயப்படாதீர்கள். பிராமண வாழ்வினுடைய ஒவ்வொரு நொடியும் விழாவாகும், உற்சாகம் நிறைந்ததாகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு மத்தியில் இந்த விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள், மகிழ்ச்சியில் நடனமாடிக் கொண்டும் இருக்கின்றீர்கள் மற்றும் தந்தையினுடைய பிராமண பரிவாரத்தின் விசேஷத்தன்மைகளுடைய, குணங்களினுடைய பாடலும் பாடிக் கொண்டு இருக்கின்றீர்கள் மற்றும் பிரம்மா போஜனமும் மகிழ்ச்சியோடு சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றீர்கள்.

உங்களைப் போன்று சுத்த உணவு, நினைவிலிருந்து சமைக்கப்பட்ட உணவு விஷ்வத்தில் எவருக்கும் கிடைப்பதில்லை. இந்த உணவையே துக்கத்தை அழிக்கும் உணவு என்று கூறப்படுகிறது. நினைவிலிருந்து சமைக்கப்பட்ட உணவு அனைத்து துக்கத்தையும் தூரமாக்கி விடுகிறது, ஏனெனில், சுத்த அன்னத்தினால் மனம் மற்றும் உடல் ஆகிய இரண்டும்

சுத்தம் ஆகி விடுகின்றன. ஒருவேளை, செல்வம் கூட அசுத்தமான செல்வம் வருகிறது என்றால் அசுத்த செல்வம் குஷியை மறைத்து விடுகிறது, கவலையைக் கொண்டு வந்து விடுகிறது. எவ்வளவு அசுத்த செல்வம் வருகிறது அதாவது ஒரு இலட்சம் பணம் வருகிறது என்றால் கவலை கோடி மடங்கு வரும். மேலும், கவலையை எப்பொழுதும் சிதை என்று சொல்லப்படுகிறது. சிதையில் அமர்ந்திருப்பவர்களுக்கு எவ்வாறு குஷி இருக்கும்! சுத்த அன்னம் மனதை சுத்தமாக்கி விடுகிறது, ஆகையினால், பணமும் சுத்தமாகி விடுகிறது. நினைவிலிருந்து சமைக்கப்பட்ட அன்னத்திற்கு மகத்துவம் உள்ளது, ஆகையினால், பிரம்மா போஜனத்திற்கு மகிமை உள்ளது. ஒருவேளை, நினைவில் சமைக்கப்படவில்லை மற்றும் சாப்பிடவில்லை எனில், இந்த அன்னமானது ஸ்திதியை மேலும், கீழுமாக (நிலையற்றதாக) ஆக்கி விடுகிறது. நினைவில் தயாரிக்கப்பட்ட மற்றும் நினைவில் உட்கொள்ளப்பட்ட அன்னமானது மருந்தினுடைய வேலையும் செய்கிறது மற்றும் ஆசீர்வாதத்தின் வேலையும் செய்கிறது. நினைவிலிருந்து சமைக்கப்பட்ட அன்னமானது ஒருபொழுதும் நஷ்டத்தை ஏற்படுத்த முடியாது. ஆகையினால், ஒவ்வொரு நொடியும் உற்சவத்தைக் கொண்டாடுங்கள். மாயை எந்த ரூபத்திலும் வரட்டும். நல்லது. மோகத்தின் ரூபத்தில் வருகின்றது என்றால் குரங்கின் விளையாட்டைக் காண்பிக்க வந்திருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். விளையாட்டை சாட்சியாகிப் பாருங்கள், சுயம் மாயையின் சக்கரத்தில் வந்து விடாதீர்கள். சக்கரத்தில் வந்து விடுகிறீர்கள் ஆதலால் பயப்படுகிறீர்கள். தற்சமயம் சின்னச் சின்ன குழந்தைகளை மேலே தூக்கி விடும் மற்றும் கீழே இறக்கி விடும் மனக்கேளிக்கையின் விளையாட்டு விளையாட வைக்கின்றார்கள். இது மனக் கேளிக்கை ஆகும், விளையாட்டு ஆகும். எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் வரட்டும், இதை மிக்கி மௌஸ் விளையாட்டு எனப் பாருங்கள். எது வருகிறதோ, அது சென்றும் விடுகிறது. மாயை எந்த ரூபத்தில் வருகிறது என்றாலும் இப்பொழுது வந்திருக்கிறது, இப்பொழுதே சென்றுவிட்டது என்று புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் சிரேஷ்ட ஸ்திதியில் இருந்து இறங்கி மாயையுடன் சென்று விடாதீர்கள். மாயையை வர விடுங்கள் ஆனால், நீங்கள் அதனுடன் ஏன் செல்கின்றீர்கள்? ஏதாவது வரும், ஏதாவது போகும், ஏதாவது மாறும் -விளையாட்டில் இதெல்லாம் நடக்கும். ஒருவேளை, காட்சி

மாறவில்லை எனில் விளையாட்டு நன்றாகவே இருக்காது. மாயை கூட எந்த ரூபத்தில் வந்தாலும், எந்தக் காட்சியாக இருந்தாலும் அது அவசியம் மாறி விடும். எனவே, காட்சி மாறிக் கொண்டே இருக்கட்டும் ஆனால் உங்களுடைய சிரேஷ்டமான ஸ்திதி மாறக்கூடாது. ஏதாவதொரு விளையாட்டில் யாராவது விளையாடு கின்றார்கள் என்றால் நீங்களும் அவர்களுடன் அவர்களைப் போலவே ஓடுவீர்களா என்ன? பார்வையாளர்கள் பார்த்துக் கொண்டு மட்டும் இருப்பார்கள் அல்லவா. மாயை கீழே விழவைப்பதற்காக வரட்டும் அல்லது எந்த சொரூபத்தில் வேண்டுமானாலும் வரட்டும் ஆனால், நீங்கள் அதை விளையாட்டாகப் பாருங்கள். எவ்வாறு கீழே விழவைப்பதற்காக வந்திருக்கிறது என்ற அதனுடைய ரூபத்தை கேட்ச் செய்யுங்கள் (புரிந்து கொள்ளுங்கள்) மற்றும் விளையாட்டு எனப் புரிந்து அந்தக் காட்சியை சாட்சியாகப் பாருங்கள். பின்வரும் காலத்திற்கான மற்றும் சுய ஸ்திதியை வலுப்படுத்துவதற்கான படிப்பினையை எடுத்துக் கொண்டு முன்னேறிச் செல்லுங்கள்.

சிவராத்திரியின் உற்சவம் என்றால் உற்சாகத்தை ஏற்படுத்தக் கூடிய உற்சவம் இன்றைய தினம் மட்டுமல்ல ஆனால், எப்பொழுதுமே உங்களுக்கு உற்சவம் தான் மற்றும் உற்சாகம் கூடவே உள்ளது. இந்த சுலோகனை சதா நினைவில் வைக்க வேண்டும் மற்றும் அனுபவம் செய்து கொண்டே இருக்க வேண்டும். இரண்டே இரண்டு வார்த்தைகள் மட்டுமே அதற்கான விதியாகும். சதா சாட்சியாகிப் பார்க்க வேண்டும் மற்றும் தந்தையினுடைய துணைவனாகி இருக்க வேண்டும். தந்தையின் துணைவனாக சதா இருந்தீர்கள் எனில், எங்கு தந்தை இருக்கின்றாரோ, அங்கு சாட்சியாகிப் பார்ப்பதனால் சுலபமாக மாயையை வென்றவராகி அனேகப் பிறவிகளுக்காக உலகத்தை வென்றவர் ஆகி விடுவீர்கள். என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா? சுயம் தந்தை ஒவ்வொரு குழந்தைக்கும் துணையைக் கொடுப்பதற்காக பொன்னான சலுகையைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார், ஆகையினால், சதா கூடவே இருங்கள். இரட்டை அயல்நாட்டினர் தனித்து இருப்பதற்கு விரும்புகின்றார்கள். அவர்கள் எந்த பந்தனத்திலும் மாட்டி விடக்கூடாது, சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே துணையுடன் இருப்பதில்லை ஆனால் இந்தத் துணையுடன் இணைந்து இருக்கும்பொழுது கூட சுதந்திரமாக இருக்கின்றீர்கள், பந்தனத்தின்

அனுபவம் ஏற்படாது. நல்லது. இன்றைய தினம் இரட்டை உற்சவத்திற்கான தினம் ஆகும். வாழ்க்கையும் உற்சவமாக உள்ளது மற்றும் ஞாபகார்த்த உற்சவமும் நடைபெறுகிறது. பாப்தாதா அனைத்து அயல்நாட்டு குழந்தைகளை சதா நினைவு செய்கின்றார்கள் மற்றும் இன்றைய விசேஷ தினத்திற்கான நினைவுகளையும் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஏனெனில், யார் எங்கிருந்து வந்திருக்கின்றீர்கள் என்றாலும் அனைவருடைய நினைவு கடிதத்தைக் கொண்டு வந்திருப்பீர்கள். கார்டு, கடிதம், டோலிகளைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். எந்தக் குழந்தைகள் உள்ளத்தின் உற்சாகத்துடன் அன்பு நினைவுகளை அனுப்பி இருக்கின்றார்களோ மற்றும் எந்த ரூபத்தில் தன்னுடைய நினைவின் அடையாளத்தை அனுப்பி இருக்கின்றார்களோ, அந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதாவும் விசேஷமாக நினைவிற்கான ரிட்டர்ன் (கைம்மாறு) பல கோடி மடங்கு கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள் மற்றும் ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்தில் சேவையினுடைய மற்றும் சதா மாயையை வென்றவர் ஆகுவதற்கான ஊக்க உற்சாகம் மிகவும் நன்றாக உள்ளது என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஒவ்வொரு குழந்தையும் தனது சக்திக்கும் அதிகமாக சேவையில் முன்னேறிக் கொண்டு இருக்கின்றார்கள் மற்றும் முன்னேறிக் கொண்டே இருப்பார்கள். மற்றபடி யார் உண்மையான உள்ளத்துடன் உள்ளத்தின் சமாச்சாரத்தை தந்தைக்கு முன் வைக்கின்றார்களோ, அவர்களுடைய உண்மை யான உள்ளத்தைப் பார்த்து தந்தை சதா மகிழ்ச்சி அடைகின்றார். ஆகையினால், உள்ளத்தின் சமாச்சாரத்தில் சின்னச் சின்ன விசயங்கள் என்னவெல்லாம் வருகின்றனவோ, அவை தந்தையின் விசேஷமான நினைவினுடைய வரதானத்தின் மூலம் முடிவடைந்து விடும். தந்தையை மகிழ்விப்பது என்றால் தந்தையின் உதவியோடு சுலபமாக மாயையை வென்றவர் ஆவதாகும். ஆகையினால், பாபாவிற்கு எதைக் கொடுத்து விட்டீர்களோ, அது சமாச்சார ரூபத்திலோ, கடிதத்தின் ரூபத்திலோ, ஆன்மிக உரையாடலின் ரூபத்திலோ, தந்தைக்கு முன் வைத்து விட்டீர்கள், கொடுத்து விட்டீர்கள் எனில், ஒருவருக்கு ஒரு பொருள் கொடுக்கப்படுகிறது என்றால் அதற்குப் பிறகு அது தன்னுடையதாக இருக்காது, அது பிறருடையதாகி விடுகிறது. ஒருவேளை, பலவீனமான எண்ணத்தைக் கூட தந்தைக்கு முன்னால்

வைத்து விட்டீர்கள் என்றால் அந்த பலவீனம் உங்களுடையதாக இல்லை, நீங்கள் கொடுத்து விட்டீர்கள், அதிலிருந்து முக்தி அடைந்து விட்டீர்கள். ஆகையினால், நான் தந்தைக்கு முன்பு வைத்து விட்டேன் அதாவது கொடுத்து விட்டேன் என்பதை நினைவில் வைக்க வேண்டும். மற்றபடி அயல்நாட்டிலிருந்து ஊக்க உற்சாகத்தின் அலை நன்றாக வந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளுடைய தடையற்றவராக ஆகுவதற்கான ஊக்கம் மற்றும் சேவையில் தந்தையைப் பிரத்யட்சப்படுத்துவதற்கான ஊக்கத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார்கள். நல்லது.

சதா அனாதி மற்றும் ஆதி படைப்பின் ஆன்மிக போதையில் இருக்கக்கூடிய, சதா ஒவ்வொரு விநாடியையும் உற்சவத்திற்கு சமமாகக் கொண்டாடக்கூடிய, சதா நினைவு மற்றும் சேவையின் உற்சாகத்தில் இருக்கக்கூடிய, சதா மாயையின் ஒவ்வொரு பிரச்சனையையும் விளையாட்டு எனப் புரிந்து சாட்சியாகிப் பார்க்கக்கூடிய, சதா தந்தையுடன் ஒவ்வொரு அடியிலும் துணைவனாகி நடக்கக் கூடிய, அத்தகைய சர்வ சிரேஷ்ட பிராமண ஆத்மாக்களுக்கு அலௌகீக பிறப்பினுடைய வாழ்த்துக்களுடன் கூடவே அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம் உரித்தாகுக. மிகவும் அன்பான, இதய சிம்மாசனதாரியான அனைத்து குழந்தைகளுக்கும் பாவனமான சிவஜெயந்தியின் பல கோடி மடங்கு அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள்.

**52'வது திரிமூர்த்தி சிவ ஜெயந்தி அன்று கொடியை ஏற்றி வாழ்த்துக்கள் அளித்தார்!** அனைத்து அதிக அன்பான, இதய சிம்மாசனதாரி குழந்தைகளுக்கு தூய்மையான 52'வது சிவ ஜெயந்திக்கான கோடி மடங்கு அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள்!

வரதானம்: எவருடைய குறையையும், பலவீனத்தையும் பார்க்காமல் தன்னுடைய குணம் மற்றும் சக்திகளுடைய சகயோகம் கொடுக்கக்கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுக!

யார் சதா அனைத்து ஆத்மாக்களும் தங்களுக்கு சமமாக ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விட வேண்டும் என்ற இந்த ஆன்மிக பாவனையில்

இருக்கின்றார்களோ, அவர்கள் மாஸ்டர் வள்ளல் ஆவார்கள். பிறருடைய குறை, பலவீனத்தைப் பார்க்காமல் அவர்கள் தன்னால் தாரணை செய்யப்பட்ட குணங்களினுடைய, சக்திகளினுடைய சகயோகத்தைக் கொடுப்பார்கள். இவர்கள் இப்படித்தான் என்ற இந்த பாவனைக்குப் பதிலாக இவர்களையும் தந்தைக்கு சமமாக ஆக்குவேன் என்ற இந்த சுபபாவனை இருக்க வேண்டும். இதன் கூடவே, இந்த அனைத்து ஆத்மாக்களும் ஏழ்மை, துக்கம், அசாந்தியிலிருந்து சதா சாந்தமாக, சுக சொரூபமாக, செல்வந்தராக ஆகி விட வேண்டும் என்ற இந்த சிரேஷ்ட மான விருப்பம் இருக்க வேண்டும், அப்பொழுதே மாஸ்டர் வள்ளல் என்று கூற முடியும்.

சுலோகன்: எண்ணம், சொல், செயல் மூலம் சேவை செய்பவர்களே நிரந்தர சேவாதாரி ஆவார்கள், அவர்களுடைய ஒவ்வொரு சுவாசத்திலும் சேவை அடங்கி இருக்கிறது!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 20.02.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உடல் மற்றும் மனதின் களைப்பை நீக்குவதற்கான சாதனம் -சக்திசாலியான நினைவு!

இன்று அயல் (தூர) தேசத்தை சேர்ந்தவர் தனது அநாதி (பரந்தாமத்தை) சேர்ந்தவர்கள் மற்றும் ஆதி தேசம் (சத்யுகத்தை) சேர்ந்தவர்களின் சேவைக்காக அதாவது அனைத்து அயல் நாட்டை (பூலோகத்தை) சேர்ந்தவர்களை, அப்படிப்பட்ட குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இவர்கள் தான் என்னுடைய செல்லமான குழந்தைகள் என்பதை தெரிந்திருக்கிறார். அநாதி தேசமான பரந்தாமத்தில் வஸித்திருந்தீர்கள், மேலும் அதன் தொடர்ச்சியாக உலகத்தில் இந்த பாரத பூமியில் ஆரம்பத்தில் சத்யுகம் என்ற சொந்தமான உலகமாக இருந்தது, நம்முடைய இராஜ்யம் இருந்தது, அனைவரும் இதை பாரதம் என்று சொன்னார்கள், எனவே ஆரம்பத்தில் இந்த பாரத தேசத்தை சேர்ந்தவர்களாக இருந்தீர்கள். இந்த பாரத பூமியில் பிரம்மாபாபாவோடு இராஜ்யம் செய்தீர்கள். பல பிறவிகள் தன்னுடைய இராஜ்யத்தில் சுகம்-சாந்தி நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து (கடந்து) வந்தீர்கள். ஆகையால் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தவர்கள் என்ற காரணத்தினால் பாரத பூமியோடு இதய பூர்வமான அன்பு இருக்கிறது. இறுதி நிலையில் இந்த பாரதம் எவ்வளவு தான் ஏழ்மையாக இருந்தாலும், தூசி படிந்தாக இருந்தாலும் கூட நம்முடைய தேசம் நம்முடையது தான். எனவே ஆத்மா வாகிய உங்கள் அனைவரின் சொந்தமான தேசம் மற்றும் தேவதை சரீரம் அணிந்த வாழ்க்கை வாழ்ந்த தேசம் எந்த தேசமாக இருந்தது? பாரதம் தான் இருந்தது அல்லவா. எத்தனை பிறவிகள் பாரத தேசத்தில் வாழ்ந்துள்ளீர்கள், அவை நினைவில் இருக்கிறதா? அனைவரும் 21-பிறவிகளின் ஆஸ்தியை பாபாவிடமிருந்து அடைந்து விட்டீர்கள், ஆகையால் 21-பிறவிகளுக்கு உத்திரவாதம் (பாரதத்தில் பிறப்பதற்கு) கிடைத்து விட்டது. பிறகும் கூட ஒவ்வொரு ஆத்மாவும்

பல பிறவிகள் பாரத பூமியில் தான் பிறவி எடுக்கிறார்கள், ஏனெனில் யார் பிரம்மாபாபாவிற்கு அருகாமையில் இருக்கும் ஆத்மாக்களாக இருக்கிறார்களோ, சமமாக இருக்கும் ஆத்மாக்களாக இருக்கிறார்களோ, அவர்கள் பிரம்மாபாபாவோடு சேர்ந்து -நாமே பூஜைக்குரியவர்களாகவும், நாமே பூஜாரிகளாக இருக்கும் நடிப்பையும் இணைந்தே நடிக்கிறோம். துவாபர் யுகத்தின் ஆரம்பத்தில் முதலில் பிராமண ஆத்மாக்களாகிய நாம் தான் பக்தர்களாக இருக்கின்றோம். ஆதியில் (சத்யுக) சொர்க்கத்தில் இந்த (பாரத) தேசத்தை சேர்ந்தவர்களாக தான் இருந்தோம். மேலும் பல முறை பாரத பூமியை சேர்ந்தவர்களாக தான் இருந்தோம். ஆகையால் பிராமணர்களின் அலௌகீக உலகம் மதுபனின் மீதும் அதிக அன்பு இருக்கிறது. இந்த மதுபன் பிராமணர்களின் சின்னஞ்சிறிய உலகமாக இருக்கிறது. எனவே இந்த உலகம் மிகவும் நன்றாக இருக்கிறதல்லவா. இங்கிருந்து செல்வதற்கான மனம் விரும்பதில்லை. ஒருவேளை இப்பொழுதே மதுபன் வாசி ஆகி விடுங்கள் என்று கட்டளை இட்டால், குஷி ஏற்படுமா அல்லது சேவை யார் செய்வார்கள் என்ற எண்ணம் வருமா? சேவைக்காக செல்ல வேண்டு மல்லவா? அமருங்கள் என்று பாப்தாதா சொன்னாலும் கூட சேவை நினைவுக்கு வருகிறதா? சேவை செய்ய வைப்பது யார்? பாபாவின் டைரக்ஷன் என்னவாக இருக்கிறதோ, ஸ்ரீமத் என்னவாக இருக்கிறதோ, அதை அப்படியே கடைப்பிடிப்பது -இதற்கு தான் உண்மையான கட்டளைக்கு கீழ்படிந்த குழந்தை என்று சொல்லப்படுகிறது. மதுபனில் இருக்க வைக்க வேண்டுமா அல்லது சேவைக்கு அனுப்புவதா என்பது பாப்தாதா தெரிந்திருக்கிறார். பிராமண குழந்தைகளுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் எவரெடியாக (எதற்கும் தயாராக இருக்கும் நிலை) இருக்க வேண்டும். அவ்வப்பொழுது என்ன கட்டளை கிடைக்கிறதோ, அதில் எவரெடியாக இருக்க வேண்டும். எண்ணத்திலும் கூட மனதின் வழியை சேர்க்க (கலப்படம்) செய்யக் கூடாது. இதற்கு தான் ஸ்ரீமத் படி நடக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மா என்று சொல்லப்படுகிறது.

சேவையின் பொறுப்பாளர் பாபா தான் என்பதை தெரிந்திருக்கிறீர்களா? அல்லது நீங்களா? இந்த பொறுப்பினால் கொஞ்சம் கொஞ்சம் சுமையை அனுபவம் செய்கிறீர்களா? பொறுப்பினால் நீங்கள் இலேசாக இருக்கிறீர்கள் அல்லவா! இவ்வளவு பெரிய நிகழ்ச்சியை செய்ய

வேண்டும், இதை செய்ய வேண்டும் -இதை சுமையாக புரிந்து கொள்ளவில்லைதானே? செய்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார். செய்ய வைப்பவர் ஒரே ஒரு பாபா தான், எவருடையதாவது புத்தியை டச் செய்து உலக சேவைக்கான காரியத்தை செய்ய வைக்கிறார். மேலும் செய்ய வைத்துக் கொண்டேயிருப்பார். யார் செய்கிறார்களோ, அவர்கள் அடைவார்கள், ஆகையால் நிமித்தமாக குழந்தைகளை இதற்காக மட்டும் தான் உருவாக்குகிறார். (பாக்கியத்தை) அடைய கூடியவர்கள் குழந்தைகள் தான், பாபா அடைவதில்லை. பாக்கியத்தை அடைய வேண்டுமா அல்லது சேவையின் பலனை அனுபவம் செய்ய வேண்டுமா -இது ஆத்மாக்களின் (குழந்தைகளின்) வேலையாகும். ஆகையால் குழந்தைகளை நிமித்தமாக (கருவியாக) உருவாக்கு கிறார். சாகார ரூபத்திலும் கூட சேவை செய்ய வைப்பதற்கான காரியத்தை பார்த்தீர்கள், மேலும் இப்பொழுதும் கூட அவ்யக்த ரூபத்திலும் கூட செய்ய வைக்கக் கூடியவர் பாபா, அவ்யக்த பிரம்மாவின் மூலம் கூட எப்படியெல்லாம் சேவை செய்து கொண்டிருக்கிறார் என்பதை கூட பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அவ்யக்த ரூபத்தின் சேவையின் வேகம் மேலும் அதிக தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. செய்ய வைக்கக் கூடியவர் செய்து கொண்டிருக்கிறார், மேலும் நீங்களும் கூட கைப்பாவை (பொம்மை) போன்று நடனமாடிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த சேவையும் கூட ஒரு விளையாட்டாக இருக்கிறது. செய்ய வைக்கக்கூடியவர் செய்து கொண்டிருக்கிறார், மேலும் நீங்களும் கூட நிமித்தமானவர் ஆகி ஒவ்வொரு அடியிலும் பலமடங்கு பாக்கியத்தை உருவாக்குகிறீர்கள். எனவே சுமை யார் மீது இருக்கிறது? பாபா தெரிந்திருக்கிறார் இதுவும் சுமை அல்ல. நீங்கள் சுமை என்று சொல்வீர்கள் என்றால், பிரம்மாபாபாவும் கூட சுமை என்ற வார்த்தையை சொல்கிறார். பிரம்மாபாபாவிற்கு அனைத்தும் நடந்திருக்கிறது. கோடு மட்டும் போடுகிறீர்கள், கோடு போடுவது என்ன பெரிய விஷயமாக இருக்கிறதா என்ன? எனவே பாப்தாதா அப்படியே சேவை செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார். கோடு போடுவது போல சேவை கூட அந்தளவு எளிதாக இருக்கிறது, மீண்டும் செய்து கொண்டிருக்கிறீர்கள், நிமித்தமாக விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள்.

மாயாவின் தடை எப்படி விளையாட்டாக இருக்கிறதோ, சேவையிலும் கூட உழைப்பு இல்லை, ஆனால் விளையாட்டாக புரிந்து

கொள்வதினால் சேவையில் எப்பொழுதுமே புத்துணர்ச்சி அனுபவமாகும். நீங்கள் எதற்காக விளையாடுகிறீர்கள்? களைப்படைவதற்காகவா விளையாடுகிறீர்கள், புத்துணர்ச்சி அடைவதற்காக விளையாடுகிறீர்கள். எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும், விளையாடினால் எப்படி புத்துணர்ச்சி கிடைக்கிறதோ, அதுபோன்று அனுபவமாகும். எவ்வளவு தான் களைப்பை ஏற்படுத்தும் விளையாட்டாக இருந்தாலும் கூட, விளையாட்டு என்று புரிந்து கொள்வதினால் களைப்பு ஏற்படுவதில்லை, ஏனெனில் முழு மனதோடு விருப்பத்தோடு விளையாடுகிறீர்கள். எவ்வளவு தான் விளையாட்டில் கடின உழைப்பு செய்ய வேண்டியிருந்தாலும் அது கூட மனதிற்கு இதமாக இருக்கிறது. ஏனெனில் இதய பூர்வமாக செய்கிறோம். மேலும் யாருக்காவது லௌகீக காரியம் சுமை போன்று இருக்கிறது, வாழ்வாதற்காக செய்ய வேண்டியிருக்கிறது. கடமை என்று புரிந்து கொள்கிறோம், ஆகையால் உழைப்பு தேவைப்படுகிறது. சரீரத்தின் உழைப்பாக இருந்தாலும், புத்தியின் உழைப்பாக இருந்தாலும், டியூட்டி என்று புரிந்து கொள்வதினால் களைப்பின் அனுபவம் ஏற்படுகிறது, ஏனெனில் மனதில் குஷியோடு செய்வதில்லை. யாருக்கு தனது மனதில் ஊக்கத்தோடு, குஷியோடு காரியத்தை அனுபவம் செய்கிறார்களோ, அதில் களைப்பு ஏற்படுவதில்லை, சுமை அனுபவம் ஆகாது. ஒரு சில குழந்தைகளின் மீது சேவையின் கணக்கை விட அதிக மான காரியங்கள் வந்து விடுகிறது. ஆகையால் அவ்வப்பொழுது களைப்பின் அனுபவம் ஏற்படுகிறது. பல குழந்தைகள் களைப்பற்றவர் ஆகி சேவையை ஊக்க உற்சாகத் தோடு செய்து கொண்டிருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனாலும் கூட தைரியம் வைத்து முன்னேறிக் கொண்டேயிருக்கிறீர்கள் -இதைப் பார்த்து பாப்தாதா புன்முறுவல் செய்து கொண்டிருக்கிறார். ஆனாலும் எப்பொழுதும் புத்தியை அவசியம் இலேசாக வையுங்கள்.

பாப்தாதா குழந்தைகளின் அனைத்து திட்டங்கள், நிகழ்ச்சி ஏற்பாடுகளை வதனத்தில் அமர்ந்தவாறே பார்த்துக் கொண்டு இருக்கிறார். ஒவ்வொரு குழந்தைகளின் நினைவு மற்றும் சேவையின் பதிவு பாப்தாதாவிடம் ஒவ்வொரு நேரத்திற்கானது இருக்கிறது. உங்களுடைய உலகத்தில் ரிக்கார்ட் (பதிவு) வைப்பதற்கான பலவித சாதனங்கள் இருக்கிறது. அதுபோல பாபாவிடம் அறிவியல் சாதனங்களையும் மிஞ்சிய

தெள்ளத்தெளிவான சாதனம் இருக்கிறது, அது தானாகவே காரியம் செய்து விடுகிறது. அறிவியல் சாதனங்கள் அனைத்தும், ஒளியின் (லைட்) ஆதாரத்தில் செயல்படுகிறது. சூட்சுமவதனம் என்றாலே ஒளி (லைட்) உலகம் தான். சாகார உலகத்தின் ஒளியின் சாதனங்கள் அனைத்துமே இயற்கையின் (5-தத்துவங்களால் ஆன) சாதனங்கள் ஆகும் ஆனால் அவ்யக்த வதனத்தின் சாதனங்கள் 5-தத்துவங்களால் ஆனதல்ல. மேலும் இயற்கை மாறிக் கொண்டேயிருக்கும். சதோ, இரஜோ, தமோவாக (உயர்ந்த, இடைப்பட்ட, கீழான) என்று மாறிக் கொண்டேயிருக்கும். இந்த சமயத்தில் தமோ நிலையில் இயற்கை இருக்கிறது. ஆகையால் இந்த சாதனங்கள் இன்று வேலை செய்யும், நாளை வேலை செய்யாது ஆனால் அவ்யக்த வதனத்தின் சாதனங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டது. எனவே இதில் மாற்றம் ஏற்படாது. எப்பொழுது வேண்டுமோ, எப்படி வேண்டுமோ சூட்சம வதனத்தின் சாதனங்கள் எப்பொழுதும் தனது காரியத்தை செய்து கொண்டேயிருக்கிறது, ஆகையால் அனைத்து குழந்தைகளின் பதிவேட்டை பார்ப்பது பாப்தாதாவிற்கு மிகப் பெரிய விஷயமில்லை. உங்களுக்கு சாதனங்களை பராமரிப்பதே மிகவும் கடினமாக இருக்கிறது அல்லவா ஆனால் பாப்தாதா நினைவு மற்றும் சேவையின் பதிவேட்டை பார்க்கிறார், ஏனெனில் இரண்டின் சமநிலையில் அதிகப்படியான ஆசீர்வாதம் கொடுக்கிறார்.

எப்படி சேவைக்காக நேரத்தை ஒதுக்குகிறீர்கள், ஆனால் அதில் சில நேரங்களில் குறிப்பிட்ட நேரத்தை விட அதிகமாக நேரம் தர வேண்டியிருக்கிறது. சேவையில் நேரம் கொடுப்பது மிக நல்ல விஷயமாகும், மேலும் சேவையின் பலனும் கூட கிடைக்கிறது, சேவையில் பிஷியாக (ஈடுபாட்டுடன்) இருக்கும் காரணத்தினால் சின்ன சின்ன தேவையற்ற விஷயங்களிலிருந்து தப்பித்து விடலாம். பாப்தாதா குழந்தைகளின் சேவையில் மிகவும் குஷியடைகிறார், தைரியத்தின் மீது பலியாகிறார் ஆனால் எந்தவொரு சேவை நினைவில், முன்னேற்றத்தில் சின்னஞ்சிறு தடை ஏற்படுத்துவதற்கு நிமித்தமாக இருக்கிறது என்றால் அப்படிப்பட்ட சேவையின் நேரத்தை குறைத்து விட வேண்டும். இரவு கண்விழிக் கிறீர்கள், 12-மணி அல்லது 1-மணி ஆகி விடுகிறது என்றால் அமிர்தவேளை புத்துணர்ச்சியுடன் இருக்க முடியாது. நியமத்திற்காக (அமிர்தவேளை) எழுந்திருக்கிறோம், மற்றும்

அமிர்தவேளை சக்திசாலி யாக இல்லையென்றால் முழு நாளிலும் நினைவு மற்றும் சேவையில் வேறுபாடு ஏற்படுகிறது. சேவையில் திட்டம் போடுவதில் மற்றும் சேவையை நடைமுறை கொண்டு வருவதில் நேரம் தேவைப்படுகிறது, ஆனால் இரவு நேரத்தை தவிர்த்து 12-மணிக்கு பதிலாக 11-மணிக்கு தூங்கச் சென்று விடவேண்டும். அந்த ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக சென்றதால் சரீரத்திற்கு ஒய்வு கொடுக்கப்பட்டதால் அமிர்தவேளை நன்றாக இருக்கும், புத்திகூட புத்துணர்வுடன் இருக்கும். இல்லை என்றால் சேவை செய்து கொண்டிருக்கிறோம், ஆனால் நினைவினுடைய சார்ட் எந்தளவு இருக்க வேண்டுமோ, அந்தளவு இருப்பதில்லை, அதனால் மனம் அரித்துக் (பாதித்து) கொண்டே இருக்கிறது. இது இப்படி இருக்க வேண்டும், ஆனால் அப்படி நடைப் பெறவில்லை என்ற எண்ணம் அடிக்கடி உள்ளத்தில், மனதில் வந்துக் கொண்டேயிருக்கிறது. எனவே அந்த எண்ணங்களால் புத்திக் கூட புத்துணர்வுடன் இருப்பதில்லை. ஒருவேளை புத்தி புத்துணர்வுடன் இருந்தால், புதுப்பிக்கப்பட்ட புத்தியினால் 2-3 மணி நேரத்தின் வேலையை 1-மணி நேரத்தில் முடித்து விட முடியும். களைப்படைந்த புத்தியினால் நேரம் அதிகம் தேவைப்படுகிறது, இந்த அனுபவம் இருக்கிறதல்லவா. எந்தளவு புத்தியும் புத்துணர்வுடன், உடலும் புத்துணர்வுடன் ஆத்மீக முன்னேற்றத்தின் ரூபத்திலும் புத்துணர்வு -இரட்டிப்பு புத்துணர்வுடன் இருந்தால் ஒரு மணி நேரத்தின் வேலையை அரை மணி நேரத்தில் செய்து விடலாம். ஆகையால் எப்பொழுதும் தனது தினசரி நடவடிக்கையில் புத்தியை புத்துணர்வுடன் வைப்பதில் கவனம் வையுங்கள். அதிகமாக உறங்குவதற்கான பழக்கம் கூட வேண்டாம், ஆனால் உடலுக்கு தகுந்தவாறு அவசியம் ஒய்வு எடுப்பதற்கான கவனம் வையுங்கள். அவ்வப்பொழுது ஏதாவது சேவையின் வாய்ப்பு ஒர் இரு மாதங்களில் இரண்டு -நான்கு முறை தாமதமாகலாம், அது வேறு விஷயமாகும், ஆனால் ஒருவேளை உடல் களைப்படைந்து விடுகிறது என்றால் நினைவில் வித்தியாசம் ஏற்படும். எப்படி சேவையின் திட்டங்களை உருவாக்குகிறீர்களோ, 4-மணி நேரம் தேவைப் படுகிறது என்றால் ஒதுக்கி விடுகிறீர்கள். அதுபோல நினைவு செய்வதற்கு கூட அவசியம் நேரத்தை ஒதுக்க வேண்டும். இதையும் அவசியம் புரிந்து கொண்டு இந்த விதியின் மூலம் தனது நிகழ்ச்சியை உருவாக்குங்கள். சோம்பல் இல்லையென்றாலும் கூட உடலுக்கு ஒய்வு வேண்டும். இந்த

விதிப்படி செல்லுங்கள். ஏனெனில் ஒவ்வொரு நாளும் சேவை மென்மேலும் அதிகரித்துக் கொண்டே போவதற்கான நேரம் வந்து கொண்டே இருக்கும். நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். நல்லது. இந்த ஒரு வருடம் சேவையின் காரியம் முடிந்து விடும், பிறகு ஒய்வு எடுத்துக் கொள்ளலாம், சரி செய்து விடலாம், நினைவை மேலும் அதிகரித்துக் கொள்ளலாம் ஆனால் சேவையின் காரியம் ஒவ்வொரு நாளும் புதியதிலும் புதியதாக மற்றும் பெரியதிலும் பெரியதாக ஆகிக் கொண்டேயிருக்கும். ஆகையால் எப்பொழுதும் சமநிலையில் வையுங்கள். அமிர்த வேளையில் புத்துணர்வுடன் இருந்த பிறகும் முழு நாளில் நேரத்திற்கு தகுந்தவாறு செய்தீர்கள் என்றால் பாபாவின் ஆசீர்வாதமும் அதிகமாக கிடைக்கும், மேலும் புத்தியும் புத்துணர்வுடன் இருக்கும் காரணத்தினால் மிக வேகமாகவும் வெற்றிகரமாகவும் காரியத்தை செயல் படுத்த முடியும். புரிந்ததா?

பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார் -குழந்தைகளிடத்தில் மகிழ்ச்சி அதிகமாக இருக்கிறது, எனவே சரீரத்தை பற்றி கூட யோசிப்பதில்லை. ஊக்கம் உற்சாகத்தின் மூலம் முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்கள். முன்னேறுவது பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது, ஆனாலும் சமநிலை அவசியம் வேண்டும். செய்து கொண்டேயிருக்கிறார்கள், போய் கொண்டேயிருக்கிறார்கள், ஆனால் அவ்வப் பொழுது நிறைய வேலை இருக்கிறது, எனவே அதிகப்படியான வேலைபளுவால் ஒன்று -புத்தி களைப்படைந்து விடும் காரணத்தினால் எந்தளவு விரும்புகிறோமோ, அந்தளவு செய்ய முடிவதில்லை, இரண்டாவது -அதிகப்படியான வேலையின் காரணத்தினால் பிறரால் ஏற்படும் சிறிய விஷயத்திற்குக் கூட எரிச்சல் வருகிறது, அதனுடைய களைப்பின் காரணத்தினால் சிடுசிடுப்புத் தன்மை ஏற்படுகிறது. அதனால் குஷி குறைந்து விடும், உள்ளுக்குள் சரியாக இருக்கிறீர்கள், சேவையின் பலனும் கிடைக்கிறது, குஷியும் கிடைக்கிறது, ஆனாலும் கூட உடலும் பழையதாக இருக்கிறதல்லவா. ஆகையால் அதிகப்படியான செயல்களில் செல்லாதீர்கள். சமநிலை வையுங்கள். நினைவினுடைய சார்ட் வைப்பதில் களைப்பு என்ற தாக்கம் ஏற்படக் கூடாது. எந்தளவு சேவையில் பிசியாக இருக்கிறீர்களோ, எவ்வளவு தான் பிசியாக இருந்தாலும் சோர்வை நீக்குவதற்கான விசேஷ சாதனம் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரத்திற்கு ஒரு வினாடியில் கூட

# 1988 அவ்யக்த முரளி

சக்திசாலியான நினைவு செய்ய அவசியம் நேரம் ஒதுக்குங்கள். எப்படி யாருக்காவது உடலில் பலவீனம் ஏற்படுகிறது என்றால் உடலுக்கு ஊட்டசத்து அளிப்பதற்காக மருத்துவர்கள் இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை சக்தி அளிக்கக் கூடிய மருந்தை பருகுவதற்காக கொடுக்கிறார்கள். நேரம் ஒதுக்கி மருந்து அருந்த வேண்டியிருக்கிறதல்லவா. எனவே இடை-இடையில் ஒரு நிமிடமாவது ஒருவேளை சக்திசாலியான நினைவிற்காக நேரம் ஒதுக்கினால் அதில் (அஆஇ) எ.பி.சி என்ற அனைத்து வைட்டமின்கள் வந்து விடும்.

சக்திசாலியான நினைவு சதா ஏன் இருப்பதில்லை என்பதை கேட்டீர்கள் இல்லையா. பாபாவிற்காகவே இருக்கிறோம் மற்றும் பாபா உங்களுடையவர், அனைத்து சம்மந்தங்களில் இருக்கிறார், இதயபூர்வமான அன்பு இருக்கிறது. ஞானம் நிறைந்தவராக இருக்கிறீர்கள், பிராப்திகளின் அனுபவ சாலிகளாக இருக்கிறீர்கள், ஆனாலும் கூட சக்திசாலியான நினைவு சதா ஏன் இருப்பதில்லை. அதற்கான காரணம் என்ன? தனது நினைவின் தொடர்பை வைப்பதில்லை. தொடர்பு துண்டிக்கப் படுகிறது, எனவே மீண்டும் இணைப்பதில் நேரமும் ஆகிறது. முயற்சியும் தேவைப்படுகிறது, அதனால் சக்திசாலி ஆவதற்கு பதிலாக பலவீனம் ஆகி விடுகிறது. மறதி ஏற்படாது, நினைவு இருக்கும் ஆனால் சதா சக்திசாலியான நினைவு தானாகவே இருக்க வேண்டும். அதற்காக இந்த தொடர்பில் துண்டிப்பு ஏற்படக் கூடாது. ஒவ்வொரு நேரமும் புத்தியில் நினைவின் தொடர்பு இணைந்து இருப்பதற்கான விதி இது தான். இதைக் கூட அவசியம் புரிந்து கொள்ளுங்கள். அந்த காரியங்கள் அவசியமாக இருக்கிறது, இந்த திட்டதை முடித்து விட்டு தான் எழுந்திருக்க வேண்டும் என்று புரிந்திருக்கிறீர்கள், அதனால் நேரமும் கொடுக்கிறீர்கள், எனர்ஜியையும் கொடுக்கிறீர்கள். அதுபோல இது கூட (நினைவு) அவசியமாகும், இந்த வேலையை முடித்தப் பிறகு நினைவு செய்யலாம் என்று தள்ளிப் போடாதீர்கள். இதற்கான நேரத்தை தனது நிகழ்ச்சி நிரலில் முதலில் சேர்க்க வேண்டும். சேவைக்கான திட்டத்தை இரண்டு மணி நேரம் ஒதுக்கி ஏற்பாடு செய்கிறீர்கள், எனவே இரண்டு மணி நேரத்தின் கூடவே இதைக் கூட இடை-இடையில் செய்து தான் ஆக வேண்டும் -இதையும் சேருங்கள். அதனால் ஒரு மணி நேரம் அமர்ந்து திட்டத்தை

உருவாக்குவீர்கள், அது அரை மணி நேரத்தில் செய்து விடலாம். செய்து பாருங்கள். தானாகவே புத்துணர்வுடன் இரண்டு மணிக்கு கண்கள் திறக்கும், அது வேறு விஷயம் ஆனால் வேலைக்காக கண் விழிக்க வேண்டியிருந்தால் அதனுடைய தாக்கம் உடலில் ஏற்படும். ஆகையால் சமநிலை வைத்து எப்பொழுதுமே கவனம் வையுங்கள்.

பாப்தாதா குழந்தைகளின் இந்தளவு பிஸியைப் பார்க்கும் பொழுது இவர்களுக்கு நெற்றியில் மஜாஜ் செய்து விட வேண்டும் என்று தான் யோசிக்கிறார் ஆனால் நேரத்தை ஒதுக்கினீர்கள் என்றால் வதனத்தில் பாப்தாதா மஸாஜ் கூட செய்து விடுவார். அது கூட அலௌகீகமாக இருக்கும், லௌகீக மஜாஜ் போன்று இருக்குமா என்ன? முழுமையாக புத்துணர்வு பெற்று விடுவோம். ஒரு நிமிடத்தின் சக்திசாலியான நினைவினால் உடல் மற்றும் மனம் இரண்டுமே புத்துணர்வு பெற்றுவிடும். பாபாவின் வதனத்தில் வந்து விடுங்கள், எந்த எண்ணத்தை நினைக்கிறோமோ, அது நிறைவேறிவிடும். சரீரத்தின் சோர்வாக இருந்தாலும், புத்தியின் சோர்வாக இருந்தாலும், மனநிலையின் களைப்பாக இருந்தாலும் -பாபா வந்திருப்பதே களைப்பை நீக்குவதற்காக தான்.

இன்று இரட்டை அயல்நாட்டவருடன் தனிப்பட்ட ஆன்மீக உரையாடல் செய்து கொண்டிருக்கிறார். மிக நன்றாக சேவை செய்கிறீர்கள் மேலும் செய்து கொண்டு தான் இருக்க வேண்டும். சேவையை அதிகரிப்பது -இதுக் கூட நாடகத் திட்டப்படி உருவாகி யிருக்கிறது. எவ்வளவு தான் நீங்கள் யோசித்தாலும் -இப்பொழுது அனைத்தும் முடிவடைந்து விட்டது ஆனால் நாடகம் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சேவையில் சமநிலை வைக்க வேண்டும், மேலும் நீங்களும் அனைவருக்கும் நிமித்தமானவராகி (கருவி) சேவை செய்ய வேண்டும். இந்த திட்டத்தை யாராலும் மாற்ற முடியாது. பாபா ஒரு வருடம் சேவையிலிருந்து ஒய்வு கொடுத்தாலும் கூட, மாறி விட முடியாது. சேவையிலிருந்து விடுபட்டு அமர்ந்து விட முடியுமா? நினைவு பிராமண வாழ்க்கையின் ஊட்டசத்தாக இருப்பது போன்று சேவையும் கூட வாழ்க்கையின் ஊட்டசத்தாகும். ஊட்டசத்து அருந்தாமல் ஒருபொழுதும் யாராலும் இருந்து விட முடியுமா என்ன? ஆனால் அவசியம் சமநிலை வேண்டும். புத்தியில் சுமை ஏற்படும் அளவிற்கு

அதிகமாகவும் செய்ய வேண்டாம், அதுபோன்று சோம்பல் வரும் அளவிற்கும் இருக்க வேண்டாம். சுமையும் வேண்டாம், சோம்பேறியாகவும் இருக்க வேண்டாம், இதற்கு தான் சமநிலை என்று சொல்கிறார்கள்.

சதா நினைவு மற்றும் சேவையின் சமநிலை மூலம் பாபாவின் ஆசீர்வாதங்களுக்கு அதிகாரி யான, சதா பாபாவிற்கு சமமாக டபுள் லைட்டாக இருக்கக் கூடிய, சதா நிரந்தர சக்திசாலியான நினைவின் தொடர்பை இணைக்கக் கூடிய, சதா உடல் மற்றும் ஆத்மாவை புத்துணர்வுடன் வைக்கக் கூடிய, ஒவ்வொரு காரியத்தையும் விதிப்படி செய்யக் கூடிய, சதா சிரேஷ்ட வெற்றியை அடையக் கூடிய -அப்படிப்பட்ட உயர்ந்த, அருகாமையிலுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம்: உயர்ந்த அதிர்ஷ்டத்தின் நினைவு மூலம் தனது சக்திசாலியான சொரூபத்தில் இருக்கக் கூடிய சூரியவம்சத்தின் பதவிக்கு அதிகாரி ஆகுக!

யார் தனது உயர்ந்த அதிர்ஷ்டத்தை சதா நினைவில் வைக்கிறார்களோ, அவர்கள் சக்திசாலியான சொரூபத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சதா தனது அநாதியான உண்மை யான சொரூபம் நினைவில் இருக்கிறது. ஒருபொழுதும் தனது பொய்யான முகத்தை தாரணை செய்வதில்லை. பலமுறை மாயா பொய்யான குணம் மற்றும் செயலை சொரூபமாக மாற்றிவிடுகிறது. சிலரை கோபக்காரர்களாக, சிலரை பேராசைக்காரர்களாக, சிலரை துக்கமானவர்களாக, சிலரை அமைதி யற்றவர்களாக ஆக்கி விடுகிறது -ஆனால் உண்மையான சொரூபத்தில் இவை அனைத்திலிருந்தும் விடுபட்டு விடலாம். எந்த குழந்தை தனது உண்மையான சொரூபத்தில் நிலைத்திருக்கிறார்களோ, அவர்கள் சூரிய வம்சத்தின் பதவிக்கு உரிமையாளர் ஆகி விடுகிறார்கள்.

சுலோகன்: அனைவரின் மீதும் கருணை கொண்டவர்களாக ஆகுங்கள், அதனால் அகங்காரம் மற்றும் பொறாமை முடிந்து விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.02.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வரம் தரும் வள்ளலிடமிருந்து (வரதாதா) கிடைக்கப் பெற்ற வரங்களை (வரதானங்களை) பெருக்குவதற்கான விதி!

இன்று பாப்தாதா தன்னுடைய ஆன்மீக சாதகப்பறவை போன்ற குழந்தைகளைப் பார்த்து கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் பாபாவிடமிருந்து கேட்பதற்கும், சந்திப் பதற்கும் மற்றும் அதன் கூடவே பாபாவிற்கு சமமாக ஆவதற்கும் சாதகப்பறவையாக இருக்கின்றார்கள். கேட்பதால் பிறவி பிறவிக்கான தாகம் தனிந்து விடுகிறது. ஞான அமிர்தம் தாகத்தில் இருக்கும் ஆத்மாக்களை திருப்தி யான ஆத்மாவாக ஆக்கி விடுகின்றது. ஞானத்தை கேட்டு கேட்டு ஆத்மாக்களும் கூட பாபாவிற்குச் சமமாக ஞான சொரூபமாகி விடுகின்றனர் மற்றும் ஞான முரளியை கேட்டு கேட்டு தானும் கூட முரளிதரனின் குழந்தையாக ஆகி விடு கின்றனர் என்றும் கூறலாம். ஆன்மீக சந்திப்பை சந்தித்துக் கொண்டே பாபாவின் அன்பில் மூழ்கி விடுகின்றனர். சந்திப்பை கொண்டாடிக் கொண்டே அன்பில் கலந்தும் (லவ்லின்), மூழ்கிய ஸ்திதியில் இருக்கக்கூடியவர்களாக ஆகி விடுகின்றனர். சந்திப்பை கொண்டாடிக் கொண்டே ஒரு பாபா வேறு யாரும் இல்லை இந்த அனுபவத்தில் மூழ்கிய நிலையில் இருக்கின்றனர், சந்திப்பை கொண்டாடிக் கொண்டே தடையற்றவர்களாக சதா பாபாவின் தொடர்பின் நிறத்தில் செல்லமான குழந்தையாக ஆகி விடுகின்றனர். இவ்வாறு மூழ்கி இருக்கக்கூடிய அல்லது அன்பில் லவ்லின் ஆக ஆகி விடுகின்றனர் என்றால் அவர்களுக்கு என்ன விருப்பம் இருக்கமுடியும்? தந்தைக்கு சமமாக ஆகவேண்டும் என்ற விருப்பம் இருக்கின்றது. பாபாவுடைய ஒவ்வொரு அடி மீதும் அடி எடுத்து வைக்கக்கூடியவர்கள் என்றால் பாபாவிற்கு சமமாக ஆகக்கூடியவர்கள். பாபா எப்பொழுதும் சர்வ சக்திவான் சொரூபத்தில் இருக்கின்றார். அதுபோல குழந்தைகளும் சதா மாஸ்டர் சர்வ சக்திவான் சொரூபத்தில் ஆகி

விடுகின்றனர். பாபாவுடைய சொரூபம் -சதா சக்திசாலியான நிலை, சதா லேசான நிலை இவ்வாறு குழந்தைகளும் சமமாக ஆகி விடுகின்றனர்.

சமமாக ஆவதற்கான விஷேசமான விசயங்களை தெரிந்திருக்கின்றீர்கள் அல்லவா, எந்தெந்த விஷயங்களில் பாப்சமான் ஆக வேண்டும்? ஆகிக் கொண்டிருக்கின்றீர்களா அல்லது ஆகி விட்டீர்களா? பாபாவுடைய பெயர் எதுவோ அதுதான் குழந்தைகளுடைய பெயரும் ஆகும். விஷ்வ கல்யாணகாரி (உலகிற்கு நன்மை செய்பவர்) உங்கள் அனைவரின் பெயரும் இதுதானே. எது பாபாவுடைய ரூபமோ அதுதான் குழந்தைகளின் ரூபமும் ஆகும். எது பாபாவின் குணங்களோ அதுதான் குழந்தைகளுடைய குணமும்ஆகும். பாபாவின் ஒவ்வொரு குணத்தையும் தாரணை செய்யக்கூடியவர்கள் பாபாவிற்கு சமமாக ஆகி விடுகின்றனர். பாபாவின் செயல்தான் குழந்தைகளுடைய செயல் ஆகும். அனைத்து விஷயங்களிலும் பாபாவிற்கு சமமாக ஆகவேண்டும். அனைவருடைய லட்சியமும் இதுதான் அல்லவா. முன்னால் இருக்கக்கூடியவர்கள் அல்ல ஆனால் சமமாக ஆகக்கூடியவர்கள் இவர்களைத் தான் ஃபாலோ ஃபாதர் (பாபாவை பின்பற்றக்கூடியவர்கள்) என்று அழைக்கப்படுகின்றார்கள். அதனால் தன்னை சோதனை செய்யுங்கள் -அனைத்து விஷயங்களிலும் எதுவரை பாபாவுக்கு சமமாக ஆகியிருக்கின்றேன். சமமாக ஆவதற்கான வரதானத்தை பாபா ஆரம்பத்திலேயே குழந்தைகளுக்கு கொடுத்து விட்டார். முதல் வரதானம் என்னவென்றால் அனைத்து சக்தி களிலும் நிறைந்தவர் ஆகுங்கள். லௌகீக வாழ்க்கையில் தந்தை அல்லது குருமார்கள் ஆசிர்வாதம் கொடுப்பர் செல்வந்தர் ஆகுங்கள், புத்திரவான் ஆகுங்கள், நீண்ட ஆயுள் உடையோர் ஆகுங்கள் மற்றும் சுகமாக இருங்கள் என்று ஆசீர்வதிப்பர். பாப்தாதா என்ன வரதானங்கள் கொடுக்கின்றார்? சதா ஞானசெல்வம் மற்றும் சக்திகளுடைய செல்வத்தில் நிறைந்தவர் ஆகுங்கள். இதுதான் பிராமண வாழ்க்கையின் பொக்கிஷம் ஆகும்.

பிராமண பிறவி எப்பொழுது எடுத்தீர்களோ அப்பொழுதில் இருந்தே சங்கம யுகத்தில் ஸ்தாபனையின் காரியத்தில் கடைசி வரை வாழவேண்டும் அதாவது நீண்ட ஆயுள் உடையவராக ஆகுங்கள்.

ஒருவேளை இடையில் பிராமண வாழ்க்கையில் இருந்து வெளியேறி பழைய சன்ஸ்காரங்கள் அல்லது பழைய உலகத்திற்கு சென்று விடுகின்றனர் என்றால் பிறவி எடுக்கின்றனர் ஆனால் குறைந்த ஆயுளை உடையவர்கள் என்று கூறப்படுகின்றனர். ஏனென்றால் பிராமண வாழ்க்கையில் இருந்து இறந்து விடுகின்றனர். சிலர் இப்படி கூட இருக்கின்றனர் அதாவது கோமாவில் சென்றுவிடுகின்றனர், இருந்தாலும் இல்லாதது போல் இருக்கின்றனர் மேலும் அவ்வப்பொழுது எழுந்து விடுகின்றனர் ஆனால் அவர்கள் வாழ்வது கூட மரணத்திற்கு சமமாக கருதப்படுகிறது. அதனால் நீண்ட ஆயுள் உடையவர் ஆகுங்கள் என்றால் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை பிராமண வாழ்க்கை அல்லது உயர்வான தெய்வீக வாழ்க்கையில் அனைத்து பிராப்திகளுடன் வாழ்வது ஆகும். நீண்ட ஆயுளின் கூடவே நோயற்றவர்களாக ஆகுங்கள் என்ற வரதானமும் அவசியமானது ஆகும். ஒருவேளை ஆயுள் அதிகமாக இருக்கலாம் ஆனால் மாயையின் வியாதி பலவீனமாக ஆக்கி விடுகின்றது என்றால் அவர்கள் உயிரோடு இருந்தாலும் கூட வாழவில்லை. எனவே நீண்ட ஆயுள் உடையவர் ஆகுங்கள் என்பதன் கூடவே சதா ஆரோக்கியமாக இருக்க வேண்டும் அதாவது தடையற்றவராக இருக்க வேண்டும். அடிக்கடி கவலை மற்றும் மனமுடைந்து போகுதல் என்ற ஸ்திதியின் படுக்கையில் சென்று ஓய்வெடுக்காதீர்கள். யாராவது நோய்வாய்ப்படுகின்றார்கள் என்றால் படுக்கையில் சென்று ஓய்வெடுக்கின்றார்கள் அல்லவா. சின்ன சின்ன தொந்தரவுகளை நடக்கும் போதும், சுற்றும் போதும் அழித்து விடுகின்றீர்கள், ஆனால் பெரிய பிரச்சினை வரும் பொழுது தொந்தரவிற்கு உட்படுகின்றீர்கள் மனமுடைந்து போகின்றீர்கள் என்றால் அப்போது மனதினுடைய நிலை என்னவாக இருக்கும்? சரீரம் படுத்த படுக்கை ஆகி விட்டால் மனதில் எந்த விருப்பமும் இருக்காது, எழுந்திருக்க வேண்டும், நடக்க வேண்டும், சாப்பிட வேண்டும், குடிக்க வேண்டும் என்று மனதில் எந்த ஒரு விருப்பமும் ஏற்படாது. அதுபோல இங்கேயும் யோகாவில் அமர்கின்றனர் என்றாலும் கூட மனம் ஈடுபடுவது இல்லை, ஞானம் கேட்பார்கள் ஆனால் உள்ளப்பூர்வமாக கேட்கமாட்டார்கள். சேவையும் மனதார செய்யமாட்டார்கள் மற்றவரின் பார்வைக்காக, பயத்தினால் அல்லது உலகத்தினருக்காக செய்வார்கள். இதை சதா ஆரோக்கியமான வாழ்க்கை என்று கூறமுடியாது. எனவே நீண்ட ஆயுள் உடையவர் என்றால் நோயற்றவர் என்று கூறமுடியாது.

புத்திவான் ஆகுங்கள் அல்லது குழந்தையுடையவர் ஆகுங்கள். உங்களுக்கு குழந்தைகள் இருக்கின்றார்களா? இரண்டு, நான்கு குழந்தைகளை பெற்றெடுக்கவில்லையே? புத்திரவான் பவ என்ற வரதானம் கிடைத்துள்ளது அல்லவா! இரண்டு, நான்கு குழந்தைகளுக்காக இந்த வரதானம் கிடைக்கவில்லை ஆனால் பாபாவிற்கு சமமாக மாஸ்டர் படைப்பவர் என்ற மேடையில் இருக்கின்றீகள் என்றால் இவர்கள் அனைவரும் தன்னுடைய படைப்பாக தோன்றும் எல்லையற்ற மாஸ்டர் படைப்பவராக ஆவது, இது தான் எல்லையற்ற குழந்தைகளை பெறுவதாகும். எல்லைக்குட்பட்டவரா அல்ல, இரண்டு, நான்கு மாணவர்களை நான் உருவாக்கினேன் இவர்கள் என்னுடையவர்கள், என்பதல்ல. மாஸ்டர் படைப்பவரின் மேடை எல்லைக்கப்பாற்பட்ட மேடை ஆகும். எந்தவொரு ஆத்மாவையும் மற்றும் இயற்கையின் தத்துவங்களையும் கூட தன்னுடைய படைப்பாக புரிந்து கொண்டு விஷ்வ கல்யாணகாரி என்ற ஸ்திதியிலிருந்து ஒவ்வொருவர் மீதும் நன்மைக்கான சுபபாவனை மற்றும் சுபவிருப்பம் உள்ளவராக இருக்க வேண்டும். படைப்பிற்கு படைப்பின் மீது இந்தவொரு பாவனை இருக்கின்றது. எல்லையற்ற மாஸ்டர் படைப்பவராக ஆகி விடுகின்றீர்கள் என்றால் எந்தவொரு எல்லைக்குட்பட்ட கவர்ச்சியும் கவர்ந்திழுக்க முடியாது. சதா தங்களை எங்கு நிற்பது போல பார்க்கின்றீர்கள்? மரத்தின் படைப்பவர் விதை, மரம் கடைசி நிலைக்கு வரும் போது அந்த விதை மேலே வந்து விடுகின்றது அல்லவா! அதுபோல எல்லையற்ற மாஸ்டர் படைப்பவர் சதா தன்னை கல்பமரத்தின் மீது நின்றிருப்பது போல அனுபவம் செய்வார்கள், பாபா கூடவே மரத்தின் மீது மாஸ்டர் விதை ரூபமாக ஆகி சக்திகளை, குணங்களை, சுபபாவனை, சுபவிருப் பங்களை அன்பை சகயோகத்தின் ஒளிக்கதிர்களை பரப்புவார்கள். சூரியன் உயர்வான இடத்தில் இருப்பதால் முழு உலகத்திற்கும் தானாகவே ஒளிக்கதிர்களை பரப்புகின்றது அல்லவா! அதுபோல மாஸ்டர் படைப்பவர் அல்லது மாஸ்டர் விதை ரூபமாகி முழு மரத்திற்கும் ஒளியை அல்லது நீரை கொடுக்க முடியும் தானே! எனவே எத்தனை குழந்தைகள் இருக்கின்றார்கள்? முழு உலகமும் உங்களுடைய படைப்பாக ஆகி விட்டது அல்லவா! அதனால் மாஸ்டர் படைப்பவர் ஆகுங்கள். இதை தான் புத்ரவான் ஆகுங்கள் என்று

கூறப்படுகின்றது. உங்களுக்கு எத்தனை வரதானங்கள் இருக்கின்றது. இதை தான் பாபாவிற்கு சமமாக ஆகுவது என்று கூறப்படுகிறது. பிறந்த உடனேயே இந்த அனைத்து வரதானங்களையும் ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்கும் பாபா கொடுத்து விடுகின்றார். வரதானம் கிடைத்து விட்டது தானே அல்லது இப்போது கிடைக்க வேண்டுமா?

ஏதாவதொரு வரதானம் யாருக்காவது கிடைக்கின்றது என்றால் வரதானத்தின் கூடவே வரதானங்களை காரியத்தில் பயன்படுத்துவதற்கான விதியும் சொல்லப்படுகின்றது. ஒருவேளை அவர்கள் விதியை பயன்படுத்த வில்லை என்றால் வரதானத்தின் லாபத்தை எடுக்க முடியாது. அதனால் வரதானம் அனைவருக்கும் கிடைத்துள்ளது ஆனால் ஒவ்வொருவரும் வரதானத்தை விதியின் மூலம் விருத்தியை அடைய முடியும். விருத்தியை எப்படி அடைய முடியும், அதற்கான அனைத்தை யும் விட சகஜமான மற்றும் உயர்வான விதி இது தான் -சமயத்தின் அடிப்படையில் வரதானம் நினைவில் வர வேண்டும் மற்றும் நினைவில் கொண்டு வருவதால் சக்திசாலியாக ஆகி விடுவீர்கள் மற்றும் வெற்றி சொரூபமாக ஆகி விடுவீர்கள். சமயத்தின் அடிப்படையில் எந்தளவு காரியத்தில் பயன்படுத்துவீர்களோ அந்தளவு வரதானம் விருத்தி அடைந்து கொண்டே இருக்கும். அதாவது சதா வரதானங்களின் பலனை அனுபவம் செய்து கொண்டேயிருப்பீர்கள். இவ்வளவு உயர்வான சக்திசாலியான வரதானம் கிடைத்துள்ளது -தனக்காக காரியத்தில் பயன்படுத்தி பலனை அடைய முடியும் ஆனால் அதுமட்டும் அல்லாமல் மற்ற ஆத்மாக்களுக்கும் கூட வரதாதா பாபாவிடமிருந்து வரதானங்களை பிராப்தி செய்வதற்காக தகுதியானவர்களாக மாற்ற முடியும். இந்த சங்கம யுகத்தின் வரதானம் 21-பிறவிகள் விதவிதமான ரூபத்தில் கூடவே இருக்கும். இந்த சங்கம யுகத்தின் ரூபம் தனிப்பட்டது மற்றும் 21-பிறவிகள் இந்தவொரு வரதானம் நிறைந்த வாழ்க்கையின் கணக்குப்படி நடந்து கொண்டேயிருக்கும் ஆனால் வரதாதா மற்றும் வரதானங்கள் கிடைக்கக்கூடிய சமயம் இது ஆகும். அதனால் சோதனை செய்யுங்கள் அனைத்து வரதானங்களையும் காரியத்தில் பயன்படுத்தி சகஜமாக முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்களா?

வரதானத்தின் விஷேசத்தன்மை இதுதான் அதாவது வரதானிகள் ஒருபோதும் முயற்சி செய்ய வேண்டியிருக்காது. பக்த ஆத்மாக்கள் எப்போது முயற்சி செய்து களைப்படைந்து விடுகின்றார்களோ அப்போது பாபாவிடமிருந்து ஆசீர்வாதங்களை கேட்கின்றனர். உங்களிடம் கூட உலகத்தினர் வருகின்றனர், யோகா செய்வதற்காக முயற்சி செய்ய விரும்பவில்லை என்றால் அப்போது எந்தவிதத்தில் பேசுகின்றார்கள்? எங்களுக்கு ஆசிர்வாதம் மட்டும் கொடுங்கள், தலை மீது கை வையுங்கள் என்று கூறுகின்றனர், பிராமண குழந்தைகள் உங்கள் மீது வரதாதா பாபாவின் கை சதா உள்ளது. உயர்வான வழிதான் கை ஆகும். ஸ்துலமான கைகளை 24-மணி நேரமும் வைக்க முடியாது அல்லவா! பாபாவின் உயர்ந்த வழி என்ற வரதானத்தின் கை எப்போதும் குழந்தைகளின் மீது உள்ளது. அமிர்தவேளையில் இருந்து இரவு தூங்கும் வரை ஒவ்வொரு சுவாசத்திலும் ஒவ்வொரு எண்ணத்திலும் ஒவ்வொரு செயலிலும் உயர்வான வழி என்ற கை உள்ளது. இந்த வரதானத்தை விதிப்படி செயல்படுத்துங்கள் அப்போது ஒருபோதும் முயற்சி செய்ய வேண்டியிருக்காது.

தேவதைகளுக்கான மகிமை -ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலையில் உள்ளவர்கள் இதுதான் ஃபரிஸ்தா வாழ்க்கையின் விஷேசத்தன்மை ஆகும். தேவதைகள் வாழ்க்கையில் ஆசைகளின் விசயமே இல்லை பிராமண வாழ்க்கையில் இருந்து ஃபரிஸ்தா வாழ்க்கையில் மாறி விட்டனர் என்றால் கர்மாதீத் நிலையை அடைந்து விட்டனர் எந்த ஒரு சுத்தமான கர்மம் அல்லது வீனான கர்மம் அல்லது முடிந்து போன கர்மம், ஏதாவது ஒரு கர்மத்தின் பந்தனத்தில் கட்டுப்பட்டு செய்வது -இதை கர்மாதீத் நிலை என்று கூறமுடியாது. ஒன்று கர்மத்தின் சம்பந்தம், இன்னொன்று பந்தனம் எல்லைக்குட்பட்ட ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை இவ்வாறு மகிமை பாடப்பட்டுள்ளது. அதுபோல ஃபரிஸ்தா வாழ்க்கை அல்லது பிராமண வாழ்க்கை என்றால் கஷ்டம் என்ற வார்த்தையை அறியாத நிலை, சுமையை அறியாத நிலை, அவை எப்படி இருக்கும் என்றே தெரியாத நிலையில் இருப்பது ஆகும். அதனால் வரதானி ஆத்மா என்றால் கஷ்டம் என்ற வார்த்தையை அறியாத நிலையை அனுபவம் செய்ய கூடியவர்கள். இவர்கள் தான் வரதானி ஆத்மாக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அதனால் பாபாவிற்கு சமமாக ஆகுவது

என்றால் சதா பாப்தாதாவிடம் இருந்து கிடைத்துள்ள வரதானங்களினால் வளர்வது, சதா கவலையற்ற நிலை, நிச்சயிக்கப்பட்ட வெற்றியை அனுபவம் செய்வதாகும்.

நிறைய குழந்தைகள் புருஷார்தத்தை மிக நன்றாகவே செய்கின்றனர் ஆனால் புருஷார்தத்தில் சுமை அனுபவம் ஆகுவது -இது யதார்த்தமான புருஷாத்தம் இல்லை. அட்டென்ஷன் (கவனம்) வைப்பது பிராமண வாழ்க்கையின் விதி ஆகும் ஆனால் அட்டென்ஷன், டென்ஷன் ஆக மாறி விடுகிறது. இயற்கையான அட்டென்ஷன் இருப்பதில்லை. இதை எதார்த்தமான அட்டென்ஷன் என்று கூற முடியாது. வாழ்க்கையில் எப்படி ஸ்துலமான ஞானம் இருக்கின்றது அல்லவா அதாவது இந்த பொருள் நன்றாக உள்ளது, இந்த விஷயம் பேச வேண்டும், இதை செய்யக்கூடாது, இதை ஞானத்தின் ஆதாரத்தில் ஞானம் நிறைந்தவர்களாக ஆகின்றனர். அவர்களுடைய அடையாளம் என்னவென்றால் அவர்களிடம் இயற்கையான அட்டென்ஷன் இருக்கும் இதை சாப்பிடலாம், இதை சாப்பிடக் கூடாது, இதை செய்ய வேண்டும், இதை செய்யக்கூடாது ஒவ்வொரு அடியிலும் டென்ஷன் இருக்காது, அதாவது இதை செய்யலாமா அல்லது செய்யக்கூடாதா, இதை சாப்பிடலாமா அல்லது வேண்டாமா, அப்படி நடக்கலாமா அல்லது நடக்கக்கூடாதா? அவர்கள் இயற்கையான ஞானத்தின் சக்தியால் கவனமாக இருப்பார்கள். அதுபோல எதார்த்தமான புருஷார்த்தின் ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு செயலிலும் அட்டென்ஷன் இருக்கின்றது ஏனென்றால் ஞானத்தின் ஒளி மற்றும் சக்தி தானாகவே எதார்த்தமான ரூபத்தில் எதார்த்தமான விதத்தில் நடக்கின்றது. அதனால் தாராளமாக புருஷார்த்தம் செய்யுங்கள், அட்டென்ஷன் கண்டிப்பாக வையுங்கள் ஆனால் டென்ஷன் என்ற ரூபத்தில் அல்ல. டென்ஷனில் வந்து விடுகின்றீர்கள் என்றால் அதிக வேலை செய்யவேண்டும் அல்லது முதல் எண்ணில் வர வேண்டும் என்று விரும்புகின்றீர்கள் ஆனால் டென்ஷன் இருப்பதால் எவ்வளவு நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்தளவு செய்யவிடாது, என்னவாக ஆகவிரும்புகிறீர்களோ அவ்வாறு ஆகவிடாது மற்றும் டென்ஷன் டென்ஷனைத்தான் உருவாக்கும். ஏனென்றால் என்ன விரும்புகின்றீர்களோ அது நடக்கவில்லை என்றால் இன்னும் டென்ஷன் அதிகமாகின்றது. எனவே புருஷார்த்தம் அனைவரும்

செய்கின்றீர்கள் ஆனால் சிலர் அதிகமாக புருஷார்த்தத்தை சுமையாக்கி விடுகின்றனர் மற்றும் சிலர் முற்றிலும் கவனக்குறைவாக இருக்கின்றனர் -எது நடக்க வேண்டுமோ அது நடந்து விடும், பார்க்கலாம், யார் பார்க்கின்றார், யார் கேட்கின்றார் அதனால் அதுவும் நல்லது கிடையாது இதுவும் நல்லது கிடையாது அதனால் பேலன்ஸ் மூலமாக பாபாவின் பிளசிங்கை (வரதானம்) அனுபவம் செய்யுங்கள் சதா பாபாவின் கை என் மீது உள்ளது இந்த அனுபவத்தை சதா நினைவில் வையுங்கள். பக்த ஆத்மாக்கள் ஸ்தூலமான ஸித்திரத்தை முன்னால் வைக்கின்றனர் தலைமீது வரதானங்களின் கை உள்ளது என்ற அனுபவம் செய்கின்றனர் அதனால் நீங்களும் கூட நடந்தாலும் சுற்றினாலும் இந்த அனுபவத்தின் ஸித்திரத்தை சதா நினைவில் வையுங்கள். புரிந்ததா? நிறைய புருஷார்த்தம் செய்துள்ளீர்கள், இப்போது வரதானங்களினால் வளர்ந்து, பறந்து செல்லுங்கள். பாபாவை ஞான வள்ளலாகவும் விதாதாவாகவும் (விதிகளை வழங்குபவர்) அனுபவம் செய்தீர்கள், இப்போது வரதானங்களை அனுபவம் செய்யுங்கள். நல்லது

சதா ஒவ்வொரு அடியிலும் பாபாவை பின்பற்றக்கூடிய, சதா தன்னை வரதாதா பாபாவின் வரதானி உயர்வான ஆத்மா என்று அனுபவம் செய்யக்கூடிய, சதா ஒவ்வொரு அடியையும் சகஜமாக கடந்து செல்லக்கூடிய, சதா அனைத்து வரதானங்களையும் காரியத்தில் பயன்படுத்தக்கூடிய, பாப்சமான் ஆகக்கூடிய உயர்வான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் வரதாதாவின் ரூபத்தில் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

முக்கியமான மகாரதி சகோதரர்களிடம் சந்திப்பு: பிறந்ததிலிருந்து எத்தனை வரதானங்கள் கிடைத்துள்ளன. ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கென்று வரதானம் கிடைத்துள்ளது. பிறவியே வரதானங்களினால் ஏற்படுகிறது. இல்லையென்றால், இன்று இந்தளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்க முடியாது. வரதானங்களினால் பிறவி எடுத்துள்ளீர்கள். அதனால் முன்னேறி இருக்கின்றீர்கள். பாண்டவர்களின் மகிமை சாதாரணமானது அல்ல, ஒவ்வொருவரின் விஷேசத் தன்மையை வர்ணனை செய்தால் எவ்வளவு இருக்கும். இங்கு எந்தவொரு பாகவதம்

உருவாக்கப்பட்டுள்ளதோ அதுபோல ஆகி விட வேண்டும். பாபாவின் பார்வையில் ஒவ்வொருவரின் விஷேசத் தன்மை இருக்கின்றது. மற்ற எதை பார்த்தாலும் பார்ப்பதில்லை அறிந்திருந்தாலும் அறிந்திருக்கவில்லை. அதனால் விஷேசத்தன்மை சதா முன்னேற்றிக் கொண்டே இருக்கின்றது மற்றும் முன்னேற்றிக் கொண்டே இருக்கும். யார் பிறந்ததிலிருந்தே வரதானி ஆத்மாக்களாக இருக்கின்றார் களோ, அவர்கள் ஒருபோதும் பின்தங்கி இருக்கமுடியாது. சதா பறக்கக் கூடிய வரதானி ஆத்மாக்கள் தான் அல்லவா. வரதாதா பாபாவின் வரதானம் முன்னேற்றிக் கொண்டிருக்கின்றது. பாண்டவர்கள் குப்தமாக இருக்கின்றனர் ஆனால் பாப்தாதாவின் மனதில் சதா பிரத்யட்சமாக இருக்கின்றனர் பாண்டவர்கள் தான் நல்ல நல்ல திட்டங்களை உருவாக்குகின்றனர். சக்திகள் வேட்டையாடுகின்றனர் ஆனால் அதிசயம் அழைத்து வருபவர்களுடையது தான் ஆகும். அழைத்து வருபவர்கள் வரவில்லை என்றால் யாரை வேட்டையாடுவர்? அதனால் பாண்டவர்களுக்கு விஷேசமாக தனக்கென்று வரதானம் உள்ளது. நினைவு மற்றும் சேவையின் பலம் விஷேசமாக கிடைத்துள்ளது. நினைவின் பலமும் விஷேசமாக கிடைத்துள்ளது, சேவையின் பலமும் விஷேசமாக கிடைக்கின்றது ஏன்? அதற்கும் காரணம் உண்டு. ஏனென்றால் தேவையான நேரத்தில் எந்தளவு காரியத்தில் வருகின்றார் களோ அதற்கான விஷேசமான வரதானம் கிடைக்கின்றது. ஆரம்பத்தில் ஸ்தாபனை காரியத்தில் பாண்டவர்கள் நீங்கள் மறைந்திருந்தீர்கள் வெளிப்படவில்லை. சக்திகள் உதாரணமாக ஆகினர் மற்றும் அவர்களை உதாரணமாக பார்த்து மற்றவர்கள் முன்னேறினார்கள். எனவே எந்தளவிற்கு யார் தேவையான நேரத்தில் சகயோகியாக ஆகின்றார்களோ, வாழ்க்கையில் அல்லது சேவையில், அவர்களுக்கு நாடகப்படி விஷேசமான பலம் கிடைக்கின்றது. தன்னுடைய புருஷார்த்தமும் உள்ளது ஆனால் எக்ஸ்ட்ரா (அதிக) பலம் கிடைக்கின்றது. நல்லது.

சேவை செய்வதால் அனைத்து ஆத்மாக்களும் குஷி அடைகின்றனர் அதற்கு கூட அதிக பலம் கிடைக்கின்றது. யார் அனுபவி ஆத்மாக்களாக இருக்கின்றார்களோ அவர்களுடைய சேவை தேவைப்படுகின்றது ஏனென்றால் சாகாரத்தில் பாலனையை எடுத்துள்ளனர். அவர்களை பார்க்கும் பொழுது சதா பாபாவின் நினைவு வருகின்றது.

எப்பொழுதாவது நீங்கள் (தாதிகள்) எங்கேயாவது செல்கின்றீர்கள் என்றால் விஷேசமாக என்ன கேட்கின்றார்கள்? சரித்திரத்தை கூறுங்கள், பாபாவின் ஏதாவதொரு விசயத்தை கூறுங்கள். அதனால் விஷேசத்தன்மை உள்ளது அல்லவா. எனவே சேவையில் விஷேசத்தன்மையின் வரதானம் கிடைத்துள்ளது. நீங்கள் மேடை மீது நின்றுகொண்டு சொற்பொழிவு செய்யாமல் இருக்கலாம் ஆனால் இதுதான் அனைத்தையும் விட பெரிய சொற்பொழிவு ஆகும். சரித்திரத்தை கூறி சரித்திரவானாக ஆகக்கூடிய பிரேரணை கொடுப்பது, இது தான் அனைத்தையும் விட மிகப் பெரிய சேவையாகும். அதனால் சேவைக்கு செல்ல வேண்டும் மற்றும் சேவைக்கு நிமித்தமாகவும் ஆக வேண்டும். நல்லது.

வரதானம்: எல்லைக்குட்பட்ட பொறுப்புகளை எல்லைக்கப்பாற்பட்டதாக மாற்றம் செய்யக் கூடிய நினைவு சொரூபம் பற்றிலிருந்து வென்றவராக ஆகுங்கள்!

பற்றிலிருந்து வெற்றியடைவதற்காக தன்னுடைய நினைவு சொரூபத்தை பரிவர்த்தனை செய்யுங்கள். நான் குடும்பஸ்தர், என்னுடைய வீடு, என்னுடைய சம்பந்தம் என்ற நினைவு இருக்கும் போது தான் பற்றுதல் ஏற்படுகின்றது. இப்போது இந்த எல்லைக்குட்பட்ட பொறுப்பை எல்லையற்ற பொறுப்பாக பரிவர்த்தனை செய்யுங்கள். எல்லையற்ற பொறுப்பை நிர்வாகிக்கும் போது எல்லைக்குட்பட்டவைகள் தானாகவே முடிந்து விடும் ஆனால் எல்லையற்ற பொறுப்பை மறந்து எல்லைக்குட்பட்ட பொறுப்பை நிர்வகிக்கின்றீர்கள் என்றால் அந்த கடமை, பற்றில் கலந்து விடுகின்றது. அதனால் தன்னுடைய நினைவு சொரூபத்தை மாற்றம் செய்து பற்றிலிருந்து விடுபட்டவராக ஆகுங்கள்.

சுலோகன்: தீவிர வேகத்தில் அவ்வாறு பறந்து செல்லுங்கள் விஷயங்கள் என்ற மேகங்களை செகண்டில் கடந்து செல்ல வேண்டும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 28.02.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# டபுள் விதேஷி பிராமண குழந்தைகளின் விசேஷங்கள்!

இன்று பாக்கிய விதாதா பாப்தாதா தன்னுடைய சிரேஷ்ட பாக்கியவான் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். ஒவ்வொரு குழந்தையினுடைய பாக்கியம் சிரேஷ்டமானது தான் ஆனால் நம்பர்வாராக இருக்கிறார்கள். இன்று பாப்தாதா எல்லாக் குழந்தைகளின் உள்ளத்திலுள்ள ஆர்வம், உற்சாகத்தின் திட சங்கல்பத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார். சங்கல்பம் மூலமாக எந்த ஒரு ஆன்மீக உரையாடல் செய்தார்களோ, அது பாப்தாதாவிடம் அவர்கள் சங்கல்பம் செய்தவுடனேயே வந்து சேர்ந்து விட்டது. சங்கல்ப சக்தி, வாய்மொழி சக்தியை விட, சூட்கமமாக இருப்பதன் காரணமாக, தீவிர கதியில் நடக்கவும் செய்கிறது வந்தடையவும் செய்கிறது ஆன்மீக உரையாடலின் பாஷையே, சங்கல்ப பாஷை தான். விஞ்ஞானிகள் சப்தத்தைப் பிடிக்கின்றனர் ஆனால் சங்கல்பத்தைப் பிடிப்பதற்காக, சூட்சும சாதனம் தேவைப்படுகிறது பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் சங்கல்ப பாஷையை சதா கேட்டுக் கொண்டேயிருக்கின்றார். அதாவது சங்கல்பத்தைப் பிடிக்கின்றார். (அவரால் உணர முடிகிறது) இதற்காக புத்தியானது மிகவும் சூட்சமமானதாக, மிகவும் தூய்மையானதாக, மேலும் தெளிவாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. அப்போது தான் தந்தையுடனான ஆன்மீக உரையாடலுக்கு அவர் அளிக்ககின்ற பதிலைப் புரிந்து கொள்ளவும் முடியும்.

பாப்தாதாவிடம் எல்லோருடைய திருப்தி மற்றும் சதா மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு, நிர்விக்னமாக இருப்பதற்கு, சதா பாபா சமானமாக ஆவதற்கான சிரேஷ்ட சங்கல்பம் வந்து சேர்ந்தது. மேலும் பாப்தாதா குழந்தைகளினுடைய திட சங்சல்டம் மூலமாக சதா வெற்றியடைவதற்கான வாழ்த்துக்களை அளிக்கின்றார். ஏனென்றால், எங்கே மன உறுதி இருக்கிறதோ, அங்கே வெற்றி என்பது நிச்சயம் இது

தான் சிரேஷ்ட பாக்கியவான் ஆவதற்கான அறிகுறி சதா மன உறுதி, சிரேஷ்ட ஸ்திதி இருக்கட்டும். சங்கல்பத்திலும் கூட பலவீனம் இருக்கக்கூடாது இதற்குத்தான் சிரேஷ்டம் என்று சொல்லப்படுகிறது. குழந்தைகளினுடைய விசாலமான மனதைப் பார்த்து, குழந்தைகளுக்கு விசால மனம், விசால புத்தி, விசால சேவை, விசால சம்ஸ்காரம் இப்படி சதா விசாலபவ என்னும் வரதானத்தையும் தந்தை அளிக்கின்றார். விசால மனம் என்றால் எல்லையற்ற ஸ்மிருதி சொரூபம் ஒவ்வொரு விஷயத்திலும், எல்லையற்றது அதாவது விசாலம். எங்கே எல்லையற்ற நிலை இருக்கிறதோ, அங்கே எந்த ஒரு எல்லைக்குட்பட்ட விஷயம் தன் பக்கமாக ஆகர்ஷிக்காது இதற்குத் தான் பாப்சமான் கர்மாதீத் பரிஷ்தா வாழ்க்கை என்று சொல்லப்படுகிறது. கர்மாதீத் என்பதன் அர்த்தம், எல்லாவிதமான எல்லைக்குட்பட்ட சுபாவம், சம்ஸ்காரத்திலிருந்து விடுபட்டிருப்பது அதாவது விலகியிருப்பது. லௌகீகம் (ஹத்) என்பது பந்தனம், அலௌகீகம் (பேகத்) என்பது நிர்பந்தனம் (பந்தன. மில்லை). ஆதலால் சதா இதே விதி மூலம் வெற்றி அடைந்து கொண்டேயிருப்பீர்கள். எல்லோரும் தனக்காக இப்படி சங்கல்பம் செய்திருக்கிறீர்கள் அல்லவா? மதுபன் எல்லை வரை என்ற சங்கல்பம் இல்லையல்லவா? சதா கூடவே இருப்பீர்கள் அல்லவா?

முரளி நிறைய கேட்டிருக்கிறீர்கள். இனி என்ன கேட்டீர்களோ, அதைச் செய்ய வேண்டும் ஏனெனில் இந்த சாகார சிருஷ்டியில் சங்கல்பம், பேச்சு மற்றும் கர்மம் ஆகிய மூன்றுக்கும் மகத்துவம் உள்ளது. மேலும் இம்மூன்றிலும் மகான் தன்மை (மகானத்தா) அவசியம். இதற்குத்தான் சம்பன்ன ஸ்டேஜ் (நிறைவான நிலை) என்று சொல்லப்படுகிறது. இந்த சாகார சிருஷ்டியில் தான் முழு மார்க்குகள் வாங்குவது மிகவும் அவசியமாயிருக்கிறது. ஒருக்கால், யாராவது எனது சங்கல்பம் மிகவும் சிரேஷ்டமானதாகத்தான் இருக்கிறது ஆனால் எனது பேச்சும், கர்மமும் தான் வித்தியாசமானதாக இருக்கிறது என்று சொன்னால், ஏற்றுக் கொள்ளக் கூடியதா? ஏனென்றால், சங்கல்பத்தின் ஸ்தூலக் கண்ணாடி தான் பேச்சு மற்றும் கர்மம் சிரேஷ்ட சங்கல்பமுடையவர்களுடைய பேச்சு, இயல்பாகவே சிரேஷ்டமானதாகத்தானிருக்கும். ஆகவே, மூன்றினுடைய விசேஷமே நம்பர் ஒன் ஆவது தான்.

பாப்தாதா டபுள் விதேஷி குழந்தைகளைப் பார்த்து, சதா குழந்தைகளின் விசேஷத்தைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றார். அந்த விசேஷம் எது? எப்படி பிரம்மாபாபாவின் சிரேஷ்ட சங்கல்பம் மூலமாக அல்லது சிரேஷ்ட சங்கல்பத்தின் ஆவாஹணம் (அழைப்பு) மூலமாக திவ்ய ஜன்மம் பெற்றார்களோ, அதே போலவே, சிரேஷ்டமாகச் செய்வதில் விசேஷ கவனம் வைத்து நடக்கிறார்கள். சங்கல்பத்தின் மீது கவனம் (அட்டென்ஷன்) இருப்பதால், எந்த விதமான சூட்சும மாயையின் போராட்டத்தையும் சீக்கிரமாகவே புரிந்து கொள்வதோடு, பரிவர்த்தனை செய்வதற்காகவும், வெற்றியடைவதற்கான முயற்சியின் மூலம் சீக்கிரமாகவே முடித்து விடுவதற்கான பிரயத்தனமும் செய்கிறார்கள். சங்கல்ப சக்தியை சதா சுத்தமாக வைத்துக் கொள்வதற்கான கவனம் நன்றாக இருக்கிறது. தங்களை சோதனை செய்வதற்கான அப்பியாசமும் நன்றாக இருக்கிறது. சூட்சும சோதனை காரணமாக, சிறு பிழையையும் உணர்ந்து தந்தைக்கு முன்னால், நிமித்தமாக இருக்கும் குழந்தைகளுக்கு முன்னால் சமர்ப்பிப்பதில் திறந்த மனதுடன் இருக்கிறார்கள். ஆதலால் இந்த விதி மூலமாக, புத்தியில் குப்பைகள் சேர்வதில்லை. மெஜாரிட்டி ஒளிவு மறைவின்றி கூறுவதில் சங்கோஜப்படுவதில்லை (கூச்சம்). ஆதலால் எங்கே பரிசுத்தம் இருக்கிறதோ, அங்கே தெய்வீக குணம் சகஜமாக தாரணை ஆகி விடுகிறது. தெய்வீக குணதாரணை அதாவது ஏற்றுக் கொள்ளுகின்ற விதி தான் பரிசுத்தம் (ஸ்வச்சத்தா), எப்படி பக்தியில் கூட எப்போது லக்ஷ்மியை அல்லது வேறு எந்த தேவியையாவது ஆவாஹனம் செய்வதற்கு பரிசுத்தமாக இருப்பதையே விதியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இந்த பரிசுத்தத்தின் சிரேஷ்ட சுபாவம், தெய்வீக சுபாவத்தை தானாகவே அழைக்கிறது. ஆகவே இந்த விசேஷம் மெஜாரிட்டி டபுள் விதேஷி குழந்தைகளிடம் உள்ளது. ஆதலால், தீவிர கதியில் முன்னேறுவதற்கு கோல்டன் சான்ஸ் டிராமாபடி கிடைத்திருக்கிறது இதற்குத்தான் லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட் என்பது. ஆகவே விசேஷமாக ஃபாஸ்ட்டாக (வேகமாக) செல்வதற்கு இந்த விசேஷம் டிராமாபடி கிடைத்திருக்கிறது. இந்த விசேஷத்தை சதா நினைவில் வைத்து லாபத்தை அடைந்து கொண்டேயிருங்கள். வந்தோம், தெளிவு பெற்றோம். சென்றோம், இதற்குத்தான் மலையை, பஞ்சு போலாக்குவது என்பதாகும். பஞ்சு ஒரு விநாடியில் பறந்து விடுகிறதல்லவா? மேலும் மலைக்கு நேரம் பிடிக்கும்? ஆகவே திறந்த

மனதோடு சொன்னோம், தந்தைக்கு எவ்வளவு முன்னிலையில் வைத்தோம். மேலும் பரிசுத்தம் என்ற விதி மூலம் பரிஷ்தா ஆனோம். பறந்தீர்களா? இதற்குத்தான் லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட் கதியில் பறப்பது. டிராமாபடி இந்த விசேஷம் கிடைத்திருக்கிறது. பாப்தாதா பார்த்துக் கொண்டுமிருக்கின்றார். அநேக குழந்தைகள் சோதிக்கவும் செய்கிறார்கள். மேலும் தங்களை மாற்றிக் கொள்ளவும் செய்கிறார்கள். ஏனெனில் நாங்கள் வெற்றியடையத்தான் வேண்டும் என்ற லக்ஷியம் இருக்கிறது. மெஜாரிட்டி இந்த நம்பர் ஒன் லக்ஷியம் இருக்கிறது.

இரண்டாவது -பிறவி எடுத்தவுடனேயே, ஆஸ்தி அடைந்ததும் சேவை செய்வதற்கான ஆர்வம், உற்சாகம் தானாகவே வந்து விடுகிறது. சேவையில் ஈடுபட்டவுடன் ஒன்று சேவை செய்ததன் பிரத்யக்ஷ பலனான குஷி கிடைக்கிறது மேலும் சேவை மூலமாக விசேஷ பலமும் கிடைக்கிறது. மேலும் சேவையில் மூழ்கியிருப்பதன் காரணமாக, நிர்விக்னமாக இருப்பதற்கும் சகயோகம் (உதவி) கிடைக்கிறது. ஆகவே சேவை செய்வதற்கான ஆர்வம், உற்சாகம் தானாகவே வருவது, நேரம் கிடைப்பது மற்றும் தங்களுடைய உடல், மனம், தனம் ஆகியவற்றை பயனுள்ளதாக்குவது. இதெல்லாம் டிராமாபடி விசேஷத்தின் லிஃப்ட் கிடைத்திருக்கிறது. உங்களுடைய விசேஷத்தை அறிவீர்கள் அல்லவா? இந்த விசேஷங்களால், உங்களை எவ்வளவு முன்னேற்ற விரும்புகிறீர்களோ, அவ்வளவு முன்னேற்றிக் கொள்ள முடியும். டிராமாபடி, எந்த ஒரு ஆத்மாவுக்கும், நான் தாமதமாக வந்தேன், ஆதலால் முன்னேற முடியாது என்ற குறை இருக்காது. டபுள் விதேஷி குழந்தைகளுக்கு, தங்களுடைய விசேஷங்களுக்கான கோல்டன் சான்ஸ் (பொன்னான வாய்ப்பு) இது. பாரதவாசி களுக்கு அவர்களுக்கான கோல்டன் சான்ஸ் உள்ளது ஆனால் இன்று டபுள் விதேஷி குழந்தைகளைச் சந்திக்கின்றார். டிராமாவில் விசேஷமாக நிச்சயிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, கடைசியில், தாமதமாக வரும் எந்த ஒரு குழந்தைக்கும் குறை இருக்க முடியாது ஏனெனில் டிராமா துல்லியமாக உள்ளது இந்த விசேஷங்களால், சதா தீவிர கதியில் பறந்து கொண்டே இருங்கள். புரிந்ததா? தெளிவாகி விட்டதா? அல்லது இன்னும் ஏதாவது குறை இருக்கிறதா? தில்குஷ் மிட்டாய் தந்தைக்கு ஊட்டி விட்டீர்கள் அல்லவா? திட சங்கல்பம் செய்து விட்டோம். சதா குழந்தைகளின் வாயும் இனிப்பு, தந்தையின் வாய் எப்போதும்

இனிப்பாகவே தான் இருக்கிறது ஆனால் இனி வேறு 'போக்' வைக்கக் கூடாது. தில் குஷ் மிட்டாய் (திட சங்கல்பம்) தான் 'போக்' வேண்டும். ஸ்தூலமான 'போக்' எது வேண்டுமோ அது படைக்கலாம் ஆனால் மனதின் சங்கல்டம் என்ற 'போக்' சதா தில்குஷ் மிட்டாய் தான் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

பாப்தாதா சதா கூறுகின்றார்: எப்போது தந்தைக்குக் கடிதம் எழுதுகிறீர்களோ, அதில் இரண்டே, இரண்டு வார்த்தைகள் மட்டும் எழுதினால் போதும். அந்த இரண்டு வார்த்தைகள் எது? ஓ.கே. (O.K.) இதற்கு நிறைய பேப்பரும் வேண்டியதில்லை, மையும் செலவாகாது நேரமும் அதிகமாகாது. சிக்கனமாகி விடும். ஓ.கே. என்றால், தந்தையும் நினைவிருக்கிறது. இராஜ்யமும் நினைவிருக்கிறது. ஓ (0) என்று எப்போது எழுதுகிறீர்களோ அதில் தந்தையின் உருவம் வந்து விடுகிறது அல்லவா? மற்றும் கே. (K) என்றால் கிங்கடம் (இராஜ்யம்). ஆகவே ஓ.கே. (O.K.) என்று எழுதிவிட்டால், தந்தை மற்றும் ஆஸ்தி இரண்டும் வந்து விடுகிறது. ஆகவே, கடிதம் அவசியம் எழுதுங்கள் ஆனால் இரண்டு வார்த்தைகள். கடிதம் வந்து சேர்ந்து விடும். இப்படி கடிதம் எழுதுவதற்கு எல்லோருக்கும் வருமல்லவா? பாஷை தெரியாதவர்களும் கூட எழுத முடியும். இதில் பாஷையும் எல்லோருக்கும் ஒன்றாக ஆகி விடும். இக்கடிதம் விருப்ப முள்ளதாக இருக்கிறதல்லவா? நல்லது. இன்று முதல் குரூப்பினுடைய கடைசி நாள். பிரச்சினைகள் எல்லாமே தீர்ந்து விட்டன. பாக்கி இருப்பது. டோலி சாப்பிடுவது, மேலும் சாப்பிட வைப்பது. இன்னும் ஏதாவது மீதமிருக்கிறதா? இனி மற்றவர்களையும் இதுபோல செய்ய வேண்டும். சேவை செய்ய வேண்டுமல்லவா? நிர்விக்ன சேவாதாரி ஆகுங்கள். நல்லது.

சதா பாப்சமான் ஆவதற்கு ஆர்வம், உற்சாகத்துடன் பறக்கக்கூடிய, சதா சுயத்தை சோதித்து, மாற்றிக் கொண்டு சம்பூரணம் ஆகக்கூடிய, சதா சங்கல்பம், பேச்சு மற்றும் கர்மம் இம்மூன்றையும் சிரேஷ்டமாக்கக் கூடிய, சதா பரிசுத்தத்தின் மூலம் சிரேஷ்டத்தாவை தாரணை செய்யக்கூடிய இப்படி தீவிரகதியில் பறக்கக் கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**வரதானம்: சங்கதோஷத்திலிருந்து தூரமாக விலகியிருந்து, தந்தையின் அருகாமையாகிய பாக்கியத்தை அடையக்கூடிய பாஸ்வித் ஆனர் ஆகுக!**

உங்களுக்கு தந்தையின் சமீபமாக இருப்பது விருப்பமானதாக இருந்தால், எப்போதும் சங்கதோஷத்திலிருந்து தூரமாக இருங்கள். அநேக விதமான ஆகர்ஷணம், சோதனைத்தாள் ரூபத்தில் வரும் ஆனால் அதில் ஆகர்ஷிக்கப்பட்டுவிடக்கூடாது. சங்கதோஷம் அநேக விதமானது. வீணான சங்கல்பம் அல்லது மாயையின் ஆகர்ஷணத்தின் மூலமான சங்கடம் தவறான கர்மம் என்ற இந்த எல்லா சங்கதோஷங்களிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்பவர் தான், பாஸ் வித் ஆனர் ஆகிறார்கள்.

**சுலோகன்: நீங்கள் பரிஷ்தா ஆனீர்களானால், பிரச்சினைகளின் போது, தந்தை சுயம் உங்களுக்குப் பாதுகாப்புக் குடை நிழலாகி விடுவார்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 03.03.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஹோலி எப்படிக் கொண்டாடுவது மற்றும் சதா காலத்திற்கான மாற்றம் எப்படி நடைபெறும்?

இன்று அனைவரின் பாக்கியவிதாதா தந்தை தம்முடைய புனித அன்னப் பறவைகளுடன் ஞான ரத்தினங்களின் ஹோலி கொண்டாடுவதற்காக வந்துள்ளார். கொண்டாடுவது என்றால் சந்திப்பது. பாபா மிக அன்பான, சகஜயோகி, சதா பாபாவின் காரியத்தில் சகயோகி, சதா தூய உள்ளுணர்வு மூலம், தூய திருஷ்டி மூலம் சிருஷ்டியை மாற்றக்கூடிய புனிதமான குழந்தைகள் அனைவரையும் பார்த்து சதா மகிழ்ச்சியடைகிறார். தூய்மையாகவோ இன்றைய நாளில் புகழ் பாடப்படும் மகாத்மாக்களும் கூட தூய்மை ஆகின்றனர் ஆனால் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் மிக உயர்ந்த புனிதர்களாக ஆகிறீர்கள். அதாவது சங்கல்பத்தில் கூட, கனவில் கூட அபவித்திரதா என்பது உள்ளுணர்வையோ பார்வையையோ பாவன ஸ்திதியிலிருந்து கீழே கொண்டு வர முடியாது. ஒவ்வொரு சங்கல்பம், அதாவது ஸ்மிருதியும் பாவனமாக இருப்பதால் விருத்தி, திருஷ்டி தானாகவே பாவனமாகி விடும். நீங்கள் மட்டும் பாவனமாவதில்லை, ஆனால் இயற்கையையும் பாவனமாக்கி விடுகிறீர்கள். ஆகவே தூய்மையான இயற்கையின் காரணத் தால் வருங்காலத்தின் அநேக ஜென்மங்கள் சரீரமும் கூட பாவனமானதாகக் கிடைக்கும். அத்தகைய புனித அன்னப்பறவைகளாக அல்லது சதா பாவன சங்கல்பதாரி சிரேஷ்ட ஆத்மாக்களாக ஆகி விடுகிறீர்கள். உயர்ந்தவரிலும் உயர்ந்தவராகிய தந்தை ஒவ்வொரு வி˘யத் திலும் சிரேஷ்ட வாழ்க்கை வாழ்பவராக ஆக்கி விடுகிறார். பவித்திரதாவும் கூட உயர்ந்ததிலும் உயர்ந்த தூய்மையான, சாதாரணமானதல்ல. சாதாரண பவித்திர ஆத்மாக்கள் மகான் பவித்திர ஆத்மாக்களாகிய உங்கள் முன்னால் மனதால் ஏற்றுக் கொள்வதற்கான நமஸ்காரம் செய்வார்கள் -அதாவது உங்களது

பவித்திரதா மிக சிரேஷ்டமானது. இன்றைய இல்லறவாசிகள் தங்களை அபவித்தரமாக உணர்ந்திருக்கும் காரணத்தால் எந்தப் பவித்திர ஆத்மாக்களை மகான் எனப் புரிந்து வணங்குகிறார்களோ, அந்த மகான் ஆத்மா எனச் சொல்லிக் கொள்பவர்கள், சிரேஷ்ட பாவன ஆத்மாக்களாகிய உங்கள் முன்னால், உங்களது பவித்திரதா மற்றும் தங்களது பவித்திரதாவுக் கிடையில் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது என ஏற்றுக் கொள்வார்கள்.

இந்த ஹோலிப் பண்டிகை பாவன ஆத்மாக்களாகிய நீங்கள் பாவனமாவதற்கான விதியின் நினைவுச் சின்னமாகும். ஏனென்றால் நீங்கள் அனைவரும் நம்பர்வாரியாக பாவன ஆத்மாக்கள் பாபாவின் நினைவு என்ற ஈடுபாட்டின் அக்னி மூலமாக சதா காலத்துக்கும் அபவித்திரதாவை எரித்து விடுகிறீர்கள். அதனால் எரிப்பதற்கான ஹோலி கொண்டாடுகின்றனர். பிறகு நிறங்களின் ஹோலி அல்லது மங்களகரமான சந்திப்பைக் கொண்டாடுகின்றனர். எரிப்பது என்றால் பெயர்-அடையாளத்தை முடித்து விடுவது. அது போல் எதையாவது பெயர் அடை யாளத்தை முடிக்க வேண்டுமானால் என்ன செய்கின்றனர்? எரித்து விடுகின்றனர். ஆகவே இராவணனையும் கொன்ற பிறகு எரித்து விடு கின்றனர். இது ஆத்மாக்களாகிய உங்களது நினைவுச் சின்னம். அபவித்திரதாவை எரித்தாயிற்று என்றால் பாவன ஹோலி ஆகி விட்டோம். பாப்தாதா எப்போதும் அதாவது பிராமணர்கள் ஹோலி கொண்டாடுவது என்றால் ஹோலி (பவித்திரமாக) ஆவது. ஆகவே இதைச் சோதித்துப் பாருங்கள் -அபவித்திரதாவை வெறுமனே கொன்றீர்களா, அல்லது எரித்து விட்டீர்களா? செத்துப் போனவர்கள் பிறகும் உயிர்த்தெழு கின்றனர். எங்காவது சுவாசம் மறைவாக இருந்து விடுகிறது ஆனால் எரிப்பது என்றால் பெயர்-அடையாளத்தை முடித்து விடுவது. எது வரை சென்று சேர்ந்திருக்கிறோம் என்று தன்னைத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும். கனவிலும் கூட அபவித்திரதாவின் மறைந்துள்ள சுவாசம் மீண்டும் உயிர்த்தெழுந்து விடக் கூடாது. இதைத் தான் சிரேஷ்ட பாவன ஆத்மா எனச் சொல்வது. சங்கல்பத்தினால் கனவும் கூட மாற்றமடைந்து விடுகிறது.

இன்று வதனத்தில் பாப்தாதா அவ்வப்போது குழந்தைகளின் சங்கல்பங்கள் மூலம் அல்லது எழுத்து மூலம் செய்துள்ள

உறுதிமொழியைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஸ்திதியில் மகாரதியாக இருக்கலாம், அல்லது சேவையில் மகாரதியாக இருக்கலாம் -இருவரும் அவ்வப் போது மிக நல்ல-நல்ல உறுதிமாழிகளை எடுத்துக் கொண்டுள்ளனர். மகாரதிகளும் இரண்டு வகையாக உள்ளனர். ஒன்று, தங்களின் வரதானம் அல்லது புருஷார்த்தத்தின் ஆதாரத்தில் மகாரதி மற்றும் இரண்டாவது, ஏதேனும் சேவையின் விசேஷதாவினுடைய ஆதாரத்தில் மகாரதி. இருவருமே மகாரதி என்று தான் சொல்லப்படுகின்றனர் ஆனால் முதலில் சொல்லப் பட்ட ஸ்திதியின் ஆதாரத்தில் மகாரதி ஆனவர்கள் சதா மனதினால் அதிந்திரிய சுகத்தின், திருப்தியின், அனைவருடைய மனதின் அன்பினுடைய பிராப்தி சொரூபத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பார்கள். மற்றும் இரண்டாவது நம்பர் சேவையின் விசேˆதாவின் ஆதாரத்தைக் கொண்டவர்கள் உடலால், அதாவது வெளியிலிருந்து சேவையின் விசேˆ தாவின் பலன் சொரூபமாக திருப்தியாகக் காணப் படுவார்கள். சேவையின் விசேஷதாவின் காரணத்தால் சேவையின் ஆதாரத்தில் மனதின் திருப்தி உள்ளது. சேவையின் விசேஷதாவின் காரணத்தால் அனைவரின் அன்பும் கிடைக்கும் ஆனால் மனதால் அல்லது இதயத்தால் சதா இருக்காது. சில நேரம் வெளிப்புறமாக, சில நேரம் இதயபூர்வமாக இருக்கும் ஆனால் சேவையின் விசேˆதா மகாரதி ஆக்கி விடுகிறது. எண்ணிக்கையில் மகாரதிகளின் வரிசையில் வந்து விடுகிறார்.

ஆக, இன்று பாப்தாதா மகாரதி மற்றும் புருஷார்த்தி -இருவரின் உறுதிமொழிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவ்வப்போது சமீபத்தில் தான் உறுதிமொழிகள் நிறைய கொடுத்துள்ளனர். ஆக என்ன பார்த்தார்கள்? உறுதிமொழியால் பலனோ கிடைக்கிறது. ஏனென்றால் உறுதியின் முழு கவனம் உள்ளது. அடிக்கடி உறுதிமொழியின் ஸ்மிருதி சக்தியைக் கொடுக்கிறது. இந்தக் காரணத்தால் கொஞ்சம் மாற்றமும் நிகழ்கிறது ஆனால் விதை உள்ளே மறைந்துள்ளது. அதனால் எப்போது அந்த மாதிரி சமயம் அல்லது பிரச்சினை வருகிறதோ, அப்போது பிரச்சினை அல்லது காரணத்தின் நீர் கலப்பதால் மறைந்திருந்த விதை மீண்டும் இலைகளை வெளிப் படுத்தத் தொடங்குகிறது. சதா காலத்துக்குமாக அழிந்து போவதில்லை. பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் -எரிப்பதற்கான ஹோலியை யார்

கொண்டாடியிருக்கிறார்கள்? விதை எப்போது எரிக்கப்படுகிறதோ, எரிந்து விட்ட விதை ஒருபோதும் பலன் கொடுப்பதில்லை. உறுதிமொழியோ அனைவருமே எடுத்துக் கொண்டுள்ளனர் --அதாவது நடந்து முடிந்ததை முடிந்து போனதாக ஆக்கி, இது வரை என்ன நடந்ததோ, தனக்காக நடந்திருந்தாலும் சரி, மற்றவருக்கு என்றாலும் சரி, அனைத்தையும் முடித்து மாற்றி விடுவோம். இது போல் அனைவரும் அவ்வப்போது உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? ஆன்மிக உரையாடலில் அனைவரும் உறுதிமொழி எடுக்கின்றனர் இல்லையா? ஒவ்வொருவரின் பதிவேடும் பாப்தாதாவிடம் உள்ளது. மிக நல்ல ரூபத்தில் உறுதிமொழி எடுக் கின்றனர். சிலர் பாடல்-கவிதை மூலமாக, சிலர் ஸித்திரங்கள் மூலமாக.

பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார், எவ்வளவு மாற்றம் நடைபெற வேண்டுமோ அந்த அளவு மாற்றம் ஏன் நடைபெறுவதில்லை? காரணம் என்ன? ஏன் சதா காலத்திற்குமாக முடிந்து போவதில்லை? சதா காலத்திற்கும் முடிந்து போகாமல் இருப்பதற்கான காரணம் என்ன? அப்போது என்ன பார்த்தார்? தனக்காக அல்லது மற்றவர்களுக்காக சங்கல்பம் செய்கிறீர்கள் -இந்த பலவீனத்தை மீண்டும் வரவிட மாட்டோம். அல்லது மற்றவர்களுக்காக யோசிக்கிறீர்களா -யாராவது ஆத்மாவோடு கணக்கு-வழக்கு முடிகிற காரணத்தால் சங்கல்பம், பேச்சு, கர்மத்தில் சம்ஸ்கார மோதல் உள்ளது, அதை மாற்றுவோம் ஆனால் சமயத்தில் மீண்டும் ஏன் ரிப்பீட் ஆகிறது? அதன் காரணம்? யோசிக்கிறீர்கள், இனிமேற் கொண்டு இந்த ஆத்மாவின் இந்த சம்ஸ்காரத்தை அறிந்த போதிலும் தன்னைப் பாதுகாப்பாக வைத்து அந்த ஆத்மாவுக்கும் கூட சுப பாவனை, சுப விருப்பம் கொடுப்போம் ஆனால் எப்படி மற்றவர் களின் பலவீனங்களைப் பார்ப்பது, கேட்பது அல்லது கிரகிப்பதற்கான பழக்கம் இயற்கை யானதாக மற்றும் நீண்ட காலத்தினுடையதாக ஆகி விட்டுள்ளதோ, இந்தப் பழக்கத்தை வைத்திருக்க மாட்டோம் -இதுவோ மிக நல்லது ஆனால் அதன் இடத்தில் எதைப் பார்ப்பீர்கள்? எதை அந்த ஆத்மாவிடமிருந்து கிரகித்துக் கொள்வீர்கள்? இதை அடிக்கடி கவனத்தில் வைப்பதில்லை. இதைச் செய்யக் கூடாது என்பதோ நினைவில் உள்ளது ஆனால் அத்தகைய ஆத்மாக்களுக்காக என்ன செய்ய வேண்டும்? என்ன யோசிக்க வேண்டும்? எதைப் பார்க்க வேண்டும்? இந்த விˆயங்கள்

இயற்கையான கவனத்தில் இருப்பதில்லை. காலியான இடத்தை நல்லபடியாகப் பயன்படுத்தவில்லை என்றால் காலி இடத்தில் குப்பை அல்லது கொசு முதலியவை தாமாகவே உற்பத்தியாகி விடும். ஏனென்றால் வாயுமண்டலத்தில் மண்-தூசு, கொசு முதலியவை இருக்கவே செய்கின்றன. ஆகவே அவை கொஞ்சம்-கொஞ்சமாக மீண்டும் உருவாகி அதிகரித்து விடும். ஏனென்றால் இடம் நிரப்பப் படவில்லை. ஆகவே எப்போ தெல்லாம் ஆத்மாக்களின் தொடர்பில் வருகிறீர்களோ, முதலில் இயற்கையாக மாற்றம் செய்யப் பட்டுள்ள சிரேஷ்ட சங்கல்பங்களின் சொரூபம் ஸ்மிருதியில் வர வேண்டும். ஏனென்றால் ஞானம் நிறைந்தவராகவே இருக்கிறீர்கள். அனைவரின் குணங்கள், காரியங்கள், சம்ஸ்காரங்கள், சேவை, சுபாவ மாற்றத்தின் சுப சம்ஸ்காரம் அல்லது இடம் சதா நிறைந்திருக்குமானால் அசுத்தத்தைத் தானாகவே முடித்து விடும்.

எப்படி இதற்கு முன்பும் கேட்டிருக்கிறீர்கள் -அநேகக் குழந்தைகள் நினைவில் அமரும் போது அல்லது பிராமண வாழ்க்கையில் நடமாடும் போதும் சுற்றி வரும் போதும் நினைவின் அப்பியாசம் செய் கிறார்கள் என்றால் நினைவில் சாந்தியின் அனுபவம் செய்கிறார்கள் ஆனால் குஷியின் அனுபவம் செய்வதில்லை. வெறும் சாந்தியின் அனுபவம் சில நேரம் தலையை பாரமாக்கி விடுகிறது அல்லது தூக்கத்தின் பக்கம் கொண்டு சென்று விடுகிறது. சாந்தியின் ஸ்திதியோடு கூடவே குஷியும் இருப்ப தில்லை. ஆக, எங்கே குஷி இல்லையோ, அங்கே ஊக்கம்-உற்சாகம் இருப்பதில்லை. மேலும் யோகத்தில் அமர்ந்தாலும் தனக்குத் தானே திருப்தி இருப்பதில்லை. களைத்துப் போனவராக இருக்கிறார்கள். சதா யோசிக்கும் மனநிலையில் இருக்கிறார்கள், யோசித்துக் கொண்டே இருக்கிறார்கள். குஷி ஏன் வருவதில்லை? இதற்கும் காரணம் உள்ளது. ஏனென்றால் இதை மட்டும் யோசிக்கிறீர்கள் -நான் ஆத்மா, பிந்துவாக இருக்கிறேன், ஜோதி சொரூபமாக இருக்கிறேன், பாபாவும் இது போலவே இருக்கிறார் ஆனால் நான் எத்தகைய ஆத்மாவாக இருக்கிறேன்? ஆத்மாவாகிய எனது விசேஷத்தன்மை என்ன? எப்படி நான் பத்மாபதம் பாக்கியவான் ஆத்மாவாக இருக்கிறேன்? நான் ஆதியில் (முதலில்) படைக்கப்பட்ட ஆத்மா, நான் பாபாவின் மன சிம்மாசனதாரி ஆத்மா. குஷியைத் தரும் இந்த விசேஷதாக்களை நீங்கள் யோசிப்பதில்லை. வெறுமனே

பிந்தியாக இருக்கிறேன், ஜோதியாக இருக்கிறேன், சாந்த சொரூபமாக இருக்கிறேன் என்றால் ஒன்றுமில்லாத நிலைக்குச் சென்று விடுகிறீர்கள். அதனால் தலை பாரமாகி விடுகிறது. அது போலவே தனக்காக அல்லது மற்ற ஆத்மாக்களுக்காக மாற்றத்திற்கான திட சங்கல்பம் செய்கிறீர்கள் என்றால் தனக்காக, மற்ற ஆத்மாக்களுக்காக சுப, சிரேஷ்ட சங்கல்பங்கள் மற்றும் விசேஷதாவின் சொரூபத்தை சதா இமர்ஜ் ரூபத்தில் வைத்திருப் பீர்களானால் மாற்றம் நிகழ்ந்து விடும்.

எப்படி இந்த சங்கல்பம் வருகிறது -அதாவது இவர் இப்படித் தான், இது இந்த மாதிரி தான் நடக்கும், இவர் இப்படித் தான் செய்வார். இதற்கு பதிலாக இப்படி யோசியுங்கள் -இந்த விசேஷத்தன்மையின் படி இவர் விசேஷமானவர். எப்படி பலவீனமானவருக்கு இப்படி மற்றும் அப்படி என்று வருகிறதோ, அது போல் சிரேஷ்டதாவின் விசேஷத்தன்மையின் இப்படி, அப்படி என்பதை முன்னால் கொண்டு வாருங்கள். ஸ்மிருதியை, சொரூபத்தை, உள்ளுணர்வை, திருஷ்டியை மாற்றத்தில் கொண்டு வாருங்கள். இந்த ரூபத்தில் தன்னையும் பாருங்கள், மற்றும் மற்றவர்களையும் பாருங்கள். இதைத் தான் இடத்தை நிரப்பி விட்டீர்கள், காலியாக விடவில்லை எனச் சொல்வது. இந்த விதியின் மூலம் எரிப்பதற்கான ஹோலி கொண்டாடுங்கள். தனக்காக அல்லது மற்றவர் களுக்காக ஒரு போதும் இது போல் யோசிக் காதீர்கள் -அதாவது, பாருங்கள், நான் சொல்லியிருந்தேன் இல்லையா, இவர் மாறவே மாட்டார் என்று? ஆனால் அந்தச் சமயம் தன்னைத் தான் கேளுங்கள், நான் மாறி இருக்கிறேனா? சுய மாற்றம் தான் மற்றவர்களின் மாற்றத்தையும் முன்னால் கொண்டு வரும். ஒவ்வொருவரும் இதை யோசியுங்கள் -முதலில் நான் மாறுவதற்கான உதாரணமாக ஆவேன். இதைத் தான் ஹோலி எரிப்பது எனச் சொல்வது. எரிக்காமல் கொண்டாட்டம் என்பது கிடையாது. முதலில் எரிப்பது தான் நடை பெறும். ஏனென்றால் எப்போது எரித்து விட்டீர்களோ, அதாவது தூய்மையாகி விட்டீர்களோ, சிரேஷ்ட பவித்திரமாக ஆகி விட்டீர்கள். ஆக, அத்தகைய ஆத்மா பாபாவுடன் அல்லது சர்வ ஆத்மாக்களுடன் மங்களகரமான சந்திப்பை, அதாவது கல்யாண்காரி சிரேஷ்ட சுப சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டே இருப்பார். புரிந்ததா?

அந்த மாதிரி ஹோலி கொண்டாட வேண்டும் இல்லையா? எங்கே ஊக்கம்-உற்சாகம் உள்ளதோ, அங்கே ஒவ்வொரு கணமும் உத்சவம் (பண்டிகை) இருக்கவே செய்கிறது. ஆகவே குஷியுடன் நன்றாகக் கொண்டாடுங்கள், விளையாடுங்கள் -உண்ணுங்கள், மகிழ்ந்திருங்கள் ஆனால் சதா ஹோலி (புனிதர்) ஆகி சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டே இருங்கள். நல்லது.

சதா ஒவ்வொரு நொடியும் பாபாவிடமிருந்து வரதானங்களின் வாழ்த்துகளைப் பெறக்கூடிய, சதா ஒவ்வொரு பிராமண ஆத்மா மூலமாகவும் சுப பாவனையின் வாழ்த்துகளைப் பெறக்கூடிய, சதா மிக சிரேஷ்டமான பாவன ஆத்மாக்களுக்கு, சதா சேர்க்கையின் வண்ணங்களால் வண்ணமயமாக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு, சதா பாபாவுடன் சந்திப்பைக் கொண்டாடக் கூடிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே!

**தனிப்பட்ட சந்திப்பின் சமயத்தில் வரதான ரூபத்தில் சொல்லப்பட்ட மகாவாக்கியங்கள்:**

**1. சதா தன்னை பாபா நினைவு என்ற குடைநிழலில் இருக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மா என அனுபவம் செய்கிறீர்களா?** குடைநிழல் தான் பாதுகாப்பிற்கான சாதனம். இந்தக் குடைநிழலில் இருந்து சங்கல்பத் தில் கூட காலை வெளியே வைத்து விட்டீர்களானால் என்ன நடக்கும்? இராவணன் தூக்கிச் சென்று விடுவான் மற்றும் சோகவனத்தில் அமர்த்தி விடுவான். ஆக, அங்கேயோ செல்லக் கூடாது. சதா பாபாவின் குடைநிழலில் இருக்கக் கூடிய, பாபாவின் சிநேகி ஆத்மா நான் --இதே அனுபவத்தில் இருங்கள்.

**2. சதா தன்னை பாப்தாதாவின் கண்களில் நிறைந்துள்ள ஆத்மா என அனுபவம் செய்கிறீர்களா?** கண்களில் நிறைந்துள்ள ஆத்மாவின் சொரூபம் என்னவாக இருக்கும்? கண்களில் என்ன உள்ளது? பிந்தி. பார்ப்பதற்கான முழு சக்தியும் அந்த பிந்தியில் உள்ளது இல்லையா? ஆக, கண்களில் நிறைந்திருப்பவர் என்றால் சதா பிந்தி சொரூபத்தில் நிலைத்திருப்பவர் -அந்த மாதிரி அனுபவம் ஆகிறது இல்லையா? இதைத் தான் கண்ணின் மணி எனச் சொல்வது. ஆக, தன்னை சதா இந்த ஸ்மிருதி மூலம் முன்னேற வைத்துக் கொண்டே இருங்கள். சதா இதே

நஷாவில் இருங்கள் -அதாவது நான் பாபாவின் கண்ணின் மணியாகிய ஆத்மா.

வரதானம்: தனது அலௌகிக ஆன்மிக உள்ளுணர்வு மூலம் அனைத்து ஆத்மாக்கள் மீதும் தனது பிரபாவத்தை ஏற்படுத்தக் கூடிய மாஸ்டர் ஞானசூரியன் ஆகுக!

கவரக்கூடிய பொருள் அக்கம் பக்கம் உள்ளவர்களை எப்படி தன் பக்கமாகக் கவர்ந்திழுக்கிறது, அனைவரின் கவனம் அங்கே செல்கிறது. அது போல் எப்போது உங்களது உள்ளுணர்வு அலௌகிக மானதாக, ஆன்மிகமானதாக உள்ளதோ, அப்போது உங்கள் பிரபாவம் அநேக ஆத்மாக்கள் மீது தானாகவே படும். அலௌகிக உள்ளுணர்வு என்றால் விலகிய மற்றும் அன்பான தன்மையின் ஸ்திதி தானாகவே அநேக ஆத்மாக்களைக் கவர்ந்திழுக்கும். அத்தகைய அலௌகிக சக்திசாலி ஆத்மாக்கள் மாஸ்டர் ஞான சூரியன் ஆகி தங்களது பிரகாசத்தை நாலாபுறமும் பரவச் செய்வார்கள்.

சுலோகன்: சதா சுவமானத்தின் இருக்கையில் நிலைத்திருப்பீர்களானால் சர்வ சக்திகள் உங்கள் கட்டளையை ஏற்று அதன்படி நடந்து கொண்டே இருக்கும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 07.03.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பாக்கிசாலி குழந்தைகளின் சிறந்த பாக்கியங்களின் பட்டியல்!

இன்று பாக்கியத்தை உருவாக்கக்கூடிய பாப்தாதா தனது பாக்கியசாலி குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு பிராமண குழந்தைகளின் பாக்கியம் (தலைவிதி) உலகத்திலுள்ள சிறந்த ஆத்மாக்களை விட மிகவும் உயர்ந்ததாக இருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு பிராமண ஆத்மாக் களும் கோடியில் சிலர், சிலரிலும் ஒரு சிலராகத் தான் இருக்கிறார்கள். உலகத்திலுள்ள 500-மில்லியன் ஆத்மாக்கள் எங்கே! மற்றும் பிராமணர்களாகிய உங்களின் சின்னஞ்சிறிய உலகம் எங்கே! அவர்களை (உலகத்தை) ஒப்பிடுகையில் எந்தளவு குறைவானவர்களாக இருக்கின்றோம். ஆகையால் ஞானமில்லாத, தன்னைப் பற்றி தெரியாத ஆத்மாக்களை ஒப்பிடுகையில் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் அனைவரும் சிரேஷ்ட பாக்கியசாலிகளாக இருக்கிறீர்கள். ஒவ்வொரு பிராமணர்களின் நெற்றியிலும் பாக்கியத்தின் ரேகை மிக தெள்ள தெளிவாக நட்சத்திரத்தை போல ஜொலித்துக் கொண்டிருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். எல்லைக்குட்பட்ட ஜோதிடர்கள் கைகளின் ரேகைகளின் அமைப்பை பார்க்கிறார் ஆனால் இந்த தெய்வீக ஈஸ்வரிய பாக்கியத்தின் ரேகையை ஒவ்வொருவரின் நெற்றியிலும் தென்படுகிறது. எந்தளவு உயர்ந்த பாக்கியம் அந்தளவு பாக்கியசாலி குழந்தைகளின் நெற்றியில் சதா அலௌகீக ஒளி ஜொலித்துக் கொண்டேயிருக்கும். பாக்கியசாலி குழந்தைகளின் மற்ற

அடையாளங்கள் என்ன தென்படுகிறது? சதா முகத்தில் ஈஸ்வரிய ஆன்மீக புன்னகை உணர முடியும். பாக்கியசாலிகளின் கண்கள் அதாவது தெய்வீக பார்வை எவருக்கு வேண்டு மானாலும் எப்பொழுதும் குஷியின் அலை உருவாக்குவதற்கு கருவி ஆகிறது. யாருக்கெல்லாம் திருஷ்டி கிடைக்கிறதோ, அவர்களுக்கு ஆன்மீகத் தன்மையின், ஆன்மீக தந்தையின், பரமாத்மா நினைவு அனுபவமாகும். பாக்கியசாலி ஆத்மாக்களின் தொடர்பில் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் இலேசான அதாவது ஒளியின் அனுபவம் ஏற்படும். பிராமண ஆத்மாக்களில் கூட நம்பர்வார் (வரிசைகிரமம்) என்பது இறுதிவரை இருக்கத் தான் செய்யும், ஆனால் அடையாளங்களும் கூட நம்பர்வார் அனைத்து பாக்கியசாலி குழந்தைகளினுடையதாகும். போக போக மேலும் கூட பிரத்யக்ஷம் ஆகிக் கொண்டே இருக்கும்.

இப்பொழுது சிறிது காலம் போக விடுங்கள்,. இன்னும் சிறிது காலத்தில் உச்சநிலை, இறுதி நிலை -இரண்டுமே அனுபவம் ஆகும்பொழுது நாலாபக்கத்திலும் ஞானமில்லாத ஆத்மாக்களை எல்லைக்குட்பட்ட வைராக்கிய உள்ளுணர்வில் வருவார்கள். மேலும் பாக்கியசாலி ஆத்மாக்களகிய நீங்களும் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வை அனுபவத்தில் கொண்டு வருவீர்கள். இப்பொழுது உலகத்தினருக்கு வைராக்கியம் இல்லை. ஒருவேளை கொஞ்சம் அதிகமாக ரிகர்சல் (விநாசத்தின் ஒத்திகை) நடந்தாலும் கூட இது நடந்துக் கொண்டு தான் இருக்கும் என்று மேலும் அலட்சியம் என்ற தூக்கத்தில் தூங்கி விடுகிறார்கள் ஆனால் எப்பொழுது உச்சநிலை மற்றும் இறுதி காலக்கட்டத்தின் காட்சி முன்னால் வருகிறது என்றால் தானாகவே எல்லைக்குட்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு உருவாகும் மேலும் உச்சக்கட்ட டென்சன் (மன உளைச்சல்) இருக்கும் காரணத்தினால் அனைவரது கவனமும் ஒரு பாபாவிடம் செல்லும். அந்த நேரத்தில் அனைத்து ஆத்மாக்களின் உள்ளத் திலிருந்தும் அனைவரையும் படைப்பவர், அனைவருக்கும் தந்தையானவர் ஒருவர் தான், மேலும் புத்தி பல வழிகளிலிருந்து விடுப்பட்டு ஒரு பக்கம் தானாகவே இருக்க வேண்டும் என்ற சப்தம் வெளிப்படும். அப்படிப்பட்ட நேரத்தில் பாக்கியசாலி ஆத்மாக் களாகிய உங்களின் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வின் மனநிலை தானாகவே நிரந்தரமாகி விடும். மற்றும் ஒவ்வொருவரின் நெற்றியிலிருந்து

பாக்கியத்தின் ரேகை தெளிவாக தென்படும். இப்பொழுதும் கூட உயர்ந்த பாக்கியசாலி குழந்தைகளின் புத்தியில் சதா என்ன இருக்கும்? பகவான் மற்றும் பாக்கியம்.

அமிர்தவேளையிலிருந்து தனது பாக்கியத்தின் பட்டியலை எடுங்கள். பாக்கியசாலி குழந்தைகளை அமிர்தவேளையில் சுயம் பாபா வந்து எழுப்புகிறார், மேலும் வரவேற்கவும் செய்கிறார். தூங்க நினைத் தாலும் கூட தூங்கவிடுவதில்லை, யாரோ எழுப்புகிறார்கள், அழைக் கிறார்கள் என்பது மிகவும் அன்பான குழந்தைகளின் அனுபவமாக இருக்கிறது. அப்படிப்பட்ட அனுபவம் ஏற்படுகிறதல்லவா. அமிர்தவேளையிலிருந்து தனது பாக்கியத்தை பார்த்தீர்களா. பக்தியில் தேவதைகளை பகவான் எனப் புரிந்து கொண்டு மணி அடித்து எழுப்பி விடு கிறார்கள், மேலும் உங்களை இறைவன் அவரே வந்து எழுப்பி விடுகிறார். எவ்வளவு பாக்கியசாலிகளாக இருக்கிறீர்கள். அமிர்தவேளையிலிருந்து பாபா குழந்தைகளின் சேவாதாரி யாகி சேவை செய்கிறார், பிறகு வரவேற்கவும் செய்கிறார் -வாருங்கள், பாபாவை போன்று மனநிலையை அனுபவம் செய்யுங்கள், என்னுடன் அமர்ந்துக் கொள்ளுங்கள். பாபா எங்கு அமர்ந்திருக்கிறார்? உயர்ந்த இடத்தில் (பரந்தாமம்) மற்றும் உயர்ந்த மனநிலையில். பாபாவுடன் அமர்ந்துக் கொண்டால் மனநிலை எப்படி இருக்கும். ஏன் கடின உழைப்பு செய்ய வேண்டும்.? பாபா வுடன் அமர்ந்து விட்டால் சங் கா ரங் (யாருடன் அமர்ந்திருக்கிறோமோ, அவரை போன்று ஆகி விடுவோம்). இடத்தை பொறுத்தும் மனநிலை தானாகவே அமையும். மதுபன் என்ற இடத்தை வந்து சேரும் பொழுது மனநிலை எப்படி இருக்கிறது? நினைவு செய்ய வேண்டியிருக்கிறதா அல்லது நினைவி லேயே இருக்கிறீர்களா? அதனால் தான் இங்கு இருப்பதற்கான ஆசை வைக்கிறோம் அல்லவா. இப்பொழுது அனைவருக்கும் மேலும் 15-நாட்கள் இருங்கள் என்றால் குஷியில் நாட்டியம் ஆடுவீர்கள் அல்லவா. எனவே இடத்தை பொறுத்து மன நிலையில் தாக்கம் ஏற்படுகிறது, அதுபோல அமிர்த வேளையில் பரந்தாமத்திலோ மற்றும் சூட்சமவதனத்திலோ சென்று விடுங்கள், பாபாவுடன் சென்று அமர்ந்து விடுங்கள். அமிர்த வேளை சக்திசாலியாக இருந்து விட்டால், முழுநாளும் தானாகவே உதவி கிடைக்கும். எனவே தனது பாக்கியத்தை நினைவில் வையுங்கள். ஆஹா எனது பாக்கியம்! தினசரி நடவடிக்கை இறைவனோடு ஆரம்பமாகிறது.

பிறகு தனது பாக்கியத்தை பாருங்கள் -பாபா, அவரே ஆசிரியராகி தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு படிப்பிக்க வருகிறார். உலகத்தினர் இறைவனை சென்று அடைவதற்காக முயற்சி செய் கிறார்கள், ஆனால் இறைவன் அவரே உங்களிடம் ஆசிரியராகி படிப்பிக்க வந்திருக்கிறார். எவ்வளவு பாக்கியசாலிகளாக இருக்கிறீர்கள். எவ்வளவு காலமாக சேவையின் கடமையை செய்து கொண்டிருக்கிறார். எப்பொழுதாவது அலட்சியமாக இருந்திருக்கிறாரா? இன்று தலை வலியாக இருக்கிறது, இன்று இரவு தூங்கவே இல்லை என சாக்குபோக்கு சொன்னாரா? எனவே பாபா களைப் பற்ற சேவாதாரி ஆகி சேவை செய்கிறார், அதனால் பாபாவை போல குழந்தைகளும் களைப்பற்ற சேவாதாரியாக இருக்க வேண்டும். தனது தினசரி நடவடிக்கை களை பாருங்கள். எவ்வளவு பெரிய பாக்கியமாக இருக்கிறது? பாபா சதா அன்பானவராக, செல்லமான குழந்தைகளுக்கு சொல்கிறார் -எந்தவித சேவையாக இருந்தாலும், லௌகீகமாகவோ, அலௌகீகமாகவோ அல்லது குடும்பத்திலோ, சேவை நிலையத்திலோ, -எந்த வித சேவை செய்யுங்கள், எந்தவித செயலையும் செய்யுங்கள், ஆனால் என் மூலம் செய்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார், நான் கருவியாக இருக்கிறேன், நான் சேவை செய்வதற்காக கருவியாக இருந்து செய்து கொண்டிருக்கிறேன், செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக் கிறேன். இங்கும் கூட தனியாக இருப்பதில்லை, செய்விப்பவர் ரூபத்தில் பாபா காரியம் செய்யும் நேரத்திலும் கூட சேர்ந்தே இருக்கிறார். நீங்கள் வெறும் கருவியாக மட்டும் தான் இருக்கிறீர்கள். இறைவன் சிறந்த செய்விப்பவராக இருக்கிறார். ஏன் தனியாக செய்கிறீர்கள்? நான் தனியாக செய்கிறேன். இந்த உணர்வு இருக்கிறது என்றால் நான் என்ற எண்ணம் தான் மாயாவின் வாசலாக இருக்கிறது. அதன் பிறகு மாயா வந்து விட்டது என்று சொல்கிறீர்கள். வாசல் கதவு திறந்திருக்கிறீர்கள் மற்றும் மாயாவும் காத்திருக்கிறது. மேலும் நீங்கள் நன்றாக ஏற்பாடு செய்தால், மாயா ஏன் வராது?

பாபா செய்ய வைக்கக் கூடியவர் ஒவ்வொரு செயலையும் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார் என்று இதைக் கூட தனது பாக்கியத்தின் நினைவில் வையுங்கள்? அதனால் சுமை அனுபவம் ஆகாது. எஜமானருக்கு தான் சுமை அனுபவம் ஆகும், உடன் இருப்பவருக்கு

சுமை அனுபவம் ஆகாது. எஜமானர் ஆகி விட்டால் சுமை வந்து விடுகிறது. நான் குழந்தை யாகவும் பாபா எஜமானராகவும் இருக்கிறார். எஜமானர் குழந்தைகள் மூலம் செய்து கொண்டிருக்கிறார். பெரியவர்கள் ஆகி விட்டால் துக்கமும் பெரியதாக வந்து விடுகிறது. குழந்தை யாகி, எஜமானரின் கட்டளைப்படி செய்யுங்கள். இது எவ்வளவு பெரிய பாக்கியமாக இருக்கிறது. ஒவ்வொரு காரியத்திலும் பாபா பொறுப்பாளராக மாற்றி விட்டு இலேசாக இருந்து பறந்துக் கொண்டேயிருங்கள். என்ன ஆகும்? மேலும் ஏதாவது பிரச்சனைகள் வந்து விட்டால் சொல்கிறீர்கள் -பாபா, இப்பொழுது உங்களுக்கு தான் அனைத்தும் தெரியும். மேலும் பிரச்சனை முடிந்து விட்டால் குஷி அடைந்து விடுகிறோம் ஆனால் பிரச்சனைகள் அப்படி ஏன் வரவிட வேண்டும். செய்விப்பவர் பாபாவின் கட்டளைப்படி ஒவ்வொரு காரியமும் செய்தீர்கள் என்றால் செயலும் உயர்ந்ததாக இருக்கும், மேலும் உயர்ந்த செயலின் பலனாக -சதா குஷி, சதா இலேசானத் தன்மை, ஃபரிஸ்தா வாழ்க்கையின் அனுபவம் செய்து கொண்டேயிருப்பீர்கள், ஃபரிஸ்தா கர்மத்தின் சம்பந்தத்தில் வருவார்கள், கர்மத்தின் பந்தனத்தில் மாட்ட மாட்டார்கள். மேலும் பாபாவின் சம்மந்தம் செய்விப்பவருடன் இணைந்திருக்கிறது, ஆகையால் நிமித்தம் (கருவி) என்ற உணர்வில் நான் என்ற தன்மையின் அபிமானம் வராது. சதா பணிவுடையவராக ஆகி புது உலகத்தை உருவாக்கும் காரியத்தை செய்யுங்கள். எனவே உங்களுக்கு எவ்வளவு பாக்கியம் இருக்கிறது.

அதன் பிறகு பிரம்மா போஜனம் யார் கொடுக்கிறார்கள்? பெயரே பிரம்மா போஜனம். பிரம்ம போஜனம் அல்ல, பிரம்மா போஜனம். எனவே பிரம்மா (பாபா) யக்ஞத்தின் பாதுகாவலராக எப்பொழுதும் இருக்கிறார். யக்ஞத்தின் குழந்தைகள் ஒவ்வொருவரும் அல்லது பிரம்மாவின் குழந்தைகளுக்காக பிரம்மாபாபாவின் மூலம் பிரம்மா போஜனம் கிடைக்கவே செய்கிறது. உலகத்தினர் எங்களுக்கு பகவான் உணவளிக்கிறார் (படி அளிக்கிறார்) என்று சொல்கிறார்கள். இறைவன் யார் என்றே தெரியாது, ஆனால் கடவுள் உணவளிக்கிறார் என்று சொல்கிறார்கள் ஆனால் பிராமண குழந்தைகளுக்கு பாபா தான் உணவளிக்கிறார். லௌகீகத்தில் சம்பாதித்து பணத்தை சேமித்து வைத்து, அதன் மூலம் உணவை சேகரித்தாலும் கூட முதலில் தனது

வருமானத்தையும் கூட பாபாவின் பண்டாராவிற்கு தான் தருகிறீர்கள். பாபாவின் பண்டாரா (உண்டியல்) என்பது கள்ளம் கபடமற்றவரின் பண்டாரா ஆகி விடுகிறது. ஒருபொழுதும் இந்த விதியை மறந்து விட வேண்டாம். இல்லையென்றால், நாம் தான் சம்பாதிக்கிறோம், நாமே உண்டு விடுகிறோம் என்று சிந்தனை வரும். டிரஸ்டியாக இருங்கள், டிரஸ்டிக்கு ஒன்றும் ஆகாது. நாங்கள் எங்களுடைய வருமானத்தின் மூலம் உண்கிறோம் என்ற எண்ணம் கூட வரக் கூடாது. டிரஸ்டி என்று ஆகி விட்டால் அனைத்தும் பாபாவின் கையில் ஒப்படைத்து விட வேண்டும். அனைத்தும் உன்னுடையது, என்னுடையது அல்ல. டிரஸ்டி (தர்மகர்த்தா -தர்மத்திற்கு உட்பட்டு செயல்படுவது) என்றாலே உன்னுடையது மற்றும் கிரஹஸ்தி (இல்லறவாசி) என்றாலே என்னுடையது. நீங்கள் யார்? இல்லறவாசி இல்லை தானே? இறைவன் உணவளித்துக் கொண்டிருக்கிறார், பிரம்மா போஜனம் கிடைக்கிறது -பிராமண ஆத்மாக்களுக்கு இந்த நஷா இயல்பாகவே இருக்கிறது, மேலும் பாபாவும் உத்திரவாதம் தருகிறார், 21-ஜென்மத்திற்கு பிராமண ஆத்மாக்கள் பசியுடன் ஒருபொழுதும் இருக்க மாட்டார்கள். மிகவும் அன்புடன் பருப்பு, ரொட்டி, காய்கறிகள் கிடைக்கும். இந்த ஜென்மத்திலும் கூட பருப்பு, ரொட்டி அன்புடன் கடின உழைப்பின்றி சாப்பிடுகிறீர்கள். ஆகையால் அமிர்தவேளையிலிருந்து என்னென்ன பாக்கியம் கிடைக்கிறது. முழு நாளின் தினசரி நடவடிக்கைகளை சிந்தியுங்கள்.

தாலாட்டு பாடி பாபா தான் தூங்கவும் வைக்கிறார். பாபாவின் மடியில் தூங்கி விட்டீர்கள் என்றால் களைப்பு, நோய் முதலியன அனைத்தும் மறந்து விடுவீர்கள் மற்றும் ஓய்வும் எடுப்பீர்கள். ஆ (வா) ராம் என்று அழைத்தால் மட்டும் போதும், ஆராம் (ஓய்வு) வந்து விடும். தனியாக தூங்கிறீர்கள் என்றால் பலவித எண்ணங்கள் உருவாகிக் கொண்டேயிருக்கும். பாபாவோடு நினைவு என்ற மடியில் தூங்கி விடுங்கள். இனிமையான குழந்தைகளே, அன்பான குழந்தைகளே என்ற தாலாட்டு கேட்டுக் கொண்டே தூங்கி விடுங்கள். பாருங்கள் எவ்வளவு அலௌகீக அனுபவம் ஏற்படுகிறது. எனவே அமிர்தவேளை யிலிருந்து இரவு வரை அனைத்தையும் பகவான் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார். நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கிறார், செய்விப்பவர் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார், சதா இந்த

பாக்கியத்தை நினைவில் வையுங்கள். நினைவு வெளிக் கொணருங்கள். எல்லைக்குட்பட்ட போதைக் பொருளைக் கூட குடிக்காத வரை நஷா (போதை) வராது. அப்படியே அந்த போதை பொருளை (பாட்டிலை) வைத்திருந்தால் போதை ஏறுமா? இதைக் (ஞானத்தையும்) கூட புத்தியில் மட்டும் வைத்திருக்கிறீர்கள், ஆனால் இதை பயன்படுத்துங்கள். நினைவில் கொண்டு வருவது என்றால் அருந்துவது, வெளிக்கொணருங்கள். இதைத் தான் நினைவு சொரூபம் என்று சொல்லப்படுகிறது. புத்தியில் மட்டும் நினைவில் கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. நினைவு சொரூபம் ஆகுங்கள். எவ்வளவு பாக்கியசாலிகளாக இருக்கிறோம். தினந்தோறும் தனது பாக்கியத்தை நினைவில் வைத்து சக்திசாலி ஆகுங்கள் மற்றும் பறந்துக் கொண்டேயிருங்கள். புரிந்ததா? என்ன செய்ய வேண்டும்? இரட்டை வெளிநாட்டை சேர்ந்தவர்கள் எல்லைக்குட்பட்ட நஷாவில் அனுபவசாலிகளாக இருக்கிறீர்கள், இப்பொழுது இந்த எல்லைக்கு அப்பாற்பட்ட நஷாவை நினைவில் வைத்தீர்கள் என்றால் சதா பாக்கியத்தின் உயர்ந்த கோடுகள் (அதிர்ஷ்ட) ஜொலித்துக் கொண்டிருக்கிறது, தெளிவாக தென்பட்டுக் கொண்டேயிருக்கும். இப்பொழுது சிலருக்கு மறைந்திருக்கிறது, சிலருக்கு தெளிவாக தென்படுகிறது ஆனால் சதா நினைவில் வைத்தீர்கள் என்றால் நெற்றியில் ஜொலித்துக் கொண்டேயிருக்கும். மற்றவர்களையும் கூட அனுபவம் செய்ய வைத்துக் கொண்டேயிருப்பீர்கள். நல்லது.

சதா பகவான் மற்றும் பாக்கியம் -இந்த நினைவு சொரூபமான சக்திசாலியான ஆத்மாக்களை, சதா ஒவ்வொரு காரியத்திலும் செய்பவர் ஆகி காரியம் செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, சதா அமிர்தவேளையில் பாபாவுடன் உயர்ந்த இடத்தில், உயர்ந்த மனநிலை யில் நிலைத்திருக்கக்கூடிய பாக்கியசாலி குழந்தைகளுக்கு, சதா தனது நெற்றியின் மூலம் உயர்ந்த பாக்கியத்தின் ரேகைகளை மற்றவர்களுக்கும் அனுபவம் செய்யக்கூடிய விசேஷமாக பிராமணர்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

விடைபெறும் நேரத்தில் தாதி ஜானகி அவர்களின் மும்பாய் மற்றும் குருசேத்திரம் சேவைக்கு செல்வதற்காக விடைபெற்றுக்

கொண்டிருக்கிறார். மகாரதிகளின் கால்களில் சேவைக்கான சக்கரம் இருக்கவே செய்கிறது. எங்கு செல்கிறீர்களோ, அங்கு சேவையில்லாமல் இருக்க முடியாது. எந்த காரணத்திற்காக சென்றாலும் கூட சேவைக்காக தான் இருக்கும். ஒவ்வொரு அடியிலும் சேவையை தவிர ஒன்றுமே இல்லை. ஒருவேளை நடந்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றாலும் கூட நடப்பதிலும் சேவை அடங்கியிருக்கிறது. ஒருவேளை உணவை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் யாரை அழைத்து உணவளிக்கிறீர்கள். அன்போடு ஏற்றுக் கொள்கிறார். எனவே இது கூட சேவையாகி விட்டது. எழுந்தாலும், அமர்ந்தாலும், நடந்தாலும் கூட சேவை மட்டும் தான் இருக்கிறது. அப்படிப்பட்ட சேவாதாரியாக இருக்கிறீர்கள். சேவையின் வாய்ப்பு கிடைப்பதும் கூட பாக்கியத்தின் அடையாளமாகும். மிகப் பெரிய சக்கரவர்த்தி ஆகவேண்டு மென்றால் சேவையின் சக்கரமும் கூட பெரியதாக இருக்கும்.

**வரதானம்: தமோகுணம் நிறைந்த வாயுமண்டலத்தில் தனது மனநிலையை ஒரே இரசனையாகவும், ஆடாத அசையாததாகவும் வைக்கக் கூடிய மாஸ்டர் சர்வசக்திவான் ஆகுக!**

ஒவ்வொரு நாளும் சூழ்நிலைகள் மிகவும் தமோபிரதானமாக ஆகிக் கொண்டேயிருக்கும். வாயுமண்டலமும் மேலும் சீரழிந்துக் கொண்டேயிருக்கும். அப்படிப்பட்ட வாயுமண்டலத்தில் தாமரை மலரை போன்று விடுபட்டு இருந்து, தனது மனநிலையை சதோபிரதானமாக ஆக்க வேண்டும் -இதற்காக அந்தளவு தைரியம் மற்றும் சக்தியின் அவசியம் இருக்கிறது. நான் மாஸ்டர் சர்வசக்திவான் என்ற வரதானம் நினைவில் இருந்தால், இயற்கையின் மூலம், லௌகீக சம்மந்ததின் மூலம், தெய்வீக குடும்பத்தின் மூலம் எந்தவிதமான சோதனை தாள் வந்தாலும், அவர்கள் எப்பொழுதும் ஒரே இரசனை, ஆடாத அசையாத மனநிலையில் இருப்பார்கள்.

**சுலோகன்: வரங்களை அளிக்கும் பாபாவை தனது உண்மையான துணையாக மாற்றிக் கொண்டால், வரதானங்களின் மூலம் புத்தி என்ற பை நிறைந்திருக்கும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 12.03.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மூன்று விதமான சிநேகம் மேலும், மனதின் சிநேகத்தினுடைய குழந்தைகளின் விசேஷங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய சிநேகி, சகயோகி மற்றும் சக்திசாலி என மூன்று விசேஷங்களினால் முழுமையான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த மூன்று விசேஷங்களும் யாரிடம் முழுமையாக (சமானாக) உள்ளதோ அவர்கள் விசேஷ ஆத்மாக்களிலும் நம்பர் ஒன் ஆத்மாவாக இருக்கின்றனர். சிநேகமும் இருக்கிறது மேலும் சதா ஒவ்வொரு செயலிலும் சகயோகியாக அனைவரும் உள்ளனர் ஆனால், சிநேகத்தில் ஒன்று மனதினுடைய சிநேகம், இவர்களுடைய விசேஷம் இதுவாக இருக்கும். அவர்கள் அனைத்து சம்பந்தம் மேலும் அனைத்து பிராப்தியும், சதா சகஜமாக, தானாகவே அனுபவம் செய்வர் ஒரு சம்பந்தத்தினுடைய அனுபவத்தில் கூட குறைவு கிடையாது. எப்படி சமயமோ அப்படி சம்பந்தத் தினுடைய சிநேகத்தின் விதவிதமான அனுபவம் செய்யக்கூடிய, சமயத்தை அறிந்துள்ளவர்களாக இருப்பர். மேலும் சமயப்படி சம்பந்தத்தைக்கூட அறிந்துள்ளவர்களாக இருப்பார்கள்.

பாபா எப்போது ஆசிரியர் ரூபத்தில் உயர்ந்த படிப்பு படிப்பிக்கிறாரோ, அந்த சமயத்தில் ஆசிரியரின் சம்பந்தத்தினை அனுபவம் செய்யாமல், தோழன் ரூபத்தின் அனுபவத்தில் சந்திப்பை கொண்டாடுதல் அல்லது உரையாடல் செய்வதில் ஈடுபட்டு விட்டால், பின்பு படிப்பின் பக்கம்

கவனம் ஏற்படாது. படிப்பின் சமயத்தில் இப்படி சிலர் கூறுகிறார்கள், நான் சப்தத்திலிருந்து விலகின நிலையில் அதிக சக்திசாலியாக அனுபவம் செய்து கொண்டிருக்கிறேன் எனின் படிக்கும் சமயத்தில் இது சரியானதா? ஏனெனில் எப்போது பாபா ஆசிரியர் ரூபத்தில் படிப்பு மூலமாக உயர்ந்த பதவியுடைய பிராட்தி செய்விக்க வருகிறார், அப்போது அந்த சமயத்தில் டீச்சர் முன்னால் இறை மாணவன் வாழ்க்கைதான் உண்மையானது (யதார்த்தமானது). இதற்கு தான் கூறப்படுகிறது காலத்தை அறிந்து அதன்படி சம்பந்தத்தின் அறிமுகம் மேலும் சம்பந்தத்தின்படி சிநகேத்தினுடைய பிராப்தியின் அனுபவம். இந்த புத்தியை பயிற்சி (எக்ஸர்சைஸ்) செய்விக்கவும். எதை எப்படி வேண்டுமோ, எந்த சமயத்தில் வேண்டுமோ அப்படி சொரூபம் மேலும் நிலையில் நிலைத்திருக்க முடியும்.

எப்படி சிலர் சரீரத்தினால் எடை அதிகமாக உள்ளனர், சுமை இருந்தால், தன்னுடைய சரீரத்தை சகஜமாக எப்படி வேண்டுமோ அப்படி வளைக்க முடியாது. அப்படியே தான் மந்தமான புத்தி அதாவது ஏதாவது ஒரு விதத்திலாவது வீணாணவற்றின் சுமை அல்லது வீணானவற்றின் குப்பைகள் புத்தியில் நிரம்பி உள்ளது. ஏதாவது அசுத்தம் இருக்கிறது எனில், அப்படிப்பட்ட புத்தியுடையவர் எந்த சமயத்தில் வேண்டுமோ அப்போது புத்தியை வளைக்க (மாற்ற) முடியாது. இதனால் அதிகமான தூய்மை, மெல்லிய அதாவது அதி சூட்சம புத்தி, தெய்வீக புத்தி, எல்லைக்கப்பாற்பட்ட புத்தி, பரந்த புத்தி வேண்டும். அப்படிப்பட்ட புத்தியுடையவர்களே சர்வ சம்பந்தத்தினுடைய அனுபவம், எந்த சமயத்தில், எப்படி சம்பந்தமோ அப்படியே சுயத்தின் சொரூபத்தை அனுபவம் செய்ய முடியும். அதனால் சிநேகியாக அனைவரும் இருக்கின்றனர், ஆனால் அனைத்து சம்பந்தத்தின் சிநேகம் சமயப்படி அனுபவம் செய்யக்கூடியவர்கள், சதா இந்த அனுபவத்தில் பிஸியாக இருக்கின்றனர். ஒவ்வொரு, சம்பந்தத்தினுடைய விதவிதமான பிராப்திகளில், அவ்வளவு அன்பில் மூழ்கி இருக்கின்றனர். போதையில் இருக்கின்றனர். இவர்களை எந்த விதமான விக்னங்களும் தங்கள் பக்கம் தலை வணங்க வைக்க முடியாது. இதனால் அவர்கள் தானாகவே சகஜயோகி நிலையை அனுபவம் செய்வர் இவர்களுக்குத் தான் கூறப்படுகிறது. நம்பர் ஒன் யதார்த்த சிநேகி ஆத்மா, சிநேகத்தின் காரணத்தினால் அந்த ஆத்மாவிற்கு சமயப்படி பாபா மூலமாக

ஒவ்வொரு காரியத்திலும் தானாகவே சகயோகத்தினுடைய பிராப்தி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் இந்த காரணத்தினால் சிநேகம், பரந்த நிலையான, அசையாத அழிவற்றதாக அனுபவம் ஆகிறது. புரிந்ததா? இது தான் நம்பர்வார் சிநேகத்தினுடைய விசேஷத்தா.

இரண்டாவது, மூன்றாவது ஆக வருபவர்களின் வருணனை செய்வதற்கு அவசியம் கிடையாது. ஏனெனில் எல்லோரும் அதை நல்ல முறையில் புரிந்துள்ளீர்கள். பாப்தாதா அப்படிப்பட்ட சிநேகிக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆதியிலிருந்து இப்போது வரைக்கும் சிநேகம் ஒரே ரசனையில் இருக்கிறதா? அல்லது சமயப்படி, பிரச்சனைகளின்படி அல்லது பிராமண ஆத்மாக்களின் தொடர்பின்படி மாறிக் கொண்டிருக்கிறதா? இதில் கூட வேறுபாடு உள்ளது அல்லவா? இன்று சிநேகத்தினுடையது கேட்டீர்கள், பின்பு சகயோகி மற்றும் சக்திசாலி, மூன்று விசேஷத்தினுடைய ஆத்மாக்களின் மகத்துவத்தை கூறுவோம். மூன்றும் அவசியமாக உள்ளது. தாங்கள் அனைவரும் அப்படிப்பட்ட சிநேகிகள்தானே? பயிற்சி உள்ளது தானே? எப்போது எங்கே புத்தியை நிறுத்த விரும்புகிறீர்களோ, அப்படியே செய்ய முடியும் தானே? கட்டுப்படுத்தும் சக்தி இருக்கிறது தானே? ரூலிங் பவர் (ஆட்சி செய்யும் சக்தி) எப்போது வருகிறதோ அப்போது முதலில் கட்டுப்படுத்தும் (கண்டோலிங் பவர்) சக்தி இருக்கும். மற்றபடி யார் சுயத்தைக் கூட கட்டுப்படுத்த முடியவில்லையோ, அவர்கள் ராஜ்யத்தை எப்படி கண்ட்ரோல் செய்வர்? இதனால் சுயத்தை கட்டுப்பாட்டுடன் செலுத்தும் சக்தியின் பயிற்சி இப்போதிலிருந்து வேண்டும். அப்போது தான் இராஜ்ய அதிகாரி ஆவீர்கள். புரிந்ததா?

இன்று சந்திக்க வந்துள்ளவர்களின் குரூப்களின் எண்ணிக்கையில் கட்டினாலும் கட்டமுடியுமா? எண்ணிக்கை அதிகமாக வந்து விடுகிறது. இதனால் சமயத்தை, எண்ணிக்கையை, மேலும் எந்த சரீரத்தின் ஆதாரத்தை எடுக்க வேண்டி உள்ளதோ, அதையும் பார்த்து அந்த விதியிலிருந்து நடக்க வேண்டியதாக உள்ளது. வதனத்தில் இந்த அனைத்தும் பார்க்க வேண்டியது இல்லை. ஏனென்றால், சூட்சும சரீரத்தின் நிலை ஸ்தூல சரீரத்திலிருந்து அதிக தீவிரமானது. ஒரு புறம் சாகார சரீரதாரி, மறு புறம் பரிஸ்தா இரண்டினுடைய செயலில் எத்தனை வேறுபாடு இருக்கிறது. பரிஸ்தா எவ்வளவு வினாடியில்

போய்ச் சேரும், மேலும் சகார சரீரதாரி எவ்வளவு வினாடியில் சென்று அடைவர்? இரண்டிற்கும் அதிக வேறுபாடு உள்ளது. பிரம்மாபாபா கூட சூட்சம சரீரதாரியாகி எவ்வளவு தீவி ரகதியில் நாலாபுறமும் சேவை செய்து கொண்டிருக்கிறார். அந்த பிரம்மாபாபா கூட சாகார சரீரதாரியாக இருந்து, பின்பு சூட்சம சரீரதாரியாகி எவ்வளவு தீவிர கதியில் முன்னால் சென்று மற்றவர்களையும் முன்னேற்றிக் கொண்டிருக்கிறார். இதை அனுபவம் செய்கிறீர்கள் தானே!

சூட்சும சரீரத்தினுடைய வேகம் இந்த உலகத்தினுடைய அனைத்தையும் விட, தீவிர வேகத்தினுடைய சாதனத்தை விட வேகமானது. ஒரு வினாடியில் அந்த சமயத்திலேயே அநேக பேருக்கு அனுபவம் செய்விக்க முடியும். அப்போது அனைவரும் கூறுவார்கள் இந்த சமயத்தில் பாபாவைப் பார்த்தோம் அல்லது பாபாவை சந்தித்தோம் என்று. ஒவ்வொருவரும் கூறுவார்கள் நான் பாபாவுடன் பேசினேன், நான் சந்திப்பைக் கொண்டாடினேன், எனக்கு உதவி கிடைத்தது என்று. ஏனெனில் பரிஸ்தா வாழ்க்கை பந்தனங்களில் இருந்து விடுபட்ட வாழ்க்கை. சரி, அது சேவையினுடைய பந்தனம் ஆனாலும் அவ்வளவு வேகமாக எவ்வளவு சேவை செய்தாலும், அத்தனை செய்தும் சதா அவைகளிலிருந்து விடுபட்டு இருப்பர். எவ்வளவு அன்போ அவ்வளவு விடுபட்டு இருப்பர். செய்விக்கிறார் அனைவரையும், ஆனாலும் செய்வித்துக் கொண்டே அசரீரி பரிஸ்தா ஆனதினால் சதா சுதந்திரத்தினுடைய நிலையின் அனுபவம் ஆகும். ஏனென்றால் சரீரம் மற்றும் செயலினுடைய அடிமை ஆவது கிடையாது. உங்களுக்கும் கூட அனுபவம் உண்டு, எப்போது பரிஸ்தா நிலையிலிருந்து ஏதாவது காரியம் செய்கிறீர்களோ அப்போது பந்தன முக்த் அதாவது லேசான தன்மை அனுபவம் செய்கிறீர்கள் தானே? மேலும் பாபாவோ பரிஸ்தாவாக ஆகியே விட்டார். உலகமும் சூட்சும உலகம், சரீரம் கூட பரிஸ்தா என்ன அனுபவம் ஆகும்? அறிந்து கொள்ள முடிகிறதா? நல்லது.

நாலாபுறமுள்ள அனைத்து மனதினுடைய சிநேகி குழந்தைகளுக்கு, சதா தெய்வீக, விசாலமான, எல்லையற்ற புத்தியுடைய குழந்தைகளுக்கு சதா பிரம்மாபாபா சமான், பரிஸ்தா நிலையில் அனுபவம் செய்து தீவிர கதியில் சேவையில், சுய முன்னேற்றத்தில்

வெற்றியை பிராப்தி செய்யக்கூடிய, சதா சகயோகி ஆகி பாபாவின் சகயோகத்தின் அதிகாரத்தை அனுபவம் செய்யக்கூடிய அப்படிப்பட்ட விசேஷ ஆத்மாக்களுக்கு சமான் ஆகக்கூடிய, மகான் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகளும் மேலும் வணக்கம்.

**தனிப்பட்ட சந்திப்பினுடைய சமயத்தில் வரதான ரூபத்தில் கூறப்பட்ட மகாவாக்கியம்:** (1) சதா கவலையற்ற ராஜா தானே! எப்போது பாபாவிற்கு பொறுப்பை கொடுத்து விட்டீர்களோ, பின்பு கவலை எந்த விஷயத்திற்கு? எப்போது தன் மேல் பொறுப்பை வைத்துக் கொண்டீர்களோ பின்பு சுவலை ஏற்படும். என்ன ஆகும்? எப்படி ஆகும்? மற்றபடி பாபாவிற்கு அர்ப்பணம் செய்து விட்டால், கவலை யாருக்கு வேண்டும்? பாபாவிற்கா அல்லது உங்களுக்கா? மற்றும் பாபா கடலாக இருக்கிறார், அதில் கவலை இருக்கவே முடியாது. அதனால் பாபாவும் கவலையற்றவர், குழந்தைகளும் கவலையற்றவர்கள் ஆகி விட்டனர். அதனால் எந்த காரியம் செய்வதற்கு முன் நான் டிரஸ்டியாக உள்ளேன் என்று யோசியுங்கள். டிரஸ்டி தன் வேலையை அதிக அன்புடன் செய்கிறார், ஆனால் சுமை ஏற்படுவதில்லை. உன்னுடையது என்பதில் பிராப்தியும் அதிகம் மேலும் லேசாகவும் இருப்பர், வேலை கூட நன்றாக ஆகும். ஏனென்றால், எப்படி நினைவு ஏற்படுகிறதோ, அப்படி நிலை ஏற்படும். உன்னுடையது என்றால் பாபாவுடைய நினைவு பாபா வழக்கமான மகான் ஆத்மா கிடையாது. தந்தையாக உள்ளார். அதனால் எப்போது உன்னுடையது என்று கூறிவிட்டீர்களோ அப்போது செயல் கூட நன்றாகவும் மேலும், உங்கள் நிலைக் கூட கவலையற்றதாகி விடும். பாபா தானே முன் வந்து கேட்கிறார், சுவலையை கொடுத்து விடு, ஆனாலும் அவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் என்ன சொல்வது? பாபாவின் வேண்டுகோள் -சுமையை விடுங்கள், சதா கவலையற்று இருங்கள் மற்றும் மற்றவர்களை கவலையற்றவராக மாற்றும் அனுபவத்தினால் அதன் விதியைக் கூறுங்கள், அதிகமான ஆசீர்வாதம் கிடைக்கும். எவருடைய சுமை அல்லது கவலையை எடுத்து விடுங்கள். அவர்கள் மனதார ஆசீர்வாதம் கொடுப்பர். அப்போது சுயம் கவலையற்ற இராஜா மற்றும் மற்றவர்களுடைய சுப பாவனையின் ஆசீர்வாதம் கிடைக்கும். பாதுஷா தானே! ஆசீர்வாதத்தினுடைய செல்வத்தின் பாதுஷா தானே!

பாதுஷாவிற்கு என்ன கவலை? உலகியலான இராஜாக்களுக்கு சிந்தனை இருக்கிறது, ஆனால் பாபாவுடையது அழிவற்றது. நல்லது.

(2) அழிவற்ற சுகம் மற்றும் அல்ப கால சுகம் இரண்டினுடைய அனுபவம் உள்ளது தானே? அல்ப கால சுகம் என்பது ஸ்தூல சாதனங்களினுடையது. அழிவற்ற சுகமாக இருப்பது ஈஸ்வரிய சுகம். அனைத்தையும் விட உயர்ந்த சுகம் எதுவாக இருக்கிறது? ஈஸ்வரிய சுகம் எப்போது கிடைத்து விட்டதோ அப்போது அழியும் சுகம் கூட தன்னைத்தான் பின்னால் வருகிறது. எப்படி ஒருவர் வெயிலில் சென்றால் அவரின் பின்னால் நிழல் தன்னைத்தானே வருகிறது. அதை விட்டு அவர் நிழலுக்குப் பின்னால் சென்றால் ஒன்றுமே கிடைக்காது. யார் ஈஸ்வரிய சுகத்தின் பின் செல்கிறார்களோ அவர்களுக்குப் பின் அல்ப கால சுகம் தன்னைத்தானே நிழலைப்போல வந்து கொண்டேயிருக்கும். முயற்சி செய்ய வேண்டியதில்லை. அதனால் கூறப்படுகிறது, எங்கே முக்தியை நாடுபவர் உள்ளனரோ அங்கே காரிய விவகாரங்கள் தானே வெற்றி அடைகிறது. ஈஸ்வரிய சுகம் என்பது முக்தியை நாடுவது (பரமார்த்) அழியும் சுகம் என்பது காரிய விவகாரம். அதனால் பரமார்த்திற்குப் பின் காரிய விவகாரம் தானே வருகிறது (ஸித்தி ஆகிறது). சதா இந்த அனுபவத்தில் இருக்க வேண்டும். எதனால் இரண்டும் கிடைக்கிறதோ அதிலேயே இருக்க வேண்டும். இல்லையென்றால் ஒன்று கிடைக்கும் அது கூட அழியக் கூடியதாக இருக்கும். சில சமயம் கிடைக்கும், சில சமயம் கிடைக்காது. ஏனெனில் பொருளே அழியக்கூடியதாக உள்ளது. அதிலிருந்து என்ன கிடைக்கும்? எப்போது ஈஸ்வரிய சுகம் கிடைத்து விட்டதோ அப்போது சதா சுகமுடையவராகி விடுகின்றனர். துக்கத்தின் பெயர் ரூபம் இல்லாமல் போய் விடுகிறது. ஈஸ்வரிய சுகம் கிடைத்துள்ளது எனில் அனைத்தும் கிடைத்து விட்டது. எந்த அப்பிராப்தியும் கிடையாது. அழிவற்ற சுகத்தில் இருக்கக்கூடியவர்கள் அழியும் பொருட்களை விடுபட்டு விலகி பயன்படுத்துவர், மாட்ட மாட்டார்கள். நல்லது.

**வரதானம்: தங்களுடைய உயர்ந்த காரியத்தின் மூலமாக ஆத்மாக்களுக்கு சுகம் கொடுக்கக்கூடிய மகான் ஆத்மா ஆகுக!**

யார் மகான் ஆத்மாக்களாகி உள்ளனரோ அவர்களின் ஒவ்வொரு விவகாரத்திலிருந்து அனைத்து ஆத்மாக்களுக்குப் சுகத்தினுடைய தானம் கிடைக்கிறது. அவர்கள் சுகம் கொடுக்கின்றனர், சுகத்தை எடுக்கின்றனர். சோதனை செய்து பாருங்கள். மகான் ஆத்மாவுடைய கணக்கின்படி முழு நாளும் அனைவருக்கும் சுகம் கொடுத்தோமா, புண்ணிய செயல் செய்தோமா? புண்ணியம் என்றாலே யாருக்காவது அப்படிப்பட்ட பொருள் தரணும் அதனால், அந்த ஆத்மாவிடமிருந்து ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும். ஒவ்வொரு ஆத்மாவிடமிருந்து ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டிருக்கிறதா என்பதை சோதனை செய்க. யாருக்காவது துக்கம் கொடுத்தீர்களா? அல்லது எடுத்தீர்களா? இல்லைதானே! அப்போது கூற முடியும் மகான் ஆத்மா என்று.

**சுலோகன்: செய்த பின் யோசிப்பதுதான் பச்சாதாபத்தின் ரூபமாக உள்ளது!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 15.03.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புது உலகின் ஓவியத்தின் ஆதாரம் இப்பொழுதுள்ள உயர்ந்த பிராமண வாழ்க்கை!

இன்று உலகைப் படைப்பவர், உலகின் உயர்ந்த அதிர்ஷ்டத்தை உருவாக்கும் பாப்தாதா தன்னுடைய உயர்ந்த அதிர்ஷ்டத்தின் ஓவிய சொரூப (காட்சி சொரூப) குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைத்து பிராமண ஆத்மாக்களும் உலகின் உயர்ந்த அதிர்ஷ்டத்தின் ஓவியம் ஆவீர்கள். பிராமண வாழ்க்கையின் ஓவியம் மூலமாக எதிர்காலத்தின் உயர்ந்த அதிர்ஷ்டம் தெளிவாகத் தென்படுகிறது. பிராமண வாழ்க்கையின் ஒவ்வொரு உயாந்த காரியமும் எதிர்காலத்தின் உயர்ந்த பலனை அனுபவம் செய்விக்கிறது. பிராமண வாழ்க்கையின் உயர்ந்த எண்ணம் எதிர்காலத்தின் உயர்ந்த சம்ஸ்காரத்தை தெளிவு படுத்துகிறது. அப்படி இப்போதைய பிராமண வாழ்க்கை எதிர்காலத்து அதிர்ஷ்டம் நிறைந்த உலகைக் காட்டும் ஓவியமாகும். பாப்தாதா அந்த மாதிரி எதிர்காலத்து ஓவியமாக இருக்கும் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். ஓவியமும் நீங்கள் தான், எதிர்காலத்து அதிர்ஷ்டத்தின் ஆதார மூர்த்தியும் நீங்கள் தான். நீங்கள் உயர்ந்தவர்களாக ஆகிறீர்கள் அப்பொழுது தான் உலகமும் உயர்ந்ததாகிறது. உங்களுடையது ஏறும் கலையின் ஸ்திதி (நிலை) என்றால் உலகிற்கும் ஏறும் கலை தான். பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் ஒவ்வொரு காலத்திலும் எப்படி எப்படி நிலையைக் கடந்து செல்கிறீர்களோ அதேபோல் உலகின் நிலையும் மாறிக் கொண்டே இருக்கிறது. உங்களுடையது சதோபிரதான (மிக உயர்ந்த) நிலை என்றால் உலகிற்கும் சதோபிரதான நிலை, பொன்னுலகமாக இருக்கிறது. நீங்கள் மாறினீர்கள் என்றால் உலகமும் மாறி விடுகிறது. அவ்வளவு ஆதார மூர்த்தியானவர்கள் நீங்கள்.

இந்த நேரத்தில் தந்தையுடன் எவ்வளவு உயர்ந்த பங்கை செய்து கொண்டிருக்கிறீர்கள். முழுக் கல்பத்திலும் உயர்ந்ததிலும் உயர்ந்த விசேஷமான பங்கை இந்த நேரம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் முக்தி, ஜீவன் முக்தியின் அதிகாரத்தை தந்தை மூலமாக பிராப்தி செய்விப்பதற்கு பொறுப்பானவர்களாக ஆகியிருக்கிறீர்கள். தந்தையின் கூடவே உதவியாளராகி உலகின் ஒவ்வொரு ஆத்மாவின் அனேக பிறவிகளின் ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். அனைவரின் விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்கும் தந்தைக்குச் சமமான காமதேனு நீங்கள், காமனாக்களை (விருப்பங்களை) நிறைவேற்றி வைப்பவர்கள் நீங்கள். அரைக் கல்பம் அனேக பிறவிகள், முக்தியை அடையும் ஆத்மாக்களுக்கும், ஜீவன் முக்தி நிலையை அடையும் ஆத்மாக்களுக்கும் எந்த ஒரு ஆசையும் இல்லாத அளவிற்கு, இச்சா மாத்ரம் அவித்யா (ஆசை யென்றால் என்னவென்று தெரியாத) நிலையை அனுபவம் செய்விக்கிறீர்கள். ஒரு பிறவியின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பவர்கள் இல்லை ஆனால் அனேக பிறவிகளுக்காக ஆசையே என்னவென்று தெரியாத நிலையை அனுபவம் செய்விப்பவர்கள். எப்படி தந்தையின் அனைத்து பொக்கிஷங்களும், கஜானாக்களும் எப்பொழுதும் நிரம்பி யிருக்கிறதோ, இல்லை என்ற பெயர் அடையாளமே இல்லையோ, அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக எப்பொழுதும் அனைத்து கஜானாக் களும் நிரம்பியிருக்கட்டும்.

பிராமண ஆத்மா என்றால் பிராப்தி சொரூப ஆத்மா, முழுமையான ஆத்மா எப்படி தந்தை எப்பொழுதும் லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆக இருக்கிறாரோ அதேபோல் பிராமண ஆத்மாக்கள் கூட தந்தைக்குச் சமமானவர்கள், லைட் ஹவுஸ் ஆக இருக்கிறீர்கள். எனவே ஒவ்வொரு ஆத்மாவையும் அவர்கள் சென்றடையும் இலக்கிற்கு கொண்டு சேர்ப்பதற்கு பொறுப்பானவர்கள். எப்படி தந்தை ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு வார்த்தையிலும், ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு நேரமும் வள்ளலாக, வரமளிப்பவராக இருக்கிறாரோ அதே போல் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் கூட வள்ளல் மற்றும் மாஸ்டர் வரமளிப்பவராக இருக்கிறீர்கள். அந்த மாதிரி பிராமண வாழ்க்கையின் ஓவியமாக இருக்கிறீர்களா? எந்த ஒரு படம் வரைந்தாலும் அதில் அனைத்து விசேஷங்களையும் காண்பிக்கிறீர்கள்

இல்லையா? அதேபோல் இந்த நேரத்து பிராமண வாழ்க்கையின் ஓவியத்தின் விசேஷங்களை தன்னுள் நிரப்பி விட்டீர்களா? உங்களுடைய படத்தையே உருவாக்கும் பெரியதிலும் பெரிய ஓவியர் நீங்கள் தான். உங்களுடைய படம் உருவானதும் உலகின் படமும் உருவாகிக் கொண்டே இருக்கிறது. அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா?

புது உலகில் என்ன இருக்கும் என்று சிலர் கேட்கிறார்கள் இல்லையா? புது உலகின் உருவப்படமே நீங்கள் தான். உங்களுடைய வாழ்க்கை மூலமாக எதிர்காலம் தெளிவாகிறது. யார் பார்த்தாலும் நிரந்தரமாக மகிழ்ச்சியடையும் அளவிற்கு உங்களுடைய ஓவியம் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்று இந்த நேரமும் உங்களுடைய ஓவியத்தில் பாருங்கள். யாராவது கொஞ்சம் அமைதியில்லாதவர் கூட உங்களுடைய படத்தைப் பார்த்து அமைதியின்மையையே மறந்து விடட்டும், அமைதியின் அலைகளிலேயே மிதக்கட்டும், ஒன்றுமே பிராப்தி இல்லையென்று அந்த சொரூபத்தில் இருப்பவர்கள், பிராப்தி கிடைப்பதை தானாகவே அனுபவம் செய்யட்டும். பிச்சைக்காரனாக வரட்டும் எல்லாம் நிரம்பியவராகச் செல்லட்டும். உங்களுடைய புன்முறுவலான உருவத்தைப் பார்த்து மனதின் மற்றும் கண்களின் அழுகையை மறந்து விடட்டும், சிரிப்பதைக் கற்றுக் கொள்ளட்டும். நீங்கள் கூட, சிரிக்கக் கற்றுக் கொடுத்து விட்டீர்கள் என்று தந்தையைக் கூறுகிறீர்கள் இல்லையா! எனவே உங்களுடைய வேலையே அழுகையை விலக்குவது, சிரிப்பதைக் கற்றுக் கொடுப்பது அப்படி பிராமண வாழ்க்கையே அந்த மாதிரியான ஓவியம் தான். நாம் அந்த மாதிரி ஆதார மூர்த்தி, அஸ்திவாரம் என்று எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கல்ப விருக்ஷம் படத்தில் பிராமணர்கள் எங்கே அமர்ந்திருக்கிறார்கள் என்று பாருங்கள். அஸ்திவாரத்தில் அமர்ந்திருக்கிறார்கள் இல்லையா? பிராமண அஸ்திவாரம் உறுதியானது எனவே தான் அரைக்கல்பம் ஆடாமல் அசையாமல் இருக்கிறீர்கள். நீங்கள் சாதாரண ஆத்மாக்கள் இல்லை. ஆதார மூர்த்திகள், அஸ்திவாரமானவர்கள்.

இந்த நேரத்து உங்களுடைய சம்பூர்ண நிலை, சத்யுகத்தின் 16-கலைகள் நிறைந்த சம்பூர்ண நிலைக்கு ஆதாரமாகும். இப்போதைய ஒரே வழி

அங்குள்ள ஒரு இராஜ்யத்தின் ஆதாரமாகும். இங்கேயோ அனைத்துப் பொக்கிஷங்களின் நிறைவு அதாவது ஞானம், குணம், சக்திகள் ஆகியவை நிரம்பியிருப்பது அங்குள்ள முழுமைத்தன்மைக்கு ஆதாரமாகும். இங்குள்ள உடலின் கவர்ச்சியிலிருந்து விலகியிருக்கும். தன்மை அங்கேயுள்ள உடலின் ஆரோக்கியத்தை அடைவதற்கான ஆதாரமாகும். இங்கு அசரீரி ஆக இருக்கும் நிலை நோயற்ற மற்றும் நீண்ட ஆயுளிற்கு ஆதார சொரூபமாகும். இங்குள்ள கவலையற்ற மகாராஜா தன்மை என்ற நிலையின் பிராப்தி தான் அங்குள்ள ஒவ்வொரு நேரமும் மன மகிழ்ச்சியோடு இருக்கும் வாழ்க்கைக்கு ஆதாரமாகிறது. ஒரு தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்ற இங்குள்ள இடை விடாத நிலையான பயிற்சி அங்கு நிலையான, முழுமையான அளவற்ற தடையில்லாத சாதனங்களின் பிராப்திக்கு ஆதாரமாகிறது. பாப்தாதா, தாய், தந்தை, சகோதர சகோதரிகள் அடங்கிய சிறிய உலகம் அங்குள்ள சிறிய உலகிற்கு ஆதாரமாகிறது. இங்கேயுள்ள ஒரு தாய் தந்தையின் சம்பந்தத்தின் சம்ஸ்காரம் அங்கேயும் ஒரே உலகின் விஷ்வ மகாராஜன் மற்றும் மகாராணியை தாய் தந்தையின் ரூபத்தில் அனுபவம் செய்கிறார்கள். இங்கேயுள்ள அன்பு நிறைந்த குடும்பத்தின் சம்பந்தம், அங்கேயும் இராஜாவாக பிறவி எடுத்தாலும் சரி, இல்லை பிரஜையாக பிறவி எடுத்தாலும் சரி, பிரஜையும் தன்னைக் குடும்பத்தில் இருப்பதாக நினைப்பார்கள். நெருக்கமான அன்புடைய குடும்பமாக இருக்கிறது. பதவிகள் இருந்த போதிலும் அவைகள் அன்பு நிறைந்த பதவிகள், தயக்கம் அல்லது பயம் ஏற்படுத்தும் பதவிகள் இல்லை. எனவே எதிர்காலத்தின் ஓவியம் நீங்கள் தானே. இந்த அனைத்து விஷயங்களையும் உங்களுடைய ஓவியத்தில் எதுவரை உயர்ந்த ஓவியம் உருவாகித் தயாராகியிருக்கிறது என்று சோதனை செய்யுங்கள். இல்லை இதுவரை கோடுகள் தான் போட்டுக் கொண்டிருக்கிறீர்களா? புத்திசாலியான ஓவியர்கள் தானே?

ஒவ்வொருவரும் எதுவரை ஓவியம் தயார் செய்திருக்கிறார்கள் என்று தான் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் சரியாக வரையவில்லை அதனால் இப்படி ஆனது என்று மற்றவர்களைக் குறை கூற முடியாது. தன்னுடைய ஓவியத்தைத் தானே உருவாக்க வேண்டும். மற்ற பொருட்கள் அனைத்தும் பாப்தாதாவிடமிருந்து

கிடைக்கிறது. அதில் ஒன்றும் குறை இல்லையே. பொருட்களை வாங்கி பின்பு உருவாக்கி அந்த விளையாட்டை காண்பிக்கிறீர்கள் இல்லையா? உருவாக்குபவர்களைப் பொருத்தது. எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ளட்டும். எடுப்பவர்கள் தான் எடுக்க முடியும். மற்றபடி திறந்த பஜார் தான். இரண்டு எடுக்க வேண்டும் அல்லது நான்கு எடுக்க வேண்டும் என்ற கணக்கை பாப்தாதா வைத்துக் கொள்வது இல்லை. மிக நல்ல ஓவியத்தை உருவாக்கியிருக்கிறீர்கள் இல்லையா? நாம் தான் எதிர்கால அதிர்ஷ்டத்தின் ஓவியம் என்று எப்பொழுதும் தன்னை நினைத்துக் கொள்ளுங்கள். அந்த மாதிரி நினைத்து ஒவ்வொரு அடியும் எடுத்து வையுங்கள். அன்பிற்குரியவர்கள் ஆன காரணத்தினால் சகயோகியாகவும் இருக்கிறீர்கள். சகயோகியாக இருக்கும் காரணத்தினால் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் தந்தையின் சகயோகம் இருக்கிறது. சில ஆத்மாக்களுக்கு அதிக சகயோகம் கிடைக்கிறது, சிலருக்கு குறைவாகக் கிடைக்கிறது என்று அந்த மாதிரி இல்லை. தந்தையின் சகயோகம் ஒன்றுக்குப் பதிலாக பல மடங்கு இருக்கவே இருக்கிறது. சகயோகி ஆத்மாக்கள் யார், யார் இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் தந்தையின் சகயோகம் எப்பொழுதும் கிடைக்கிறது மேலும் எதுவரை இருக்கிறார்களோ அதுவரை கண்டிப்பாக இருக்கும். எப்பொழுது தந்தையின் சகயோகம் இருக்கிறதோ அப்பொழுது அனைத்து காரியங்களும் எந்த ஒரு சிரமமும் நடந்து முடிந்தே இருக்கிறது. அந்த மாதிரி அனுபவம் செய்யவும் செய்கிறீர்கள் மேலும் செய்து கொண்டே இல்லை. ஏனென்றால் பாக்கிய வள்ளல் மூலமாக பாக்கியம் கிடைக்கிறது. எங்கு பாக்கியம் இருக்கிறதோ, வரதானம் இருக்கிறதோ அங்கு சிரமம் இருப்பதே இல்லை.

யாருடைய ஓவியம் மிக நன்றாக இருக்கிறதோ அவர் அவசியம் முதல் நம்பரில் வருவார். அனைவரும் முதல் பிரிவில் (பஸ்ட் டிவிஷனில்) வரப்போகிறவர்கள் தானே. நம்பர் ஒன்றில் ஒருவர் வருவார் ஆனால் முதல் பிரிவும் இருக்கிறது இல்லையா? எதில் வர வேண்டும்? முதல் பிரிவு அனைவருக்காவும் இருக்கிறது. கொஞ்சம் முயற்சி செய்து விடுவது நல்லது. பாப்தாதா பாரதவாசிகளாக இருந்தாலும், வெளிநாட்டவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் வாய்ப்புக் கொடுக்கிறார். ஏனென்றால் இப்பொழுது ரிஸல்ட் வெளியாகவில்லை.

சில நல்ல நல்ல ரிஸல்ட் வெளியாவதற்கு முன்பே வெளிவந்து விடுகிறது. எனவே இந்த இடம் கிடைத்து விடும் இல்லையா? எனவே என்ன எடுக்க வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது வாய்ப்பு இருக்கிறது, இப்பொழுது இடமில்லை என்று போர்டு போட்டு விடுகிறார்கள் இல்லையா? இந்த இடங்கள் நிரம்பி விடும். எனவே பறக்கவும், நன்றாகப் பறக்கவும். ஓடாதீர்கள் ஆனால் பறக்கவும் ஓடுபவர்கள் கீழேயே இருந்து விடு வார்கள், பறப்பவர்கள் மேலே சென்று விடுவார்கள். எனவே பறக்கவும் மற்றும் பறக்க வைக்கவும். நல்லது.

நாலாபுறமுமுள்ள உயர்ந்த அதிர்ஷ்டத்தின் உயர்ந்த ஓவியம் சொரூபம் மகான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை உலகின் ஆதார மூர்த்தியாக அனுபவம் செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய பிராப்தி சொரூப அனுபவங்கள் மூலமாக மற்றவர்களுக்கும் பிராப்தி சொரூபத்தை அனுபவம் செய்விக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பாப்தாதாவின் அன்பு மற்றும் சகயோகத்தின் பல மடங்கு அதிகாரத்தை அடையும் பூஜைக்குரிய பிராமணரிலிருந்து தேவதையாகும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

**பார்ட்டிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு:** தந்தையின் கை எப்பொழுதும் நெற்றியில் இருக்கிறது என்று அனுபவம் செய்கிறீர்களா? உயர்ந்த வழி தான் உயர்ந்த கை. ஆக எங்கு ஒவ்வொரு அடியிலும் தந்தையின் கை அதாவது உயர்ந்த வழி இருக்கிறதோ அங்கு உயர்ந்த வழி மூலம் உயர்ந்த காரியம் தானாக நடக்கிறது. எப்பொழுதும் கையின் நினைவு மூலமாக சக்தி நிறைந்தவராகி முன்னேறிப் போய்க் கொண்டே இருங்கள். தந்தையின் கை எப்பொழுதும் முன்னேறிப் போவதற்கான அனுபவத்தை சுலபமாகச் செய்விக்கிறது. எனவே இந்த உயர்ந்த பாக்கியத்தை ஒவ்வொரு காரியத்திலும் நினைவில் வைத்து முன்னேறிக் கொண்டேயிருங்கள். எப்பொழுதும் கை இருக்கிறது. எப்பொழுதும் வெற்றி இருக்கிறது.

வரதானம்: ஸ்ரீமத் மூலமாக எப்பொழுதும் குஷி மற்றும் லேசான தன்மையை அனுபவம் செய்யவும். மன்மத் (மன வழி) மற்றும் பரமத் (மற்றவர்கள் காட்டும் வழி) இதிலிருந்து விடுபட்டவர்கள் ஆகுக!

எந்தக் குழந்தையினுடைய ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத்படி இருக்கிறதோ அவருடைய மனம் எப்பொழுதும் திருப்தியாக இருக்கும், மனதில் எந்த விதமான சஞ்சலமும் இருக்காது, ஸ்ரீமத்படி நடப்பதினால் இயல்பான குஷி இருக்கும், லேசான தன்மையின் அனுபவம் ஆகும். எனவே எப்பொழுதெல்லாம் மனதில் சஞ்சலம் இருக்கிறதோ, கொஞ்சம் குஷியின் அளவில் குறைவு இருந்தாலும் சோதனை செய்துப் பாருங்கள். கண்டிப்பாக ஸ்ரீமத்தை மீறி நடந்ததாக இருக்கும். எனவே சூட்சும சோதனை செய்து மன்மத் மற்றும் பரமத்திலிருந்து விடுதலையாகுங்கள்.

சுலோகன்: புத்தி என்ற விமானம் மூலம் வதனத்தை வந்தடைந்து ஞான சூரியனின் கிரணங்களை அனுபவம் செய்வது தான் சக்திசாலியான யோகாவாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.03.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவில் ரம்யமான தன்மையைக் கொண்டு வருவதற்கான வழிகள்!

இன்று படைப்பவர், வரமளிக்கும் வள்ளல் பாப்தாதா தன்னுடைய மாஸ்டர் படைப்பவர்கள், வரமளிக்கும் வள்ளல் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையும் படைப்பவராகவும் ஆகியிருக்கிறீர்கள், வரமளிக்கும் வள்ளலாகவும் ஆகியிருக்கிறீர்கள். குழந்தைகளின் பதவி எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. இந்த சங்கம யுகத்தின் பிராமண வாழ்க்கைக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது என்பதையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். படைப்பவர் மற்றும் வரமளிப்பவரின் கூடவே விதிகளை உருவாக்குபவர்கள் கூட நீங்கள் பிராமணர்கள் தான். உங்களுடைய ஒவ்வொரு விதியும் சத்யுகத்தில் எப்படி மாறி விடுகிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். இந்த நேரத்தின் ஒவ்வொரு காரியத்தின் விதி எதிர் காலத்தில் இருக்கவே இருக்கிறது ஆனால் துவாபர் யுகத்திற்குப் பின்பு கூட பக்தி மார்க்கத்தில் இந்த நேரத்து உயர்ந்த காரியங்களின் விதி பக்தி மார்க்கத்தின் விதியாகி விடுகிறது. அப்படி பூஜ்ய ரூபத்திலும் இந்த நேரத்து விதி வாழ்க்கையின் உயர்ந்த சட்ட திட்டங்கள் ரூபத்தில் படைக்கப்படுகின்றன மற்றும் பூஜாரி மார்க்கம் அதாவது பக்தி மார்க்கத்தில் கூட உங்களுடைய ஒவ்வொரு விதியும் நியமங்கள் மற்றும் வழிமுறைகளாகப் பின்பற்றப்படுகின்றன. எனவே படைப்பவர், வரமளிப்பவர் மற்றும் விதியை உருவாக்குபவர்களும் நீங்கள் தான்.

உங்களுடைய முக்கியமான கொள்கை ஸித்தி (நினைத்தது கைகூடுவது) அடைவதற்கான சாதனம் ஆகி விடுகிறது. தந்தை ஒருவர். தர்ம ஆத்மாக்கள் (மத ஸ்தாபகர்கள்) மகான் ஆத்மாக்கள் அநேகர், ஆனால் பரமாத்மா ஒருவர் தான் இதுதான் உங்களுடைய சித்தாந்தம் (கொள்கை). இந்த மூல சித்தாந்தம் மூலமாக அரை கல்பம் உயர்ந்த

ஆத்மாக்கள் உங்களுக்கு ஒரு தந்தை மூலமாக பிராப்தியான ஆஸ்தி ஸித்தியின் ரூபத்தில் பிராப்தி ஆகிறது. பிராப்தி அடைவது என்றால் ஸித்தி சொரூபமாவது, ஏனென்றால் தந்தை ஒருவர், மற்றவர்கள் மகான் ஆத்மாக்கள் மற்றும் தர்ம ஆத்மாக்கள் தந்தை கிடையாது, சகோதர சகோதரர்கள், ஆஸ்தி தந்தையிடமிருந்து கிடைக்கிறது. சகோதரனிடமிருந்து அல்ல. இந்த மூல சித்தாந்தம் மூலமாக உங்களுக்கு அரைக் கல்பம் ஸித்தி பிராப்தி ஆகிறது மற்றும் பக்தியிலும் கடவுள் ஒருவர் தான், இந்த சித்தாந்தம் தான் ஸித்தி பிராப்தி ஆவதற்கு ஆதாரமாகிறது. பக்தியின் ஆரம்ப ஆதாரம் கூட ஒரு தந்தையின் சிவலிங்க ரூபத்தில் ஆரம்பமாகிறது, அதைத்தான் அவிபசாரி பக்தி என்று கூறப்படுகிறது. எனவே பக்தி மார்க்கத்தில் கூட தந்தை ஒருவர் என்ற சித்தாந்தம் மூலமாகத்தான் ஸித்தி பிராப்தி ஆகிறது. எப்படி இந்த வாழ்க்கையின் மூல சித்தாந்தமே தூய்மை தான். இந்த தூய்மையின் சித்தாந்தம் மூலமாக ஆத்மாக்கள் உங்களுக்கு எதிர்காலத்தில் ஸித்தி சொரூபத்தின் ரூபமாக ஒளி கிரீடம் எப்பொழுதும் பிராப்தி ஆகிறது. அதனுடைய ஞாபகார்த்த அடையாளமாக இரட்டை கிரீடம் காண்பிக்கிறார்கள். மேலும் பக்தியில் கூட எப்பொழுது உண்மையான மனதால் பக்தி செய்வார்களோ அப்பொழுது தூய்மையின் சித்தாந்தத்தை மூல ஆதாரமாக நினைப்பார்கள் மேலும் தூய்மையில்லாமல் பக்தியின் ஸித்தி பிராப்தி ஆக முடியாது என்றும் நினைக்கிறார்கள். அற்ப காலத்திற்காகக் கூட எவ்வளவு காலம் பக்தி செய்கிறார்களோ அவ்வளவு காலம் மட்டும் தூய்மையைக் கடைப்பிடித்தாலும், தூய்மை தான் ஸித்தி பிராப்தி ஆவதற்கான சாதனம் என்ற இந்த சித்தாந்தத்தை அவசியம் கடைப்பிடிக்கிறார்கள். இதே மாதிரி ஒவ்வொரு ஞானத்தின் சித்தாந்தம் அல்லது தாரணைக்கான மூல சித்தாந்தம், ஒவ்வொன்றும் ஸித்தியடைவதற்கான சாதனமாக எப்படி ஆகிறது என்று புத்தியால் யோசியுங்கள். சிந்தனை செய்வதற்கான வேலையை உங்களுக்குக் கொடுக்கின்றோம். எப்படி எடுத்துக்காட்டு கூறினோமோ அதேபோல் யோசியுங்கள்.

ஆக நீங்கள் விதியை உருவாக்குபவர்களாகவும் ஆகி விட்டீர்கள் ஸித்தி அளிப்பவர்களாகவும் ஆகி விட்டீர்கள். எனவே இன்று வரை எந்த பக்தர்களுக்கு என்ன ஸித்தியை விரும்புகிறார்களோ, அவர்கள் பற்பல

தேவதைகள் மூலமாக பலப்பல ஸித்தியை அடைவதற்காக அதே தேவதைகளைப் பூஜை செய்கிறார்கள். எனவே ஸித்தி அளிக்கும் தந்தை மூலமாக நீங்களும் ஸித்தி அளிப்பவர்கள் ஆகிறீர்கள் என்று உங்களை நினைக்கிறீர்களா? யாருக்கு சுயம் தனக்கு அனைத்து ஸித்திகளும் பிராப்தி ஆகியிருக்கிறதோ அவர் மற்றவர்களுக்கும் ஸித்தி பிராப்தி செய்விப்பதற்குப் பொறுப்பானவராக ஆக முடியும். ஸித்தி கெட்டது அல்ல. ஏனென்றால் உங்களுடையது ரித்தி ஸித்தி அல்ல. ரித்தி ஸித்தி செய்கிறார்கள் இல்லையா? அது குறைந்த காலத்திற்கு பிரபாவமுள்ளதாக இருக்கும் ஆனால் உங்களுடையது சரியான விதி மூலமாக அடையும் ஸித்தி ஆகும். ஈஸ்வரிய விதி மூலமாக அடையும் ஸித்தி கூட ஈஸ்வரிய ஸித்தி தான். எப்படி ஈஸ்வரன் அழியாதவரோ அதே போல் ஈஸ்வரிய விதி மற்றும் ஸித்தியும் அழியாதவை. ரித்தி ஸித்தி செய்து காட்டுபவர்கள் குறைந்த ஞானமுடையவர்கள் தான். எனவே அவர்களுடைய ஸித்தி கூட குறைந்த காலத்திற்கு உடையதுதான் ஆனால் உங்களுடைய ஸித்தி, சித்தாந்தத்தின் விதி மூலமாக அடையும் ஸித்தி ஆகும். எனவே அரைக்கல்பம் சுயம் ஸித்தி சொரூபம் ஆகிறீர்கள், மற்றும் அரைக்கல்பம் உங்களுடைய சித்தாந்தம் மூலமாக பக்த ஆத்மாக்கள் எவ்வளவு சக்தியோ அவ்வளவு பலனின் பிராப்தி மற்றும் ஸித்தியின் பிராப்தி செய்து வந்திருக்கிறார்கள் ஏனென்றால் பக்தியின் சக்தி கூட காலம் போகப் போக குறைந்து கொண்டே வருகிறது. சதோபிரதான (மிக உயர்ந்த நிலை) பக்தியின் சக்தி, பக்த ஆத்மாக்களுக்குக் கிடைத்த ஸித்தியின் பிராப்தி, இன்றைய பக்தர்களை விட அதிகம் செய்விக்கிறது. இந்த நேரத்தின் பக்தி தமோபிரதான (கீழான நிலையிலுள்ள) பக்தி ஆன காரணத்தினால், சரியான சித்தாந்தமும் இருக்கவில்லை, ஸித்தியும் இருக்கவில்லை.

நான் யார் என்ற போதை அந்த அளவிற்கு இருக்கிறது? எப்பொழுதும் இந்த உயர்ந்த சுவமானத்தின் நிலை என்கிற சீட்டில் செட்டாகி இருக்கிறீர்களா? எவ்வளவு உயர்ந்த சீட் (ஆசனம்). எப்பொழுது இந்த நிலையின் சீட்டில் செட்டாகி (நிலைத்து) இருப்பீர்களோ அப்பொழுது அடிக்கடி அப்செட் (நிலையில்லா) ஆக மாட்டீர்கள். இது பதவி தானே. விதியை உருவாக்குபவர்கள், ஸித்தியை அளிப்பவர் என்று எவ்வளவு உயர்ந்த பதவி. எப்பொழுது இந்த நிலையில் நிலைத்து இருப்பீர்களோ மாயா எதிர்ப்பு செய்யாது. எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பீர்கள்.

உங்களுடைய உயர்ந்த நிலையிலிருந்து கீழே வந்து விடும் காரணத்தினால்தான் அப்செட் ஆகி விடுகிறீர்கள். நினைவில் இருப்பது மற்றும் சேவை செய்வது ஒரு சாதாரண தினசரி நடவடிக்கையாகி விடுகிறது ஆனால் நினைவில் அமர்ந்தாலும் தன்னுடைய ஏதாவது ஒரு சுவமானம் என்ற உயர்ந்த சீட்டில் அமருங்கள். யோகா செய்வதற்கான பிரத்யேக இடத்தில் போய் அமருவது, பாபா அறையில் போய் அமருவது, எழுந்ததும் பாபா அறையில் அமருவது அல்லது முழு நாளும் அமருவது அந்த மாதிரி இல்லை ஆனால் எப்படி உடலுக்குத் தகுதியான இடம் கொடுக்கிறீர் களோ அதே போல் புத்திக்கு ஸ்திதியின் (நிலையின்) இடம் கொடுங்கள். புத்திக்கு சரியான இடம் கொடுத்திருக்கிறேனா என்று முதலில் செக் பண்ணுங்கள். அப்படி சீட்டின் மூலமாக ஈஸ்வரிய போதை தானாக வரும். நாற்காலியின் போதை என்று இன்றைய நாட்களிலும் கூறுகிறார்கள் இல்லையா?. உங்களுக்கோ உயர்ந்த நிலையின் ஆசனம் இருக்கிறது. சிலமயம் மாஸ்டர் விதை ரூப ஸ்திதியின் ஆசனத்தில் சீட்டில் செட் ஆகி விடுங்கள் சிலநேரம் அவ்யக்த பரிஷ்தா என்ற சீட்டில் செட்டாகி விடுங்கள், வேறுசில நேரத்தில் விஷ்வ கல்யாணகாரி ஸ்திதியின் சீட்டில் செட் ஆகி விடுங்கள். அப்படி ஒவ்வொரு நாளும் விதவிதமான ஸ்திதியின் ஆசனத்தில் மற்றும் சீட்டில் செட் ஆகி அமருங்கள். யாருக்காவது சீட் செட்டாகவில்லை என்றால் ஆடுவார்கள் இல்லையா? இப்படி செய்வார்கள் சில நேரம் அப்படி செய்வார்கள். அப்படி நீங்கள் எப்பொழுது சீட்டில் செட்டாகவில்லயோ அப்போது புத்தியும் சஞ்சலத்தில் ஆட்டத்தில் வந்து விடுகிறது. நான் இப்படி, இப்படி என்று உங்களுக்குத் தெரியும். ஒருவேளை நீங்கள் யார் என்று இப்பொழுது கேட்டால் பெரிய லிஸ்டே வெளி வரும் ஆனால் ஒவ்வொரு நேரமும் என்ன தெரிந்திருக்கிறீர்களோ, அதை உங்களுக்கு என்று ஏற்றுக் கொள்ளுங்கள், தெரிவது மட்டும் போதாது ஆனால் ஏற்றுக் கொள்ள வேண்டும் ஏனென்றால் தெரிந்து கொள்வதினால் சூட்சும குஷி இருக்கிறது ஆம் நான் இது தான் ஆனால் ஏற்றுக் கொள்வதால் சக்தி வருகிறது. மேலும் ஏற்றுக் கொண்டு அதன்படி நடப்பதால் போதை இருக்கிறது. எப்படி யாராவது பதவியில் இருப்பவர்கள் சீட்டில் செட் ஆகி இருக்கும்போது குஷி இருக்கிறது ஆனால் சக்தி இருக்காது. ஆகவே தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் ஏற்றுக் கொண்டு அதன்படி நடங்கள் மற்றும் அடிக்கடி நான் சீட்டில் செட் ஆகி

இருக்கிறேனா? இல்லை சாதாரண நிலையில் கீழே வந்து விட்டேனா? என்று அடிக்கடி உங்களைக் கேளுங்கள், சோதனைச் செய்யுங்கள். யார் மற்றவர்களுக்கு ஸித்தி கொடுக்கிறார்களோ அவர்கள் சுயம் தான் ஒவ்வொரு எண்ணத்தில் ஒவ்வொரு செயலிலும் ஸித்தி சொரூபமாக கண்டிப்பாக இருப்பார், வள்ளலாக இருப்பார். ஸித்தி அளிப்பவர்கள், எவ்வளவு முயற்சி செய்கிறோமோ மற்றும் கடுமையாக உழைக்கிறோமோ அவ்வளவு ஸித்தி தென்படவில்லை என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இதிலிருந்து சீட்டில் செட்டாகும் விதி சரியாக இல்லை என்று நிரூபணமாகிறது.

மனம் மகிழ்ச்சியடையும் ஞானம். மனமகிழ்ச்சியின் அனுபவம் சோம்பலைத் தானாகவே விரட்டி விடுகிறது. பொதுவாகத் தூக்கம் வருவதில்லை ஆனால் யோகாவில் தூக்கம் வருகிறது என்று சிலர் கூறுகிறார்கள் இல்லையா? இது ஏன் ஏற்படுகிறது. களைப்பின் காரணம் என்று கூற முடியாது ஆனால் மனமகிழ்ச்சி தரும் வகையில் மற்றும் இயற்கையாகவே புத்தியை சீட்டில் செட் பண்ணுவது இல்லை. ஒரே ஒரு ரூபத்தில் மட்டுமில்லாமல் வகை வகையான ரூபத்தில் செட் பண்ணுங்கள். அதே பொருளை விதவிதமான ரூபத்தில் மாற்றி உபயோகித்தீர்கள் என்றால் மனம் குஷியடையும். மிக நல்ல பொருளாக இருந்தாலும் ஒரே பொருளை அடிக்கடி சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் பார்த்துக் கொண்டே இருந்தால் என்னவாகும்? அப்படி விதை ரூபமாகுங்கள், ஆனால் சில நேரம் லைட் ஹவுஸின் ரூபத்தில், சில நேரம் மரத்தின்மேல் விதை ரூபத்தில், வேறு சில நேரம் சிருஷ்டி சக்கரத்தின் மேல் உயரே நின்று கொண்டு அனைவருக்கும் சக்தி கொடுங்கள். விதவிதமான டைட்டிலை அனுபவம் செய்யுங்கள் வேறொரு சமயம் கண்ணின் மணியாகி தந்தையின் கண்களில் ஒன்றிப்போய் இருக்கிறேன். இந்த சொரூபத்தை அனுபவம் செய்யுங்கள். எப்போதாவது நெற்றியின் மணியாகி, எப்போதாவது ஆசனத்தில் அமர்ந்திருப்பவராகி, விதவிதமான சொரூபத்தை அனுபவம் செய்யுங்கள். விதவிதமாக செய்தீர்கள் என்றால் மனமகிழ்ச்சி வரும். பாப்தாதா தினந்தோறும் முரளியில் விதவிதமான டைட்டில் கொடுக்கிறார், ஏன் கொடுக்கிறார்? அதே சீட்டில் செட்டாகி விடுங்கள் மற்றும் இடை இடையே சோதனை மட்டும் செய்யுங்கள். இதை மறந்து விடுகிறீர்கள் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம்.

6-மணி நேரம், 8-மணி நேரம் கடந்து போய் விடுகிறது பின்பு யோசிக்கிறீர்கள். எனவே அரை நாள் போய் விட்டதே என்று சோர்வடைந்து விடுகிறீர்கள். இயல்பான பயிற்சி இருக்கட்டும் அப்பொழுது தான் விதியை உருவாக்குபவராகவும் ஸித்தி அளிப்பவருமாகி உலகிலுள்ள ஆத்மாக்களுக்கு நன்மை செய்ய முடியும் புரிந்ததா? நல்லது.

இன்று மதுபனில் இருப்பவர்களின் நாள். வெளிநாட்டினர் தன்னுடைய நேரத்தின் வாய்ப்பைக் கொடுக்கிறார்கள் ஏனென்றால் மதுபன்னில் இருப்பவர்களைக் கண்டு குஷி அடைகிறார்கள். மகிமை செய்யாதீர்கள். அதிக மகிமையைக் கேட்டிருக்கிறோம் என்று மதுபன்வாசிகள் கூறுகிறார்கள். மகிமையைக் கேட்டே மகான் ஆகி விடுகிறார்கள். ஏனென்றால் இந்த மகிமையே கேடயம் ஆகி விடுகிறது. யுத்தத்தில் பாதுகாப்புச் சாதனமாகக் கேடயம் இருக்கிறது இல்லையா? எனவே இந்த மகிமை கூட நான் எவ்வளவு மகான் என்று நினைவூட்டுகிறது. மதுபன், வெறும் மதுபன் மட்டுமில்லை உலகின் மேடை மதுபன்னில் இருப்பது என்றால் உலகின் மேடையிலிருப்பது. மேடையிலிருப்பவர்கள் எவ்வளவு கவனத்துடன் இருக்கிறார்கள். சாதாரணமாக யாரும் எந்த இடத்தில் இருந்தாலும் அவ்வளவு கவனம் இருப்பதில்லை ஆனால் எப்பொழுது மேடைக்கு வருவாரோ அப்போது ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு செயலிலும் மிகுந்த கவனம் கொடுப்பார். ஆக மதுபன் உலகின் மேடை நாலாபுறத்திலிருந்தும் பார்வை மதுபன் மேல் தான் இருக்கிறது. பொதுவாகவே அனைவரின் கவனமும் மேடையை நோக்கித் தான் போகும் இல்லையா? அப்படி மதுபன்னில் இருப்பவர்கள் எப்பொழுதும் உலக மேடையில் இருக்கிறார்கள். கூடவே மதுபன் ஒரு வினோதமான கோபுரக் கூரை. மேலும் கோபுரக் கூரையின் எதிரொலி சப்தம் நம் வரை வரும் ஆனால் மதுபன் அந்த மாதிரி வினோதமான கோபுரக் கூரை மதுபன்னின் சிறிய சப்தம் முழு உலகிற்கும் சென்று விடுகிறது. இன்று பழங்காலத்து சில இடங்கள் அடையாள அளவிற்கு இருக்கின்றன. அங்கு ஒரு சுவரை லேசாக அசைத்தாலும் அல்லது சப்தம் செய்தாலும் பத்து சுவர்களில் அந்த சப்தம் வரும். மேலும் இந்த சுவரை யாரோ அசைக்கிறார்கள் அல்லது சப்தம் செய்கிறார்கள் என்று கேட்கும் அப்படி மதுபனும் கூட ஒரு வினோதமான கோபுரக் கூரை மதுபனின் சப்தம் மதுபனில் மட்டும்

இருப்பதில்லை ஆனால் அது நாலாபுறமும் பரவி விடுகிறது. அந்த மாதிரி பரவி விடுகிறது மதுபனில் இருப்பவர்களுக்குக் கூட தெரியாமல் இருக்கிறது ஆனால் வினோதமானது, இல்லையா? எனவே வெளியே போய்ச் சேர்ந்து விடுகிறது. அதனால் இங்கே பார்த்தேன் இங்கே சொன்னேன் என்று மட்டும் நினைக்காதீர்கள் ஆனால் முழு உலகிற்கும் காற்றின் வேகத்தில் சென்றடைந்து விடுகிறது. ஏனென்றால் அனைவரின் பார்வையில், புத்தியில் எப்பொழுதும் மதுபன் மற்றும் மதுபனின் பாப்தாதா தான் இருக்கிறார் அப்படி மதுபனின் தந்தை எப்போது பார்வையிலேயே இருக்கும்பொழுது மதுபனும் அனைவரின் பார்வையில் வரும் இல்லையா? மதுபனின் பாபா என்றால் மதுபனும் வரும் இல்லையா? மேலும் மதுபனில் பாபா மட்டும் இல்லை குழந்தைகளும் இருக்கிறார்கள். அப்படி மதுபனில் இருப்பவர்கள் தானாகவே அனைவரின் பார்வையில் வந்து விடுவார்கள். எந்த ஒரு பிராமணரிடமும் கேளுங்கள், அவர் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அவருக்கு என்ன நினைவு இருக்கிறது? மதுபன் மற்றும் மதுபனின் பாபா. அப்படி மதுபன் வாசிகளுக்கு அவ்வளவு மகத்துவம் இருக்கிறது புரிந்ததா? நல்லது.

நாலாபுறமுமுள்ள அனைத்து சேவையின் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கும். எப்பொழுதும் ஒரு தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும், எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் உயர்ந்த விதி மூலம் ஸித்தியை அனுபவம் செய்கின்ற, எப்பொழுதும் தன்னை விஷ்வ கல்யாணகாரியாக (உலகிற்கு நன்மை செய்பவர்) அனுபவம் செய்து ஒவ்வொரு எண்ணம், சொல், உயர்ந்த நன்மை கலந்த பாவனை மற்றும் நல் ஆசைகள் மூலமாக சேவையில் பிஸியாக இருக்கும் அந்த மாதிரி தந்தைக்குச் சமமாக களைப்பில்லாத சேவாதாரி குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்,

**தனிப்பட்ட சந்திப்பு: 1**) தன்னை கர்மயோகி உயர்ந்த ஆத்மாவாக அனுபவம் செய்கிறீர்களா? கர்மயோகி ஆத்மா எப்பொழுதும் காரியத்தின் உடனடிப் பலனைத் தானாகவே அனுபவம் செய்கிறது. உடனடிப் பலன் என்பது குஷி மற்றும் சக்தி அப்படி கர்மயோகி ஆத்மா என்றால் உடனடிப் பலன் குஷி மற்றும் சக்தியை அனுபவம் செய்வது. தந்தை எப்பொழுதும் குழந்தைகளுக்கு உடனடிப் பலனை அனுபவம்

செய்விப்பவர். இப்பொழுது காரியம் செய்தோம், காரியம் செய்து கொண்டே உடனே குஷி மற்றும் சக்தியை அனுபவம் செய்தோம். அந்த மாதிரி கர்மயோகி ஆத்மா நான் என்ற இந்த நினைவின் மூலமாக முன்னேறிச் சென்று கொண்டேயிருங்கள்.

2) எல்லைக்கப்பாற்பட்ட சேவை மூலமாக எல்லைக்கப் பாற்பட்ட குஷி தானாக அனுபவம் ஆகிறது இல்லையா? எல்லைக்கப்பாற்பட்ட தந்தை எல்லைக்கப்பாற்பட்ட அதிகாரியாக்குகிறார். எல்லைக்கப்பாற்பட்ட சேவையின் பலன் எல்லைக்கப்பாற்பட்ட இராஜ்ய பாக்கியம் தானாக பிராப்தியாகிறது. எப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருந்து சேவை செய்கிறீர்களோ அப்பொழுது எந்த ஆத்மாக்களுக்காக பொறுப்பில் இருக்கிறீர்களோ அவர்களின் ஆசீர்வாதம் தானாகவே ஆத்மாவில் சக்தி மற்றும் குஷியை அனுபவம் செய்விக்கிறது. ஒரு இடத்தில் அமர்ந்திருந்தும் சேவையின் பலன் கிடைத்துக் கொண்டிருக்கிறது, இந்த எல்லைக்கப்பாற்பட்ட போதையில் எல்லைக்கப்பாற்பட்ட சேமிப்புக் கணக்கை அதிகரித்துக் கொண்டே முன்னேறிப் போய்க் கொண்டே இருங்கள்.

3) எப்பொழுதும் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே தன்னை சாட்சி நிலையில் நிலைத்து வைத்து காரியம் செய்விக்கும் விலகியிருக்கும் ஆத்மா நான் என்று அனுபவம் செய்கிறீர்களா? சாட்சி நிலையில் இருப்பது எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியைக் கொடுக்கிறது. சாட்சியாக இருக்கும் நிலை எவ்வளவு அன்பானதாக இருக்கிறது. சாட்சியாக இருந்து காரியம் செய்யும் ஆத்மா எப்பொழுதும் விலகி இருக்கும் மற்றும் தந்தையின் -அன்பிற்குரியதாக இருக்கிறது. அப்படி இந்த பயிற்சி மூலம் காரியம் செய்யும் அலௌகிக் ஆத்மா நான், ஆன்மீக அனுபவம் செய்விப்பவன், ஆன்மீக மற்றும் உயர்ந்த வாழ்க்கையுடைய ஆத்மா நான் இந்த போதை இருக்கிறது இல்லையா? காரியம் செய்து கொண்டே இந்தப் பயிற்சியை அதிகரித்துக் கொண்டே இருங்கள். இந்தப் பயிற்சிதான் கர்மாதீத் நிலையை பிராப்தி செய்விக்கும். இந்தப் பயிற்சியை எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டே, காரியம் செய்து கொண்டே விலகியிருப்பவராகவும் தந்தைக்கு பிரியமானவர்களாகவும் இருங்கள். இதைத்தான் உயர்ந்த ஆத்மா என்று கூறுவது.

4) எப்பொழுதும் உயர்ந்த பொக்கிஷங்களினால் நிறைந்த ஆத்மா நான் என்று அப்படி அனுபவம் செய்கிறீர்களா? யார் அளவில்லா பொக்கிஷங்களினால் நிரம்பியிருப்பாரோ, அவருக்கு ஆன்மீக போதை எவ்வளவு இருக்கும்? எப்பொழுதும் அனைத்துக் கஜானாக்களினால் நிரம்பியிருக்கிறேன் என்ற இந்த ஆன்மீக போதையினால் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். அனைத்துப் பொக்கிஷங்களினால் ஆத்மாக்களை விழிப்படையச் செய்து உங்களுடைய துணைவன் ஆக்கி விட்டீர்கள் என்றால், நிறைந்த மற்றும் சக்திசாலி ஆத்மா ஆகிய முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள்.

வரதானம்: உலகமாற்றம் என்ற உயர்ந்த காரியத்தின் பொறுப்பை எடுத்து செய்து கொண்டே டபுள் லைட்டாக இருக்கும் ஆதார மூர்த்தி ஆகுக!

யார் ஆதார மூர்த்தியாக இருப்பார்களோ அவர்கள் மேல்தான் அனைத்துப் பொறுப்புகளும் இருக்கின்றன. இப்பொழுது நீங்கள் எந்த ரூபத்தில் எங்கு அடியெடுத்து வைத்தாலும் அதே போல அனேக ஆத்மாக்கள் உங்களைப் பின்பற்றுவார்கள், இதுதான் பொறுப்பு ஆனால் இந்தப் பொறுப்பு நிலையை உருவாக்குவதில் மிகுந்த உதவி செய்கிறது. ஏனென்றால் இதன் மூலமாக அனேக ஆத்மாக்களின் ஆசீர்வாதம் கிடைக்கிறது அதன் காரணமாக பொறுப்பு லேசாகி விடுகிறது. இந்தப் பொறுப்புகளைப்பை நீக்கக் கூடியது.

சுலோகன்: மனம் மற்றும் புத்தி இரண்டின் சம நிலை வைத்து சேவை செய்யும் பொழுது வெற்றி கிடைக்கிறது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 23.03.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இதயம் நிறைந்த தந்தையின் இதய சிம்மாசனத்தை வென்ற அன்பான குழந்தைகளின் அடையாளங்கள்!

இன்று இதயத்திலேயே நிறைந்து இருக்கும் தந்தை தன்னுடைய இதயத்தின் அன்பிற்குரிய குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறார். இதயம் நிறைந்த தந்தையின் ஒவ்வொரு அன்பிற்குரிய அதாவது யாருடைய இதயத்தில் எப்பொழுதும் இதயம் நிறைந்தவரின் நினைவு என்ற இனிமையான இசை எப்பொழுதும். தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறதோ அந்த மாதிரி அன்பிற்கு ரியவர்கள் இதயம் நிறைந்த தந்தையின் இதயத்தை தன்னுடைய அன்பு என்ற இசையின் மூலம் வெற்றி கொள்பவர்கள் இதயம் நிறைந்த தந்தையும் அந்த மாதிரிக் குழந்தைகளின் குணங்களை மகிமை பாடிக் கொண்டிருக்கிறார். அப்படி தந்தையின் இதயத்தை வென்று விட்டால் தானாகவே மாயாவை வென்றவர்கள், உலகை வென்றவர்கள் ஆனவர்கள் தான். எப்படி யாராவது எல்லைக்குட்பட்ட இராஜ்யத்தின் சிம்மாசனத்தை வெல்கிறார் என்றால், வெல்வது என்பது இதய சிம்மாசனத்தில் அமருபவர் அப்படி யார் தந்தையின் இதய சிம்மாசனத்தை வெற்றியடைந்து விடுகிறார்களோ அவர்கள் தானாகவே எப்பொழுதும் ஆசனதாரியாக இருக்கிறார். அவர்களுடைய இதயத்தில் எப்பொழுதும் தந்தை இருக்கிறார் மற்றும் தந்தையின் இதயத்தில் எப்பொழுதும் அந்த மாதிரி வெற்றிக் குழந்தைகள் இருக்கிறார்கள். அந்த மாதிரி இதயத்தை வென்ற குழந்தைகள் மூச்சுக்கு மூச்சு அதாவது ஒவ்வொரு வினாடியும் தந்தை மற்றும் சேவையைத் தவிர வேறு எந்தப்பாட்டும் பாடுவதில்லை. எப்பொழுதும் “என்னுடைய பாபா" மற்றும் “நான் தந்தையினுடையவன்” இதைத் தான் இதயம் நிறைந்த தந்தையின் இதய சிம்மாசனத்தை வென்ற அன்பானவர்கள் என்று கூறுவது.

பாப்தாதா ஒவ்வொரு அன்பான குழந்தைகளின் இனிமையான இசையை எப்பொழுதும் விதவிதமான இசையா? இல்லை எப்பொழுதும் ஒரே இசைதானா? என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். எப்போதாவது சிலர் தன்னுடைய பலகீனத்தின் பாட்டும் பாடுகிறார்கள் மற்றும் எப்போதாவது தந்தைக்குப் பதிலாக தன்னுடைய பாட்டும். பாடுகிறார்கள். தந்தையின் மகிமையின் கூடவே தன்னுடைய மகிமையும் செய்கிறார்கள். தந்தையிடம் நீங்கள் இருக்கிறீர்கள் அதாவது தந்தையின் மகிமையில் உங்களுடைய மகிமையும் இருக் சிறது. தந்தையின் பாடல் பாடுவது தான் சரியான இசை மற்றும் உயர்ந்த இசை இதய சிம்மாசனத்தை வென்ற குழந்தைகள் இருக்கிறார்கள் இல்லையா? அவர்களின் ஒவ்வொரு அடியில், பார்வையில், வார்த்தையில், உறவு மற்றும் நெருக்கத்தில் ஒவ்வொருவருக்கும் தந்தை தான் தென்படுவார். வாய் அவருடையதாக இருந்தாலும், ஆனால் சக்திசாலியான அன்பு நிறைந்த வார்த்தை தானாகவே இந்த வார்த்தைகள் ஆத்மாவினுடையது இல்லை என்று தந்தையைப் பிரத்யக்ஷம் செய்யும் ஆனால் உயர்ந்த அதிகாரமுள்ள என்றால் சர்வ சக்திவானின் வார்த்தை. இவருடைய பார்வையின் ஆன்மீகத் தன்மை தந்தையை அனுபவம் செய்விக்கக் கூடியவை இவருடைய காலடிகளில் பரமாத்மா வின் உயர்ந்த வழி என்ற அடி தென்படுகிறது. இவர் சாதாரண மனிதன் இல்லை அவ்யக்த பரிஷ்தா அந்த மாதிரி அனுபவம் செய் விப்பவர்களைத் தான் இதயத்தை வென்றவர்களிலிருந்து உலகை வென்றவர்கள் என்று கூறுவது.

வார்த்தைகள் மூலம் அனுபவம் செய்விப்பது இது சாதாரண விதியாகும் வார்த்தைகள் மூலம் பிரபாவம் செய்விப்பவர்கள் உலகில் கூட அனேகர் இருக்கிறார்கள் ஆனால் உங்களுடைய வார்த்தை களின் விசேஷம் என்னவென்றால் உங்களுடைய வார்த்தைகள் தந்தையை நினைவூட்டுவதாக இருக்கட்டும். தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான ஸித்தி, ஆத்மாக்களுக்கு சத்கதியின் வழியைக் காண்பிக் கட்டும். இது தான் விலகியிருக்கும் தன்மை. ஒருவேளை மிகவும் நல்லது, பேச்சுத்திறமை மற்றும் ஆணித்தரமான வார்த்தைகளாக இருந்தது என்று உங்களுக்கு பாராட்டு கிடைத்தாலும், இந்த மாதிரி பாராட்டு மற்றவர்களுக்குக் கூட கிடைக்கிறது ஆனால்

உங்களுடைய வார்த்தைகள் தந்தையின் மகிமையை அனுபவம் செய்விக்கட்டும் இந்த சிறப்பு தான் பிரத்யக்ஷம் என்ற திரையை விலக்குவதற்கான சாதான மாகும். எனவே யாருடைய இதயத்தில் எப்பொழுதும் இதயம் நிறைந்தவர் இருக்கிறாரோ அவருடைய வாய் மூலமாகவும் இதயத்தின் ஓசை இதயம் நிறைந்தவரை தானாகவே பிரத்யக்ஷம் செய்யும். எனவே ஒவ்வொரு அடியிலும், சொல்லிலும் என் மூலமாக தந்தையின் பிரத்யக்ஷம் ஆகிறதா? மற்றும் என்னுடைய வார்த்தைகள் அனைவரையும் உறவில் பிணைக்கக் கூடியதா? என்று சோதனை செய்யுங்கள். ஏனென்றால் இப்பொழுது பிரத்யக்ஷம் என்ற கொடியைப் பறக்கவிடுவது தான் கடைசி சேவையின் பங்கு ஆகும். என்னுடைய ஒவ்வொரு காரியமும், உயர்ந்த காரியத்தில் வழி கூறும் தந்தையைப் பிரத்யக்ஷம் செய்யக்கூடியதாக இருக்கிறதா? யாருடைய மனதில் எப்பொழுதும் தந்தை இருக்கிறாரோ, அவர் இயல்பாகவே தந்தையைப் பிரத்யக்ஷம் செய்யும் குழந்தையாக அருகாமையில் இருக்கும் சமமான குழந்தையாக இருப்பார்.

இப்பொழுது நாலாபுறமும் எங்களுடைய தந்தை, பிரம்மா குமாரிகள் தந்தை இல்லை, எங்களுடைய தந்தை என்ற ஒலி ஒலிக்க வேண்டும். எப்பொழுது இந்த சப்தம் எழுமோ அப்பொழுது தான் இனிமையான வீட்டின் (பரந்தாமம்) கதவுகள் திறக்கும். ஏனென்றால் எப்பொழுது எங்களுடைய தந்தை என்று கூறுகிறார்களோ அப்பொழுது முக்தியின் ஆஸ்தி கிடைக்கும் மற்றும் உங்களுடனும், தந்தையுடனும், சேர்ந்து வந்தாலும் சரி, ஊர்வலத்தில் வந்தாலும் சரி, அழைத்துச் செல்லவே வேண்டும். எங்களுடைய தந்தை வந்து விட்டார் -குறைந்தது இந்த சப்தத்தை காதால் கேட்கவும், புத்தியால் தெரிந்து கொள்ளவும் அதிகாரியாகவாவது ஆகட்டும். யாரும் ஏமாற்றத்தில் தங்கிப் போய் விடக்கூடாது. உலகின் தந்தை என்றால், உலகின் ஆத்மாக்களுக்கு இவ்வளவு உதவியாவது கொடுக்க வேண்டுமில்லையா? நீங்கள் கடலை முழுங்கி விட்டீர்கள், ஆனால் ஒரு துளி தாகத்தில் இருக்கும் அவர்களுக்கு ஒரு துளியாவது கிடைக்கச் செய்வீர்கள் இல்லையா? இதற்காக என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு வார்த்தையும் தந்தையைப் பிரத்யக்ஷம் செய்வதாக இருக்கட்டும். அப்பொழுது தான் இந்த சப்தம் ஒலிக்கும். எனவே அந்த மாதிரி தந்தையைப் பிரத்யக்ஷம் செய்யும் குழந்தைகளைத்தான் இதயம்

நிறைந்தவரின், இதயம் நிறைந்த அன்பிற்குரியவர்கள் என்று கூறப்படுகிறது என்ன அந்த மாதிரி அன்பிற்குரியவர்கள் ஆகி விட்டீர்கள் தானே?

ஒரு பாட்டு பாடினீர்கள் என்றால் இன்னொரு பாட்டு தானாகவே முடிந்து விடும். சந்தோஷமான செய்தியை இரண்டு வார்த்தைகளில் கூறுங்கள். ஓகே பேசுங்கள், பாடுவதற்கு நேரமும் கொடுக்காதீர்கள், நேரமும் எடுக்காதீர்கள். குஷியான செய்தி சொல்வதில் நேரம் செல்வதில்லை ஆனால் இராமாயணம் சொல்வதில் தான் நேரம் செலவாகிறது. பாப்தாதா அந்த மாதிரி விஷயங்களை இராமர் கதை என்று கூறுகிறார். கிருஷ்ணனின் கதை என்று கூறுவதில்லை. இது 14-கலைகள் உள்ளவர்களின் கதை, 16-கலைகள் நிறைந்தவர்களின் கதை இல்லை. இராமாயணம் சொல்பவர்கள் இல்லையே நீங்கள்?

இப்பொழுது இன்னும் அதிகமாக சேவை செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது வரை என்ன தான் செய்திருக்கிறோம். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். 650-கோடி ஆத்மாக்கள் இருக்கிறார்கள். ஒரு துளியாவது கொடுக்க வேண்டும் இல்லையா? உங்களுடைய பக்தர்கள் ஆனாலும் சரி, பிரஜையாக ஆனாலும் சரி, தேவதையானாலும் கொடுக்க வேண்டும் இல்லையா? பக்தியில் தேவனாகி (கொடுப்பவர்) பூஜிக்கப்படுவீர்கள் இல்லையா? அப்படி எப்பொழுது கொடுப்பீர்களோ அப்பொழுது தானே தேவதை என்று நினைத்து பூஜை செய்யப்படுவீர்கள். பிரஜைகள் கூட எப்பொழுது பிராப்தி இருக்கிறதோ அப்பொழுது தான் ஏற்றுக் கொள்வார்கள், நம்புவார்கள். அப்படியே எப்படி நீங்கள் தாய் தந்தை என்று நம்புவார்கள்? இராஜாவும் கூட தாய், தந்தையே தான். இரண்டு வகையிலும் கொடுப்பவரின் குழந்தை கொடுப்பவராகி விட வேண்டும் ஆனால் கொடுக்கும் போது கொடுப்பவரின் (பாபா) நினைவூட்ட வேண்டும். புரிந்ததா? என்ன செய்ய வேண்டும் என்று? இங்கு நமது தேசத்திலும் வெளி நாடுகளிலும் நிறைய சென்டர்கள் திறந்திருக்கிறோம் அதிகமான சேவை நடக்கிறது என்று நினைக்காதீர்கள் ஆனால் இரக்கமனமுடைய தந்தையின் குழந்தைகள் அல்லவா நீங்கள். அனைவரும் தாகத்திலிருக்கும், அங்கு இங்கு என்று அலைந்து கொண்டிருக்கும் தன்னுடைய சகோதர

சகோதரிகள் மேல் இரக்கம் காட்டுங்கள். யாருடைய குறையும், புகாரும் கேட்கப்படாமல் இருந்து விடக்கூடாது நல்லது,

வெளிநாடுகளிலிருந்தும் அதிகமான பிரியதரிசினிகள் வந்திருக்கிறார்கள். எப்பொழுது அதிகமாக வந்து விடுகிறார்களோ அப்பொழுது பகிர்ந்து கொடுக்க வேண்டும் இல்லையா? நேரத்தையும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். இரவைப் பகலாக ஆக்குகிறீர்கள், இன்னும் என்ன செய்வீர்கள். இதிலும் பெரிய வள்ளலாகுங்கள். தந்தையின் அன்பு நம்பர்படியாக இருந்தும் நம்பர் ஒன் ஒருபோதும் என்மேல் தந்தையின் அன்பு குறைவு மற்றவர்கள் மேல் அதிகம் என்று நினைக்காதீர்கள். அனைவர் மேலும் அதிகமான அன்பு இருக்கிறது. வாயின் வார்த்தைகள் சிலருக்கு அதிகமாகக் கூறுகிறோம், சிலருக்கு குறைவு ஆனால் இதயத்தின் அன்பு அதிகமாக இருக்கிறது. அது வார்த்தைகளால் பகிர்ந்து கொடுக்கப்படுவதில்லை. தந்தையின் பார்வையில் ஒவ்வொரு குழந்தையும் நம்பர் ஒன் இப்பொழுது நம்பர் ஆவுட் ஆகவில்லை. எதுவரை அவுட் ஆகவில்லையோ அதுவரை ஒவ்வொரு வரும் நம்பர் ஒன் யாரானாலும் நம்பர் ஒன் ஆக முடியும். நம்பர் ஒன் எப்பொழுதும் பிரம்மா இருக்கவே இருக்கிறார் என்று கூறியிருக்கிறோம் ஆனால், முதல் டிவிஷன் அதாவது தந்தையுடன் நம்பர் ஒன்னில் வருவது, அதையும் நம்பர் ஒன் என்று சொல்லலாம். எனவே எதுவரை ரிஸல்ட் அவுட் ஆகவில்லையோ அதுவரை, இப்போதைய நேரத்திற்குத் தகுந்தாற்போல் கடைசியில் இருந்தாலும், பாப்தாதகடைசியில் இருக்கிறார் என்று நினைப்பதில்லை; எந்த நேரமும் கடைசியிலிருப்பவர் முதலில் வந்து விடலாம். நிறைய வாய்ப்பு இருக்கிறது. சில நேரங்களில் என்ன ஆகிறது என்றால் வேகமாகச் சென்று கொண்டிருப்பவர்கள் அருகில் வரும்பொழுது களைப்பாகி விடுகிறார்கள். எனவே நின்று விடுகிறார்கள் மற்றும் மெதுவாகச் செல்பவர்கள் நிற்பதே இல்லை நல்ல முறையோடு செல்கிறார்கள். எனவே அவர்கள் சென்றடைந்து விடுகிறார்கள். எனவே இப்பொழுது தந்தையின் பார்வையில் அனைவரும் நம்பர் ஒன் எப்பொழுது ரிஸல்ட் வெளி வருமோ அப்பொழுது தான் இவர் லாஸ்ட், இவர் ஃபஸ்ட் என்று கூறலாம். இப்பொழுது சொல்ல முடியாது. எனவே தன்மேல் நிச்சயம் வைத்து பறந்து கொண்டேயிருங்கள்.

பாப்தாதாவிற்கு அனைவர் மேலும், ஒருவரை விட இன்னொருவரை முன்னுக்கு பறக்க வைக்கும் மனம் நிறைந்த அன்பு அதிகமாக இருக்கிறது. யாருடனாவது இரண்டு வார்த்தை குறைவாகப் பேசி விட்டால் குறைவான அன்பு என்பதல்ல. இதயத்தில் கூட தந்தையின் அன்பு கலந்த உயர்ந்த விருப்பங்கள் எப்பொழுதும் நிரம்பியிருக்கிறது. பறந்து செல்லுங்கள் என்று இரண்டு வார்த்தை கூறினாலும், இதிலேயும் அன்புக்கடல் நிரம்பியிருக்கிறது. பாபா என்மேல் தான் அதிக அன்பு வைத்திருக்கிறார் என்று யாரும் கூற முடியாது. யாராவது அப்படிக் கூறினாலும், உங்களை விட என் மேல் தான் அதிக அன்பு வைத்திருக்கிறார் என்று நீங்கள் கூறுங்கள் மேலும் வெறும் வார்த்தைகளில் மட்டும் கூறுவதில்லை. உண்மையிலேயே வைத்திருக்கிறார். மனதைக் குஷிப்படுத்துவதற்காக மட்டும் கூறவில்லை, எவ்வளவு அலைந்து திரிந்து, களைப்படைந்து குழப்பமடைந்து மீண்டும் 5000-வருடங்களுக்குப் பிறகு கிடைத்திருக்கிறார்கள் என்று தந்தைக்குத் தெரியும். தந்தை தேடி தேடித்தானே கண்டுபிடித்தார். வடக்கு தெற்கு, கிழக்கு, மேற்கு என்று நான்கு திசைகளிலிருந்தும் கண்டுபிடுத்து எடுத்திருக்கிறார். யாரைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்திருக்கிறார்களோ அவர்கள் மேல் எவ்வளவு அன்பு இருக்கும். இல்லையென்றால் தேடவே மாட்டார் மேலும் கடலிடம் அன்பிற்கு குறைவா என்ன? மேலும் ஒவ்வொருவருக்கும் இதயம் நிறைந்த அன்பு எவ்வளவு இருக்கிறது என்று திலாராம் பாபாவுக்குத் தான் தெரியும். எப்படியாக இருந்தாலும் அன்பில் அனைவரும் தேர்ச்சி பெற்று விட்டீர்கள். தந்தை மேல் இருக்கும் அன்பிற்கான சான்றிதழை தந்தை ஏற்கனவே கொடுத்து விட்டார். நல்லது.

நாலாபுறமுமுள்ள மிகவும் அன்பு நிறைந்த இதயத்தின் இசையை ஒலிக்கும் இதயம் நிறைந்த தந்தையின் இதயத்தின் அன்பிற்குரியவர்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் தந்தையை வெளிப்படுத்தும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தன்னுடைய ஒவ்வொரு வார்த்தை மூலமாக தந்தையுடன் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய எப்பொழுதும் தன்னுடைய ஆன்மீகப் பார்வை மூலமாக ஆத்மாக்களுக்கு தந்தையின் அனுபவம் செய்விக்கும், அந்த மாதிரி தந்தையை பிரத்யக்ஷம் செய்யும், தந்தையின் இதய

சிம்மாசனத்தை வென்று மாயாவை வென்று, உலகை வென்ற குழந்தைகளுக்கு இதயம் நிறைந்த தந்தையின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தாதிகளுடன்: தந்தை குழந்தைகளுக்கு நன்றி கூறுகிறார். குழந்தைகள் தந்தைக்கு நன்றி கூறுகிறார்கள். ஒருவர் இன்னொருவருக்கு நன்றி கொடுத்து கொடுத்து முன்னேறியிருக்கிறீர்கள். இது தான் முன்னேறுவதற்கான விதி. இந்த விதி மூலமாக உங்களுடையது மிகவும் நல்ல குழு ஒருவர் இன்னொருவருக்கு ஆமாம், சரி, என்று கூறினீர்கள். நன்றி கூறினீர்கள் முன்னேறினீர்கள். இந்த விதியை அனைவரும் பின்பற்றினால் பரிஸ்தா ஆகி விடுவார்கள். பாப்தாதா சிறிய மாலையைப் பார்த்து குஷியடைகிறார். இப்பொழுது கையின் காப்பு (வளையல்) ஆகியிருக்கிறீர்கள், கழுத்தின் மாலை தயாராகிக் கொண்டிருக்கிறது. கழுத்தின் மாலையை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கிறீர்கள். இப்பொழுது கவனம் தேவை. அதிகமாக சேவையில் ஈடுபட்டு விடுவதால் தன்மேல் கவனம் அங்கங்கே குறைந்து விடுகிறது. விஸ்தாரத்தில் சாரம் எப்போதாவது அடங்கிப் போய் விடுகிறது, வெளிப்படையாக இருப்பதில்லை. இப்பொழுது இது நடக்க வேண்டும் என்று நீங்கள் தான் கூறினீர்கள். என்ன கூறினீர்களோ, எது நடக்க வேண்டுமோ அது தான் நடந்து கொண்டிருக்கிறது என்று கூறும் நாட்களும் வரும். முதலில் தீபங்களின் மாலை இங்கு தான் தயாராகும். நீங்கள் ஒவ்வொருவரும் ஊக்கம், உற்சாகத்தை அதிகரிப்பதற்கு உதாரணமானவர் என்று பாப்தாதா நினைகிறார். உங்களுடைய ஒற்றுமை தான் யக்ஞத்தின் கோட்டை. 10-பேர் இருந்தாலும், 12-பேர் இருந்தாலும் யக்ஞ கோட்டையின் சுவர்கள். எனவே பாப்தாதா எவ்வளவு குஷியடைவார். பாப்தாதா இருக்கவே இருக்கிறார், ஆனால் பொறுப்பில் நீங்கள் தான் இருக்கிறீர்கள் இல்லையா? இதே மாதிரியான குழு இரண்டாவதும், மூன்றாவதும் உருவாகி விட்டால் அதிசயத்தக்கதாகி விடும். இப்பொழுது அந்த மாதிரியான குழுவை உருவாக்குங்கள். முதல் குழுவைப் பார்த்து இவர்களுக்கிடையே அன்பு இருக்கிறது என்று அனைவரும் கூறுகிறார்கள். சுபாவம் வெவ் வேறானது, அது இருக்கவே தான் இருக்கும் ஆனால் மரியாதை இருக்கிறது. அன்பு இருக்கிறது. சரி, சரி என்று கூறும் பண்பு இருக்கிறது. நேரத்திற்குத் தகுந்தாற்போல் தன்னை

வளைத்துக் கொள்கிறார்கள். எனவே தான் கோட்டை சுவர்கள் உறுதியாக இருக்கின்றன. ஆகவே முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அஸ்திவாரத்தைப் பார்த்து குஷி ஏற்படுகிறது இல்லையா? எப்படி இந்த முதல் வேர் தென்படுகிறதோ, அதே போல் சக்தி நிறைந்த குழு உருவாகி விட்டால் பின்னாலேயே சேவையும் வந்து விடும். டிராமாவில் வெற்றி மாலையும் அடங்கியிருக்கிறது. அவசியம் ஒருவர் இன்னொருவரின் நெருக்கத்தில் வருவார்கள். அப்பொழுது தானே மாலையும் உருவாகும். எனவே நல்ல உதாரணமாக இருக்கிறீர்கள். நல்லது.

இப்பொழுது சந்திப்பதற்கான ஓதுக்கீட்டை (ஓதுக்கப்பட்டது) முடிக்க வேண்டும். இரதத்திற்கும் (தாதியின் உடல்) அதிகப்படியான சக்தி கொடுத்து இயக்கிக் கொண்டு இருக்கிறோம் என்று கூறியிருக்கிறோம். இல்லையென்றால் சாதாரண விஷயம் இல்லை. எல்லாவற்றையும் பார்க்க வேண்டியதிருக்கிறது இல்லையா? இருந்தாலும் அனைத்து சக்திகளின் பலம் சேமிப்பாக இருக்கிறது. எனவே இரதம் இவ்வளவு ஒத்துழைக்கிறது. சக்திகள் சேமிப்பாக இல்லாமல் இருந்தால், இவ்வளவு சேவை கடினமானதாகி விடும். நாடகத்தில் இப்படியும் ஒவ்வொரு ஆத்மாவிற்கு பங்கு இருக்கிறது. உயர்ந்த காரியம் என்ற முதலீடு சேமிப்பாகும் பொழுது தேவையான, சரியான நேரத்தில் உதவுகிறது. எத்தனை ஆத்மாக்களின் ஆசீர்வாதமும் கிடைத்து விடுகிறது. அதுவும் சேமிப்பாகி விடுகிறது. ஏதோ ஒரு புண்ணிய கணக்கு சேமிப்பான காரணத்தினால் அவருக்கும் விசேஷமான பங்கு கிடைத்திருக்கிறது. தடையற்று இரதம் செயல்பட வேண்டும், இப்படியும் நாடகத்தில் அடங்கியிருக்கிறது. நல்லது.

பார்ட்டிகளுடன் தனிப்பட்ட சந்திப்பு: நினைவு சக்தி எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்திலும் முன்னேற்றக் கூடியது. நினைவு சக்தி நிரந்தரமாக சக்திசாலியாக மாற்றுகிறது. நினைவு சக்தியின் அனுபவம் அனைத்தையும் விட மிக உயர்ந்த அனுபவமாகும். இந்த சக்திதான் ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியை அனுபவம் செய்விக்கிறது. இந்த சக்தியின் அனுபவம் மூலமாக முன்னேறும் ஆத்மா நான் என்ற இந்த நினைவை வைத்து எவ்வளவு முன்னேற விரும்புகிறீர்களோ அவ்வளவு

முன்னேற முடியும். இந்த சக்தி மூலமாக விசேஷமான உதவி கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

வரதானம்: புத்திசாலியாகி மூன்று விதமான சேவைகளை சேர்த்தே செய்யும் வெற்றி மூர்த்தி ஆகுக!

இப்போதைய நேரத்திற்கேற்றார்போல், மனதால், சொல்லால், செயலால் செய்யும் மூன்று விதமான சேவைகளையும் சேர்த்தே செய்ய வேண்டும். சொல் மற்றும் செயல் மூலம் செய்யும் சேவையின் கூடவே மனதின் நல் எண்ணங்கள் மற்றும் உயர்ந்த உள் உணர்வு மூலமாக சேவை செய்து கொண்டேயிருந்தீர்கள் என்றால் பலனும் மிகவும் சிறப்பாக இருக்கும் ஏனென்றால் மனம் சக்திசாலியாக இருக்கும் பொழுதுதான் வார்த்தைகளிலும் சக்தி இருக்கும். இல்லையென்றாம். சொல்பவர்கள் பண்டித் (மற்றவர்களுக்காக மட்டும் சொல்பவர்) மாதிரி ஆகி விடுகிறார்கள் ஏனென்றால் கிளி போல படித்ததை ரிபீட்ட செய்கிறார்கள். ஞானி என்றால் புத்திசாலி, மூன்று விதமான சேவையும் சேர்த்தே செய்பவர்கள் மற்றும் வெற்றியின் வரதானத்தை பெற்று விடுகிறார்கள்.

சுலோகன்: தன்னுடைய ஒவ்வொரு வார்த்தையும், செயலும் மற்றும் பார்வையும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அமைதி சக்தி மற்றும் குஷியை அனுபவம் செய்விப்பது தான் மகான் ஆத்மாக்களின் மகான் தன்மையாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 27.03.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சர்வ சிரேஷ்ட நட்சத்திரம் -வெற்றியின் நட்சத்திரம்!

இன்று ஞான சூரியன் ஞான சந்திரன், தனது அலௌகீக நட்சத்திர மண்டலத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது அலௌக்கமான விஸித்திரமான நட்சத்திர மண்டலம் ஆகும். இதனுடைய சிறப்பை தந்தை மற்றும் பிராமண குழந்தைகளே அறிந்திருக்கிறார்கள். ஒவ்வொரு நட்சத்திரமும் தனது பிரகாசத்தின் மூலமாக இந்த உலகிற்கு ஒளி அளித்துக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா ஒவ்வொரு நட்சத்திரத்தின் சிறப்பைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு சிலர் சிரேஷ்ட பாக்கியவான், அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் ஆவார்கள். ஒரு சிலர் தந்தைக்கு சமீபத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் ஆவார்கள். மற்றும் ஒரு சிலர் தூரத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் ஆவார்கள். அனைவருமே நட்சத்திரங்கள் தான் ஆனால் சிறப்புகள் வெவ்வேறாக இருக்கும் காரணத்தால் சேவை மற்றும் சுய பிராப்தியில் வெவ்வேறு பலனின் பிராப்தியை அனுபவம் செய்பவர்களாக இருக்கிறார்கள். ஒரு சிலர் எப்பொழுதுமே சகஜ நட்சத்திரங்கள் ஆவார்கள். எனவே சகஜ பிராப்தியின் பலன் அனுபவம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மற்றும் ஒரு சிலர் உழைப்பு செய்யும் நட்சத்திரங்கள் ஆவார்கள். கொஞ்சம் உழைப் பானலும் சரி, ஆனால் பெறும்பாலும் உழைப்பின் அனுபவத்திற்குப் பின்னால் பலனின் பிராப்தியின் அனுபவம் செய்கிறார்கள். ஒரு சிலர் சதா கர்மத்திற்கு முன்னதாக அதிகாரத்தின் அனுபவம் செய்கிறார்கள். வெற்றி தங்களது பிறப்புரிமை என்று எனவே நிச்சயம் மற்றும் போதையுடன் கர்மம் செய்யும் காரணத்தால் கர்மத்தின் வெற்றியை சுலபமாக அனுபவம் செய்கிறார்கள். இவர்கள் வெற்றி நட்சத்திரங்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

எல்லாவற்றையும் விட சிரேஷ்டமானவர்கள் வெற்றி நட்சத்திரங்கள் ஆவார்கள். ஏனென்றால் அவர்கள் சதா ஞான சூரியன், ஞான

சந்திரனுக்கு சமீபத்தில் இருக்கிறார்கள். எனவே சக்திசாலியாகவும் இருக்கிறார்கள், மற்றும் வெற்றிக்கு அதிகாரியகவும் இருக்கிறார்கள். ஒரு சிலர் சக்திசாலியாக இருக்கிறார்கள், ஆனால் சதா சக்திசாலியாக இல்லை. எனவே சதா ஒன்றுபோல் பிரகாசம் இல்லை. பல விதமான நட்சத்திரங்களின் கூட்டம் மிகவும் பிரியமானதாகத் தோன்றுகிறது. சேவை எல்லா நட்சத்திரங்களும் செய்கிறார்கள் ஆனால் சமீபத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் மற்றவர்களையும் சூரியன், சந்திரனுக்கு சமீபத்தில் எடுத்துவரும் சேவாதாரி ஆகிறார்கள். எனவே நான் எப்பேற்பட்ட நட்சத்திரம் ஆவேன் என்று ஒவ்வொரு வரும் தன்னைத்தானே கேளுங்கள். அன்பான நட்சத்திரமா, அதிர்ஷ்டசாலியா, சதா சக்திசாலியா? உழைப்பு அனுபவம் செய்பவர்களா அல்லது சதா சுலபமாக வெற்றி அடையும் நட்சத்திரமா? ஞான சூரியனான தந்தை அனைத்து நட்சத்திரங்களுக்கும் எல்லையில்லாத பிரகாசம் மற்றும் சக்தி அளிக்கிறார் ஆனால் சமீபம் மற்றும் தூரமாக இருக்கும் காரணத்தால் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. எந்த அளவிற்கு சமீப சம்மந்தமோ அந்தளவிற்கு பிரகாசமும் சக்தியும் விசேஷமாக இருக்கிறது. ஏனென்றால் சமீப நட்சத்திரங்களின் லட்சியமே சமானமாதல்.

எனவே பாப்தாதா அனைத்து நட்சத்திரங்களுக்கும் சதா அளிக்கும் சமிக்ஞை ஆவது லக்கி மற்றும் லவ்லி (அதிர்ஷ்டசாலி மற்றும் பிரியமானவர்கள்) -இதுவோ அனைவரும் ஆகியிருக்கிறீர்கள் ஆனால் சதா சமீபத்தில் இருப்பவர்கள் சகஜ வெற்றியை அனுபவம் செய்யும் வெற்றி நட்சத்திரங்களாக எது வரை ஆகியுள்ளீர்கள் என்பதை இப்பொழுது உங்களை நீங்களே பாருங்கள். இப்பொழுது விழுந்து விடும் நட்சத்திரமோ, அல்லது வால் நட்சத்திரமோ இல்லை தானே. யார் திரும்ப சுயத்திடம் அல்லது தந்தையிடம் அல்லது நிமித்தமாக ஆகியிருக்கும் ஆத்மாக்களிடம் இது ஏன்? இது என்ன? இது எப்படி? என்று கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்களோ அவர்கள் தான் வால் நட்சத்திரம் என்று கூறப்படுகிறார்கள். திரும்பத் திரும்ப கேள்வி கேட்பவர்களே வால் நட்சத்திரங்கள் ஆவார்கள். அப்படி ஒன்றும் இல்லையல்லவா? யாருடைய ஒவ்வொரு செயலிலும் வெற்றி அடங்கியிருக்கிறதோ அப்பேற்பட்ட வெற்றி நட்சத்திரங்கள் எப்பொழுதுமே தந்தைக்கு சமீபத்தில் அதாவது கூடவே இருக்கிறார்கள்.

இப்பொழுது இந்த சிறப்புகளை சுயத்தில் தாரணை செய்து சதா வெற்றி நட்சத்திரங்கள் ஆகுங்கள். என்ன ஆக வேண்டும் என்று புரிந்ததா? லக்கி மற்றும் லவ்லியிடம் கூடவே வெற்றி -இந்த சிரேஷ்ட தன்மையை சதா அனுபவம் செய்து கொண்டேயிருங்கள். நல்லது.

இன்று அனைவரையும் சந்திக்க வேண்டும். பாப்தாதா இன்று விசேஷமாக சந்திப்பதற்காகவே வந்துள்ளார். சந்திக்க வேண்டும். என்பதே அனைவருடைய லட்சியமாக உள்ளது ஆனால் குழந்தைகளின் அலைகளைப் பார்த்து தந்தையும் எல்லாக் குழந்தைகளையும் மகிழ்ச்சிப்படுத்த இருக்கிறார். ஏனென்றால் குழந்தைகளின் மகிழ்ச்சியில் தந்தையின் மகிழ்ச்சி இருக்கிறது. எனவே இன்று தனித்தனியாக சந்திக்க வேண்டும் என்ற அலை இருக்கிறது. எனவே கடலுக்கு அதே அலையில் வர வேண்டியிருக்கிறது. இந்த சீசனின் அலை இது தான். எனவே ரதத்திற்கு கூட விசேஷ சக்தி அளித்து நடத்திக் கொண்டிருக்ககிறார். நல்லது.

நாலா பக்கங்களின் அலௌகீக நட்சத்திர மண்டலத்தின் அலௌகீக நட்சத்திரங்களுக்கு சதா உலகத்திற்கு ஒளி அளித்து இருளை நீக்கி விடும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களுக்கு சதா தந்தைக்கு சமீபத்தில் இருக்கும் சிரேஷ்ட வெற்றியின் நட்சத்திரங்களுக்கு அனேக ஆத்மாக்களின் பாக்கியத்தின் ரேகையை பரிவர்த்தனை செய்யும் பாக்கியவான் நட்சத்திரங்களுக்கு ஞான சூரியன், ஞான சந்திரன் பாப்தாதாவின் விசேஷ அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தனிப்பட்ட சந்திப்பின் பொழுது வரதான ருபத்தில் உச்சரிக்கப்பட்ட விலைமதிப்பிட முடியாத மகா வாக்கியங்கள்: 1. சதா ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சுகம் அளிக்கும் சுகத்தின் வள்ளலான தந்தையின் குழந்தையாவோம் என்ற அனுபவம் செய்கின்றீர்களா? எல்லோருக்கும் சுகம் அளிக்கும் விசேஷ தன்மை இருக்கிறதல்லவா? இதுவும் நாடகப்படி சிறப்பு கிடைத்துள்ளது. இந்த சிறப்பு எல்லோரிடமும் இருப்பதில்லை. யார் அனைவருக்கும் சுகம் அளிக்கிறார்களோ அவர்களுக்கு அனைவரின் ஆசீர்வாதம் கிடைக்கிறது. எனவே சுயம் தாங்களும் சதா சுயத்தின் அனுபவம் செய்கிறார்கள். இந்த சிறப்பின்

காரணமாக நிகழ்காலமும் நன்றாக இருக்கிறது மற்றும் வருங்காலம் கூட நல்லதாக ஆகி விடுகிறது. எல்லோருடைய அன்பும் கிடைக்கிறது எல்லோருடைய ஆசிகளும் கிடைக்கிறது -இது எவ்வளவு நல்ல பார்ட் ஆகும் இதற்குத்தான் ஒன்று கொடுத்து ஆயிரம் பெறுவது என்று கூறுவார்கள். எனவே சேவை மூலமாக சுகம் கொடுக்கிறீர்கள், அதனால் அனைவருடைய அன்பும் கிடைக்கிறது. இந்த சிறப்பை சதா நிலையாக வைத்திருங்கள்.

2. சதா தங்களை சர்வ சக்திவான் தந்தையின் சக்திசாலி ஆத்மா என்று அனுபவம் செய்கின்றீர்களா? சக்திசாலி ஆத்மா சதா சுயம் தாங்களும் திருப்தியாக இருப்பார்கள், மற்றவர்களையும் திருப்திபடுத்துகிறார்கள். இவ்வாறு சக்திசாலியாக இருக்கிறீர்களா? திருப்தி தான் உயர்ந்த நிலையாகும். சக்திசாலி ஆத்மா என்றால் திருப்தி என்ற கஜானாவில் நிறைந்த ஆத்மா இதே ஸ்மிருதியின் மூலமாக முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். இதே கஜானா அனைவரையும் நிரம்பியவராக ஆக்கக்கூடியது.

3. தந்தை முழு உலகத்திலிருந்து நம்மை தேர்ந்தெடுத்து தன்னுடையவர் ஆக்கி விட்டிருக்கிறார் என்ற குஷி இருக்கிறதல்லவா? இத்தனை அநேக ஆத்மாக்களில் இருந்து என் ஒருவனான ஆத்மாவை தந்தை தேர்ந்தெடுக்கிறார் என்ற ஸ்மிருதி எவ்வளவு குஷி அளிக்கிறது. எனவே சதா இதே குஷியுடன் முன்னேறிக் கொண்டு செல்லுங்கள். தந்தை என்னை தன்னுடையவர் ஆக்கியிருக்கிறார். ஏனென்றால் நான் தான் முந்தைய கல்பத்தில் பாக்கியவான் ஆத்மா வாக இருந்தேன், இப்பொழுதும் இருக்கிறேன், இனிமேலும் ஆகப் போகிறேன் அப்பேற்பட்ட பாக்கியவான்ஆத்மா ஆவேன். இதே ஸ்மிருதி மூலமாக சதா முன்னேறிக் கொண்டே செல்லுங்கள்.

4. சதா கவலையற்றவராகி சேவை செய்வதற்கான பலம் முன்னேறிக் கொண்டேயிருக்கிறது. இவர் செய்தாலும் சரி, நான் செய்தாலும் சரி இந்த சங்கல்பத்தில் கூட கவலையிருப்பதால் நிச்சயமாக சேவை ஆகிறது. மற்றும் அதனுடைய பலம் சதா முன்னேற்றுகிறது. எனவே கவலையற்ற சேவாதாரி ஆவீர்கள் அல்லவா? கணக்குப் போட்டு பார்க்கும் சேவை அல்ல. இதற்கு தான் கவலையற்ற சேவை என்று கூறுவார்கள். எனவே யார் கவலையற்றவராகி சேவை செய்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாகவே முன்னேறுவதில் சகஜ

அனுபவம் ஆகிறது. இதே விசேஷத்தன்மை வரதான ரூபத்தில் முன்னேற்றிக் கொண்டேயிருக்கும்.

5. சேவை கூட அனேக ஆத்மாக்களை தந்தைக்கு சிநேகி ஆக்குவதற்கான சாதனமாக அமைந்துள்ளது. பார்க்கும் பொழுது கர்மனா சேவை என்று இருக்கலாம் ஆனால் கர்மனா சேவை கூட வாய் மூலமாகச் செய்யும் சேவையை விடவும் அதிகமான பலன் அளித்துக் கொண்டிருக்கிறது கர்மனா மூலமாக எவர் ஒருவருடைய மனதை பரிவர்த்தனை செய்யக்கூடிய சேவையாக இருக்கும்பொழுது அந்த சேவையின் பலனாக விசேஷ குஷியின் பிராப்தியாகிறது. கர்மானா சேவை பார்க்கும்பொழுது ஸ்தூலமாகத் தோன்றுகிறது. தான் ஆனால் சூட்சும விருத்திகளை பரிவத்தனை செய்யக்கூடியதாக இருக்கிறது. எனவே அப்பேற்பட்ட சேவைக்கு நாம் நிமித்தமாக இருக்கிறோம் என்ற இதே குஷியுடன் முன்னேறிக் கொண்டேயிருங்கள். சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள் சொற்பொழிவு ஆற்றுகிறார்கள் ஆனால் கர்மனா சேவை கூட சொற்பொழிவு நிகழ்த்துபவர்களின் சேவையை விட மதிப்பானது ஏனென்றால் இதனுடைய பிரத்தியட்சப் பலன் அனுபவம் ஆகிறது.

6. சதா புண்ணியத்தின் கணக்கு சேமிப்பு செய்யும் சிரேஷ்ட ஆத்மா ஆவேன் என்ற அனுபவம் ஆகிறதா? இந்த சேவை -பெயர் சேவை தான் ஆனால் புண்ணியத்தின் கணக்கு சேமிப்பு செய்வதற்கான சாதனம் ஆகும். எனவே புண்ணியத்தின் கணக்கு சதா நிரம்பியிருக்கிறது. மற்றும் மேற்கொண்டும் நிரம்பியிருக்கும். எவ்வளவு சேவை செய்கிறீர்களோ அவ்வளவு புண்ணியத்தின் கணக்கு அதிகரித்துக் கொண்டே போகிறது. எனவே புண்ணியத்தின் கணக்கு அழியாதது ஆகி விட்டது. இந்த புண்ணியம் அநேக ஜென்மங்களுக்கு நிரம்பியதாக ஆக்கக்கூடியது. எனவே புண்ணிய ஆத்மா ஆவீர்கள் மற்றும் சதா புண்ணிய ஆத்மா ஆகி மற்றவர்களுக்கும் புண்ணித்தின் வழி கூறுபவர்கள். இந்த புண்ணியத்தின் கணக்கு அநேக ஜென்மங்கள் கூடவே இருக்கும். அனேக ஜென்மங்கள் வளமுடையவர்களாக இருப்போம் என்ற இதே குஷியில் சதா முன்னேறிக் கொண்டே செல்லுங்கள்.

7. சதா ஒரு தந்தையின் நினைவில் இருக்கும் ஒரே சீரான ஸ்திதியை அனுபவம் செய்யும் சிரேஷ்ட ஆத்மா ஆவேன் என்ற அனுபவம் செய்கிறீர்களா? எங்கு ஒரு தந்தையின் நினைவு இருக்கிறதோ அங்கு

ஒரே சீரான ஸ்திதி சுலபமாகவும், இயல்பாகவும் அனுபவம் ஆகும். எனவே ஒரே சீரான ஸ்திதி சிரேஷ்ட ஸ்திதியாகும். ஒரே சீரான ஸ்திதியை அனுபவம் செய்யக்கூடிய சிரேஷ்ட ஆத்மா ஆவேன் என்ற ஸ்மிருதி எப்பொழுதுமே முன்னேற்றிக் கொண்டேயிருக்கும். இதே ஸ்திதியின் மூலமாக அனேக சக்திகளின் அனுபவம் ஆகிக் கொண்டேயிருக்கும்.

8. தந்தை செய்விப்பவர், செய்வித்துக் கொண்டிருக்கிறார். நான் கருவியாவேன் என்ற இந்த ஸ்மிருதி சதா புத்தியில் இருக்கிறது அல்லவா? கருவியாகி செய்பவர்கள் சதா லேசாக இருப்பார்கள். ஏனென்றால் பொறுப்பாளி, செய்விப்பவர் தந்தையாவர். நான் செய்கிறேன் என்ற ஸ்மிருதி இருக்கும்பொழுது பாரமாக ஆகி விடுகிறீர்கள். மற்றும் தந்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கும் பொழுது லேசாக இருக்கிறீர்கள். நான் கருவியாவேன். செய்விப்பவர் செய்வித்துக் கொண்டேயிருக்கிறார், நடத்துபவர் நடத்திக் கொண்டேயிருக்கிறார் இதற்குத்தான் கவலையில்லாத சக்கரவர்த்தி என்று கூறுவார்கள். எனவே செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்ற இதே விதி மூலமாக சதா முன்னேறிக் கொண்டேயிருங்கள்.

9. தந்தையின் குடை நிழலின் இருக்கும் சிரேஷ்ட ஆத்மா ஆவேன் என்ற அனுபவம் ஆகிறதா? யார் இப்பொழுது குடை நிழலில் இருக்கிறார்களோ அவர்களே இராஜ குடை (வெண்கொற்றம்) உடையவர்கள் ஆகிறார்கள். எனவே குடைநிழலில் பாக்கியவான் ஆத்மா ஆவேன் என்ற குஷி இருகிறதல்லவா? குடை நிழலே பாதுகாப்பிற்கான சாதனம் ஆகும். இந்த குடை நிழலுக்குள் யாரும் வர முடியாது தந்தையின் குடை நிழலுக்கு உள்ளே இருக்கிறேன் என்ற இந்த ஸித்திரத்தை சதா முன்னால் வைத்துக் கொள்ளுங்கள்.

10. சதா உங்களுடைய ஆன்மீக பரிஸ்தா சொரூபம் ஸ்மிருதியில் இருக்கிறதா? பிராமணரே பரிஸ்தா -பரிஸ்தாவே தேவதை என்ற இந்த புதிர்களை விடுவித்திருக்கிறீர்கள் தானே. புதிர்களை விடுவிக்கத் தெரிகிறதா? ஒரு விநாடியில் பிராமணரே தேவதை பின்பு தேவதையே பிராமணர். சக்கரத்தைச் சுற்றி வந்த பிறகு தேவதை எனவே நானே அது அதுவே நான் என்ற புதிர் சதா புத்தியில் இருக்கிறதா? யார் புதிரை விடுவிக்கிறார்களோ அவர்களுக்குத் தான் பரிசு கிடைக்கிறது. எனவே பரிசு கிடைத்துள்ளது அல்லவா? எது இப்பொழுது அது வருங்காலத்தில்

கூட கிடைக்காது. பரிசில் என்ன ஒருவேளை கிடைத்துள்ளது? சுயம் தந்தை கிடைத்து விட்டார். தந்தையினுடையவர் ஆகி விட்டீர்கள். வருங்காலத்தின் இராஜ்யத்திற்கு முன்னால் இந்த பிராப்தி எவ்வளவு உயர்ந்தது. எனவே சதா பரிசு பெறக்கூடிய சிரேஷ்ட ஆத்மா ஆவேன் என்ற இதே போதை மற்றும் குஷியுடன் சதா முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். புதிர் மற்றும் பரிசு இரண்டும் ஸ்மிருதியில் சதா இருந்தால் இயல்பாகவே முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள்.

11. சதா திடத்தன்மை வெற்றியின் சாவியாகும் என்ற விதியின் மூலமாக விருத்தியை பிராப்தி செய்யும் சிரேஷ்ட ஆத்மா ஆவேன் என்ற அனுபவம் ஆகிறது அல்லவா? திட சங்கல்பத்தின் சிறப்பாவது காரியத்தில் சுலபமாக வெற்றி அடையச் செய்து விசேஷ ஆத்மா ஆக்கி விடுகிறது. மேலும் எந்த ஒரு காரியத்திலும் விசேஷ ஆத்மா ஆகி விடும்பொழுது அனைவரின ஆசைகள் இயல்பாகவே கிடைக்கிறது. ஸ்தூலத்தில் யாரும் ஆசிகள் அளிப்பதில்லை, ஆனால் இது சூட்சுமமானது. இதன் மூலம் ஆத்மாவில் சக்தி நிறம்புகிறது. மற்றும் சுய முன்னேற்றத்தில் சுலபமாக வெற்றி பிராப்தி ஆகிறது. எனவே திடத்தன்மையின் உயர்வுடமையின் மூலமாக வெற்றியை பிராப்தி செய்யும் மற்றும் அனைவரின் ஆசிகைளப் பெறக்கூடிய சிரேஷ்ட ஆத்மா ஆவேன் என்ற இதே ஸ்மிருதியுடன் முன்னேறிச் செல்லுங்கள்.

12.பாப்தாதாவின் விசேஷ சிங்காரம் ஆவீர்கள் அல்லவா! நெற்றியின் மணியை எல்லாவற்றையும் விட சிரேஷ்ட சிங்காரம்ஆகும். மணி சதா நெற்றியில் பிரகாசிக்கிறது. எனவே அப்பேற்பட்ட நெற்றியின் மணியாகி சதா தந்தையின் கிரீடத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பவர்கள் எவ்வளவு நன்றாக இருப்பார்கள். மணி சதா தனதுபிரகாசம் மூலமாக தந்தைக்கும் அலங்காரமாகிறது. மற்றும் மற்றவர்களுக்கும் பிரகாசம் அளிக்கிறது. எனவே அப்பேற்பட்ட நெற்றியின் மணியாகி மற்றவர்களையும் அவ்வாறு ஆக்கக்கூடிவர்கள் ஆவோம் என்ற லட்சியம் சதா இருக்கிறதா? சதா சுப பாவனை, அனைவரின் பாவனை களையும் பரிவர்த்தனை செய்யக்கூடியது ஆகும்.

13. சதா தந்தையை பின்பற்றுவதில் உடனுக்குடனே செய்து தானே மகா புண்ணியம் என்ற விதியின் மூலமாக முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? இதே விதியை சதா ஒவ்வொரு காரியத்திலும் ஈடுபடுத்துவதால் எப்பொழுதுமே தந்தைக்குச் சமமான

ஸ்திதியின் அனுபவம் இயல்பாகவே ஆகிறது. எனவே ஒவ்வொரு காரியத்திலும் தந்தையை பின்பற்றுவதில் (ஃபாலோ பாதர்) ஆரம்பத்திலிருந்து அனுபவம் உடையவர்களாக இருக்கிறீர்கள். எனவே இப்பொழுதும் இந்த விதியின் மூலமாக சமானம் ஆவது மிகவும் சுலபமாகும். ஏனென்றால் ஏற்கனவே அடைந்திருக்கும் சிறப்பை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். அப்பொழுது தந்தைக்குச் சமமாக ஆகும் விசேஷமான அலௌகீக அனுபவங்கள் செய்து கொண்டேயிருப்பீர்கள் மற்றும் மற்றவர்களுக்கும் செய்வித்துக் கொண்டேயிருப்பீர்கள் இந்த சிறப்பிற்கான வரதானம் இயல்பாகவே கிடைத்துள்ளது. எனவே இந்த வரதானத்தை சதா காரியத்தில் ஈடுபடுத்தி முன்னேறிக் கொண்டே செல்லுங்கள்.

14. சதா பரிவர்த்தனை சக்தியை சரியான முறையில் காரியத்தில் ஈடுபடுத்தும் சிரேஷ்ட ஆத்மா ஆவீர்கள் அல்லவா. இதே பரிவர்த் தனை சக்தி மூலமாக அனைவரின் ஆசைகள் பெறுவதற்குப் பாத்திரம் ஆகி விடுகிறீர்கள். எப்படி காரிருள் ஏற்படும்பொழுது யாராவது வெளிச் சத்தைக் காண்பித்தால் இருளில் இருப்பவர்களின் இதயங்களில் இருந்து ஆசிகள் வெளிப்படுகின்றன அல்லவா? அதே போல் யார் சரியான பரிவர்த்தனை சக்தியை காரியத்தில் ஈடுபடுத்துகிறார்களோ அவர்களுக்கு அநேக ஆத்மாக்கள் மூலமாக ஆசிகள் பிராப்தியாகின்றன. மற்றும் அனைவரின் ஆசிகள் ஆத்மாவை சுலபமாக முன்னேற்றி விடுகின்றன. இது போல ஆசிகள் பெறுவதற்கான காரியம் செய்யும் ஆத்மா ஆவேன் என்பதை சதா நினைவில் கொண்டீர்கள் என்றால் எந்த ஒரு காரியம் செய்யும்பொழுதும் அது ஆசிகள் எடுக்கக் கூடியதாகவே செய்வீர்கள். சிரேஷ்ட காரியம் செய்யும் பொழுதே ஆசிகள் கிடைக்கும். எனவே அனைவரிடமிருந்தும் ஆசிகள் பெறக்கூடிய ஆத்மா ஆவேன் என்ற ஸ்மிருதி எப்பொழுதும் இருக்கட்டும். இதே ஸ்மிருதி சிரேஷ்டமாக ஆவதற்கான சாதனம் ஆகும். இதே அனைவருக்கும் நன்மை செய்வதற்கு கருவியாக ஆக்கி விடுகிறது. எனவே பரிவர்த்தனை சக்தி மூலமாக அனைவரின் ஆசிகளைப் பெறக்கூடிய ஆத்மா ஆவேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு அடியும் கட்டளைப்படி நடந்து மாயை பலி ஆகுமாறு செய்விக்கும் சகஜயோகி ஆகுக!**

எந்தக் குழந்தைகள் ஒவ்வொரு அடியும் கட்டளைப்படி நடக்கிறார்களோ அவர்களுக்கு முன்னால் முழு உலகமே பலியாகிறது கூடவே மாயை கூட தனது வம்சத்துடன் சேர்ந்து பலியாகி விடுகிறது. முதலில் நீங்கள் தந்தை மீது பலியாகி விடுங்கள். அப்பொழுது மாயை உங்கள் மீது பலியாகி விடும். மற்றும் உங்களுடைய சிரேஷ்ட சுவமானத்தில் இருந்து ஒவ்வொரு கட்டளைப்படியும் நடந்து கொண்டேயிருந்தீர்கள் என்றால் ஜன்ம ஜன்மாந்திரத்தின் கஷ்டங்களிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். இப்பொழுது சகஜயோகி மற்றும் வருங்காலத்தில் சகஜ வாழ்க்கை இருக்கும். எனவே அப்பேற்பட்ட சகஜ வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்

சுலோகன்: சுயத்தின் பரிவர்த்தனை மூலமாக மற்ற ஆத்மாக்களையும் பரிவர்த்தனை செய்வதுவே மறுவாழ்வு அளிப்பதாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 31.03.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சொல் மற்றும் செயல் இரண்டு சக்திகளையும். சேமிப்பதற்கான ஈஸ்வரிய திட்டம்!

இன்று ஆன்மீக ஒளி பாபா தன்னுடைய ஆன்மீக விட்டில் பூச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாலா பக்கம் உள்ள விட்டில் பூச்சிகள் விளக்கொளியின் மீது பலியாகி விட்டது. அதாவது அர்ப்பணம் ஆகி விட்டீர்கள் அர்ப்பணம் அல்லது பலியாகும் அநேக விட்டில் பூச்சிகள் உள்ளன ஆனால் அர்ப்பணம் ஆன பின்பு ஒளியின் சிநேகத்தில் விளக்குக்கு சமமாய் ஆவதில் அர்ப்பணம் செய்வதில் வரிசைப்படி உள்ளது. உன்மையில் அர்ப்பணம். ஆகின்றனர். மனதின் சிநேகத்தின் காரணமாக மனதின் சிநேகம் மற்றும் சிநேசம் இதில் வித்தியாசம் உள்ளது. சிநேகம் அனைவரிடமும் உள்ளது. சிநேகம் இருப்பதன் சாரணத்தால் அர்ப்பணம் ஆகி உள்ளனர். மனதார சிநேகம் கொள்பவர் தந்தையின் மனதில் எழுந்த விஷயங்களை மற்றும் மனதின் ஆசைகளை தெரிந்து கொண்டும் உள்ளனர் மற்றும் அதைப் பூர்த்தியும் செய்கின்றனர். மனதார சிநேகம் கொள்பவர் மனதின் ஆசைகளை பூர்த்தி செய்பவராக உள்ளனர். மனதார சிநேகம் கொள்பவர் எனில், தந்தையின் மன என்ன கூறுகின்றதோ அதை குழந்தைகளின் மனதில் நிறைத்துக் கொள்வர். மேலும் மனதில் எது நிறைந்ததோ அது கர்மத்தில் தானாக வெளிப்படும். சிநேக ஆத்மாக்கள் கொஞ்சம் மனதில் நிறைத்துக் கொள்கின்றனர். கொஞ்சம் புத்தியில் நிறைத்துக் கொள்கின்றனர். என்ன மனதில் நிறைந்து உள்ளதோ அதை காரியத்தில் கொண்டும் வருகின்றனர். என்ன புத்தியில் நிறைத்து வைத்துக் கொள்கின்றாரோ அதைப் பற்றி சிந்திப்பவராக மட்டும் உள்ளனர். செய்ய முடியுமா? அல்லது முடியாதா? செய்து தான் ஆக வேண்டும். சமயப்படி நடந்து விடும் இந்த மாதிரி சிந்தனையின் காரணமாக சிந்திப்பது வரையில் மட்டுமே நின்று விடுகின்றது செயல் வரை வருவதில்லை.

இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டு இருக்கிறார், பலி ஆகக் கூடியவர்கள் அனைவருமேதான். ஒருவேளை பலி ஆகவில்லை எனில் பிராமணன் என்று கூற முடியாது ஆனால் தந்தை சிநேகத்தினால் என்ன கூறுகின்றாரோ அதை செய்வதற்காக பலி ஆக வேண்டியுள்ளது. அதாவது நான் தான் என்பதில் அபிமானம் உள்ளது அல்லது பலவீனம் உள்ளது. இந்த இரண்டையும் தியாகம் செய்ய வேண்டியுள்ளது. பலி ஆவது என்றால் இது தான். பலி ஆகக் கூடியவர்கள் நிறைய பேர் உள்ளனர் ஆனால் பலி ஆவதில் தைரியமுடையவர் வரிசைப்படி உள்ளனர்.

இன்று பாப்தாதா ஒரு மாதத்தின் ரிசல்ட் பார்த்துக் கொண்டு இருந்தார். இந்த சீசனில் விஷேசமாக பாப்தாதா பாப்சமான் ஆவதற்காக விதவித வழிகளில் எவ்வளவு முறை சைகை கொடுத்துள்ளார் மற்றும் விசேஷமாக இது தான் பாப்தாதாவின் மனதின் சிரேஷ்ட ஆசையாக உள்ளது. இவ்வளவு கஜானா கிடைத்துள்ளது. வரதான் கிடைக்கும். வரதானத்திற்காக ஓடி ஓடி வந்துள்ளோம். தந்தைக்கும் கூட குஷி உள்ளது குழந்தைகள் சிநேகத்தினால் சந்திக்க வருகின்றனர். வரதானம் அடைந்து குஷியடைகின்றனர் ஆனால் தந்தையின் மனதின் ஆசையைப் பூர்த்தி செய்யக் கூடியவர்கள் யார்? என்ன தந்தை கூறினாரோ அதை கர்மத்தில் எது வரை கொண்டு வந்துள்ளீர்கள்? மனம், சொல், செயல் மூன்றின் ரிசல்ட் எதுவரை உள்ளது என புரிந்துள்ளீர்களா? சக்திசாலியான மனது சம்பந்தம் தொடர்பில் எதுவரை வந்துள்ளது? தனக்குத்' தானே அமர்ந்து சிந்தனை செய்தீர்களா? இது சுய முன்னேற்றத்திற்காக மிகவும் நல்லது மற்றும் செய்து தான் ஆக வேண்டும் ஆனால் சிரேஷ்ட ஆத்மாக்களின் சிரேஷ்ட மனது அதாவது சங்கல்பம் சக்திசாலியாகவும் சுப பாவனை, சுப ஆசை நிறைந்ததாக இருக்கும். மனதின் சக்தியை அறியும் கண்ணாடி எது? பேச்சு மற்றும் தர்மம் ஆகும்! அது அஞ்ஞானி ஆத்மாவானாலும் ஞானி ஆத்மாக்களானாலும் சரி, இரண்டின் சம்பந்தம் தொடர்பில் பேச்சு மற்றும் தர்மம் கண்ணாடி ஆகும். ஒருவேளை பேச்சு மற்றும் கர்மத்தில் சுப பாவனை சுப ஆசை இல்லை எனில் மன சக்தியின் பிரத்யட்ச ரூபத்தை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? எவரின் மனது சக்திசாலியாகவும் சுபமாகவும் உள்ளதோ இவர்களின் வாக்கு மற்றும் செயல் தானாகவே சக்திசாலியாகவும் சுத்தமாகவும் இருக்கும். சுப

பாவனை நிறைந்தவர்களாக இருப்பர். மனம் சக்திசாலியாக அதாவது நினைவின் சக்திகூட சிரேஷ்டமாக இருக்கும் சகஜ யோகியாக இருப்பர். இவர்கள் சகஜயோகியாக மட்டும் இருப்பது இல்லை சகஜ கர்மயோகியாகவும் இருப்பர்.

பாப்தாதா பார்த்தார், நினைவு மூலமாக சக்திசாலியாக ஆவதில் மெஜாரிட்டி குழந்தைகளுக்கு கவனம் இருக்கிறது. நினைவை சகஜமாகவும் மற்றும் நிரந்தரமாகவும் மாற்றுவதற்காக ஊக்கம் உற்சாகம் உள்ளது. முன்னேறிக் கொண்டும் மற்றும் பிறரை முன்னேற்றிக் கொண்டும் இருப்பர். ஏனெனில் தந்தையின் சிநேகம் நன்றாக உள்ளது ஆகவே நினைவின் கவனம் நன்றாக உள்ளது மற்றும் நினைவிற்கான ஆதாரம் சிநேகம் ஆகும். தந்தையிடம் ஆன்மீக உரையாடல் செய்வதில் கூட அனைவரும் நன்றாக உள்ளனர். அவ்வப்பொழுது கொஞ்சம் கண்களைக் காட்டுகின்றனர் அது கூட எப்பொழுது தங்களுக்குள் கொஞ்சம் மனத்தாங்கல் ஏற்படுகின்றதோ அப்போது பிறகு தந்தையிடம் புகார் செய்கின்றனர், நீங்கள் ஏன் சரி செய்யவில்லை? இருந்தும் கூட அது சிநேகம் நிறைந்த அன்பின் கண்களாகும் ஆனால் எப்பொழுது சேர்ந்து இருதுக்கிறார்களோ, கர்மத்தில் வருகின்றார்களோ, காரிய விவகாரங்களில் வருகின்றார்களோ ஈஸ்வர்ய குடும்பத்தில் வருகின்றார்களோ அப்பொழுது குழுவாக இருக்கும்போது பேச்சு அதாவது சொல்லில் சக்தி இதில் வீணானது அதிகமாகத் தென்படுகின்றது.

சொல்லின் சக்தி வீணாகச் செல்வதன் காரணமாக எவ்வளவு சொல்லில் தந்தையை பிரத்யட்க்ஷம் செய்வதில் கூர்மையை அதாவது சக்தியை அனுபவம் செய்விக்க வேண்டுமோ அவை குறைவாக உள்ளது. விஷயங்கள் நன்றாக உள்ளது. அது வேறுபட்ட விஷயம் தந்தை கூறும் விஷயங்களை திரும்ப கூறும்பொழுது மிகவும் நன்றாக இருக்கும் ஆனால் சொல்லின் சக்தி வீணாகச் செல்வதின் காரணமாக சக்தி சேமிப்பு ஆவது இல்லை. ஆகவே தந்தையை வெளிப்படுத்தக் கூடிய சங்கொலி உயர்ந்ததாக எழுப்புவதில் இப்பொழுது நேரம் தாமதமாகின்றது. சாதாரணத்தனமான பேச்சு அதிகமாக உள்ளது. அலௌகீகமான பேச்சாக பரிஸ்தாக்களின் பேச்சு மாதிரி இருக்க வேண்டும். இப்பொழுது இந்த வருடத்தில் இதன் மீது குறிப்பாக கவனம்

செய்ய வேண்டும். எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள் பரிஸ்தா மாதிரி வார்த்தை குறைவாகவும் மற்றும் இனிமையாகவும், இருந்தது. அந்த வார்த்தையில் பலன் கிடைத்தது. அது யதார்த்தமான வார்த்தை ஆகும் மற்றும் எந்த வார்த்தையினால் எவ்வித பலன் இல்லையோ அது வீணானதாகும். அது காரிய விவகாரங்களின் பலனாகவோ காரிய விவகாரங்களில் பேச வேண்டியதாகவும் உள்ளது இல்லையா? அது கூட நீண்டதாக இருக்கக்கூடாது. இப்பொழுது சக்தியை சேமிக்க வேண்டும். எப்படி நினைவு செய்வதன் மூலமாக மனதின் சக்தியை சேமிக்கின்றீர்களோ, அமைதியில் அமர்கின்றீர்கள் எனில் சக்தி சேமிப்பு செய்கின்றீர்கள் அந்த மாதிரி சொல்லிலும் சக்தியை சேமிக்க வேண்டும்.

சிரிக்கக்கூடிய விஷயம் பற்றிக் கூறுகின்றேன், பாப்தாதாவிற்கு வதனத்தில் அனைவரின் சேமிப்புக் கருவூலம் உள்ளது. உங்களின் சேவை நிலையங்களில் கருவூலம் (உண்டியல்) உள்ளது தானே. தந்தையின் வதனத்தில் கூட குழந்தைகளின் கருவூலம் உள்ளது. ஒவ்வொருவரும் முழு நாளில் மனம், சொல், செயலில் மூன்று சக்திகளை மீதம் பிடித்து சேமிப்பு செய்கின்றீர்கள். அது தான் (பண்டாரா) கருவூலம் ஆகும். மனதின் மூலமாக எவ்வளவு சக்தி சேமித்தீர்கள்? வாக்கு மற்றும் கர்மத்தில் சக்திகளை எவ்வளவு சேமித்தீர்கள் இதற்காக முழு கணக்கு வழக்கு உள்ளது. நீங்கள் கூட செலவு மற்றும் மீதத்தின் கணக்கு வழக்கு அனுப்புகின்றீர்கள் இல்லையா? ஆகவே பாப்தாதா இந்த சேமிப்பின் கருவூலங்களைப் பார்க்கின்றார். ஆகவே என்ன வெளிப்பட்டிருக்கும்? சேமிப்பின் கணக்கு எவ்வளவு வெளிப்பட்டு இருக்கும். ஒவ்வொருவரின் ரிசல்ட் என்பது தனித்தனி ஆகும். கருவூலம் என்பது என்னவோ நிறைந்து நிறைய இருந்தது ஆனால் சில்லரையாக நிறைய இருந்தது. சிறிய குழந்தைகள் கூட சில்லரையை சேமிப்பாகச் செய்கின்றனர் எனில் எவ்வளவு அதிக எடையுள்ளதாக ஆகி விடுகின்றது. ஆகவே சொல்லின் ரிசல்ட் விசேஷமாக இது அதிகமாக இருந்தது. எப்படி நினைவின் மீது கவனம் உள்ளது அந்த மாதிரி வாக்கின் மீது அந்த அளவு கவனம் இல்லை. ஆகவே இந்த வருடம் வாக்கு மற்றும் கர்மத்தில் இந்த இரண்டின் சக்திகளை சேமிப்பு செய்யக்கூடிய திட்டம் உருவாக்குங்கள். எப்படி அரசாங்கம் விதவிதமான விதி மூலமாக சேமிப்பின் திட்டத்தை

உருவாக்குகின்றார்கள் தானே. அந்த மாதிரி இதில் மூலம் மனது ஆகும். இதை அனைவரும் தெரிந்து உள்ளனர் ஆனால் மனதின் கூடவே விசேஷமாக வாக்கு மற்றும் கர்மத்தின் சம்பந்தம் தொடர்பில் திருப்தி தெரிய வருகின்றது. மனம் என்பது ரகசியமானது ஆகும் ஆனால் வாக்கு மற்றும் கர்மம் பிரத்யக்சமாகத் தெரியக்கூடியது. சொல்லின் மூலமாக சேமிப்பு செய்வதற்கான சாதனம் குறைவாகப் பேசுதல் மற்றும் இனிமையாகப் பேசுதல், சுயமரியாதையில் இருந்து பேசுதல் ஆகும். எப்படி பிரம்மாபாபா சிறியவர் மற்றும் பெரியவர்களை சுயமரியாதையில் இருந்து பேசியதினால் தன்னுடையவராக ஆக்கினார். இந்த விதி மூலமாக எவ்வளவு முன்னேறுகின்றீர்களோ அவ்வளவு வெற்றி மணிமாலை விரைவில் தயார் ஆகி விடும். ஆகவே இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் சேவை செய்வதன் கூடவே விசேஷமாக இந்த சக்திகளை சேமிப்பு செய்து கொண்டே சேவை செய்ய வேண்டும்.

சேவைக்கான திட்டங்களை என்னவோ நல்லதிலும் நல்லதாக உருவாக்குகின்றீர்கள் மற்றும் இப்பொழுது வரை இந்த திட்டப்படி சேவை செய்கின்றீர்கள். நாலாபக்கம் நல்ல ரிசல்ட் வெளிவரும்படி சுப பாவனை மூலமாக முன்னேறிச் செல்கின்றீர்கள். அந்த மாதிரி குழுவில் இருக்கும்போது சதா திருப்தியாக இருக்கவும் மற்றும் திருப்தி செய்யக்கூடிய விசேஷ சங்கல்பம். இது கூடவே இருக்க வேண்டும். ஏனெனில் ஒரே சமயத்தில் மூன்று விதமான சேவை கூடவே நடக்கும் -தன்னுடைய திருப்தி -இது சுயத்தின் சேவை ஆகும். 2) குழுவில் திருப்தி -இது ஈஸ்வர்ய குடும்ப சேவை ஆகும் 3) மொழி மூலமாகவோ அல்லது எந்த ஒரு விதி மூலமாகவோ உலக ஆத்மாக்களுக்கு சேவை -ஒரே சமயத்தில் மூன்று விதமான சேவை நடைபெறுகின்றது. எந்த ஒரு புரோகிராம் உருவாக்கினாலும் இதில் மூன்று சேவையும் அடங்கியே உள்ளது. எப்படி உலக சேவையின் ரிசல்ட் அல்லது விதி கவனத்தில் வைக்கின்றீர்கள். அந்த மாதிரி இரண்டின் சேவைகளும் சுய மற்றும் குழுவின் மற்றும் தடைகளற்று இருப்பின் அப்பொழுது தான் கூற முடியும் நெம்பர் ஒன் வெற்றி என்று. மூன்றிலும் வெற்றி அடைவது தான் நம்பர் எடுப்பதாகும். இந்த வருடம் மூன்று சேவைகளிலும் வெற்றியின் கூடவே முரசு ஒலிக்க வேண்டும். ஒருவேளை ஒரு மூலையில் முரசு ஒலித்தால் கும்பகர்ணர்களின் காது

வரை சென்றடையவில்லை. எப்பொழுது நாலாபுறமும் இந்த முரசு ஒலிக்குமோ அப்பொழுது அனைத்து கும்பகர்ணர்களும் எழுந்து விடுவர். இப்பொழுது ஒருவர் எழுகின்றனர் எனில் மற்றவர் உறங்குகின்றனர். மற்றவர் எழுந்தால் மூன்றாமவர் உறங்குகின்றனர். கொஞ்சம் எழுந்தாலும் கூட நல்லது. நல்லது என்று கூறிக் கொண்டே பிறகும் உறங்கி விடுகின்றனர் ஆனால் எழுந்து விட்டால் மற்றும் வாய் மூலமாக அல்லது மனம் மூலமாக ஆஹோ! பிரபு என்று கூறி முக்திக்கான ஆஸ்தியை எடுக்க வேண்டும் அப்பொழுது தான் முடிவு ஏற்படும். எழுந்து விட்டால் அப்பொழுது முக்திக்கான ஆஸ்தியை எடுப்பர். ஆகவே புரிந்ததா என்ன செய்ய வேண்டும்? ஒருவர் மற்றவருக்கு சகயோகி ஆகுங்கள். மற்றவரின் சேமிப்பில் இருந்து தன்னுடைய சேமிப்பு அதாவது சுய சேமிப்பு ஆகி விடும்.

சேவையின் திட்டத்தில் எவ்வளவு தொடர்பின் சமீபத்தில் கொண்டு வாருங்கள். அவ்வளவு சேவையின் பிரத்யட் ரிசல்ட் தெரியவரும் செய்தியைத் தரக்கூடிய சேவையை செய்து கொண்டே வந்துள்ளீர்கள், செய்து கொண்டே இருங்கள் ஆனால் விசேஷமாக இந்த வருடம் செய்தியை மட்டும் தந்தால் போதாது சகயோகியாகவும் ஆக்க வேண்டும், அதாவது தொடர்பில் சமீபமாகக் கொண்டு வர வேண்டும். விண்ணப்பம் பூர்த்தி செய்து தருவது இது நடந்து கொண்டே தான் உள்ளது ஆனால் இந்த வருடம் முன்னேறிச் செல்லுங்கள். விண்ணப்பம் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் சம்பந்தத்தில் கொண்டு வர வேண்டும். எப்படிப்பட்ட மனிதர்களோ அந்த மாதிரி தொடர்பில் கொண்டு வரக்கூடிய திட்டம் உருவாக்குங்கள். விரும்பினால் சிறிய சிறிய புரோகிராம் செய்யுங்கள் ஆனால் இலட்சியம் வையுங்கள் ஒரு மணி நேர சகயோகியாக அல்லது விண்ணப்பம் பூர்த்தி செய்யும் சமயம் வரை சகயோகியாக அல்ல, ஆனால் சகயோகம் மூலமாக அவர்களை சமீபமாகக் கொண்டு வர வேண்டும். தொடர்பில், சம்மந்தத்தில் கொண்டு வாருங்கள். அப்பொழுது போகப்போக சேவையின் ரூபமாக மாற்றம் ஏற்படும். தங்களுக்காக தன்னுடையவராக ஆக்க வேண்டும் என்பதில்லை உங்களின் மூலம் சம்பந்தத்தில் வரக்கூடியவர்கள் கூறுவார்கள் நீங்கள் ஆசீர்வாதம் மற்றும் திருஷ்டி தர வேண்டியதிருக்கும். எப்படி இன்றைய காலத்தில் சங்கராச்சாரியாரை பீடத்தில் மீது அமர வைக்கின்றனர், அந்த மாதிரி உங்களை பூஜை

செய்யும் பீடத்தின் மீது அமர வைப்பர், வெள்ளியால் ஆன பீடத்தில் அல்ல. பூமியை தயார் செய்வதற்கு நிமித்தமாக ஆவார் மற்றும் நீங்கள் திருஷ்டி மூலமாக விதை போட வேண்டும். இரு ஆசீர்வாதம் தரும் வார்த்தை பேச வேண்டும். அப்பொழுது தான் பிரத்யட்க்ஷம் ஆகும். உங்களிடம் தந்தை தெரிய வேண்டும் மற்றும் தந்தையின் பார்வை தந்தையின் சி நேகத்தின் அனுபூதியை எடுக்கும் பொழுது பிரத்யக்ஷத்தின் முரசு ஒலி ஆரம்பம் ஆகி விடும்.

இப்பொழுது சேவைக்கான பொன்விழா கொண்டாடி வீட்டீர்கள், இப்பொழுது மேலும் சேவை செய்தால் தந்தை பார்த்துப் பார்த்து புன்முறுவல் பூத்த வண்ணமே இருப்பார். எப்படி போப் என்ன செய்கின்றார்? எவ்வளவு பெரிய சபையின் இடையே திருஷ்டி இரு ஆசீர்வாத உரையாற்றுகின்றார். நீண்டு விஸ்தாரமாக பேசக் கூடியவர்கள் மற்றவர்கள் நிமித்தமாக ஆவார்கள்.

எங்களுக்கு பாபா கூறினார் என்று சொல்லுங்கள். அதைக் கேட்டு இவர்கள் கூறியது பாபாவினுடையது தான், வேறு எதுவுமே இல்லை என்று அவர்கள் கூறுவார்கள். இவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாய், உதவிக் கரங்கள் தயாராவர் எப்படி சேவா நிலையங்களில் சேவைக்காக உதவிக் கரங்கள் தயாராகி உள்ளார் அல்லவா, அது போல் மேடையில் உங்கள் சார்பில் அனுபவப்பூர்வமாகப் பேசுவார்கள், வந்து விடுவார்கள். வெறும் மகிமை பாடுவோர் மட்டுமல்ல, ஞானத்தின் ஆழமான கருத்துக்களைத் தெளிவு படுத்துபவர்கள், பரமாத்ம ஞானத்தை நிரூபிக்கக் கூடியவர்கள் -இப்படிப்பட்டோர் நிமித்தமாவார்கள் ஆனால் அதற்கு இப்படிப்பட்டவர்களை சிநேகி, சகயோகி மற்றும் தொடர்பு ஏற்படுத்தி சம்பந்தத்தில் கொண்டு வாருங்கள். இதற்கு முழு நிகழ்ச்சியின் லட்சியமே இதுவாக இருக்கட்டும், அதாவது நீங்கள் சக்தி நிறைந்தவர்களாக ஆக வேண்டும். அவர்கள் மைக் ஆக வேண்டும். இந்த ஆண்டு சகயோக சேவையின் நோக்கமே மைக் தயார் செய்வதாக இருக்கட்டும். அவர்கள் அனுபவத்தின் ஆதாரத்தில் உங்கள் அதாவது பாபாவின் ஞானத்தை வெளிப்படுத்தட்டும் எவரது பேச்சு பிறரை பிரபாவத்தில் ஆழ்த்துகிறதோ அம்மாதிரி மைக்'களைத் தயார் செய்யுங்கள். புரிந்ததா? சேவையின் உத்தேசம் என்ன? இவ்வளவு சேவா நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளீர்கள், அதன் வெண்ணை என்னவாக

வெளி வரும்? நன்கு சேவை செய்யுங்கள், ஆனால் இந்த ஆண்டு செய்தியைப் பரப்பும் சேவையோடு இதையும் (மைக் சேவா) சேர்த்துக் கொள்ளுங்கள். யார்? யார்? இதற்குத் தகுதியானவர்கள் என பட்டியல் தயார் செய்து கொள்ளுங்கள், பிறகு அவ்வப்போது விதவிதமான விதிகளின் மூலம் அவர்களைத் தொடர்பில் கொண்டு வாருங்கள். ஒன்றன்பின் ஒன்றாக பல சேவை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தீர்கள், அப்படியே பல செய்து வரும்போது முதலில் வந்தவர்களை அங்கே விட்டு விட்டீர்கள், தொடர்பே இல்லை, இங்கும் சேமிப்பு சக்தியை பிரயோகம் செய்யுங்கள், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் (மைக்குகள்) சேர்த்துக் கொண்டே போங்கள். கடை யில் இவ்வித சம்மந்தம்-தொடர்பாளர்களின் மாலை தயாராகி விடும். புரிந்ததா? அடுத்து பாக்கி என்ன?

சந்திக்கும் புரோகிராம்: இந்த ஆண்டு பாப்தாதா 6-மாத சேவையின் ரிஸல்ட்டைப் பார்க்க விரும்புகின்றார். சேவையில் என்னென்ன திட்டங்களைத் தீட்டியுள்ளீர்களோ, அதனை நாலா புறமும் ஒருவர் மற்றொருவருக்கு உதவி செய்து கொண்டு நன்கு சேவையில் சுற்றி வாருங்கள். அனைத்து சிறியோர் பெரியோர் அனைவரையும் உற்சாகத்தில் கொண்டு வந்த மூன்று வித சேவையில் (எண்ணம், சொல், செயல்) முன்னேறச் செய்யுங்கள். எனவே பாப்தாதா இந்த ஆண்டில் முழு இரவையும் பகலாக்கி சேவை கொடுத்துள்ளார். இப்போது மூன்று விதமான சேவையிலும் பழத்தை (பலனை) உண்ணக் கூடிய நேரமிது! வர வேண்டியதில்லை. பழத்தை உண்ண வேண்டும். இந்த ஆண்டு வருவது நிச்சயமில்லை. பாபாவின் (சகாஷ்) சக்தியான ஒளி சதா கூடவே இருக்கிறது. நாடகத்தில் என்ன பதிவாகியுள்ளதோ அதைக் கூறி விட்டோம். நாடகத்தின் பதிவை ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும். நன்கு சேவை செய்யுங்கள். 6-மாதத்திலேயே ரிஸல்ட் தெரிந்து விடும். பாபாவின் ஆசைளைப் பூர்த்தி செய்ய திட்டம் தீட்டுங்கள். எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும், ஒவ்வொரு சங்கல்பமும், சொல்லும், செயலும் பாபாவின் ஆசைகளின் தீபங்களை ஏற்றுவதாக இருக்கட்டும். முதலில் மதுபனில் இதன் முன் உதாரணத்தைக் காட்டுங்கள். சிறுசேமிப்பு திட்டத்தின் முன் உதாரணத்தை முதலில் மதுபனில் ஏற்படுத்துங்கள். இந்த பேங்கில் முதலில் சேமியுங்கள். மதுபன்காரர்களுக்கும் வரதானம் என்னவோ

கிடைத்து விட்டது. யாருக்கு கிடைக்கவில்லையோ அவர்களும் இந்த ஆண்டு சீக்கிரம் கிடைத்து விடும். ஏனெனில் பாபாவின் சினேகம் அனைத்து குழந்தைகளின் கூடவே உள்ளது. பொதுவாக ஒவ்வொரு குழந்தையின் பொருட்டும், ஒவ்வொரு அடியிலும் வரதானம் இருக்கவே செய்கிறது. உள்ளத்து சினேக ஆத்மாக்கள் வரதானத்தின் மூலமாகத்தான் ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்கின்றனர். பாபாவின் வரதானம் வெறும் வாயால் மட்டுமல்ல! உள்ளத்தாலும் தான்! மேலும் உள்ளத்து வரதானம் சதா உள்ளத்தில் குஷி, உற்சாகம், ஆர்வத்தை அனுபவம் செய்விக்கிறது. இது உள்ளத்து வரதானத்தின் அடையாளமாகும். உள்ளத்து வரதானத்தை யார் யார் தம் உள்ளத்தில் தாரணை செய்கின்றனரோ அவர்களின் அடையாளம் இதுவே ஆகும், அவர்கள் சதா குஷி, உற்சாகம் ஆர்வத்தில் முன்னேறிக் கொண்டே இருக்கின்றனர். ஒருபோதும், எந்த விஷயத்திலும் சிக்கிக் கொள்ள மாட்டார்கள் நின்று போக மாட்டார்கள் வரதானத்தால் பறந்து கொண்டே இருப்பர். மற்றபடி விஷயங்கள் அனைத்தும் கீழேயே இருந்து போகும். சாலை ஓரக் காட்சிகளும் பறப்பவர்களைத் தடுக்க முடியாது. இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும், யார், யார் உளப்பூர்வமாய் களைப்பில்லாது சேவை செய்தள்ளனரோ, அந்த அனைத்து சேவாதாரிகளுக்கும் இந்த சீசனின் சேவையின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். மதுபனில் வந்து மதுபனில் அலங்காரம் ஆகியுள்ளனர், இம்மாதிரி அலங்காரம் ஆகக்கூடிய குழந்தைகளுக்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். மேலும் நிமித்தமாயிருக்கிற சிரேஷ்ட ஆத்மாக்களுக்கும் சதா களைப்பற்று பாப்சமான் தமது சேவையின் மூலம் அனைவரையும் புத்தணர்வு அடையச் செய்வதற்காக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார். மேலும் ரதத்திற்கும் வாழ்த்துக்கள்! நாலா புறங்களிலுமுள்ள சேவாதாரி குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள். தடைகளை வென்று (நிர்விக்ன) முன்னேறுகிறீர்கள், முன்னேறிக் கொண்டே இருங்கள். வந்திருக்கின்ற உள்நாட்டு வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு வந்ததற்கும் புத்துணர்வு பெற்றுச் செல்வதற்கும் வாழ்த்துக்கள். சதா புத்துணர்வு பெற்றவாறிருக்க வேண்டும். 6-மாதத்திற்கு மட்டும் (சீசன்) புத்துணர்வு பெற்றால் போதாது. புத்துணர்வு பெற்றுச் செல்ல வாருங்கள், பரவாயில்லை, ஏனெனில், பாபாவின் கஜானா அனைத்து குழந்தைகளுக்கும் சதா

உரிமை உண்டு, பாபா, கஜானா இரண்டும் சதா கூடவே இருக்கிறது மேலும் கூடவே இருக்கும். மற்றபடி கோடிட்டு காட்டிய விஷயத்தில் மட்டும் விசேஷமாய் தன்னை முன்னுதாரணமாய் ஆக்கிக் கொள்ள வேண்டும். எக்ஸாமில் (தேர்வு) எக்ஸ்ட்ரா மார்க்ஸ் எடுக்க வேண்டும், பிறரைப் பார்க்கக் கூடாது. தன்னை முன்னுதாரணமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இதில் எவர் முதல்வரோ அவரே அர்ஜுன், அதாவது நம்பர் ஒன் அடுத்த முறை பாப்தாதா வரும்போது பரிஸ்தாக்களின் செயல், பரிஸ்தாக்களின் பேச்சு, பரிஸ்தாக்களின் சங்கல்பங்களை தாரணை செய்யக் கூடியவர்களாய் ஒவ்வொருவரும் தென்பட வேண்டும். அம்மாதிரி மாற்றம் ஒட்டுமொத்தமாய் அனைவரிடமும் தென்படட்டும். இது பரிஸ்தாக்களின் பேச்சு, பரிஸ்தாக்களின் செயல் எவ்வளவு அலௌகீகமானது -இவ்வாறு ஒவ்வொருவரும் அனுபவம் செய்யட்டும். இந்த பரிவர்த்தனை மாற்றம் கொண்டு வரும் விழாவினைக் காண பாப்தாதா விரும்புகின்றனர். ஒவ்வொரு வரும் தங்களின் முழு நாளின் பேச்சினைப் பதிவு செய்தால், மிக நன்றாகப் புலப்பட்டு விடும். சோதித்துப் பார்த்தால் எவ்வளவு வீணாகியுள்ளது என்பது தானாகவே தெரிய வரும். மனம் என்னும் ஒலி நாடாவில் சோதனை செய்யுங்கள், ஸ்தூலமான ஒலி நாடாவில் அல்ல. சாதாரண பேச்சு கூட வியர்த்தத்தில் (வீண்) கணக்காகிறது. 4-வார்த்தைகளுக்குப் பதிலாய் 24-பேச்சுக்களப் பேசினால் 20ஐ எந்தக் கணக்கில் சேர்ப்பது. சக்தியை (எனர்ஜி) சேமியுங்கள். அப்போது உங்களின் இரண்டு பேச்சு ஆசீர்வாதத்தின் ஒரு மணி நேர சொற்பொழிவின் வேலை செய்யும். நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள பலியாகக் கூடிய ஆன்மீக விளக்குப் பூச்சிகளுக்கும், அனைத்து பாபா சமமாய் ஆகும் மன உறுதியுடன் முன்னேறிக் செல்லக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா பறக்கும் கலையின் மூலம் அவ்வித சாலை ஓரக் காட்சிகளைக் கடந்து செல்லக்கூடிய (டபுள் லைட்) இரட்டை ஒளியான குழந்தைகளுக்கு ஆன்மீக விளக்கொளியான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்!

**வரதானம்: சதா இரக்கம் மற்றும் மங்கள எண்ணப் பார்வையின் மூலம் உலகின் சேவை செய்யக்கூடிய உலக மாற்றம் செய்வோர் ஆகுக!**

உலகை மாற்றும் உலக சேவாதாரி ஆத்மாக்களின் முக்கிய லட்சணம் -தமது இரக்கம் மற்றும் மங்கள பார்வையின் மூலம் உலகத்தை முழுமை நிரம்பியதாகவும், சுகமாயும் ஆக்குவது! உலகில் கிட்டாத பொருளான, ஈஸ்வர்ய சுகம், சாந்தி மற்றும் ஞானச் செல்வத்தின் மூலம் சர்வ சக்திகளின் மூலம் அனைத்து ஆத்மாக்களுக்கும் யாசிப்பவர்களலிருந்து (பிச்சை) அதிகாரி, உரிமையுள்ள ஆத்மாக்களாக ஆக்குக! இப்படிப்பட்ட சேவாதாரி தனது ஒவ்வொரு வினாடியும், சொல் மற்றும் செயல் தொடர்பு சம்மந்தங்களை சேவையிலேயே ஈடுபடுத்திக் கொண்டிருப்பர். அவர்களது பார்வை, நடை, உடை உணவு உண்ணுதல் அனைத்திலும் சேவை நிறைந்துள்ளது.

சுலோகன்: பெருமை, புகழை தியாகம் செய்து தனது நேரத்தை எல்லையற்ற சேவையில் ஈடுபடுத்துவதே பரோபகாரி ஆவதாகும்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 11.08.1988 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றியின் காந்தம் -சந்திப்பது மற்றும் வளைந்து கொடுப்பது!

அனைவரின் அன்பு, அன்புக் கடலில் மூழ்கி விட்டது. அப்படி எப்பொழுதும் அன்பில் மூழ்கியிருந்து மற்றவர்களுக்கும் அன்பை அனுபவம் செய்து கொண்டே இருங்கள். பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் கருத்துக்கள் ஒத்துப்போகும் கூட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். பறந்து கொண்டேயிருந்து வருபவர்களுக்கு எப்பொழுதும் பறக்கும் கலையின் வரதானம் தானாகவே பிராப்தியாகிக் கொண்டிருக்கும். வந்திருக்கும் அனைத்துக் குழந்தைகளின் ஊக்கம், உற்சாகத்தைப் பார்த்து அனைத்துக் குழந்தைகளின் மேல் பாப்தாதா மலர்களால் ஆன மழை பொழிகிறார். எண்ணங்கள் சமமாகும் சந்திப்பு, இன்னும் வரும் நாட்களில் சம்ஸ்காரம் தந்தைக்கு சமமாக சந்திப்பது, இந்த சந்திப்புத்தான் தந்தையோடு ஏற்படும் சந்திப்பாகும். இது தான் தந்தைக்கு சமமாவது எண்ணங்கள் ஒத்துப் போவது, இது தான் பணிவானவர்களாகி பொறுப்பில் இருப்பவர்கள் ஆவது ஆகும். அருகாமையில் வந்து கொண்டிருக்கிறீர்கள். வந்தே விடுவீர்கள். சேவையின் வெற்றியைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறோம். எப்பொழுதும் அன்பானவர்களாகி, அன்பின் அலையை உலகில் பரப்புவதற்காக இந்த அன்பு சந்திப்பில் வந்திருக்கிறீர்கள் ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் நற்காரியங்கள் முதலில் நம் வீட்டில் தான் தொடங்க வேண்டும் முதலில் சுயம் தான் மிகவும் அன்பான வீடாகும். எனவே முதலில் தன்னிடமிருந்து, பின்பு பிராமணக் குடும்பத்தில், அதன் பின் உலகில், ஒவ்வொரு எண்ணத்திலும் நம்மவர் என்ற பிரிவு, ஒவ்வொரு எண்ணத்திலும் இரக்க மனம், கொடுக்கும் தன்மை, இயற்கையான இயல்பாகி விடட்டும். இது தான் அன்பில், எண்ணங்களில், கருத்துக்களில் சம்ஸ்காரத்தில் இரண்டறக் கலந்து விடுவது அனைவரின் சகயோகத்தின் காரியத்திற்கு முன்பு மிக உயர்ந்த பிராமண ஆத்மாக்களின் நிரந்தர சகயோகம் முழு உலகையும் சக

யோகியாக எளிதாகவும் தானாகவும் ஆக்கியே விடுகிறது. எனவே வெற்றி அருகில் வருகிறது. இரண்டறக் கலந்து வளைந்து சொடுப்பது இது தான் வெற்றிக்கான காந்தமாகும். மிகவும் சுலபமாக இந்தக் காந்தத்தின் முன் அனைத்து ஆத்மாக்களும் கவரப்பட்டு வந்தே விடுவார்கள்.

மீட்டிங்கில் வந்துள்ள குழந்தைகளுக்கும் பாப்தாதா அன்பின் வாழ்த்துக்களைக் கொடுக்கிறார். நெருக்கத்தில் இருக்கிறார்கள். மேலும் எப்பொழுதும் நெருக்கத்தில் இருப்பார்கள். தந்தையோடு மட்டுமின்றி தங்களுக்குள்ளும் நெருக்கத்தில் இருக்கும் காட்சியை பாப்தாதாவிற்கு காண்பித்திருக்கிறார்கள். உலகிற்கு காட்சியை காண்பிப்பதற்கு முன்பு பாப்தாதா அதைப் பார்த்தார். வருபவர்கள் குழந்தைகள் உங்களின் செயல்களைப் பார்த்து, என்ன செய்ய வேண்டும், என்ன நடக்க வேண்டும் என்பதை எளிதாகப் புரிந்து கொள்வார்கள். உங்களுடைய செயல்கள் தான் செயல் திட்டமாகும். நல்லது.

அனைவரும் திட்டங்களை நன்றாகச் செய்திருக்கிறீர்கள் மேலும் இந்தக் காரியத்தின் ஆரம்பத்திலேயே பாப்தாதா ஒவ்வொரு வர்க்கத்தையும் தயார் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை சமிக்ஞை செய்திருந்தார், அது இப்பொழுதும் இருக்கிறது. எனவே பெரிய காரியத்தில் எந்த ஒரு வர்க்கமும் விட்டுப்போகாமல் கவனம் வைத்துக் கொள்ளுங்கள். நேரத்திற்குத் தகுந்தாற்போல் அதிகமாகச் செய்ய முடியாவிட்டாலும், சேம்பிளாவது தயாராக வேண்டும் என்ற முயற்சியும் இலட்சியமும் வைக்க வேண்டும். பின்பு வரும் நாட்களில் இதே காரியத்தை அதிகரித்துக் கொண்டேயிருப்பீர்கள். எனவே நேரத்திற்கு ஏற்றாற்போல் செய்து கொண்டேயிருங்கள் ஆனால் முடிவை அருகில் கொண்டு வருவதற்கு அனைவரின் சகயோகமும் தேவையாக இருக்கிறது ஆனால் இவ்வளவு முழு உலகின் ஆத்மாக்களையும் ஒரே நேரத்தில் நெருக்கத்தில் கொண்டு வர முடியாது. எனவே அனைத்து ஆத்மாக்களையும் சகயோகி ஆக்கியிருக்கிறோம் என்று உடனே கூறுங்கள். எனவே இந்த இலட்சியம் அனைவருக்கும் என்ற காரணத்தைப் பூர்த்தி செய்து விடுகிறது எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டது என்று எந்த வர்க்கத்தினரும் புகார் கூறக் கூடாது. விதை போடுங்கள். மற்றபடி விஸ்தரிப்பது எப்பொழுது நேரம் கிடைக்குமோ

அப்பொழுது செய்யுங்கள். இதில் பாரமாகி விடாதீர்கள். எவ்வளவு செய்வது! எப்படி செய்வது? என்று யோசிக்காதீர்கள் எவ்வளவு வேண்டுமோ அது ஆகியே தீரும். எவ்வளவு செய்வீரகளோ அவ்வளவு வெற்றியின் அருகில் வர முடியும். சேம்பிள் தயார் செய்ய முடியும் இல்லையா?

மற்றபடி பாரத அரசாங்கத்தை நெருக்கத்தில் கொண்டு வருவதற்கான எண்ணம் கொண்டு வந்திருக்கிறீர்கள் இல்லையா, அது நேரம் அனைவரின் புத்தியையும் நெருக்கத்தில் கொண்டு வருகிறது. எனவே அனைத்து பிராமண ஆத்மாக்களும் இந்த விசேஷமான காரியத்திற்காக, ஆரம்பம் முதல் கடைசி வரை வெற்றி கிடைத்தே ஆக வேண்டும் என்று வைத்திருந்த சுத்த எண்ணத்தினால் மற்றும் தந்தைக்கு சமமாக வைப்ரேஷன் உருவாக்குவது மற்றும் இரண்டறக் கலப்பதால், வெற்றியின் நிச்சயத்தின் உறுதியால் முன்னேறிச் சென்று கொண்டிருங்கள் ஆனால் எப்பொழுது ஏதாவது ஒரு பெரிய காரியம் செய்தால் முதலில் என்ன செய்கிறார்கள்? ஸ்தூலமாகக் கூடப் பார்த்திருப்பீர்கள் சுமையான ஒரு பொருளைத் தூக்கினால் என்ன செய்கிறார்கள்? ஒருவர் இன்னொருவருக்கு கை கொடுப்பார்கள் மேலும் தைரியம் மற்றும் உற்சாகத்தை அதிகரிப்பதற்கான வார்த்தைகளைக் கூறுவார்கள். பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? அதே போல் யாராவது பொறுப்பானவர்கள் ஆகிறார்கள் ஆனால் இந்த விசேஷக் காரியத்திற்காக அனைவரின் அன்பு, அனைவரின் சகயோகம், அனைவரின் சக்தியின் ஊக்கம், உற்சாகம் நிறைந்த எண்ண அலைகள் கும்பகர்ணத் தூக்கத்திலிருந்து அனைவரையும் எழுப்பி விடும். இந்த விசேஷக் காரியத்தின் மேல் இந்தக் கவனம் அவசியமாக இருக்கிறது. விசேஷமாகக் தன்னுடைய அனைத்து பிராமணர்கள் மற்றும் உலகின் ஆத்மாக்களின் சகயோகத்தை எடுத்துக் கொள்வது தான் வெற்றிக்கான சாதனமாகும். இதனிடையில் கொஞ்சம் வித்தியாசம் ஏற்பட்டு விட்டாலும் வெற்றியில் வித்தியாசம் ஏற்படுவதற்குக் காரணமாகி விடுகிறது. எனவே பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் துணிச்சல் நிறைந்த சப்தத்தைக் கேட்டு அந்த நேரமே மகிழ்ச்சியடைந்தார். மேலும் குழுவின் அன்பின் காரணமாக, அன்பிற்கான பிரதிபலன் கொடுப்பதற்காக முக்கியமாக வந்திருக்கிறோம். நீங்கள் மிகவும் நல்லவர்கள் மேலும் பல தடவை நல்லதிலும் நல்லவர்களாக

ஆகியிருந்தீர்கள் மற்றும் ஆவீர்கள். எனவே இரட்டை வெளிநாட்டவர்கள் தூரத்திலிருந்து கொண்டே எவரெடியாகி பறப்பதற்கு பொறுப்பான விசேஷமான குழந்தைகளுக்கு பாப்தாதா இதயத்தின் மாலையை அணிவித்து அரவணைத்துக் கொள்கிறார். நல்லது.

குமாரிகள் இருப்பதே முரளிதரனுக்காகத்தான். ஒரே ஒரு வார்த்தையை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் அனைத்திலும் ஒன்று ஒரு வழி, ஒருவரின் ரசனை மற்றும் ஒரு தந்தை. பாரதத்தின் குழந்தைகளுக்கும் பாப்தாதா மனம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவிக்கிறார். எப்படி இலட்சியம் வைத்திருந்தார்களோ அதே போல் நடைமுறையில் இலட்சணத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். புரிந்ததா? சிலருக்கு சொல்லிவிட்டு, சிலருக்கு சொல்லவில்லை அப்படியில்லை, அனைவருக்கும் கூறுகிறோம். (தாதியிடம்) யார் பொறுப்பில் இருக்கிறாரோ அவருடைய கவனமும் இருக்கிறது. இது தான் நம்முடையவர் என்ற உணர்வின் அடையாளம் ஆகும். நல்லது.

மீட்டிங்கில் வந்திருக்கும் அனைத்து சகோதர சகோதரிகளையும் பாப்தாதா மேடைக்கு அழைத்தார்: அனைவரும் புத்தியை நன்றாக உபயோகித்திருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தையின் சேவையின் அன்பு பாப்தாதாவுக்குத் தெரியும். சேவையில் முன்னேறுவதால் எதுவரை நாலா புறத்தின் வெற்றி இருக்கிறது என்று இதை மட்டும் கொஞ்சம் யோசியுங்கள் மற்றும் பாருங்கள். மற்றபடி சேவையின் ஈடுபாடு நன்றாக இருக்கிறது. இரவு பகலாக சேவைக்காக ஒருவர் மாற்றி இன்னொருவர் ஓடுகிறார். கஷ்டப்பட்டு செய்யும் காரியத்தையும் அன்பின் வடிவில் தான் பார்க்கிறார். கஷ்டப்பட்டு செய்யவில்லை, அன்பு தான் தென்பட்டது. நல்லது. நல்ல ஊக்கம், உற்சாகம் நிறைந்த துணை கிடைத்திருக்கிறது. விசாலமான காரியம் மற்றும் விசாலமான மனது இருக்கிறது, ஆகவே எங்கு பெருந்தன்மை இருக்கிறதோ அங்கு வெற்றி இருக்கவே இருக்கிறது. அனைத்துக் குழந்தைகளின் சேவையின் ஈடுபாட்டைப் பார்த்து பாப்தாதா தினந்தோறும் குஷியின் பாடலைப் பாடுகிறார். பல தடவை பாடலைக் கூறியிருக்கிறோம் ஆஹா குழந்தை ஆஹா! வருவதில் எவ்வளவு இரகசியம் இருந்தது, இரகசியங்களை தெரிந்தவர்கள் தானே. தந்தைக்குத் தெரியும், இரகசியத்திற்குத் தெரியும் (தாதி பாபாவிற்கு 'போக்' சுவீகாரம் செய்ய

விரும்பினார்) இன்று பார்வை மூலமாகவே சுவீகாரம் செய்வோம். நல்லது.

அனைவரின் புத்தியும் மிக நன்றாக வேலை செய்கிறது மேலும் ஒருவர் இன்னொருவரின் நெருக்கத்தில் வந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? எனவே வெற்றி அருகில் இருக்கிறது. நெருக்கம் வெற்றியை அருகில் கொண்டு வரும். களைப்படைந்து விடவில்லை. நிறைய வேலை கிடைத்து விட்டதா? ஆனால் பாதி வேலையை தந்தை செய்கிறார் அனைவரின் ஊக்கம் நன்றாக இருக்கிறது. உறுதித் தன்மையும் இருக்கிறது இல்லையா? நெருக்கம் எவ்வளவு அருகில் இருக்கிறது? காந்தத்தை வைத்து விட்டால் நெருக்கம் அனைவரின் கழுத்திலும் மாலை போட்டு விடும், அந்த மாதிரி அனுபவம் ஆகிறதா? நல்லது. அனைவரும் நல்லதிலும் நல்லவர்கள்.

பார்ட்டிகளுடன்: அனைவரும் அமைதி சக்தியின் அனுபவி ஆகி விட்டீர்கள் இல்லையா? அமைதியின் சக்தி மிகவும் சுலபமாகத் தன்னையும் மாற்றுகிறது மற்றவர்களையும் மாற்றுகிறது. நினைவு பலம் மூலமாக உலகை மாற்றுகிறீர்கள். நினைவு என்பது என்ன? அமைதியின் சக்தி தானே இதன் மூலமாக மனிதனும் மாறி விடுகிறார் இயற்கையும் மாறி விடுகிறது. அந்த அளவு அமைதியின் சக்தியை தன்னுள் சேமித்து வைத்திருக்கிறீர்களா? மனிதர்கள் கண்டிப்பாக மாற வேண்டும் ஆனால் கூடவே இயற்கையும் மாற வேண்டும் இயற்கைக்கு வாயினால் சொல்லும் ஏழு நாள் பாடம் எடுக்க மாட்டீர்கள். மனிதர்களுக்கு பாடம் எடுத்து விடுகிறீர்கள் ஆனால் இயற்கையை எப்படி மாற்றுவது? வார்த்தைகள் மூலமாகவா? அல்லது அமைதியின் சக்தி மூலமாகவா? யோக பலம் மூலம் மாற்றுவீர்கள் இல்லையா? அப்படி எப்பொழுது யோகாவில் உட்காருகிறீர்களோ அப்பொழுது என்ன அனுபவம் செய்கிறீர்கள்? அமைதியை. எண்ணம் கூட எப்பொழுது அமைதி ஆகி விடுகிறதோ, ஒரே ஒரு எண்ணம் தந்தை மற்றும் நான் இதை தான் யோகா என்று கூறுகிறோம். ஒருவேளை வேறு எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தால் அதை யோகா என்று கூற முடியாது. ஞானத்தின் சிந்தனை என்று சொல்ல முடியாது. எனவே எப்பொழுது சக்தி நிறைந்த யோகாவில் அமருகிறீர்களோ அப்பொழுது எண்ணமும் அமைதியாகி விடுகிறது. ஒரு தந்தை மற்றும் நான்

என்பதைத் தவிர வேறு எந்த எண்ணமும் இல்லை. பாபாவின் சந்திப்பின் அனுபவத்தைத் தவிர மற்ற அனைத்து எண்ணங்களும் அடங்கி விடுகிறது. அந்த மாதிரி அனுபவம் இருக்கிறது இல்லையா? உள்ளடக்கும் சக்தி இருக்கிறது இல்லையா? அல்லது விஸ்தாரம் ஆக்கும் சக்தி அதிகமாக இருக்கிறதா? யோகாவில் அமரும் போது மற்ற மற்ற எண்ணங்கள் அதிகமாக வருகிறது என்று சிலர் கூறுகிறார்கள். இதை என்னவென்று சொல்வது. உள்ளடக்கும் சக்தி குறைவு மற்றும் விஸ்தாரம் செய்யும் சக்தி அதிகம் ஆனால் இரண்டு சக்தியும் வேண்டும். எப்பொழுது விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அப்படி விஸ்தாரத்தில் வர விரும்பினால் விஸ்தாரத்தில் வாருங்கள், உள்ளடக்க விரும்பினால் உள்ளடக்கும். சக்தி ஒரு நொடியில் உபயோகிக்க முடிய வேண்டும். இதைத்தான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுவது. அவ்வளவு சக்தி இருக்கிறதா? இல்லை உள்ளடக்கும் சக்திக்கு கட்டளையிடுகிறீர்கள் ஆனால் விஸ்தாரத்தின் சக்தி வேலை செய்கிறது. அப்படியிருக்கிறதா? ஸ்டாப் என்று சொன்னால் ஸ்டாப் ஆகி விட வேண்டும், முழு பிரேக் பிடிக்க வேண்டும். அரைகுறையாக இல்லை. ஒருவேளை பிரேக் லூஸாக இருந்தால், இங்கு பிடித்தால் எங்கு போய் நிற்கும்? எனவே பிரேக் பவர்புல்லாக இருக்கட்டும் சோதனை செய்யுங்கள், எவ்வளவு நேரத்திற்குப் பிறகு பிரேக் பிடிக்கிறது என்று. 5-நிமிடங்களுக்குப் பிறகா, இல்லை 10-நிமிடங்களுக்குப் பிறகா? புல்ஸ்டாப் ஒரு நொடியில் விழ வேண்டும் இல்லையா? ஒருவேளை ஒரு விநாடிக்குப் பதிலாக அதிக நேரம் எடுத்துக் கொண்டால், உள்ளடக்கும் சக்தி பலஹீனமாக இருக்கிறது. அதிக பிறவிகள் விஸ்தாரத்தில் போகக்கூடிய பழக்கம் ஏற்பட்டு விட்டது. எனவே விஸ்தாரத்தில் வெகு விரைவில் சென்று விடுகிறார்கள் ஆனால் பிரேக் போடுவதிலும் உள்ளடக்குவதிலும் நேரம் எடுத்துக் கொள்கிறார்கள். நேரம் எடுக்கக்கூடாது. ஏனென்றால் கடைசியில் ஒரு விநாடியில் புள்ளி வைக்க வேண்டியது கேள்வி தான் வரும். இதில் தான் எந்த நம்பர் என்று கிடைக்கும். எனவே தேர்வில் வெற்றியடைவதற்குத் தயாராகி விட்டீர்களா? ஒரு விநாடியை விட அதிகமாகி விட்டால் தோல்வியடைந்து விடுவீர்கள். எனவே நேரத்தையும் கூறுகிறோம், ஒரு வினாடி, கேள்வியையும் கூறுகிறோம். வேறு எந்த நினைவும் வராமல் முற்றுப்புள்ளி ஒரு தந்தை மற்றும் நான் வேறு மூன்றாவது விஷயம் எதுவும் இல்லை இதைச் செய்திடட்டுமா,

இதைப் பார்த்திடட்டுமா, இது ஆனதா? ஆகவில்லையா? இது ஏன் ஆனது? இது என்ன ஆனது -இந்த மாதிரி ஏதாவது விஷயம் வந்தால் தோல்வி தான். இந்தக் கேள்வி சுலபமானதா? இல்லை கடினமானதா? தந்தை கேள்வியையும் கூறுகிறார், நேரமும் கூறுகிறார். இருந்தாலும் வரிசைக்கிரமத்தில் வந்து விடுகிறார்கள். எங்கே முதல் நம்பரிலிருக்கும் 8-மணிகள் எங்கே கடைசியிலிருக்கும் 16000-மணிகள். எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. முதல் நம்பரில் வருபவர்களுக்கும் கடைசியில் 16000'த்தில் வருபவர்களுக்கும் ஒரே கேள்வி தான் இருக்கும். மேலும் இதை எவ்வளவு காலமாகக் கூறி வருகிறோம். அப்படியானால் அனைவரும் நம்பர் ஒன்றில் வர வேண்டும் இல்லையா? இதைத்தான் ஞாபகார்த்தமாக நஷ்டமோஹா நினைவு சொரூபம் என்று கூறப்படுகிறது. ஒரு நொடியில் என்னுடைய பாபா வேறு யாரும் இல்லை அவ்வளவு தான். இதை யோசிப்பதானாலும் நேரம் ஆகிறது ஆனால் இதில் நிலைத்து இருந்து விடுங்கள் ஆடக்கூடாது. ஒரு விநாடி ஆகி விட்டதே என்று நினைத்தால் கூட பெயிலாகி விடுவீர்கள், இதுவும் வேண்டாம். நிறையத் தடவை பரீட்சை எழுதும்போது இந்த விஷயத்தில் தான் பெயிலாகி விடுகிறார்கள். இந்தக் கேள்வி 5-நிமிடத்திற்கானது. இது 10-நிமிடத்திற்கானது என்று கேள்வித் தாளிலேயே சில நேரங்களில் எழுதப்பட்டிருக்கிறது. எனவே 5-நிமிடம் ஆகி விட்டதா, 10-நிமிடம் ஆகி விட்டதா என்று பார்த்துக் கொண்டே இருப்பார்கள். நேரத்தை பார்த்துக் கொண்டே கேள்விக்கு பதில் எழுத மறந்து விடுகிறார்கள். எனவே இந்தப் பயிற்சியை எல்லாக் காரியங்களும் செய்து கொண்டே இடையிடையே செய்து கொண்டேயிருங்கள். எந்த ஒரு எண்ணமும் வர வேண்டாம், முற்றுப்புள்ளி என்று கூறினால் அப்படியே நிலைத்து இருந்து விடுங்கள். ஏனென்றால் கடைசிப் பரீட்சை திடீரென்று வரும். திடீரென்று வரும் காரணத்தினால் தானே வரிசைக்கிரமம் உருவாகும் ஆனால் எல்லாம் ஒரு விநாடியில் தான் நடக்கும். அப்படியானால் எவ்வளவு பயிற்சி வேண்டும்? ஒருவேளை இப்பொழுதிலிருந்தே மோகத்தை வென்று, என்னுடையது என்பது இல்லாமல் ஆகி விட்டால் கடினமாக இருக்காது சுலபமாகி விடும். என்ன அனைவரும் பாஸாகக் கூடியவர்கள் தானே. யார் நிச்சயபுத்தி உடையவர்களோ அவர்களுடைய புத்தியில் நான் வெற்றி அடைந்திருந்தேன், வெற்றி அடைவேன் மற்றும் எப்பொழுதும் வெற்றி யடைந்து

கொண்டேயிருப்பேன் என்ற நிச்சயம் இருக்கிறது. ஆவேனா, மாட்டேனா என்ற கேள்விக்கே இடமில்லை. எனவே அந்த மாதிரி புத்தியில் நான் தான் வெற்றியடைபவன் என்ற நிச்சயம் இருக்கிறது ஆனால் வெகு காலத்தின் பயிற்சி அவசியம் வேண்டும். வெகு காலத்துப் பயிற்சி இல்லாமல் அந்த நேரத்தில் முயற்சி செய்தால் மிகவும் கடினமானதாகி விடும். வெகு காலத்துப் பயிற்சி கடைசியில் உதவியாக இருக்கும். நல்லது.

வாரங்கல் குருப்: தன்னை எப்பொழுதும் டபுள் லைட்டாக (இரட்டை ஒளி) அனுபவம் செய்கிறீர்களா? யார் டபுள் லைட்டாக இருக்கிறார்களோ அந்த ஆத்மாவில் மைட் அதாவது தந்தையின் சக்திகள் கூடவே இருக்கிறது. ஆக நீங்கள் டபுள் லைட்டாகவும் இருக்கிறீர்கள் மைட்டாகவும் இருக்கிறீர்கள். தேவையான நேரத்தில் சக்திகளை உபயோகிக்க முடிகிறதா? இல்லை நேரம் கடந்து சென்ற பிறகு பின்னால் நினைவு வருகிறதா? ஏனென்றால் தன்னிடம் எவ்வளவு பொருட்கள் இருந்தாலும் தேவையான நேரத்தில் உபயோகிக்கவில்லையென்றால் என்னவென்று கூறுவது? எந்த நேரத்தில் எந்த சக்தியின் அவசியம் இருக்கிறதோ அந்த சக்தியை அந்த நேரத்தில் உபயோகிக்க முடிய வேண்டும். இந்த விஷயத்திற்குத்தான் பயிற்சி அவசியமாக இருக்கிறது மாயா வந்து விட்டது என்று அனேகக் குழந்தைகள் கூறுகிறார்கள். ஏன் வந்தது? பகுத்தறியும் சக்தியை உபயோகிக்கவில்லை அப்பொழுது தான் வந்தது இல்லையா? தூரத்திலிருந்தே மாயா வருகிறது என்று தெரிந்து கொண்டீர்களேயானால் தூரத்திலேயே விரட்டி விடுவீர்கள். இல்லையா? மாயா வந்து விட்டது. வருவதற்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள் அதனால் தான் வந்தது இல்லையா? தூரத்திலேயே விரட்டி விட்டீர்கள் என்றால் வராது. அடிக்கடி மாயா வருகிறது நீங்கள் யுத்தம் செய்து அதை விரட்டினீர்கள் என்றால், யுத்தத்தின் சம்ஸ்காரம் வந்து விடும் ஒருவேளை நீண்ட காலம் யுத்தத்தின் சம்ஸ்காரம் இருந்தால் சந்திர வம்சியாக ஆக வேண்டியது வரும். சூரிய வம்சம் என்றால் வெகு காலமாக வெற்றி அடைபவர்கள், மற்றும் சந்திரவம்சி என்றால் யுத்தம் செய்து செய்து எப்போதாவது வெற்றி மேலும் எப்போதாவது யுத்தத்தில் கஷ்டப்படுபவர்கள். அப்படியானால் அனைவரும் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தானே? சந்திரனுக்கும்

வெளிச்சம் கொடுப்பது சூரியன், எனவே சூரியனை நம்பர் ஒன் என்று கூறலாம் இல்லையா? சந்திரவம்சி இரண்டு கலை குறைந்தவர்கள். 16-கலைகள் என்றால் முழுமையாகத் தேர்ச்சி பெற்றவர்கள். ஒருபொழுதும் மனதில், சொல்லில் உறவில் நெருக்கத்தில், சம்ஸ்காரத்தில் தோல்வி அடைபவர்கள் இல்லை -இதைத்தான் சூரிய வம்சி என்று கூறுவது. அந்த மாதிரி சூரிய வம்சிகளா? நல்லது அனைவரும் உங்களுடைய முயற்சியில் திருப்தியாக இருக்கிறீர்களா? அனைத்துப் பாடங்களிலும் முழுமையாகத் தேர்ச்சி பெறுவது இதைத்தான் தன்னுடைய முயற்சியில் திருப்தியாக இருப்பது என்று கூறுவது. இந்த விதிப்படி உங்களை சோதனைச் செய்யுங்கள். நான் பறக்கும் கலையில் செல்லக்கூடிய பறக்கும் பறவை என்பதை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். கீழே மாட்டிக் கொள்பவன் அல்ல, இது தான் வரதானம். நல்லது.

**வரதானம்: சங்கம யுகத்தின் உயர்ந்த ஓவியத்தை முன்னுக்கு வைத்து எதிர்காலத்தைக் காணக்கூடிய மூன்று காலத்தையும் அறிந்தவர்கள் ஆகுக!**

எதிர்காலத்திற்கு முன்பு, அனைத்துப் பிராப்திகளின் அனுபவத்தை சங்கம யுக பிராமணர்கள் நீங்கள் செய்கிறீர்கள். இப்பொழுது இரட்டைக்கிரீடம், ஆசனம் திலகதரி, அனைத்து அதிகார மூர்த்தி ஆகிறீர்கள். எதிர்காலத்தில் தங்க ஸ்பூன் இருக்கும் ஆனால் இப்பொழுது வைரத்திற்குச் சமமாகி விடுகிறீர்கள் வாழ்க்கையே வைரமாகி விடுகிறது. அங்கு தங்கத்தினால் வைரத்தினாலான ஊஞ்சலில் ஆடுவீர்கள், இங்கு பாப்தாதாவின் மடியில் அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஆடுகிறீர்கள். எனவே மூன்று காலத்தையும் தெரிந்தவராகி நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் உயர்ந்த ஓவியத்தைப் பார்த்துக் கொண்டே அனைத்துப் பிராப்திகளையும் அனுபவம் செய்யுங்கள்.

**சுலோகன்: காரியம் மற்றும் யோகத்தின் சமநிலை தான் பரமாத்மாவின் ஆசீர்வாதத்திற்கு அதிகாரி ஆக்கி விடுகிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂